உ

ஸத்தியமேவ ஜயதி.

# மதிமோச விளக்கம்

தூசி. இராஜகோபால பூபதி அவர்கள்
இயற்றியது.

நான்காம் பதிப்பு.

சென்னை :
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியார் அவர்களால்
வெளியிடப்பெற்றது.

1929

காப்பிரைட் ரெஜிஸ்டர்ட்.] [விலை ரூபா 1.


PRINTED AT THE "ANANDA BODHINI" PRESS,
LAWYER CHINNATHAMBI MUDALI STREET,
SOWCARPET, MADRAS.

# முகவுரை

ஸத்தியமே தெய்வம் ஜெகமே கோயில்
முத்தியே புகழாம் மோனமே சாந்தமாம்
நற்செய லொன்றே நம்முடை மதமாம்
இகபர மிரண்டிலு மிதற்கிணை யிலவே.

அரிய ஆக்கையை யடையப்பெற்ற மானுடர் இவ்வுலகப் பிரயாணத்தைக் கடத்தற்பொருட்டு அனுசரிக்க வேண்டிய அநேக அரிய பெரிய விஷயங்களை யொன்று திரட்டி, உலகிற்கு ஊன்றுகோலாக, கல்வியில் மேதாவிகளாயுள்ளோர் பற்பல நூற்களைக் காருண்யத்தால் வெளிப்படுத்தி யிருக்கின்றனர். அச்சியந்திர சகாயத்தால் வேத முதலாம் நூற்களும் காலணாவுக்கும் அரையணாவுக்கும் அளவிலாதனவாய்க் கிடைக்கக்கூடிய இக்காலத்தில், "ஞானியராடுங் கூத்தோடு யானு மாடுகிறேன்" என்பதுபோல, கல்வி கேள்விகளில் அதிசொற்ப ஞானமுள்ள யானும், நம் நாட்டாருக்கு நன்மையுண்டாகுமெனக் கருதி இச்சிறு நூலை யெழுதத் துணிந்தமையின், இதனுள் எவரையாயினும் உல்லங்கனமாகவும் உதாசினமாகவும் எழுதினதாக நம் தாய் நாட்டு நிலைமையை நன்குணர்ந்தோர் சொல்லத் துணியார்; எனது கருத்தும் அஃதன்றாம். "சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்" என்னும் உத்தியால் இந்நூலின்கண் விளக்கியுள்ள 121 கதைகளையும், அவ்வவற்றின் தலைப் பெயர்களினாலேயே சொல்லிவிட் டிருக்கலாமே யெனின், கானாற்றின் நீர்ப்பெருக்காற் குறுகி யாழ்ந்துள்ள விடத்தி லெவரு மிறங்கிக் கடப்பதற்கு அச்சமும் அதைரியமும், அஃது அகன்று தெளிவோடு செல்லுமிடங்களில் அதிலிறங்க அவர்களுக்குத் துணிவும் தைரியமும் உண்டாமாறுபோல, என்னையொத்த பாமரர்கள் இந்நூலைக் கதைப்போக்காய் வாசித்து எளிதில் நன்மை யடைவார்களெனத் துணிந்தே தெளிவோடும் சிறிது விரித்து எழுதியவிதில், "பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ" என்னும் பெரியோர் வாக்குக்கிணங்க இதில் காணப்படுங் குற்றங்களை மன்னிப்பார்களென நம்புகிறேன். இந்நூற் கதைகளில் சிற்சில விடங்களில் திருத்தியும் புதிய சிலவிஷயங்களைச் சேர்த்தும் உதவிய ம-ா-ா-ஸ்ரீ, கா. அண்ணாசாமி நாயகரவர்கள் நன்றியறிதலைப் பாராட்டக் கூடியவனாக இருக்கிறேன்.

1907௵
ஆகஸ்டு௴
29௳
சென்னை



# மூன்றும் பதிப்பின் முகவுரை

சீரிய செந்தமிழ்க் கதையினைச் சாதாரண ஜனங்களும், ஏழைகளும் அறிந்தனுபவிக்குமாறு மிகவும் தெளிவாய் உண்மைகளை அறிவிப்பனவாயும் நூற்பொருள்கள் முரணிய முறையானன்றி அனுபவமுறையில் விரிப்பனவாயுமுள்ள அரிய நூல்களும், உலகப் பிரசித்திபெற்ற விக்டர் ஹியூகோ என்பவரால் பிரஞ்சி பாஷையில் எழுதியுள்ள Les Miscrable என்னும் நாவலை ஒட்டி ஆங்கிலங் கற்றவர்கள் வெளியிட்டுள்ள ஆயிரக் கணக்கான நாவல்களும், பாலககூ அருட்கவி, நிமிஷக்கவி, வெண்பாப்புலி, கவிராயர், புலவர், பாவலர் நாவலர் முதலியவர்கள் எழுதியுள்ள "மலை வெடித்துப் பூதம் வந்தமை, பெண்ணைத் தூக்கிக்கொண்டுபோய்க் காட்டில் விட்டமை, பெண் அலைந்து திரிந்து அவதிப்பட்டுக் கடைசியில் குறித்த கணவனையடைந்து சுகப்பட்டமை" என்ற அரபிநைட் கதையைத் தோற்கடிக்கும்படி யுக்திக்கும் அனுபவத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லாத போலிக் கதைகளும் நிரம்பியுள்ள நம் நாட்டில், மேனாட்டாரைப் போல் தற்கால நிலைமைக்கு ஏற்றவாறு லௌகிக சம்பந்தமானதும் உணர்வுறுத்தத் தக்கதுமான நூல்களைத் தமிழ் மக்கள் படித்து ஆனந்திக்கத்தக்க பாக்கியம் பெறுமலிருக்கின்றார்களே என்று நான் ஏங்கிய காலமுமுண்டு.

நம் நாட்டார் அறிவறிந்து நன்னிலைமைக்கு வரத்தக்க மார்க்கங்களைக் கண்டு எழுதுவதற்குப் போதிய திறமை என்பாலில்லை. அதனால், என்னினும் மிக்கோர் எவரேனும் இதனைச் செய்வாரோ என எதிர்பார்த்தும் எவரும் முற்பட்டாரில்லை. சொற்சுவை, பொருட்சுவை ததும்பும் கூற்றுக்களையும், வருணனைகளையும், வனப்பையும், நுட்பங்களையும், பொருள் கெடாமல் நன்கு விளங்குமாறு எழுதும் திறமையில்லாத யான், பாமரர், சிறுவர், பெண்கள் முதலிய யாவரும் வாங்கி வாசித்துப் பயனடைவார்களெனக் கருதித் தெள்ளிய நடையில் "மதிமோச விளக்கம்" என்னும் இச்சிறுநூலை வெளியிடலானேன். முதற்பதிப்பு, இரண்டாம்பதிப்புக் காப்பிகள் யாவும் இந்நாடன்றிப் பிரதேசங்களில் குடியேறியுள்ள தமிழ் மக்க

ளும் மிக்க ஆவலோடு வரவேற்றனர். தவிர, சிற்சில மேதாவிகள் இதில் கண்ட மோசங்கள் சிலவற்றிலிருந்து தாங்கள் மீட்கப்பட்ட தாகவும் என்னை ஆசீர்வதித்து எனக்குக் கடிதமும் எழுதியுள்ளார் கள். மோசங்கள் ஒவ்வொன்றும் அது அது நடக்கும் மாதிரி தெள் ளத் தெளிய எழுதியதற்காகச் சிலர் தூரதேசங்களிலிருந்து வந்து என்னை நேரில் பார்த்து எனக்கு உற்சாகம் ஊட்டினார்கள்.

திருச்சி பிரஜானுகூலன் பத்திராசிரியரும் கதைகள் கட்டுரைகள் எழுதுவதில் நிபுணத்துவம் வாய்ந்தவருமான ஸ்ரீமான் S. G. இரா மாநுஜலு நாயுடு அவர்கள் இம்மதிமோச விளக்கமென நம்பி வேறு ஒருபுஸ்தகம் வாங்கிப் பார்த்ததாயும் அதைப் படிக்கவுமில்லை, படிக்கவுமில்லை யெனவும் நமக்கு எழுதியுள்ளார். இது மோசங்களைத் தெற்றென விளக்கும் புத்தகம்; இதிலிருந்து திருடிப் பணம் பறிக்க மோசம் செய்பவர்கள் எத்தன்மையர் என்பதைக் கூறவேண்டிய தில்லை. நாவன்மை, சொல்வன்மை, எழுதுந் திறமை முதலிய ஏது மில்லாது பாவலர், நாவலர் என்ற சிலர் பிறர் கஷ்டப்பட்டு எழுதி யுள்ள சில கதைகளைத் திருடியும், வகையின்றிச் சில பாகத்தைச் சிதைத்தும், சிலவற்றைக் குறைத்தும் எழுதுவதினால் கதைகளின் போக்கும் நடையும் கெடுவதோடு உண்மையில் கஷ்டப்பட்டு எழுது வோருக்குக் கஷ்டமும் நஷ்டமு முண்டாகின்றன. அத்தகைய மோசக்காரர்களும் நம் நாட்டிலிருப்பதைக் கருதி வருந்துவதன்றி வேறு என் செய்வது.

இதனாலேயே மூன்றும் பதிப்பு வெளியிடல் அவசியமெனக் கருதி, ஜி. செல்வபதி செட்டி அண்டு கம்பெனியாருக்கு என் புஸ் தக உரிமையை விற்று இந்நூலை வெளியிட அனுமதியும் கொடுத்து விட்டேன். பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் ஆ. வீ. கன்னைய நாயுடு அவர்கள் பார்வையின் கீழ் இந்நூல் அச்சு வாகனம் ஏறியதால், இதில் காணப்படும் சந்திப்பேய், விகாரப்பேய், சொற்குற்றம், பொருட்குற்றம், எழுத்துப்பிழை முதலியன பெரும் பாலும் ஒழிந்தன. அன்னாருக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டவனா யிருக்கிறேன்.

தூசி. இராஜகோபால் பூபதி.

# நான்காம் பதிப்பின் முன்னுரை.

கல்வியை வளர்க்கக் கூடிய நூல்கள் உலகில் பலவுண்டு, அந்நூல்க ளனைத்தும் 'மடங்கொன் றறிவகற்றும் கல்வி' என்றபடி, மக்களின் அறியாமையை யொழித்து அறிவை வளர்க்கத் தக்கனவேயாம்.

தற்காலத்தில் நவீன நாவல்கள் என்னும் பற்பல கட்டுக்கதைகள் தோன்றிப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் மனதையும் சாதாரண ஜனங்கள் உள்ளத்தையும் கவர்கின்றன. அந்தோ! அந்நாவல்களிலுள்ள சந்திப்பிழை, எழுத்துப் பிழை, சொற்பிழை, பொருட் பிழை முதலியவைகளை யாராயப் புகுதல் மணல் சோற்றில் கல்லாராய்வது போலாம். அன்றியும், அவைகளில் பெரும்பாலானவை தம்மைப் படிப்பவர்களின் மனதைத் தீயவழியில் தூண்டக் கூடியனவேயாம். தமிழில் உரை நடையை (வசனம்) ஒருவாறு எழுதக் கூடியவர்களும் அத்தகைய நாவல்களைப் படித்துப் 'பன்றியின் பின் சென்கன்றும் மலமுண்ணும்' என்றபடி தமதியற்கை நடையை யிழந்து விடுகின்னர். இதனால் நாவல்களைப்பற்றி நான் குறைகூறப் புகவில்லை. பிழைப்படின்றி மக்கட்கு நல்லறிவைப் புகட்டி நல்வழிப்படுத்தும் நாவல்களும் சிஉண்டு. அவைகளைப் படிக்கவொட்டாமல் தடுப்பது யார்?

நிற்க, உலக விஷயங்களை 'உள்ளங்கை நெல்லிக் கனிபோல்' விளங்கவுரைக்கும் நூல்கள் கதைகளின் வடிவமாய்த் தமிழில் இதுகாறும் வெளிவந்திலவென்பதை அனைவரும் நன்கறிவர். எமது அரிய நண்பர் திருவாளர் - தா சி. இராஜகோபால் பூபதியார்கள் மதிமோச விளக்கம் என்னும் இந்நூலை யியற்றி அக்குறையை யகற்றினர். நமது தென்னிந்தியாவில் நடைபெறும் சோதிடர் சூழ்ச்சி, பூசாரிப்புரட்டு, வைத்தியர் மோசம், புதையல் எடுப்பவர் தந்திரம், ரசவாதிகள் (பொன் செய்வோர்) வஞ்சனை முதலிய பல விஷயங்களை இந்நூல் நன்கு விளக்கிச் செல்கின்றது. மோடி யெடுப்பவர் மோசம், வக்கீல்கள் சூழ்ச்சி முதலிய வேறு சில விஷயங்களும் இந்நூலில் இப்போது புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாசிப்பவர் உலகானுபவத்தில் சிறந்து விளங்குவார்களென நான் முழுதும் நம்புகிறேன்.

இந்நூல் ஆடவர் மகளிர் என்னும் இரு பாலர்க்கும் விளங்குமாறு எளிய நடையில் நன்கு அமைந்திருக்கிறது. அதனால் இது அனைவர்க்கும் பயன்படுமென எனக்குத் தோன்றினமையால், இதனைத் திருவாளர்-தா சி. இராஜகோபால் பூபதியார் அவர்களிட மிருந்து சகல உரிமைகளுடன் (காபிரைட்) ஜி. செல்வபதிசெட்டியார் பெற்றுக்கொண்டதை ஷை ஜி. செல்வபதிசெட்டியார் அவர்களிடமிருந்து சகல உரிமைகளுடன் (காபிரைட்) நான்பெற்றுக்கொண்டு மூன்றும் பதிப்புப் பிரதிகள் முழுவதும் செலவாகிவிட்டமையால் இப்போது நான்காம் பதிப்பாக வெளியிடலானேன். இந்நூலின் வளர்ச்சியைக் கருதும் அறிஞர்கள் இதிலுள்ள குறைகளை எனக்கறிவித்தால் அவைகளில் தகுதியானவற்றை வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டு அடுத்த பதிப்பில் வெளியிடத் தயாரா யிருக்கின்றேன்.

சென்னை
25—11—29

இங்ஙனம்:
நா. முனிசாமி முதலியார்.

# விஷய அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| ஜோஸியர் | ... | 1 |
| கட்டுப்பிடித்துப் பார்த்தல் | ... | 7 |
| தென்னாட்டார் குறி சொல்லுதல் | ... | 11 |
| சந்நியாசிகள் | ... | 14 |
| நாட்டக்கார் | ... | 18 |
| பொன் துண்டு மோசம் | ... | 21 |
| அங்காளம்மன் பிச்சை | ... | 25 |
| பலவகைப் பிச்சைக்காரர்கள் மோசம் | ... | 26 |
| கோயில்குளம் கைங்கரிய யாசகம் | ... | 29 |
| பிராமணர்கள் யாசகம் | ... | 30 |
| அர்ச்சனைத் திருவிளக்குத் தர்மம் | ... | 32 |
| உத்தியோகமிழந்ததாய் யாசகம் | ... | 34 |
| பொங்கல் பிச்சை | ... | 37 |
| திருவள்ளூர் முதலிய தவலை உண்டி தர்மம் | ... | 38 |
| திருப்போரூர் தர்மம் | ... | 38 |
| திருப்போரூர் தண்ணீர்ப்பந்தல் தர்மம் | ... | 39 |
| திருப்பதிக்குப்போகிற பாவனையாக யாசகம் | ... | 40 |
| நடுத்தெருவில் புரளும் யாசகம் | ... | 42 |
| திருப்பதி வெங்கலப்படி தருமம் | ... | 43 |
| திருப்பதிக்குடை | ... | 44 |
| காசிப்பிராமணர்கள் காவடி மோசம் | ... | 45 |
| மூலவியாதி சிகிச்சை மோசம் | ... | 47 |
| பௌத்திர சிகிச்சை மோசம் | ... | 48 |
| பல் வைத்திய சிகிச்சை மோசம் | ... | 49 |
| பெண்பிள்ளையும் வைத்தியனும் | ... | 50 |
| மாராட்டிய வைத்தியர் | ... | 54 |
| பஞ்சாப் வைத்தியர் மோசம் | ... | 57 |
| கோரோசனை மோசம் | ... | 59 |
| கஸ்தூரி மோசம் | ... | 60 |

| | | பக்கம் |
|---|---|---|
| சாலாமிசிரி மோசம் | ... | 61 |
| சிலாசத்து மோசம் | ... | 61 |
| நரிக்கொம்பும், நரிநகமும் | ... | 62 |
| வாதப்பித்தானிக்கு மருந்து | ... | 63 |
| மூக்குக்கண்ணாடி விற்றல், பித்தளைக்கடுக்கன் ஏலம் | ... | 64 |
| குடிக்கூலிக்கு வருவதாய் மோசம் | ... | 66 |
| அரிசிமண்டித் தாசரி மோசம் | ... | 67 |
| அரிசிமண்டிக் கூலிக்காரர் மோசம் | ... | 68 |
| அரிசிமண்டி அளவுக்காரர்,மண்டிக்காரர் மோசம் | ... | 69 |
| அரிசி வாங்கிக் கொடுப்பதாய் மோசம் | ... | 70 |
| அரிசி வந்திருப்பதாக மோசம் | ... | 71 |
| அரிசி கொண்டுவந்திருப்பதாக மோசம் | ... | 72 |
| வண்டி மேட்டில் மோசம் | ... | 73 |
| சுண்ணும்புக் காளவாய் மோசம் | ... | 74 |
| செங்கற்சூளை வண்டிக்காரர் முதலியோர் மோசம் | ... | 76 |
| கொத்தவால் சாவடி மோசம் | ... | 79 |
| ஜவுளிக்கடை வியாபார மோசம் | ... | 80 |
| பசுமாடு வியாபார மோசம் | ... | 83 |
| பாளையத்தரிசி மோசம் | ... | 84 |
| திருநெல்வேலி செட்டில்மெண்டு | ... | 85 |
| ஜோகிகள் கலியாண யாசகம் | ... | 86 |
| குறப்பெண்களும் சிறுபிள்ளைகளும் | ... | 87 |
| குறப்பெண்கள் யாசகம் | ... | 87 |
| பெட்டிச்சாவிக்காரர் மோசம் | ... | 88 |
| குடுகுடுப்பைக்காரர்கள் மோசம் | ... | 89 |
| வம்புச்சிறுக்கிகள் மோசம் | ... | 91 |
| நெட்டாலிலிருந்து வந்ததாக ஏமாற்றல் | ... | 94 |
| பகல் கூத்தாடிகள் வேட்டை | ... | 97 |
| பலவித வர்த்தகர்களின் பரிபாஷை அல்லது குழூஉக்குறி | | 99 |
| நாடகக்காரர் படாடோப நோட்டீஸ் மோசம் | ... | 100 |
| குறவர் கால்.சவரன் விற்பதாய் மோசம் | ... | 104 |
| கொள்ளைப் பொருளைக் குறைந்த விலைக்கு விற்பதாய் மோசம் | | 107 |
| நகை அடகுவைக்கும் தாசரிப் பெண்கள் மோசம் | ... | 110 |
| டாபர்கள் மோசம் | ... | 112 |

| | | பக்கம் |
|---|---|---|
| தவசுப் பிள்ளைகள் மோசம் | ... | 112 |
| காபி ஓட்டல்கள் மோசம் | ... | 114 |
| அன்ன சத்திரம் மோசம் | ... | 118 |
| சோற்றுக் கடை மோசம் | ... | 120 |
| புரோகிதர் பிழைப்பும் எளியவர் வீட்டுத் திதியும் | ... | 121 |
| உத்தியோகஸ்தர் திதி மோசம் | ... | 124 |
| வேலைக்காரப் பிள்ளைகள் மோசம் | ... | 125 |
| ஷோக் பிள்ளைகள் மோசம் | ... | 126 |
| பள்ளிப் பிள்ளைகள் மோசம் | ... | 127 |
| வால்யுபேயபில் மோசம் | ... | 128 |
| கள்ளுக்கடை ஆசாரம் | ... | 132 |
| கள்ளுக்கடை ஏற்பாடு | ... | 133 |
| கள்ளுக்கடை குமாஸ்தாக்கள் திறமை | ... | 134 |
| குருவிக்காரர் மயிலெண்ணெய் மோசம் | ... | 136 |
| லீவு வேண்டியதற்கு மோசம் | ... | 136 |
| சிறுத்தொண்டன் படம் | ... | 137 |
| துலுக்கர் கலியாண யாசகம் | ... | 138 |
| அனுதிப் பிணத் தகன யாசகம் | ... | 140 |
| பொய்ச் சாட்சி உத்தியோகம் | ... | 140 |
| குடியைக் கெடுக்கும் குண்டுணிகள் | ... | 141 |
| பெண் பேசும் தரகரிகள் | ... | 144 |
| நாட்டாண்மைக்காரர்கள் | ... | 147 |
| ஜாதிப் போராட்டம் | .... | 148 |
| எமிக்கிரண்ட் டிபோ | .... | 152 |
| காமன் பண்டிகை | .... | 157 |
| அல்லாசாமிப் பண்டிகை | ... | 159 |
| சங்கராந்திப் பண்டிகை | .... | 161 |
| போலிப் பிராமணர் | .... | 163 |
| போலி வைஷ்ணவர் | ... | 164 |
| தெய்வ ஆவேசம் | ... | 169 |
| லாடக்குறி | ... | 171 |
| குறவர் குறி | .... | 173 |
| குறிமேடை | .... | 175 |
| மாவுப் பூசாரிகள் | ... | 179 |

பக்கம்

விளக்குவைத்துக் கேட்டல் ... 180
பழம்வைத்துக் கேட்டல் ... 182
புஷ்பம்வைத்துக் கேட்டல் .... 183
பேயோட்டல் ... 184
அசுபகாலத் திருடு ... 189
சுபகாலத் திருடு ... 190
அரிசித் திருடு ... 191
புடவைத் திருடு ... 192
ரெயில்வே டிக்கட் மோசம், ரயில்வே திருடு ... 193
கோழித் திருடு ... 194
தண்ணீர்க் குழாயண்டைத் தவலை செம்புத் திருடு ... 195
சாப்பாட்டுச் சாமான்கள் திருடு ... 195
நடுத்தெருக் கொள்ளை ... 196
பொன் செய்கிறதாய் மோசம் ... 197
புதையலெடுத்தல் ... 200
மோடி எடுக்கிற மோசம் ... 203
ஒட்டர் மோசம் ... 206
பால்காரர்கள் மோசம் ... 209
கழிப்பெடுத்தல் ... 210
தேக்கமரத் தொட்டிக்காரர் மோசம் ... 212
வக்கீல்கள் சாமர்த்தியம் ... 217

சத்தியமேவ ஜயதி.

# மதிமோச விளக்கம்.

———:(o):———

## ஜோஸியர்.

I

ஜோசியர்களில் சிலர் பெரிய சாலைகளில் ஒரு சிலேட்டுப் பலகையுடன், விமேசுர உள்ளமுடையான், வருஷாதி நூல் முதலிய இரண்டொரு சோதிடப் புத்தகங்களையும், சில பல கதைப் புத்தகங்களையும் ஆறங்குல நீளமுள்ள ஒரு ஓலைச் சுவடியையும் வைத்துக் கொண்டு மரத்தடியில் கடைபரப்பியிருப்பார்கள். வேலையில்லாத சில பேதைப் பெண்கள் அவர்களிடம் சென்று 'ஐயா! என் பிள்ளையை நாலு நாளாய்க் காணோம். எங்கள் வீட்டுக்காரன் அடித்ததின்மேல் ஓடிப்போய்விட்டான்; இரங்கோனுக்குப் போவதாய்ச் சொன்னானாம், அவன் எப்பொழுது வருவான்? பார்த்துச் சொல்லுங்கள்' என்பார்.

**ஜோசியன்:**—இதோ இருக்கிற சக்கரத்தின் வீட்டில் ஒன்றைத் தொடுங்கள்.

**பெண்பிள்ளை:**—தொட்டுவிட்டேன்.

**ஜோசி:**—சரிதான்; அவன் பேரென்ன?

**பெண்:**—முனிசாமி

* **ஜோசி:**—மா, மி, மு, மே மகநக்ஷத்திரம்; அவன்பேருக்கு ஜென்மத்தில் சூரியன்; கேட்பானேன்?

"சூரியன் ஜென்மந் தன்னில் துலங்குநா லேந்தில் ஏழில்
பாரிய எட்டோ டென்னப் பகர்ந்தபன் னிரண்டில் நின்றால்,
காரியம் கெடுமே லைச்சல் கண்வலி தலைநோய் காணும்
வீரியம் சண்டை கூச்சல் வீட்டைவிட் டோட்டுந் தானே"

அவனிப்போ வீட்டைவிட்டு வெளித்தாண்டி யிருக்கவேணுமே; என்ன சொல்கிறாய் அம்மா?

**பெண்:**—ஆம்; முன்னமே சொல்லி யிருக்கிறேனே.

ஜோசி:—இதோ கிரகம் சொல்லுகிறதே; நீ என்ன சொல்கிறது!

பெண்:—எப்போ வருவான் ? பாருங்கள்.

ஜோசி:—ஒரு கிழமையைச் சொல்.

பெண்:—செவ்வாய்க்கிழமை.

ஜோசி:–இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் விரலைவிட்டெண்ணி

"ஆதிரை பரணி கார்த்திகை அமாமுப் பூரங் கேட்டை
தீதுறு விசாகம் சோதி சித்திரை மகமீ ருறும்
மாதனங் கண்டார் தோலார் ; வழிநடைப் பட்டார் மீளார் ;
பாயினிற் படுத்தார் ; பாம்பின்வாய்த் தேரை யாவார்."

அம்மா ! இந்த ஜாதகனுக்கு ஏழரை நாட்டுச் சனி ; அதனால் தான் ஊரைவிட்டு ஓட்டிவிட்டது. எதற்கும் இந்தச் சுவடி போட்டுப் பார்த்தால் தெரிந்து போகிறது.

பெண்:—சரியாய்ப் பார்த்துச் சொல்லுங்கள்.

ஜோசி:—நீ கொடுத்தது காலணு, எவ்வளவு சொல்கிறது ?

பெண்:—பிள்ளையை விடவா! துட்டு கொடுக்கிறேன்; சரியாய்ப் பாருங்கள.

ஜோசி:—இந்தச் சுவடியில் இந்தக் கயிற்றை உங்கள் குலதெய்வத்தை நினைத்துப் போடுங்கள், முருகா என்று போடு, பயமில்லை.

பெண்:—"அம்மா பெரியபாளையத்தா! என்னம்மணி! நீபக்கத் துணை யிருக்கவேணும்" என்று கயிற்றைப் போட்டாள்.

ஜோசி:—அம்மா ! இந்த இடம் எல்லாருக்குமே வாய்க்காது ; சீதையை அனுமார் கண்டு கணையாழியைக் கொடுத்தவிடம் இது ; நல்ல ஜெயமிருக்கிறது, அவனுக்கொரு பயமுமில்லை ; இன்னொரு பைசா கொடுத்தால் இத்தனை நாளையில் வீடுவந்து சேருவான் என்று சொல்லுகிறேன். பிறகு உங்களிஷ்டம்.

பெண்:—இந்தாரும் பாருங்கள்; என் பிள்ளை வீடுவந்து சேர்ந்தால் போதுமானது

ஜோசி:—இந்தச் சந்தனக்குறட்டை மூன்று தடவை உருட்டுங்கள்.

பெண்:—மூன்று தடவை உருட்டுகிறாள்.

ஜோசி:—3-1-7-பிறகு 4-2-6 இன்னொரு தடவை 5-3-8-ஆக முப்பத்தொன்பது; இருபத்தேழும் போனால் பனிரண்டு மிச்சம்

இருக்கிறது. அசுவனி, பரணி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், உத்திரம்.

"உத்திராட மாதியாக வாறுமாறும் உத்தமம்
பித்தனுளோ டேழுநாளும் பேசுநாட்கண் மத்திமம்
அத்தமோடு சித்திரை அமர்ந்தவாழ்வு குன்றிடும்
மற்றைமூவி ரண்டுநாளும் மங்கைநா விழப்பளே."

சரி. அவன் கிழக்கே நோக்கி யிருக்கிறான். உங்கள் சொந்த பந்துக்களிட மிருக்கிறான்; பயமில்லை. இன்னும் மூன்று நாழிகையி லாவது மூன்று நாளிலாவது மூன்று மாசத்திலாவது மூன்று வருஷத்திலாவது கண்டிப்பாய் வீடு வந்து சேருவான். எதற்கும் இன்னொரு தடவை வந்து கேட்டுக்கொண்டு போ; இந்த ஜாதகம் நல்ல யோக ஜாதகம். எல்லாருக்குமே இப்படிக் கிரகங்கள் கட்டியிரா; குரு நாலிலிருந்து அஞ்சாம் வீட்டிற்குப் பெயர்கிறபடியால் அவன் வீட்டு நினைவாகவே இருக்கிறான். அவசியம் வந்து சேரவேணும். அல்லது சமாசாரமாவது வரும்; பயப்படாதே; போ.

II

வேறுபெண்:—என் பெரிய மகள் நலியாயிருக்கிறது - கொஞ்சம் பாருங்கள்.

ஜோசி:—காணிக்கை வை. நவக்கிரகங்களை வீட்டிலடைக்கிறது எவ்வளவு பாபம். சும்மா சொல்லவா காத்துக்கொண்டிருக்கிறேன்?

வேறுபெண்:—எவ்வளவோ செலவாகுது. உங்களுக்குத்தானு கொடுக்கமாட்டேன், இந்தாரும்; சரியாய்ப் பார்க்கவேணும்.

ஜோசி:—பனிரண்டில் குறையச் சொல்.

வேறுபெண்:—பனிரண்டு.

ஜோசி:—அது அல்ல அம்மா! பனிரண்டுக்குக் கீழேசொல்.

வேறுபெண்:—பனிரண்டு கீழே.

ஜோசி:—(மற்றொரு பெண்பிள்ளையை நோக்கி) அம்மா! நீ பனிரண்டில் குறையச் சொல்.

மற்றொருபெண்:—அஞ்சி.

ஜோசி:—மிதுனம் 5, கடகம் 5¼, சிங்கம் 5½, கன்னி 5; ஆக இருபதே முக்காலில் அஞ்சும்போனால் பதினாறே முக்கால்; அதில் பனிரண்டும் போனால் நிகரம் நாலு, அங்காரக திசை சூரியபுத்தி

சனி அந்தரமாகையால் இந்த ஆனி மாசம் 15-தேதி வரையில் அப்படியாகத்தா னிருக்கும்; சுக்கிரன் ஏழாமிடத்திற்கு வந்து விட்டால் எல்லாம் தீர்ந்துவிடும். இதன் நடுவில் என்ன வைத்தியம் செய்தாலும் பிரயோசனப்படாது. ஆனி பதினஞ்சுக்குமேல் எல்லாம் குணமாகும்; போ.

## III

ஆண்பிள்ளை:—எனக்கொரு ஆரூடம் சொல்லவேணும்.

ஜோசி:—ஒரு அணு கொடுப்பாயா? நீ நினைத்து வந்த காரியத்தைச் சொல்லுகிறேன்.

ஆண்பிள்ளை:—அப்படியே கொடுக்கிறேன். சரியாய்ச் சொல்லவேணும்.

ஜோசி:—இருபத்தேழில் குறையச் சொல்.

ஆண்பிள்ளை:—ஒன்பது.

ஜோசி:—(தனக்குள்ளாகவே நக்ஷத்திரங்களை எண்ணுகிறது போல் ஒரு தடவைக்கு மூன்று தடவை விரலை விடுகிறதும் எண்ணுகிறதுமாயிருந்து) நீ ஒரு சீவனைப் பற்றிக் கேட்கிறாய். அது முடியுமா முடியாதா வென்பதல்லவா?

ஆண்பிள்ளை:—அதுவல்ல. சரியாய்ப் பாருங்கள்.

ஜோசி:—சரியாய் என்ன பார்க்கிறது? ஒரு சீவனம்; அதாவது, பிழைக்கிற பிழைப்பைப் பற்றிக் கேட்கிறாய். அது இன்னொரு மாதத்திற்குள் அநுகூலமாகும்.

ஆண்பிள்ளை:—அது அல்ல ஜோசியரே! ஒரு நகை போய்விட்டது. அதைப்பற்றிக் கேட்கவந்தேன்.

ஜோசி:-(சிரித்து) முன்னமே சொல்லவில்லையா? சீவனென்றால் அல்லவென்று சொன்னாயே. சீவனால் நடந்த சங்கதியென்று விவரித்துச் சொல்லவேணுமோ? சீவனென்றால் தெரிந்து கொள்ளக் கூடாதா? கோயம்பேடு ஜமீன்தார் வீட்டில் நடந்த திருட்டைக் கண்டு பிடித்துச் சொன்னவன் நானல்லவா! என் ஆரூடம் எப்படி என்று அங்கே போய் விசாரித்துப் பார். அவ்வளவில்லாமலா எங்கெங்கேயோ இருந்து என்னைத் தேடிக்கொண்டு வருகிறார்கள்.

ஆண்பிள்ளை:—சரி, அது கிடைக்குமா கிடைக்காதா?

ஜோசி:—சனி சம்பந்தப்பட்டிருப்பதால் அது ஒரு கறுத்த மனிதனுல் மறைக்கப்பட் டிருக்கிறது; குரு நீச்சம் பெற்றிருக்கிற படியால் ஒரு பூணூல்போட்ட மனிதனுல் தடைப்பட்டிருக்கிறது. புதனும் சூரியனும் சனியும் சம்பந்தப்பட்டிருக்கிறபடியால் அது உன்னிஷ்டாள் மூலமாயாவது உன்னைச் சேர்ந்த பந்துக்கள் மூலமா யாவது வந்து சேரும்; அல்லது சரியான தகவல் கிடைக்கும். ஏழாம் வீட்டில் குருவும் அஞ்சாம் வீட்டில் சந்திரனு மிருப்பதால் அது இப்போது தண்ணீரில் மறைந்திருக்கிறது. இந்த வைகாசிமீ 20உக்குள் வந்துசேரும். அப்படிக் கிடைக்காவிட்டால் அதன் பிறகு இந்த ஜோசியத்தை நம்பவே வேண்டியதில்லை. உன்னைப் போல் எத்தனையோ பேர்கள் என்னைச் சோதித்துப் பார்த்தார்கள். இதற்கெல்லாம் சிணுங்குகிற குட்டியா இது!

என்று சுற்றிலு மிருப்பவர்கள் பிரமித்துப் போகும்படி வாய் ஜல்லி அடிப்பார்கள். புறப்படும்போது சகுனம் பார்த்து, கிராம தேவதையைக் கும்பிட்டு இன்றைக்கு எங்கே படியளப்பாரோ கட வுள் என்று, சந்தேகமாய் வரும் ஜோசியர்களுக்கு அரை ரூபா அல் லது முக்கால் ரூபா வரையில் சிலர் வலியக் கொடுத்துவிட்டுப் போவார்கள். எட்டாதவைகளுக் கெல்லாம் கொட்டாவி விடும் பேதைப் பெண்களும், ஆண்களும் ஜோசியர்கள் சொல்லை நம்பித் துன்புற்று வருந்துவார்கள். தமக்கு வரும் கேட்டையாவது சுகத்தையாவது இந்த ஜோசியர்க ளறியார்கள். இவர்கள் சொல் லில் எப்படி நம்பிக்கை வைப்பது? இதை அறியாமல் ஏன் பணத் தைப் பாழாக்கவேண்டும்?

வெகுவாய் வேலையில்லாமல் திண்டாடுகிறவர்களும் வர்த்தகம் செய்ய வகையின்றி வர்த்தகம் குன்றி அவதிப்படுகிறவர்களும் தங் கள் மனைவி மக்கள் வியாதியால் அவஸ்தை படுகிறவர்களுமே ஜோஸியர்களிடம் போய் ஜோசியம் பார்க்கிறார்கள். ஜோசிய புஸ்த கப் பாட்டுகளில் சுகமும் துக்கமும் கலந்த பாட்டுகளிருப்பதால் சூரியன் எட்டாமிடத்தை விட்டு ஒன்பதாம் வீட்டைப் பார்க்கிற படியால் இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை மாதத்தில் காரியம் ஜெயமாகுமென்று சாவு தைரியம் சொல்லி அனுப்புவார்கள். இது ஒரு விஷயத்தில் ஜோசியம் பார்க்கிறவர்களுக்கு ஆறுதல் தரும் என்று சொல்லலாமாயினும் அநேகர் செய்யவேண்டிய முயற்சிகள்

செய்யாது இருந்து விடுகிறார்கள். கர்மகாண்டம், சுகரிஷிவாக்கியம், சப்தரிஷி வாக்கியம், நந்திதேவர், ரேகைசாஸ்திரம் முதலியவைகளைக் கேட்டு நடந்ததெல்லாம் சரியாக இருப்பதால் இனி நடக்கப் போகிற விஷயங்களையும் சரியென்றே நம்பி நவக்கிரஹ சாந்தி செய்யவேணுமென்று கடனுடன் பட்டு 50 - 100 செலவு செய்தும் சிலர் ஏமாந்து போகிறார்கள். சென்னையில் வடதேசத்து சாகர் என்ற ஒருவன் செத்தவர்களில் ஒருவன் பேரையும் ஆருடம் பார்க்க வந்தவன் பெயரையும் 100-க்குக் குறைவான ஒரு தொகையையும் ஒரு சுவரில் எழுதினால் தன்முன் அவன் மூடிவைத்திருப்பதையும் சொல்வதாக நம்பி ரூபா 5 கொடுத்து ஒரு பலனுமின்றித் திரும்பி வருகிறார்கள். உடலுக்குள் ளிருக்கிற வியாதியைப் போட்டோ எடுக்கிற இக்காலத்தில் சுவருக்குள் ளிருக்கிறதைப் போட்டோ எடுக்கக் கூடாதா.

நாகரிகம்பெற்ற மேனாட்டா ரெல்லாரும் தங்கள் மனச்சக்தியிலும், செய்கையிலும் நம்பிக்கை யுள்ளவர்களாய்ச் செய்தற்கரிய அரும்பெருங் காரியங்களை யெல்லாம் செய்திருப்பதை நம்மில் பலர் கண்கூடாய்க் கண்டும் கேட்டு மிருக்கின்றனர். அஜாக்கிரதையினாலும், முயற்சிக் குறைவினாலும் வர்த்தகத் தளர்வு வந்தவிடத்தும் உத்தியோகம் தவறியகாலத்தும், முக்கியமாய் வியாதி வந்த காலத்தும் ஜாதகத்தை எடுத்துக்கொண்டு "அவன் கெட்டிக்காரன், தங்கசாலை ஜோசியன் நிபுணன், தும்பவனம் வள்ளுவன் சொல் தவறுகிறதில்லை" என்று ஜோசியர்களை எடை போட்டுக்கொண்டு ஏன் பணத்தைப் பாழாக்கவேண்டும்? குருடன் கல்லெறிந்து விழுந்த மாதிரி ஜோசியர் சொல் பத்திலிரண்டு பலிப்பதையே ஆதாரமாக வைத்துக்கொண்டு நடந்தவைகளை ஜோசியன் பேரிலும் நடவாது தவறும் விஷயங்களை விதியின் பேரிலும் போடுவதனால் மிச்சமானவை கால நஷ்டமும் காசு செலவுந்தான்.



## 2. கட்டுப்பிடித்துப் பார்த்தல்.

ஒரு புட்டுக்கூடை முண்டங்களில் பொறுக்கியெடுத்த முண்டங்களான நம் நாட்டு மூடப்பெண்களாகிய பாழும் கிழவிகள் தங்கள் வீடுகளில் குழந்தை குட்டிகளுக்கோ பெரியவர்களுக்கோ வியாதிகள் வந்த காலத்துச் சும்மாவிருக்க மாட்டார்கள். உயிரைக் கொண்டு போகும் எமன் மறந்துவிட்டாலும், இவர்கள் அவனுக்குப் பக்கத் துணையிருந்து கூடிய சீக்கிரத்தில தங்கள் மக்களை எமலோகம் பயணங் கூட்டியனுப்பும் வேலையில் மும்முரமாயிருப்பார்கள். எப்படியென்றால், "இது உடம்பால் வந்த வியாதி என்றால் மருந்து கொடுக்கக் கொடுக்க வியாதி அதிகமாகுமா? இது தெய்வக்குற்றமாயிருக்கலாம்; பணமிருக்கிறதென்று வைத்தியனுக்கு ஏன் கொட்டிக் கொடுக்கிறீர்கள்? "குடலேற்றக் தெரியாமல் கோடிப்பணம் செலவழித்த கதை போல் இந்தச் சிறுக்கியும் கூத்தாடுகிறாள்" என்று கிழவி லங்கர் தூக்குவாள். உடனே வீட்டுக்குப் பெருந்தனக் காரியோ அல்லது கொஞ்சம் தலைமை ஸ்தானத்தை வகித்தவளோ "ஏன் என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீர்கள்? அந்த ஆம்பிளைக்கு எத்தனை தரம் சொல்கிறது? தன் அக்காள் பெற்றது தங்கைப் பெற்றது ஆனால் அக்கறையிருக்கும் இதை ஏனென்று கேட்கிறாரா? ஏறெடுத்துப் பார்க்கிறாரா? என்னமோ என் தலைவிதி ; நாலு பேரைப்போல் நாமும் குடித்தனம் ஆகவேண்டுமே யென்று என்னாலானவரையில் பார்க்கிறேன். என்ன செய்யட்டும், போயும் வந்தும் இது ஒரு குழந்தை; இது என்ன கூத்துக்கு வந்திருக்கிறதோ தெரியாது. என்னமோ என் பங்கில் அந்த

கோத்தாதா னிருக்கிறாள்'' என்று சலித்துக் கொள்ளுவாள். பின்பு பக்கத்து வீட்டுக்காரி "ஆமாம் போ; உன் தொண்டி வாயை யடக்கு; குழந்தைக்கு இப்படி யிருக்கிறது; சும்மா நீட்ரு. இதுவெல்லாம் ஆம்புளைக்குத் தெரியுமா? அவனொரு இரண்டாங் கெட்டான். அந்த சுடுகாட்டுச் சாவடியண்டை ஒரு பண்டாரக் கிழவி இருக்கிறாள்; நல்ல கெட்டிக்காரி; கைவாசியுமுண்டு நான் கெடுத்தது கோடாய் அவளை அழைத்துவந்து கட்டுப்பிடித்துப் பார்த்தால் எல்லாம் தெரிந்து போகும்'' என்று சொல்வாள். உடனே ஒரு ஆளை அனுப்பி அழைத்து வருவார்கள். கட்டுப் பிடித்துப் பார்க்கிறதற்கு ஸ்பெஷலாக கிராம தேவதைகளிடம் லைசென்ஸ் குத்தகை பெற்றிருக்கிற தேர்ந்த முண்டங்களில் முதல்தரமான பண்டாரக்கிழவியானவள் வந்ததும் தரையை வட்டமாக மெழுகச் சொல்லி ஒரு தேங்காய், அவல் கடலை, வெற்றிலைப் பாக்கு, கற்பூரம், சாம்பிராணி இவைகளை வாங்கி வரச்சொல்லி, மெழுகியிருக்கிற இடத்தில் அரைபடி பச்சை நெல்லையாவது அரிசியையாவது பரப்பி, அதன்மேல் ஒரு செம்பில் ஜலம் நிரப்பி வைத்துத் தேங்காயை உடைத்து, கற்பூரத்தைக் கொளுத்தி நிரம்பவும் பயபக்தியாய் "அம்மா கிராமதேவதை! அங்காளம்மா தாயே! படவேட்டம்மா! கடல் கன்னியம்மா! ஆகாசக் கன்னிகளே! அண்ணமார்களே! பூவாடைக்காரி! புழுக் கடை முனீஸ்வரா! எனக் கொன்றும் தெரியாது; இது யாருடைய குற்றமோ? உங்களால் வந்த குற்றமென்றால் இந்தச் செம்பு வாராமல் அப்படியே இருக்கவேணும். இது எங்களுடைய குற்ற மல்ல. இது உடம்பால் வந்த வியாதி என்றால் சொம்பு கையோடு வரவேணும். அம்மா தாயே! படவேட்டம்மா! என்று அந்தச் சொம்பை எடுப்பாள். (சொம்பு கையோடு வந்துவிடுகிறது.) இதற்குள் "ஒரு கிழவி நான் அப்பவே சொல்லவில்லையா? இது தெய்வகுத்தமா யிருக்கலாமென்று என் பேச்சைக் கேட்கிறார்களா'' என்பாள். இன்னொருத்தி "இது யாருடைய குற்றமென்று தெரியவில்லையே, அம்மா பெரியம்மா! அதைப் பார் என்பாள்'' கட்டுப் பிடிக்கிற கிழவி "அம்மா தாயே! பூவாடைக்காரி! இந்தக் குழந்தைக்கு வந்திருக்கிறது உன்னுடைய குற்றமென்றால் செம்பு வாராம லிருக்கவேணும்; இது உன்னுடைய குற்ற மல்லவென்றால் கையோடு செம்பு வரவேணுந்தாயே!'' என்பாள். (செம்பு வந்துவிடுகிறது) இப்படியே ஒவ்வொரு தெய்வத்தின் பேரைச் சொல்லி

எடுக்க வெகு லேசாய் செம்பு வந்துவிடும். கடைசியில், அம்மா பெரியபாளையத்தா! ஈஸ்வரி நீ ஒண்ணுனா தெய்வம்; இது உன்னால் வந்த குற்றமென்றால் செம்பு வாராமலிருக்க வேணும், இது உன்னுடைய குற்ற மல்லவென்றால் செம்பு கையோடு வரவேணும்" என்று குனிவாள். உடனே அவள் உடம்பு சிலிர்க்கிறதுபோல் நடித்து "என்னமோ உன்னுடைய சத்தி" என்று செம்பின் உதட்டை விரல் நுனிகளால் திருகின மாதிரி எடுத்துச் செம்பு வாராமலிருக்கும் பாவனையாகக் காட்டுவாள். "முக்காலே மூன்றுதரம்" என்று அதை மூன்று தடவை எடுத்தெடுத்துப் பார்ப்பாள். செம்பு வாராததுபோல் நடித்துக் காட்டுவாள்.

அச்சமயம் வேடிக்கை பார்க்க வந்திருக்கும் அண்டை வீட்டுக்காரியானவள், "இவள் இந்தப் பிள்ளையைக் குளிகுளிக்கிறபோது என்ன அவஸ்தைப்பட்டாள்? இவள் பிழைத்துத் தேறுவாள் என்று நினைத்தோமா? குழந்தை பிழைக்குமென்று யார் நினைத்தார்கள்? அப்போ சொல்லிக்கொண்ட பிரார்த்தனை செய்தார்களா? இந்த பெரியபாளையத்தா கண்கண்ட தெய்வமாச்சே, அக்கரை தீர்ந்த பிறகு ஏமாத்தினால் கேட்பாளா, சோதனை காட்டிவிட்டாள், பார்த்தீர்களா! முன்னே புத்தி புத்தி என்று போட்டுக்கோடி" என்பாள் பின்பு அவள் "பெரியம்மா! உன் கையாலேயே கப்பணம் எடுத்துக்கட்டு. இப்படியே இந்த நோவு யாயமாய்ப்போனால் வருகிற ஞாயிற்றுக்கிழமை பச்சை வைத்து, இந்த ஆடிமாசம் நாலாங்கிழமை பெரியபாளையம் போய் அம்மாளுக்குச் சொன்னபடி சோடுகிடா வெட்டி, குழந்தைக்கு மண்டை விளக்கேற்றி இவளும் இவள் வீட்டுக்காரரும் வேப்பஞ்சீலை கொடுப்பார்கள் நான் கூட கண்மலர் சாத்தவேணும். தொட்டில் கட்டுவதாயும் பிரார்த்தனை இருக்கிறது எங்கே! ஜாண் ஏறினால் முழம் சறுக்கிறது, எப்படியாவது இந்தத் தடவை கடனுடன்பட்டுச் செய்யத்தா னிருக்கிறேன். கஷ்டத்தோடு கஷ்டம் போய்ச் செய்வதே சரி. தெய்வ மில்லாமலா பொழுது வெடியுது, பொழுது போகுது? அந்தப்படுவான் இராஜகோபால பூபதி சொல்றானே, அப்படியே இருக்குமா? இதோ கண்ணெதிரில் பார்க்கவில்லையா?" என்று கொஞ்சம் கதையை வளர்ப்பாள்.

உடனே கட்டுப்பிடிக்கிற கிழவி எடுப்பாள் இராமாயணம். எவனோ சொல்கிறான் என்றாயே? அவனைப்போல் ஆங்காரம் படைத்

தவன் யார் இருக்கிறார்? என்றாள். உடனே அங்குவந்த பூபதி 'இதோ நான் எடுக்கிறேன் பார்ப்போம்'' என்று செம்பை எடுக்க வந்தான். அவன் கை முடக்கவே முடியவில்லை அம்மா! என் உடம்பு எல்லாம் நடுக்குது. (ஈஸ்வரி புத்தி புத்தி.) அப்புறம் அந்தத் துள்ளு காலை அடங்கிப்போய் "நான் செய்தது தப்பு, புத்தி புத்தி" என்று எவ்வளவு சொல்லியும் கை முடக்க முடியவில்லை. பெரிய பாளையம் வந்து கையைப்போல் கை செய்து போடுவதாயும், வேப் பஞ்சிலை கொடுக்கிறதாயும் சொன்ன பிறகு அவன் கை சீமர்ந்தது. இது நேரில் நடந்தது. "பையித்தியக்காரி! 'குழந்தையும் தெய்வ மும் கொண்டாடின விடத்தில் தாண்டி' யாருக்குப் பயப்படாவிட் டாலும் தெய்வத்திற்குப் பயப்படவேண்டாமா!'' என்று கதையை வளர்த்தி, பிரசங்கம் செய்துகொண்டே அங்கிருக்கும் அரிசி தேங் காய் வெற்றிலைப் பாக்கு இவைகளை மடியிற் கட்டிக்கொண்டு தனக் குச் சேரவேண்டிய கட்டணம் அணு இரண்டையும் பெற்றுக் கொண்டு அந்த வேளை வயிற்றுப் பாட்டைப் பார்த்துக் கொள்ளு வாள். இந்தமாதிரி கட்டுப் பிடித்துப் பார்க்கும் புண்ணியவதிகள் போகிற இடமெல்லாம் எந்தத் தெய்வத்தின் தலைமேலாவது குற்றத் தைச் சுமத்துவார்களே தவிர, தேகத்தால் வந்ததாக ஒருகாலும் சொல்லமாட்டார்கள். இம்மாதிரியாய்,பிழைக்க விருக்கும் நோயாளி களுக்கு மருந்து கொடுக்கக் கூடாதென்று தடுத்துச் சீக்கிரத்தில் சாகடிப்பார்கள். பொய் வேஷக்காரிகளை நம்பி நீங்களும் உங்கள் மக்களும் மருந்துண்ணுமல் மரணமாகாதேயுங்கள்.

வட நாடுகளிலெல்லாம் தங்கள் குழந்தை குட்டிகளுக்கு நோய் வந்த காலத்துத் தெய்வ பிரார்த்தனைகளை முதலில் செய்துவிட்டுப் பிறகுதான் நோய் தீரவேணுமென்று கடவுளை வேண்டிக்கொள்ளு கிறார்கள். ஒரு தேங்காய் ஒருகாலணு கற்பூரத்தால் சுவாமிகளைத் தங்கள் வயமாக்கிக்கொள்ளும் தென்னாட்டில் நம்மவர்கள் "முன்னே என் இக்கட்டைத் தீர்த்துவிடு; பிறகு பிரார்த்தனை செலுத்துகிறேன்'' மென்று சுவாமிகளையும் நம்பாமலிருக்கிறார்கள். ஒரு ஆட்டிற்காக மந்தை ஆட்டையும் பலிகொடுப்பதாய்ச் சொன்ன இடையனைப் போலல்லவா இருக்கிறது இது. தம்மைப்போல் முழு மூடமென்று நினைத்துக்கொண்டிருக்கிற இவர்கள் ஆடு கோழிக்குப் பதிலாக பூனை நாய்களைப் பலிகொடுக்க வேணுமென்ற சாம்பிரதாய மிருந்தால் சுவாமிகளை ஏமாற்றமாட்டார்கள்.

அறியாமை, அஜாக்கிரதை, ஆலசியம் முதலியவைகளினால் நோய் வருவதும், வளர்வது மறியாமல் நம் நாட்டில் எவ்வளவோ பேர்கள் தெய்வ குற்ற மென்றும், மந்திரமென்றும், சூனிய மென்றும், கழிப்பு மிதித்திருக்கிறதென்றும், அண்ணமார் அறைந்துவிட்டதென்றும், இன்னனைய குருட்டு நம்பிக்கையில் பச்சைக் குழந்தைகளைப் பறி கொடுக்கிறார்கள். நமது கருணையுள்ள துரைத்தனத்தாரும் தேசாபிமானிகளும் முயற்சித்து வரும் பெண் கல்வியும் பெண்கள் வைத்தியமும் எந்தக்காலத்தில் கைகூடுமோ? எந்தக் காலத்தில் குழந்தைகள் மரணம் குறையுமோ அறிகிலோம். நாட்டிற் குழைக்கப் பிறந்த பிள்ளைகளைச் சிறு வயதிலும், அனுபோகம்பெற்ற அறிவாளிகளைத் தக்க பிராயத்திலும் பறிகொடுக்கும் நம் இந்தியா எந்த வழியில் கடைத்தேறப் போகிறது?

---

## 3. தென்னாட்டார் குறி சொல்லுதல்.

### I

இவர்கள் தென்தேயத்துக் கள்ளர், மறவர், அகமுடையார் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவ்வகுப்பார் பெரிய கும்பலாய்ச் சேர்ந்து கொண்டு பெரிய பெரிய பட்டணங்களிலெல்லாம் வருஷமொருமுறை வந்து, தெருக்களிலும் பெரிய சாலைகளுள்ள மரத்தடிகளிலும் குந்தி, ஆடு தழை தின்பதுபோல வெற்றிலைப் பாக்கைத் தின்றுகொண்டும் கையில் வெள்ளிப் பிரம்புகளை வைத்துக் கொண்டும் தாங்கள் முன்னமே மனப்பாடஞ் செய்திருக்கிற லக்ஷணிக் குறி நூலின்படி ஆதி முதல் அந்தம் வரையில் சொல்லுவார்கள். அடிக்கடி "விளங்குதா ஆயி! விளங்குதா ஆயி" என்று கேட்பார்கள். குறி கேட்கும் பெண் பிள்ளைகள் தாம் சொல்வதை நம்புகிறார்களா இல்லையா என்று முகக் குறியால் நிதானித்துக் கொண்டு நம்பிக்கையிருக்கிற சமயத்தில் பன்னிப் பன்னிப் பாடுவார்கள் அதிலுஞ் சிறு பிள்ளைகளா யுள்ளவர்கள் சொன்னால் பேதைப் பெண்கள் கண்டது கண்டபடி எல்லாம் சொல்வதாய் எண்ணிப் பின்னும் காலணா அரையணா கொடுத்து வருவார்கள். அவர்களிடம் ஒரு பெண் பிள்ளை வந்து "அய்யா! எனக்கொரு குறி சொல்லும்" எனக் கேட்பாள்.

குறிக்காரன்:—ஆயி! வா உட்காரு; எடு துட்டு.

பெண்பிள்ளை:—இந்தாரும்; சரியாய்ச் சொல்லுங்கள்.

குறி:—இவள் தனக்கு வந்திருக்கும் இடருதனைச் சொல்கிறேன் கேள்.

மனிதரால் வந்ததொரு வல்வினைகள் மெத்தவுண்டு;
தேவிமக மாமியுடன் திட்டமிட்ட பார்வதியும்,
வீரய்யன் கருப்பண்ணன் விருதுள்ள ராக்ஷதனும்,
கருப்புக்கச்சை கையறுவாள் கனப்பூசைக் காரனவன்
காக்கிறேனென்று சொல்லிக் களிப்புடனே சொன்னதுண்டு.
(விளங்குதா ஆயி)

அதனாலே உன்னிடர்கள் அகன்று சுகமாகிவிடும்,
கைப்பொருளுஞ் சேதமுண்டு; கலக்கங்களு மெத்தவுண்டு;
மாடுகண்ணு சேதமுடன் மனதிற் கிலேசமுண்டு;
தேடும் பொருள்களும் களவாகப் போனதுண்டு;
உண்டோதா னில்லையோ? உத்தமியே சொல்லிவிடு.
(விளங்குதா ஆயி)

இன்னமொரு கேள்வி எடுத்துமிகச் சொல்கிறேன்கேள்;
ஆனதொரு பூமிதனில் அன்பு நிலைகுறித்து
மனையிடமும் தாவிலே வாழும் பதிதனிலே
பொன்னும் பொருளும் பூமிதனை நாடியிப்போ
எண்ணிமனதில் வைத்து இன்பமுடன் கேட்டதுண்டா?
(விளங்குதா ஆயி)

பொருளென்றால் என்னமென்று பிரியமுடன் கேட்பாயானால்
மண்வேண்டி கேட்கவில்லை; மனைவேண்டி கேட்கவில்லை;
பொன்வேண்டி கேட்கவில்லை பொருள்வேண்டி கேட்கவில்லை;
உள்ளதொரு சீவனால் உருக்குலைந்து நிற்கிறாய்நீ;
எண்ணிய கருமமெல்லாம் இப்போதே வந்துகூடும்.
சகலமும் பலித்துச் சஞ்சலங்கள் தான்விலகி
குடும்பம் தழைக்கும்போ; குறைவொன்றும் வாராது
மஞ்சள் புடவைக்காரி மகம்மாயியைத் தானினைந்து
எள்ளத்தனை சாம்பிராணி நினைத்துப் போடவேண்டுமாயி
அம்மா ஆயி உன்வீட்டு பூவாடைக்காரி குத்தமுண்ணு சொன்
[னேன்.
(விளங்குதா ஆயி)

## II

ஆண்பிள்ளை:—என் கையைப் பாருங்கள்.

குறி:—(கையைப் பிடித்துக் கொண்டு) உன்பேரென்ன. ?

ஆண்:—என் பேர் பெருமாள்.

குறி:—பே - போ - ரா - ரி - சித்திரை, மகம், பூரம், உத்திரம், சித்திரை, சித்திரையெண்ணு தெரியுதா ? விருச்சிகம், கடகம், சிங்கம், கன்னி, கன்னிண்ணு தெரியுதா? இப்போ அல்லல் பட்டு அவதிப்பட்டு நிற்கிறேண்ணு தெரியுதா? உள்ளமுருகி உருக்குலைந்து நிற்கிறேண்ணு தெரியுதா? இப்போ ஏழரைநாட்டுச் சனியன் ஏழுவருஷமும் பதிஞ்ஞொரு மாசமும் உன்னைப் படாத பாடு எல்லாம் படுத்துதாண்ணு தெரியுதா? இப்பவும் ஒரு சீவன் அண்ணு தெரியுதா? கச்சேரி வாசலுண்ணு தெரியுதா?

ஆனதொரு ஆண்பிள்ளை அரசான சீவனுக்கும்
நோயும் வினை ஏதென்று நுணுக்கமாய் கேட்டாய் பிள்ளாய்!
உன் ஊருக்கு வடக்கே உன்னுறவு பெண்ணாலே
கன்னி முறைப்பாடு கலக்கங்கள் வந்ததுண்டு
கண்ணுக்குப் புண்ணுமல்ல; கண்டவர்க்கு நோயுமல்ல;
வினையத்தில் வந்து விளையுதிந்த நோயுமப்பா
வடமலையான் கிருபையால் வல்வினைகள் நீங்கிவிடும்

இப்படியாக இந்த மோசக்காரர்கள் தெளிவாய்ச் சொல்லாமல் மொத்தமாய் மண், பொன், பெண், சீவன் வினை ஆகிய இவைகளைக் கலந்து சொல்லுவார்கள். குறிகேட்பவர்கள் தங்களுக்கு அனுகுணமானதை அவர்கள் சொல்லி விட்டதாக எண்ணித் தமக்கு அன்றைப் பொழுது பருப்புத் துவையலுக்கு வழியில்லாவிட்டாலும் குறிகாரர்களுக்குக் கடன் பட்டாகிலும் காலணு அரையணு வீதம் அபராதம் கட்டிவிடுவார்கள். இவர்களால் எந்தக் காலத்தில் புண்ணிய பூமியென்றும், ஞானபூமியென்றும் பேர் பெற்ற நம்மிந்தியா ஈடேறப் போகிறது? இவர்கள் ஜனத்தலைவர்களும் தேசாபிமானிகளும் செய்யு முயற்சிகளுக்கு இடையூறு செய்யாது மற்றென்செய்வார்கள் ?



## 4. சந்நியாசிகள்.

இவர்கள் திருத்தணி, திருப்பதி முதலிய இடங்களில் நில பலங்களுடைய பெரிய குடும்பிகள். 'ஜாதிகெட்டவர்களெல்லாம் சங்கமர்' என்பது போல இவர்களில் பற்பல ஜாதிகளிலிருந்து கலந்தவர்களு முண்டு. பெரியவர்களை குஷாயிகளென்றும் சின்னபிள்ளைகளைச் சிசுவென்றும் இவர்கள் தங்களுக்குள் அழைத்துக்கொள்ளுவார்கள். சிலர் கும்பல் கும்பலாகவும் சிற்சிலர் சமுசாரங்களுடனும் தமிழ், தெலுங்கு பாஷைகள் வழங்கும் நாடுகள் முழுதும் சுற்றித் திரிவார்கள். ஏமாந்தவர்களிடம் பித்தலாட்டஞ் செய்து பிடுங்கிய கடுக்கன்கள், கைக்காரை, கால்காரை, வெள்ளி மோதிரங்களாகிய இவைகளை டஜன் கணக்காய்ப் போட்டிருப்பார்கள். புஜங்களில் நாலைந்து செப்பு வளையங்களும் பித்தளை தாயித்தைகள் கோத்திருக்கிற வெள்ளி அரைஞாண் கயிறுகளும் நாலாவித நிறங்கலந்த தலைக்குட்டைகளும் அணிந்து செம்பு, குடை, தடிகளுடன் வெளிப் புறப்படுவார்கள். இவர்கள் வேஷம் கட்டக் குறைந்தது ஒருமணி இரண்டுமணி நேரஞ் செல்லும். கை பார்ப்பதும், குளிசம் கட்டுவதும், மிளகு, மஞ்சள் மந்திரித்துக் கொடுப்பதும், காரியம் அனுகூலப்படுவதற்கும், வசியத்திற்கும், மை கொடுப்பதும், வேணுமானால் வயித்தியமும் செய்வதாகவும் சொல்லி ஜனங்களை ஏமாற்றுவார்கள். ஆண்பிள்ளைகள் கையைக் காட்டினால், இவர்கள் "நீ மாய கிஷ்டன், கோபக்காரன். நாலுபேருக்கு சோறுபோடுவையே, கண்டி: ஒருத்தர் கஷ்டத்திற்கு கையேந்தி இருக்கமாட்டாய்; மஞ்சிவாடு; நல்ல ராசிக்காரன். உனக்கொரு தத்து வந்தது; அது நீங்கிப்போச்சுது. இன்னொரு தண்ணி தத்திருக்குது. முருகன், ஏழுமலையான் கிருபையினால் உனக்கொரு சஞ்சலமுமில்லை. உனக் கிரண்டு தாரம்;

மூன்று பிள்ளை கெட்டியா யிருக்குது. கிழக்கே இருந்து பெண் டாட்டி வாராள். தம்பி! நாயற்றுக்கிழமை வடக்கே போகாதே நீ போகிற காரியம் ஜெயமாகவேணும். நானொரு அறுவங்கட்டை தூபம் போட்டுக்கொடுக்கிறேன். உன்பாக்கியம். ஏதாவதுகாணிக்கை கொடு. கெட்டிவாடு" என்றுசொல்லி ஏமாற்றுவார்கள். பெண்பிள்ளை கையைப்பார் என்றால், "ராசிபலம் குருபலம் அம்மா தாயி! லட் சிமி, என்னம்மா! கெட்டிக்காரி ஆச்சே, கோபக்காரி, இந்த அம்மா ராசி புருஷன் பூனைபோ லிருக்கணுமே" என்று சொல்வார்கள்.

பெண்பிள்ளை:—ஐயா சன்னாசி ! இந்தப் பெண் இப்படியே இருக்குது, பேயோட்டிப் பதியும் வைத்தோம். நாலு வருஷமாய் மரம்போ லிருக்கிறது. என்ன என்று பாருங்கள்.

சந்நியாசி:—அம்மா தாயி ! தெய்வபலம் குருபலம் படவட் டம்மா, மாரித்தாயே, சுருளூர் செங்மம்மா, பிச்சமுண்டாகொடுக்கு; என்றால் என்ன ஆகப்போகிறது ? ஆனாலும் என் கைராசி யெல்லாம் அனுகூலமே. சுப்பிரமணியர் துணையிருப்பார். நம்ப குரு பேரைச் சொல்லி ஒரு மஞ்சள் தூபம் போட்டுக் கொடுக்கிறேன், நாலு மிள கிருந்தால் கொண்டுவா. இந்தக் குழந்தைமேல் ஒரு காத்திருக்குது. அது கெட்டது லவுண்டி, போ என்றால் போகுது, என் கையால் இந்த குழந்தைக்கு ஒரு குளிசம் கட்டி நம்முடைய குரு பேரைச் சொல்லி கொஞ்சம் விபூதி கொடுக்கிறேன். இதுவே குளியாய் நின் றால் மேலே வருஷம் வரும்போது உங்கள் பாக்கியம். ஒரு வேஷ்டி எடுத்துக் கொடுங்கள். இதோ ஐயா மணலூர் கண்ணயிர ரெட்டி வீட்டில் கொடுத்த தலைகுட்டை. அவுங்க பேர் சொல்லிக் கட்டிக் கொண் டிருக்கிறேன் தாயி.

பெண்:—அப்படியே செய்யுங்கள். இந்தப் பெண்ணுக்கு அனு கூலமானால் அதற்கென்ன தடை ?

சந்:—அம்மா தாயி ! கொஞ்சம் கற்பூரம், ஒரு தேங்காய் ; அரைபடி அரிசி கொண்டு வாருங்கள். சூளை அரிசிக்கார அம்மா பெண்ணுக்குச் செய்தேனே, என்னமோ தெய்வபலமிருந்து குரு கடாக்ஷம் குழந்தை பிறக்கவில்லையா ?

பெண்:—கொண்டு வந்தேன், உன் கைராசி என் பெண்ணுக்கு ஒரு காய் காய்க்கவேணும், பார்க்கணும்.

சந்:—உங்கள் பிக்ஷை, ஏதாவது காணிக்கை வையுங்கள்.

பெண்:—என்ன சன்னாசி, துட்டுகூட கேட்கிறையே, மேல் ஷம் வேஷ்டி எடுத்து கொடுக்கச் சொன்னியே.

சங்:—இது குரு காணிக்கை. எனக்கா? குருவுக்குச் சேர்க்க வேண்டிய தாச்சுதே.

பெண்:—இந்தா; அரையணா தானிருக்கிறது. சரியாய்ச் செய்.

சங்:—உங்கள் பாக்கியம். எனக்கு லட்சம் விராகன். ஏழு மலையான், வெங்கடாசலபதி, திருத்தணி முருகா, பழனியாண்டி, செங்கல்வராயா, பூவாடைக்காரி, படவட்டம்மா, கஞ்சி காமாட்சி, ஈஸ்வரி தாயே (என்று தன்னிட மிருக்கிற சில சிறு விக்கிரகங்களைக் கடை பரப்பி, "ஓம் சுவாஹா, உச்சிச் சுவாஹா" என்று மந்திரம் சொல்லுவதுபோல மொண மொணவென்று சொல்லி, கற்பூரத் தைக் கொளுத்திக் கற்பூரப்புகையைச் சாமிகள் பக்கமாய்க் கையால் தள்ளிக் கும்பிடுவான். பிறகு முன்னமே டஜன் கணக்காய்த் தயார் செய்திருக்கிற உலர்ந்த கொருக்காபுளி வேரின்மேல் பச்சை, சிகப்பு, கறுப்பு, மஞ்சள், நூல்களைச் சுற்றியிருக்கிற குளிசத்தை எடுத்துக் கற்பூரப் புகையில் காட்டி அதைக் கொடுத்து) இதை ஒரு வெள்ளி தாயித்தை செய்து அதில் போட்டுக் கட்டிக் கொள்ளச் சொல்லுங் கள். இப்போ அவசரத்திற்கு வேணுமானால் என்னிடம் பித்தளை தாயித்தை யிருக்கிறது; கொடுக்கிறேன்" என்று டஜன் இரண்டே காலணுவுக்குத்தான் வாங்கி வைத்திருப்பவைகளில் ஒன்றை ஓர் அணு வீதம் கொடுப்பான் பிறகு, அம்மா தாயி இந்த பிளைகைக் காலையில் எழுந்திருக்கும் போதே யார் முகத்திலும் முழிக்காமல் முருகா என்று தினம் ஒன்று சாப்பிட்டு வரச் சொல்லுங்கள். மேல் வருஷம் மறந்து போகாமல் என்மேல் கவன மிருக்கவேணும்; என் னமோ உங்கள் பாக்யம்.

பெண்:—அப்படியே செய்கிறேன்; உன் கைராசி பார்க்கணும்.

சங்:—அதுகெட்டது போ தாயி; குருபலம். ஒரு லவுண்டி யிருக்கிறது. அதற்கு என் கையால் ஒரு சிகிச்சை செய்து போகி றேன்; பிறகு பாருங்கள் தாயி.

பெண்:—அப்படியே செய்யுங்கள். உன் புண்ணியம். இந்த குழந்தை வயற்றில் ஒரு பூ பூக்கணும்.

சங்:—எதுவும் வேண்டியதில்லை; ஒரு கோழி இருந்தால் கொண்டுவா தாயி.

பெண்:—இதோ கொண்டு வந்தேன்.

சந்:—(வாய்க்குள்ளவே முணமுண வென்று சொல்லியும் அடிக்கடி கொட்டாவி விட்டும் அந்தப் பெண்ணை மூன்று சுற்றுச் சுற்றி அதைத் தானே எடுத்துக்கொள்கிறான்.) அம்மா தாயி! கொஞ்சம் தாகத்துக்கு வேணும். உங்கள் பாக்கியம் மாரித்தாயே.

பெண்:—ஓ சன்னியாசி! கொஞ்சம் பழைய திருக்கிறது; சாப்பிடுகிறாயா?

சந்.—சாமி கடாக்ஷம் தாயி! மகலட்சுமி யாச்சே! என் தாயி பாக்கியம். (என்று சாப்பிட்ட பின்) மேல் வருஷம் இந்தப் பக்கம் வந்தால் வருவேன். உங்கள் பாக்யம்; மறந்து போகாதே தாயி.

பெண்:—அப்படியே ஆகட்டும் ஐயா, நமது பெண்ணுக்கு வழி பிறக்கணும்.

சந்:—உங்கள் பாக்கியம்; போய் வருகிறேன். கொஞ்சம் உப்பு மிளகாய் வேண்டும். உங்கப் பேரைச் சொல்லி ராத்திரி சமையல் செய்து சாப்பிடணும்.

பெண்:—என்ன சன்னாசி? இருந்திருந்து கேட்கிறாய்; காணிக்கைகூட வாங்கிக்கொண்டாயே.


சந்:—அடபாபமே! இந்தக் காணிக்கை குருவுக்குச் சேருகிற தாச்சே.

பெண்:—குரு எங்கே யிருக்கிறார்? சும்மாணு குருவுக்கென்று சொல்றையே.

சந்:—எங்கள் குரு மொண்டி ஜெகனாதத்தி லிருக்கிறார். எங்களுக்குப் பிள்ளை குட்டி சமுசாரம் கிடையாது. எங்கள் ஊர் காஞ்சிபுரத்திற் கடுத்த காவாந்தண்டலம். நான் சிறுவயதிலே வீட்டில் சண்டை போட்டுக்கொண்டு வடக்கே வெகுதூரம் போனேன். அங்கே மொண்டி ஜெகனாதத்தில் எங்கள் குரு என்னை மூன்று நாள் சாணிக்குழியிலும் மூன்று நாள் மஞ்சள் குழியிலும் போட்டு மந்திர உபதேசம் செய்தார். அதுமுதல் தாய், தகப்பன், அண்ணன், தம்பி, உற்றார், பெற்றார் ஆசை கிடையாது. போனவாட்டி என் அக்கா என்னோடு புறந்த தோஷம் எவ்வளவோ பாடுபட்டா. குரு சொல் தள்ள முடியுமா?

என்று பொய்யும் புனைசுருட்டுகளும் தில்லும் பில்லுகளும் ஆளுக்குத் தக்கவாறும் வேளைக்கு ஏற்றபடியும் பேசிச் சுமார் இரண்டாயிரம் மூவாயிரம்பேர் வரையில் சீவனஞ் செய்கிறார்கள். பல

வருஷ காலமாய்க் குருவினிடம் சிஷியராயிருந்து சைவ ஆகம விதியின்படி ஒழுகி வந்து நல்ல பரிபக்குவத்தை யடைந்த மடாதிபதிகள் தமது சிஷியருக்குக் கொடுத்து வந்த காவி வஸ்திரமானது இவர்களிடம் என்ன பாடு படுகிறது! இவர்கள் காலையில் வெளியில் சுற்றி அரிசி, விறகு, மிளகாய் முதலியவற்றைச் சேகரித்துப் பணமாக்கிக் கொள்ளுகிறார்கள். பகல் பனிரண்டுமணிக்குப் பஞ்சாலை, ரெயில்வே ஓர்க்ஷாப் முதலிய விடங்களில் பகல் போஜனத்தையும் இராசாப் பாட்டையும் தேடிக்கொள்கிறார்கள். இரவானதும் இவர்கள் அருத்தமில்லாத ஞானப் பாட்டுகளையும் நல்ல தங்காள் பாட்டுகளையும் தெருத் தெருவாய் பாடிக் காலை பழையதுக்கு வழிதேடிக் கொள்ளுகிறார்கள். மோசக்காரர்களும் சோம்பேறிகளும் நிறைந்துள்ள நம் நாடு எப்படிச் செம்மைப்படும்?



5. நாட்டக்காரர்.

சாமியார்:—அப்பன்! ஒரு சிட்டிகை பொடி இருக்குமா? இந்த நாய்க் குட்டி கேட்டுதுணு கோபமோ? வேண்டாமடா.

நாட்டுப்புறத்தான்:—நான் பொடி போடும் வழக்கமில்லை சாமி.

சாமியார்:—நல்லது; ஒரு காசு கொடுப்பாயடா?

சிஷியன்:—கொடுக்கிறேன் என்று சொல். அவர் வாங்கவே மாட்டார்.

நாட்டு:—இந்தாரும் சாமி.

சாமியார்:—வேண்டாமடா பயலே. இந்த அடிமை மனஞ் சோதிச்சுது; வேண்டாமடா; போடாப்பா போ.

நாட்டு:—திரும்புகிறான்.

சாமியார்:—அடா பயலே! ஒரு வெள்ளிக்காசு கொடுப்பாயடா பார்ப்போம்.

சிஷியன்:—அப்படியே கொடுக்கிறேன் என்று சொல்.

நாட்டு:—அப்படியே கொடுக்கிறேன் சாமி.

சாமியார்:—பரிபூர்ணமடா பயலே; அதுவே போதும். காசு வேண்டாமடா பயலே; கொடுக்கிறேன் என்று சொன்னயே அதுவே மகா பாக்கியம். இந்த நாய்க்குட்டி இச்சிக்குது இந்தக் கடுக்கனை; கொடுப்பாயடா?

நாட்டு:—அப்படியே கொடுக்கிறேன்; போட்டுக்கொள்ளுங்கள்.

சாமியார்:—அடா பயலே! வேண்டாமடா; பயித்தியக்காரப் பயலே! ஆத்திரம் துறடா; வினை நீங்கிப் போச்சுண்ணு சொல்லடா; பழனிபாண்டி பேரைச் சொல்லடா; வேலுமயிலுஞ் சொல்லடா; (விரல்கள் சந்திலும் கைந்நகத்திலு மிடுக்கி யிருக்கும் கற்கண்டை அவன் வாயில் போடுகிறான். சிலசமயம் சிஷியன் அதைத் தரையில் போட்டிருப்பதுமுண்டு.) அடா பயலே! இந்த நாய்க்குட்டி பத்து பண்டாரங்களுக்கு அன்னம் போட இச்சிக்குது; ஒரு வெள்ளிக்காசு கொடுக்குமடா.

சிஷியன்:—எல்லாரையுமே சாமியார் கேட்கமாட்டார். நல்ல வேளையாய் உன்னைக் கேட்கும்படியான பாக்கியம் பெற்றாய். எவ்வளவோ பேர்கள் வலிய வலியக் கொடுத்தாலும், வாங்கிக்கொள்ளாத இந்த மஹாத்மா உள்ளமுவந்து உன்னைக் கேட்கும்போது ஒளியாமல் உன்னிட மிருக்கிறதைக் கொடுத்து அவர் கைப்பட விபூதி வாங்கிக்கொள். எல்லா வினையும் ஒழிந்து போகும்; நல்ல காலம் உனக்கு.

சாமியார்:—அடா பயலே! இந்த குடையைக் கொடுப்பாயடா?

நாட்டு:—விழிக்கிறான்.

சாமியார்:—அடா அற்பப் பயலே! இந்த அடிமைக்கு வேண்டாமடா. உன் மனஞ் சோதிக்கக் கேட்டுது; சாமியெண்ணு சொல்லடா; கையைப் பிடியடா.

(அவன் தன் தேக முழுமையும் விபூதி பூசிக்கொண்டிருப்பான். ஆனால் தன் மார்பில் மாத்திரம் வெறும் விபூதியை வைத்து அதை ஆட்டு ஜவ்வால் பிசினிகொண்டு மூடியிருப்பான். மார்பில் பளீர் என ஓர் அடி அடித்ததும் ஒட்டியிருக்கும் ஆட்டு ஜவ்வின் பிடிப்பு விட்டுவிடும். ஜவ்வை அப்படியே சேர்த்துப் பிடித்துக்கொண்டு விபூதியைமாத்திரம் நாட்டுப்புறத்தான் உள்ளங்கையில் வைக்கிறான்.)

சிஷியன்:—சாமிண்ணு சொல்லி நெற்றியி லிட்டுக்கொள். உன் நல்ல காலத்தால் சாமியார் விபூதி கொடுக்கும் பாக்கியம் பெற்றாய். இனி உனக்கு ஒன்று பத்தாகப் பலிக்கும்.

**சாமியார்:**—இந்தக் கடுக்கனைக் கொடுப்பாயா பார்ப்போம்!

**நாட்டு:**—விழிக்கிறான்.

**சிஷியன்:**—மயங்காதே; சாமியார் வாங்கவே மாட்டார். ஒரு சமயம் வாங்கிக்கொண்டால், உனக்கு ஒன்றைப் பத்தாக இப்பவே செய்வார். தாமசம் செய்யாதே; கழட்டிக்கொடு. சாமியார் உன் மனஞ் சோதிக்கிறார்; பயப்படாதே.

**நாட்டு:**—இந்தாரும் சாமி; (கழற்றிக் கொடுக்கிறான்.)

**சாமியார்:**—பரிபூர்ணமடா பயலே.

**சிஷியன்:**—பரிபூர்ணமென்று சொல். அவர் கையால் வீபூதி வாங்கிக் கொண்டு சாஷ்டாங்கமாக அவரைச் சேவித்துக் கொள். நல்ல மஹாத்மா; அவருக்கு இதுவெல்லாம் வேணுமென்றால் கிடைக்காதா? இது ஒரு திருவிளையாடல் சுவாமியாருக்கு.

**நாட்டு:**—பரிபூரணம் சாமி! (வீபூதி வாங்கி நெற்றியில் கொஞ் சம் இட்டுக்கொண்டு மற்றதை வாயில் போட்டுக்கொண்டு சேவித் துக் கொள்ளுகிறான்)

**சாமி:**—இந்த அடிமைக்கு உத்தரவடா அன்பா?

**சிஷி:**—அப்படியே உத்தரவென்று சொல்.

**நாட்டு:**—அப்படியே போய் வாருங்கள் சாமி.

**சாமி:**—உன்னுடைய சொத்து ஒரு வெள்ளிக்காசு வேணு மடா.

**நாட்டு:**—அஞ்ஞு நான்குதான் இருக்கிறது.

**சிஷி:**—இருக்கிறதைக் கொடு; சாமியார் நல்ல உள்ளம் உடை யவர்.

**நாட்டு:**—இந்தாரும் சாமி. (நாலணாவைக் கொடுத்து விட்டு விழிக்கிறான்.)

**சாமி:**—சாமிண்ணு சொல்; வினை நீங்கிப் போச்சுண்ணு சொல்.

என்று வீபூதியை அவன் கையில் வைத்துவிட்டுச் சாமியாரும் சிஷியனும் சீக்கிரம் நடக்கிறார்கள்.

இப்படிக் கொஞ்சம் மலப்பாகக் கிடைத்துவிட்டால் அன்றை யப் பொழுதுக்கு இவர்கள் வேறு ஒருவரையும் ஏமாற்றமாட்டார் கள். ஒருகால் இவர்களைக் கண்டுபிடிக்க வேணுமானால் சமீபமாக வுள்ள கள்ளுக் கடையில் போய்ப் பார்க்கலாம். இவர்கள் அங்கே தங்கள் வேஷத்தைக் கலைத்துவிட்டுக் குடித்துக்கொண் டிருப்பார் கள்; அல்லது அடுத்த கிராமங்களுக்குப் போய்விடுவார்கள். இவர்

கள் சென்னைக் கடுத்த பேட்டைகளிலுள்ள சத்திரம், சாவடி, தோட்டம் முதலிய விடங்களில் தங்கி யிருப்பார்கள், சாமியார் ஒருவனே என்றும் சிஷியன் ஒருவனே என்றும் கட்டாயம் கிடையாது. சமத்காரமாய் நடக்கத்தகுந்தவன் மழுங்க மொட்டை யடித்துக்கொண்டு, அடியில் லங்கோட்டா அல்லது கௌபீனத்தையும் மேலே காஷ்மீர் சால்வை அல்லது உல்லன் பழைய கோட்டையும் அணிந்திருப்பான். நன்ருய்ப் பேசத் தெரியாதவன் தன் கையில் ஒரு விசிறியும் அக்குளில் ஒரு சிறிய மூட்டையும் வைத்துக்கொண்டு சிஷியனுக நடிப்பான். இந்த மோசக்காரர்கள் கும்பலான இடத்திற்குப் போகமாட்டார்கள். நாட்டுப் புறத்தார் களையும் தனித்து வரும் வழிப்போக்கர்களில் ஏமாந்தவர்களையும் கண்டு ஏமாற்றுவார்கள். இவர்களின் சுவாமியார் வேஷமும் பேசுந் திறமையும் எப்படிப்பட்டவர்களையும் மயக்கும் சக்தியுடையனவா யிருக்கும். இவர்கள் கற்கண்டு, சர்க்கரை வீபூதி, திருச்சூரணம், ஆகிய இவைகளைச் சிறு சிறு உருண்டைகளாகச் செய்துகொண்டு கைந் நகத்திலாவது விரல்கள் சந்திலாவது வைத்திருப்பார்கள், சில சமயங்களில் சிஷியன் மேல்படி உருண்டைகளைச் சாமியாருக் கெதிரில் தரையில் போட்டு விடுவான். அவர் குனிந்து கொஞ்சம் மண்ணை எடுப்பதுபோல அந்த உருண்டையையும் சேர்த்து எடுத்துக்கொள்வார். இவர்கள் சில சமயங்களில் தாம்பரபஸ்பம், ரச பஸ்பம் முதலியவைகள் தம்மிட மிருப்பதாகவும் பிறரை ஏமாற்றுவார்கள். இவர்கள் கைப்புரட்டு வேலையை நன்ருய்க் கவனித்துப் பார்த்தாலல்லது கண்டுபிடிப்பது கஷ்டமாகவிருக்கும். இந்தத் துன்மார்க்கர்களுக்கு ஒன்றுக்குக் குறையாமல் வைப்பாட்டி யுண்டு; எந்நேரமும் குடிவெறியில் மூழ்கிக் கிடப்பார்கள். இவ்வாறு மோசம் போகும் நமது நாட்டார் சுயவரசாட்சி யெப்படி நடத்துவார்கள்? இன்னும் அந்தகாரத்தில் அழுந்தி யிருப்பவர்கள் கோடிக் கணக்கி லிருக்கிருர்களே!

---

## 6. பொன் துண்டு மோசம்.

இம்மோசக்காரர்களில் ஒருவன் இரண்டங்குலம், மூன்றங்குலம் நீளமுள்ள பித்தளைக் கம்பியின்பேரில் கனக்கப் பொன் மூலாம் பூசி வைத்துக்கொண்டு கொஞ்சம் நகைநட்டுகளுடன் இருக்கும் ஏமாந்த ஸ்திரீகள் தனித்து வருவதைப் பார்த்து மூலாம்பூசிய பொன் துண்

டை அவர்களுக்கு எதிரில் போட்டுவிட்டுப் போய் விடுவான். மற்றொருவன் அவனைத் தொடர்ந்தாற்போல் வந்து ஷை ஸ்திரீ பார்க்கும்படி அதைக் குனிந்து எடுத்து அவனே வலிய ஷை ஸ்திரீயிடம் "இதோ பொன் துண்டு அகப்பட்டது; நீயும் பார்த்தபடியால் உனக்கும் இதில் பங்குதான்; இதை வெளியில் சொல்லாதே" என்பான். இதற்குள் மூன்றும் மனிதன் வந்து தனக் கொன்றும் தெரியாதவனைப்போல் என்ன சங்கதி? என்று மோசக்காரனை விசாரிப்பான். பொன் துண்டு எடுத்தவன் முதலில் மறைத்துப் பேசுவதுபோலும் கொஞ்சம் நிதானிக்கிறது போலும் பாசாங்கு செய்வான். மூன்றும் மனிதன் மேற்படி ஸ்திரீக்காகப் பரிந்து பேசுபவனைப்போல் நடித்து, "இந்த அம்மாள் நல்ல மனுஷியா யிருக்கின்றாள்: என்ன அகப்பட்டது சொல்" என்று அவனைக் கேட்பான். அவன் பொன் துண்டென்று சொன்னவுடன் "நீங்கள் இரண்டுபேரும் வரும்போது அது அகப்பட்டமையால், அது உங்களிருவருக்கும் பங்குதான்; முன்னே அதைக் காட்டு பார்ப்போம்" என்பான். பின்பு அவன் அந்தத் துண்டை வாங்கி எடை, மாற்று முதலியவைகளைக் கணக்குப் பார்ப்பவன்போல் பார்த்து "இது அறுபது ரூபாய்க்குக் குறையாமல் விலைபெறும். இந்தம்மாள் பாகாச்சாரம் ரூபா முப்பதுக்குக் கொடுத்துவிடு; பெண்பிள்ளை! பாவம் சரிபாகம் கொடுத்துவிட்டுப் போ" என்பான். பொன்துண்டை எடுத்தவன் "யாரையா இல்லை என்று சொல்கிறது; வீண் காபுரா செய்கிறீர்; இந்த அம்மாள் பாகம் ரூபா முப்பதா? அப்படியே கொடுக்கிறேன். தடையில்லை; திருவத்தூரிலுள்ள என் வீட்டிற்கு வரச்சொல்; கொடுத்துவிடுகிறேன். வீட்டிற்குப் போன நாழிக்குப் பணத்தைக் கட்டிவிட்டு மறுவேலை பார்க்கிறேன்.

**மத்தியஸ்தன்:**—இது ஆகாத காரியம். உன் பின்னால் ஒரு பெண்பிள்ளை வரவாவது கொள்ளவாவது? முடியவே முடியாது. வேணுமானால் இந்தம்மாள் முப்பது ரூபாய்க்கு ரூபா இருபத்தஞ்சு கொடுத்து விடுறுங்கோ. நீ என்ன சொல்லுகிறாய்?

**எடுத்தவன்:**—இதோ இருக்கிற திருவத்தூருக்கு வர முடியாதென்றால் நான் என்ன செய்கிறது? ரூபா கையிலேயா வைத்துக் கொண்டிருக்கிறேன்? உங்களிஷ்டம் போல் என் பாகாச்சாரம் முப்பது ரூபா கொடுத்துவிட்டால் பொன் துண்டைக் கொடுத்து விடுகிறேன்.

மத்தி:—சரி. முன்னே பொன்னை இந்த அந்தம்மாளிடம் கொடுத்து விட்டுப் பேசு. என்ன அம்மா சொல்கிறாய்? ரூபா உன்னிடமிருந்தால் கொடுத்து விட்டுப் பொன்னை எடுத்துக் கொண்டுபோ எடு ரூபா. நானே யிருந்து பைசல் செய்துவிடுகிறேன்.

பெண்பிள்ளை:—என்னிடம் ரூபா ஏது? இரண்டு ரூபா இருக்குது எங்க வீட்டிற்கு வந்தால் பணத்தைக் கட்டிவிடுகிறேன். நீங்களும் வாரும்.

மத்தி:—என்ன ஓய் சொல்கிறாய்? கூடவே போய் வாங்கிக் கொள்ளுகிறாயா?

எடு:—என் வீட்டிற்கு மாத்திரம் இந்தம்மாள் வரமுடியாத போது நான் மாத்திரம் விழலாண்டியா? போ போ! இந்தம்மாளுக்குப் பங்குதான் ஏது? நான்தானே கண்டெடுத்தவன். வேணுமானால் இப்பவே கொடுத்துவிட்டு மகராசியாய் பொன்னை எடுத்துக் கொள்ளட்டும். யார் வேண்டாமென்கிறது?

மத்:—பெண்பிள்ளையைக் கொஞ்சம் எட்ட அழைத்துப்போய், "அம்மா! நீ விழித்தால் ஆகாது. இவன் தன் வீட்டண்டைபோய் அடாவடி செய்வான்போல் இருக்கிறது. நான் சொல்கிறபடி உன்னிடமிருக்கிற நகையையாவது மதிப்புக் கட்டிக் கொடுத்துவிட்டு நீ இந்தப் பொனனை வாங்கிக்கொள். அவனிருக்கிற ஜாடையைப் பார்த்தால் பொன்னை யெடுத்துக்கொண்டு நழுவி விடுவான்போ லிருக்கிறது. (அந்தப் பெண்ணை அவனுக்கு அருகில் அழைத்து வந்து) இதோ! இந்த அம்மாள் காதில் போட்டிருக்கிற கம்மல் ரூபா இருபது; மிஞ்சினால் ஆறுவாரக னிருக்கும். இந்தக் கம்மலைப் பெற்றுக்கொண்டு பொன்னைக் கொடுத்து விடு. இந்த அம்மாள் பச்சென்று காப்பாவது செய்து போட்டுக்கொள்ளட்டும்.

எடு:— நல்ல மாதிரி! நல்ல மத்தியஸ்தம்! நான் கொடுத்தால் முப்பது ரூபா கொடுக்கவேணும்; இந்தம்மாள் கொடுக்கிறதானால், இருபது ரூபா பெறாத கரப்போக்குக் கல் கம்மலையா வாங்கிக்கொள்றது? யாருக்கு மில்லாமல் போலீசில் ஒப்பித்து விட்டால் போச்சுது.

மத்தி:— அம்மா! இந்தப் பொன் அறுபது ரூபாய்க்கு மேல் மதிப்பிருக்கிறது. இன்னும் ஏதாவது இருந்தால் கொடுத்துத் தொலைத்துவிடு. என்ன செய்கிறது? நான் வாராமலிருந்தால் உனக்குக் காட்டவே மாட்டான்; பொன் மாத்திரம் நல்ல பொன்.

பெண்:—வேறே என்னிட மொன்றுமில்லை. ரூபா இரண்டிருக்கிறது; வீட்டிற்கு வந்தால் மற்றதைக் கொடுத்துவிடுகிறேன்.

மத்தி:—ஓய்; வாரும்; சொன்ன கேள். இது சங்கதி நாலு பேருக்குத் தெரிந்தால் மோசமாகும்; வெட்ட வெளிச்ச மாகும்; சேவகன் பிடித்துக்கொள்வான். இந்தக் கம்மலையும் ரூபா இரண்டையும் வாங்கிக்கொண்டு பொன்னைக் கொடுத்துவிடு. இந்த அம்மாளிடம் வேறே எதுவுமில்லை. என்ன செய்கிறது? பொன்னென்னமோ சுயமானது; என்ன செய்யலாம்? ஓர் ஓர்சலாய்ப்போங்கள்.

எடு:—எனக்குப் பேசுகிறவர் யாரும் கிடையாது. உங்களிஷ்டம்போல் செய்யுங்கள்.

பின்பு அந்தப் பெண்பிள்ளை கம்மலையும் ரூபாயையும் கொடுத்துவிட்டுப் பொன்னை வாங்கிக்கொண்டு போய்விடுவாள். பொன் துண்டுக்குச் சொந்தக்காரியான அவள் சந்தோஷத்தால் வந்த வேலையையும் கவனியாமல் வீட்டிற்குப்போய் வெகு பத்திரமாய்ப் பொன்னை வைத்துவிட்டு வேளை வேளைக்கு "போலைக்குப் பொன் கிடைத்தால் பொழுதுவிடியத் தொட்டுத் தொட்டுப் பார்ப்பாள்" என்பதுபோல் அதை எடுத்து எடுத்துப் பார்த்துக்கொண் டிருப்பாள். பாவி முண்டை! நாள் பத்தானலும் சங்கதி வெளியிடாமல் காப்புச் செய்யக் கூலிமாத்திரம் அக்கம்பக்கம் விசாரித்தவண்ணமா யிருப்பாள். கடைசியாக இவளுக்கே பூரிப்பு வந்தபோதாவது கம்மல் எங்கே என்று யாராவது விசாரித்தபோதாவது தான் கொண்டுவந்த பொன் துண்டை வெகு ரகசியமாய்க் காட்டுவாள். சிலர் சிரிப்பார்கள்; சிலர் துக்கப் படுவார்கள். அன்று அவ்வீட்டில் இவள் மோசம் போனதைப்பற்றித் துக்கம் கொண்டாடுவார்கள்.



## 7. அங்காளம்மன் பிச்சை.

பெரும்பாலும் குறத்திகளும், சிறுபான்மை கொண்டவனை விட்டுக் கண்டவனை இழுத்துக்கொண்டுவந்து கடைசியில் தன்னை ஒருவரும் லட்சியம் செய்யாத அவ்வளவு நிலைமை யுடையவர்களாகிய பலஜாதிப் பெண்களும் இவ்வேஷம் போட்டுக்கொண்டு பிச்சை யெடுப்பார்கள். இவர்கள் சூலம் தலைவைத்துச் சுட்ட வாயகன்ற சட்டியில் கற்றாழைச் சோற்றை அடியில் வைத்து அதன் மேல் திட்டமாகப் பானை ஓடு மூடி, அதற்குமேல் விறகுகளைக் கொண்டு நெருப்பு மூட்டிச் சட்டியைச் சுற்றிலும் மஞ்சளைப் பூசி குங்குமப் பொட்டுகளை வைத்து வேப்பிலையைக் கட்டித் தலைமீது வைத்துக்கொண்டு மஞ்சள் பூசிய புதிய நூல் சாடுகளை அம்பாரமாகக் கழுத்தில் மாட்டிக்கொடு நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டும் பித்தளைத் தகட்டில் செய்திருக்கிற கண் மலர்களையும் பார்த்தவர் பிரமிக்கத் தக்கதாய்க் கட்டிக்கொண்டு கையில் வெள்ளிச் சித்திரப் பிரம்புடன் வீடு வீடாய் நுழைந்து,

"வேப்பிலைக் காரியடி! விளையாடும் மாரிமுத்து;
பச்சிலைக் காரியடி! பழிகாரி மாரிமுத்து;
ஏளிதம் செய்தவரை எமலோகம் ஓட்டிவைப்பாள்;
பரிகாசம் செய்தவரைப் பல்லைப் பிடுங்கிவைப்பாள்;
ஆர்கடன் வைத்தாலும், இந்த மாரி கடன் வையாதோடி;
சண்டாளக் காரியடி! சதிகாரி மாரிமுத்து;
வாசலில் வந்தவளை வலக்காரம் பேசாதோடி;
மாரிபிச்சை இடாதவரை வல்வினைக்கா ளாக்குவாடி;
கத்தியைப் போல் வேப்பிலையைக் கதறவிட்டாள்லோகமெல்லாம்:

ஈட்டியைப்போல் வேப்பிலையை எகறவிட்டாள் லோகமெல்லாம்;
வந்து வெகு கோமாச்சு வட்டிபோட்டு வாங்குவாடி''

என்று பேதைப்பெண்கள் மனம் திடுக்கிடும்படி ஆங்கார ஓங்கார மாய்ப் பாடுவார்கள். இந்தத் தொழிலில் கைதேர்ந்த பெண்கள் கை வீசி ஆடும் ஒய்யாரமும், பாடுகிற நேர்த்தியும் இங்குவிளக்குவதுவெகு கஷ்டமென்பதை வாசிக்கிறவர்களே தெரிந்து கொள்ளவும். இப்ப டிப்பட்ட வேஷத்திற்கும் ஆர்ப்பாட்டத்திற்கும் பேதைப் பெண்கள் பயந்து தமது வீட்டிலுள்ள அரிசியோ துட்டோ போட்டுக் கையெ டுத்துக் கும்பிட்டனுப்புவார்கள். இத்தகைய வேஷகாரிகளுக்குப் பகல் பன்னிரண்டு மணிக்குள் அரிசிமாத்திரம் இரண்டு படியும் ரொக் கமாய்க் கையில் மூன்றணா அல்லது நாலணாவும் கிடைத்துவிடும். பிள்ளை குட்டிகளைப் பட்டினிபோடும் பாவிப் பெண்களின் கஷ்டம் நமக்காகுமா என்று நினையாமல் அன்றையதினம் பூராவும் இந்தச் சண்டாளிகள் சலிக்கக் குடித்துக்கொண் டிருப்பார்கள்.

---

## 8. பலவகைப் பிச்சைக்காரர்கள் மோசம்.

தொழில் சீவனஞ் செய்ய மனமில்லாத சோம்பேறிகளுள் சிலர் தங்கள் தேகமுழுதும் விபூதி பூசிக்கொண்டு திரிவோடும் கையு மாய் யாசிப்பார்கள்.

சிலர் சில கண்ணாடிப் படங்களைப் பரப்பி வைத்துக்கொண்டு கீழே சால்வைகளை விரித்துத் தாங்களே சில தம்படிகள், அரிசி, பொரி இவைகளைப் போட்டுக் கடை பரப்பிக்கொண்டு போவார் வரு வாரைப் பலாத்காரம் செய்து யாசிப்பார்கள்.

சிலர் முள் மிதியடியின்மேல் நின்றுகொண்டும் கையில் ஒரு தண்டாயுதம் வைத்துக்கொண்டும் ஞானப்பாட்டுகளை வெகு உருக் கமாய்ப் பாடி யாசிப்பார்கள்.

சிலர் காவடிகளில் கூடைகளைக் காவித் துணிகளால் மறைத்துக் கொண்டு அன்னக்காவடி தர்மம் என்று வீடுவீடாய் வருவார்கள். நாலுபேர் ஐந்துபேருக்குப் போதுமான சாதம் கொண்டுபோவார் கள். இவ்வளவு சாதம் எதற்கு என்று கேட்டால் "இரந்து பரத்துக் கிடு என்று சொல்கிறபடியால் நாலுபேருக்கு மகேஸ்வர பூஜை நடத் துகிறேன்" என்பார்கள். இவனைச் சார்ந்த இரண்டொருவர் துட்டாக யாசகம் செய்து வந்ததை சலிக்கக் குடித்து விட்டு மிச்சமான

துட்டை மீன்வாங்கிப் பக்குவமாய்க் குழம்பு செய்து வைத்துக் கொண்டு காவடி சாதத்தை எதிர்பார்த்திருப்பார்கள்.

சிலர் பித்தளையால் வார்ப்பித்த பித்தளைக் கூடைகளைக் காவடியில் கட்டிக்கொண்டு வீடுவீடாய் அரிசிகாவடி தர்மமென்றுவருவார்கள். இத்தகையோரில் யோக்கியர்களிருப்பார்களானால் சுயவரசாட்சிக்கு ஆள் தேட வேண்டியதில்லை.

பூ இடையர்களென்ற ஒரு வகுப்பார் அங்க ஈனமான மாடுகளைக் கையிலிருக்கிற ஜாட்டியால் தலையாட்டவும் காலடி நடத்து காட்டவும் படுத்துக்கொள்ளவும் வீட்டிலிருப்பவர்களைப் போய் முத்தம் கொடுக்கவும் பழக்கம் செய்துகொண்டு பெண்டாட்டி வரமாட்டேனென்றுளே என்று பரிகாச வார்த்தைகளால் பெண்கள் பிரமிக்கச் செய்து யாசிப்பார்கள்.

ஷேடியார்களே வடதேயத்து இந்துஸ்தானி யங்க வேஷம் போட்டுக்கொண்டு ஜோசியம் சொல்வதாய் யாசிப்பார்கள்.

சிலர் பித்தளைக் கிண்ணங்களில் துணிகளால் சிறு பந்துகள் செய்து அவை ஒரு கிண்ணத்திலிருந்து இன்னொரு கிண்ணத்தில் போய்விடுவதுபோலவும் ஓர் அடி நீளமுள்ள சிறு மூங்கில் குழாய்களில் ஈயக்குண்டுகளைக் கயிற்றில் கட்டிச் சாலேக்காய்சாய்த்து ஒரு குழாவின் உள்ளே போகிற மாதிரியாயும் ஒரு குழாவின் கயிறு வலிக்க வெளியில் வருகிற மாதிரியாகவும் இன்னனைய அநேகவித கைப்புறட்டு வேலைகளைச் செய்து யாசிப்பார்கள்.

இவர்களது பெண்பிள்ளைகள் நல்லதங்காள் பாட்டுப் பாடி யாசிப்பார்கள். ஒய்வு நேரங்களில் ஆண்பிள்ளைகள் நூல்வலை பின்னிக்கொண்டிருப்பார்கள். பெண்பிள்ளைகள் ஈச்சம்பாய் ஓலைப் பாய் பின்னுவார்கள். எந்தவகையில் துட்டு சேர்த்தாலும் அந்தப் பாழும் கள்ளுக்கு அழுது தொலைக்கவேண்டியவர்களே.

சிலர் வேலம் முள்ளைப் பக்குவமாய்ப் பரப்பி அதன்மேல் அரிகண்டம் போட்டுக்கொணடு யாசிப்பார்கள்.

சிலர் அண்டை அயலிலுள்ள மொண்டி முடங்களைப் பங்கு கொடுப்பதாய் அழைத்து வைத்துக்கொண்டு அவர்களைப் பிறர்க்குக் காட்டி யாசிப்பார்கள்.

சிலபெண்கள் ஒரு காவித்துண்டை வல்லவாட்டுப் போட்டுக் கொண்டு ஒரு கையில் பாலடையும் ஒருகையில் சிறு குழந்தையையும் வைத்துக்கொண்டு போவார் வருவாரைத் தொடர்ந்துபோய் சண்டித்தனம் செய்து யாசிப்பார்கள்.

சிலபெண்கள் சிறு பிள்ளைகளையும் பெண்களையும் கைகால்களை முடக்கிக் கட்டிவிட்டு, வாழைப்பழத்தை ஒன்றும் பாதியுமாய்ப் பிசைந்துவைத்து அதன்மேல் அழுக்குத் துணியைச் சுற்றி விளக்கெண்ணெயைத் தளும்பப்போட்டுக் குங்குமத்தைத் தெளிப்பார். அது பார்வைக்குக் கேவலம் பிணத்தைப்போல விருக்கும். இதைப் பார்க்க மனம் சகியாத பேதை மனதுடையவர்கள் மனங்கலங்கித் தங்களா லியன்றதைக் கொடுப்பார்கள்.

சிலபெண்கள் சிறு குழந்தைகளின் வாயிலும் மூக்கிலும் தேகத்தின்மேலும் பஞ்சை வைத்து விளக்கெண்ணெய் போட்டுக் குங்குமத்தைத் தெளிப்பார். அது இரத்தமும் சீழும் கலந்த ரணத்தைப்போல விருக்கும். இதைக்காணும் பாமர ஜனங்கள் பச்சாத்தாபப் பட்டு பிச்சை கொடுப்பார்கள்.

சிலர் சிறு பெண்களுக்கு அங்காளம்மன் வேஷம் போட்டு இடுப்பண்டை ஈட்டி செருகின பாவனையாய் வில் போட்டுக் கட்டிவிட்டு, அந்த இடத்திலிருந்து இரத்தம் வருகிறமாதிரி நாகதாளிப் பழத்தின் சாற்றை விட்டிருப்பார்கள். ஒரு வாழைக்காய்த் தடியன் உடுக்கை யடித்துப் பாடுவதும் அந்தச் சிறுபெண் அதற்குத் தக்க மாதிரி ஆடுவதும் ஜனங்களுக்குப் பயத்தை உண்டாக்குவதனால் அதைப் பார்ப்பவர்கள் அரை துட்டு ஒருதுட்டுப் போடுவார்கள்.

சிலதாசிரிகள் மஞ்சள் ஆடை உடுத்திக்கொண்டு ஒரு தட்டில் செம்பினால் செய்து முலாம் பூசியிருக்கிற இரண்டு பாதங்களையாவது ஒரு முடிபோன்றதையாவது வைத்துக்கொண்டு வாயில் தாள் மாட்டிக்கொண்டு யாசிப்பார்கள்.

'தன்னைப் பெற்ற தாயார் கிண்ணிப் பிச்சை யெடுக்கிறாள், தம்பி கும்பகோணத்தில் கோதானஞ் செய்கிறான்' என்றபடி, வீண் பெருமைக்கு வாசலில் அன்னக்கொடி நாட்டியிருக்கும் புண்ணியவான்களுக்கு நான் சொல்வதெல்லாம் பிச்சைக்காரர்களின் கூத்தும், கேளிக்கையும், குடியும், கொண்டாட்டமுமாகத்தான் தோற்றும். இவர்கள் வேஷம் கலைத்த உடன் இவர்கள் யோக்கியதையைப் பார்த்தாலல்லவா தெரியும்? பித்து, மலடு, ஊமை, முடம் கூன், குருடு, செவிடு, முதலியோருக்குத் தர்மம் செய்து அவர்களைப் பாதுகாக்க வேண்டுவது நியாயந்தான். 'பாத்திர மறிந்து பிச்சையிடு' என்னும் பழமொழியைக் கவனிக்கவேண்டாமா? ஒருவன்சம்பாத்தியத்தில் ஒன்பது பேர் வாய் திறந்திருக்கும் தென்னிந்தியாவே!

கடந்த சென்ஸஸ் ரிபோர்ட்டுப்படி இப்போது பூரிதகக்ஷிணை வாங்கும் பிராமணர் முதல் (?)ராப்பட்டினியில் பேர் பெற்றவர் வரையில் கையிருப்பிலிருக்கும் பதின்மூன்று லட்சம் பிச்சைக்காரர்களோடு இன்னம் எத்தனை குடும்பிகளைச் சேர்க்க நீ இஷ்டப்படுகிறாயோ அறியேன். ஏழை இந்தியா என்ற பெயரோடு சோம்பேறி இந்தியா பேரையும் நீ ஏற்றுக்கொள். இவர்கள் மோசத்தையும் சூதையும் தெரிந்து கொள்ளச் சக்தியற்ற நிஷ்கபடிகளாகிய நம்மவர் இவர்களுக்குப் பிச்சை யிடுவதாலன்றோ, இத்துன்மார்க்கச் செய்கைகள் அபிவிர்த்தியாகின்றன. அன்னிய தேசங்களில் கூனர், குருடர்களெல்லோரும் ஒவ்வொரு தொழில் செய்து "ஏற்பதிகழ்ச்சி" என்பதை நிலைநாட்ட, நம் நாட்டுத்தடியர்களையெல்லாம் சோம்பேறிகளாகச் செய்வது தலையெழுத்தல்லவா? சரியான தேகலட்சணம் அமைந்தவர்களும் தேசத்துரோகிகளாய் இருப்பார்களானால், தேசாபிமானம் எங்கிருந்து குதிக்கும்? இத்தகைய சோம்பேறிகளுக்கா அல்லது ஜனத்தலைவர்க ளென்று தம்மை மதிக்க வேண்டிச் சபையேறிப் பிரசங்கஞ்செய்து ஆறுமரக்கால் பேச்சிற்கு ஆழாக்குக் காரியமாவது செய்ய மனமில்லாத சுய காரியத் துரந்தரர்களுக்கா சுயராச்சியம் வேண்டியது.

## 9. கோயில், குளம் கைங்கரிய யாசகம்

சிலர் ஸ்தூபி, பதினாறுகால் மண்டபம், வாகன மண்டபம், மூலஸ்தானம், மடைப்பள்ளி முதலானவைகளைத் தமது கைப்பணத்தில் ஒன்றிரண்டு செலவு செய்து பெரிய கடுதாசிகளில் பிளான் செய்து கொண்டும், சிலர் மயில்வாகனம், ரிஷப வாகனம், பெருச்சாளி வாகனம் முதலியவைகளைக் கடுதாசிகளில் எழுதி வர்ணம் தீர்த்துக் கொண்டும், சிலர் குளம் வெட்டுவதாகவும், சிலர் நந்தவனம் உண்டாக்குவதாகவும், சிலர் உற்சவம்செய்வதாகவும், சிலர் வனபோஜனம் செய்துவைக்கப்போவதாகவும், சிலர் சத்திரம் சாவடிகட்டுவதாகவும் சென்னைக்குக் குடியாய் வந்து விடுவார்கள். சிலர் கையொப்ப மிட்ட ஜாபிதாவைக் கைக்காவலாய் வைத்துக்கொண்டு வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் யாசகம் செய்த வண்ணமா யிருப்பார்கள். யாசக விஷயத்தில் வரும் பணத்தைத் தங்கள் சொந்த பொருளைப் போல சகல செலவும் செய்து வருவார்கள். எந்தத் தெய்வம் மனமிரங்கி வந்து இந்த மோசங்களைக் கண்டு பிடித்து, எல்லாமிருந்தும்

பிறர் கையை எதிர்நோக்கி யிருக்கும் ஏழை இந்தியாவை முன்னுக்குக் கொண்டுவரப் போகிறது.

சிலர் பேருக்கும் பெருமைக்கும் தாக்ஷிணியத்திற்கும் இடிந்த கோவில்கள் தீபமில்லாமல் பாழடைந்திருக்கப் புதிது புதிதாகக் கோவில்களைக் கட்டுவார்கள். வேறு சிலர் பாணத்துக்கும் பந்தலுக்கும் உற்சவத்திற்கும் பெருந்தொகை செலவழித்துவிட்டு "இப்படிப் பட்ட உற்சவம் யாருமே செய்ததில்லை" என்று சொல்வார்கள். மறு தினம் இந்த வைபவத்தை நினைப்பவர் யார்? சில அறிவாளிகள் நம் நாட்டில் யாதொரு பிரதி பலனுமின்றிக் கல்விச்சாலை, வைத்தியசாலை மூலமாய் நம்மவர்களை முன்னுக்குக் கொண்டு வந்ததனாலல்லவா நாமும் தேச விஷயத்தில் சிறிது ஊக்கமும் அக்கறையுங்கொண்டிருக்கிறோம். "ஒரு பாடசாலையைத் திறந்தால் ஒன்பது சிறைக் கூடங்களை மூடி விடலாம்" என்று ஓர் அமெரிக்கர் சொன்னமாதிரி கல்வி யில்லாமல் வீட்டிற் கொரு கோவி லிருந்தாலும் கோடிக்கணக்காய் உற்சவம் செய்தாலும் அவை வேடிக்கையில் சேருமேயன்றிக் கடவுளிடத்தில் பயமாவது, பக்தியாவது உண்டாக்காதென்பது அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்.

---

## 10. பிராமணர்கள் யாசகம்.

நிலபலங்களுள்ள சில பிராமணர்கள் நகர்ப்புறங்களுக்கு வந்து வேளை வேளைக்குத் தமது வயிற்றையும் வாயையும் காட்டிக் கோவில் பிரசாதங்களை விலாப்புறம் புடைக்கத் தின்று வருவார்கள். கலியாணம், கருமம், திதி, திவசம் முதலானவை நடக்கும் வீடுகளுக்குத் தக்க இடத்தில் சிபார்சுக் கடிதம் வாங்கிக்கொண்டு போய் லச்சை கெட்டு மேல் விழுந்து யாசிப்பார்கள். கொஞ்சம் மலப்பாய்க் கிடைக்குமென்று தோன்றினால் கொடுப்பவன் தீண்டப்படாத பாஹ்ய ஜாதியானா யிருந்தபோதிலும் குரங்கு பல்லை இளிப்பது போல் ஒரு சமஸ்கிருத சுலோகம் சொல்லித் தொலைத்து யாசிப்பார்கள். சிலர் வாடி வதங்கி இருக்கிற துளசியையாவது புட்பங்களையாவது முன்தானையில் முடிந்துகொண்டு வந்து ஆசீர்வாதஞ்செய்து "இது காஞ்சி வரதராஜப் பெருமாள் பிரசாதமென்றும், இது பெரிய கோயில் ரங்கநாதன் அம்சையென்றும், இது உடையவர் பிரசாதமென்றும்" வெகு பயபக்தியோடு கொஞ்சமாகக் கொடுத்து என் குமாரனுக்கு உபநயன கலியாணமென்றும், பெண்சாதி குத்துக்கல்

போல் ஊரிலிருக்க, என் ஆம்பிடையாளுக்குத் திதி செய்யவேண்டு மென்றும், ரொம்ப பசியா யிருக்கிறது ; தளிகை செய்து சாப்பிடு கிறேன் ; கிஞ்சித்காரம் தயை செய்யவேணுமென்றும், சோளங்கி புரம் நரசிங்கப் பெருமாள் நித்தியப்படி கைங்கிரியமென்றும், வேளைக் குத் தக்கபடி, இடத்திற் குகந்தபடி யாசிப்பார்கள்.

வட்டில்களிலுள்ள துளசி தீர்த்தமும் கொஞ்சம் குங்குமம் பட் டிருக்கிற ஒரு தேங்காய் முடியும் எடுத்துக்கொண்டு நாற்பது ஐம்பது ரூபாய் பெறத்தக்க சரிகைச் சால்வை போட்டுக்கொண்டு சிலர் யாச கத்துக்கு வருவார்கள். அவர்களுக்கு அல்பமாய்க் கொடுக்க முடி யாது. புண்ணிய புருஷர்களாகிய அவர்கள் கொடுத்ததை லேசில் வாங்கவுமாட்டார்கள். அதிலும் காதில் கல்லிழைத்த சங்கு சக்கர மும் கையில் தோடா பௌத்திர மோதிரமும் மஞ்சள் கலந்த துவா தசி நாமங்களு மிருந்துவிட்டால் (விளை வெள்ளைக்கு) இரண்டு ரூபாய்க்கு மேல் கொடுக்காமல் முடியாது. வேஷம் ஏற ஏறத் துட் டும் ஏறிக்கொண்டே போகும். இந்த விடாக் கண்டர்களுக்குக் கொடாக் கண்டனாயிருந்து "பற்றுக்கடையில் பிரசாதம் வாங்கிக் கொள்ளுங்கள் சாமி" என்று உத்தரவு சீட்டு அனுப்பினால், அதில் கால் அணா, அரை அணா தள்ளிவிட்டாவது பற்றுக் கடைக்கார னிடத்தில், ரொக்கமாகப் பணத்தைப் பெற்றுக் கொள்வார்கள். இப் பிராமண யாசகர்கள் உத்தியோகஸ்தரா யிருப்பினும் பொருளுடைய வரா யிருப்பினும் "எங்கள் தொழில் யாசகத் தொழில் தானே ; 'ஏற்பதிகழ்ச்சி' யென்பது எங்கள் குலஸ்தர்களுக்கன்று. ஆதலால் யாரேனும் எங்களுக்குக் கொடுத்தால் அதை நாங்கள் வேண்டா மென்று சொல்வோமா?" என்பார்கள். இவர்கள் 'காக்கை கரைந் துண்ணும்' என்பதற் கிணங்க எந்த இடத்திலாவது யாசகம் கிடைப் பதா யிருந்தால், அதைத் தங்க ளினத்தாருக்குத் தெரிவித்து அவர் களையும் அழைத்துக்கொண்டு போய் எல்லோரும் ஓரிடத்தில் உட் கார்ந்து பரிசு பெறுவார்கள். கோயில் சுவாமிக்குச் சுண்டல், வடை, தோசை, தளிகை முதலியவற்றை யிடுவதாய்ப் பிறரைப் பிரார்த்தனை செய்யச் சொல்லி அதற்காக வேண்டிய பொருள் பெற்றுக்கொண்டு தங்கள் மக்கள் மனைவியர்களோடு மேல்படி அம்சை செய்த பிர சாதத்தில் முக்காலே அரைக்கால் பங்கு தாங்கள் பங்கிட்டுக்கொண்டு அரைக்கால் பங்கை ஆயிர ஜனங்களுக்குப் பேருக்கு ஒருகடலை இரண்டு கடலையாகத் தாராளமாய்க் கொடுப்பார்கள். பிராமணர்க ளெல்லாரும் ஒன்றாய் உட்கார்ந் துண்பார்கள். மற்றவர்கள் அவர்

களைப் பார்த்துக்கொண்டு நிற்கவேண்டும். ஐயோ பாவம்! கஷ்டப் பட்டுத் தேடிய பொருளுக்கு வேண்டிய பதார்த்தம் தாங்களே வாங்கித் தங்கள் குழந்தை குட்டிகளோடும் பந்துக்களோடும் உண்டு சுகமடையக் கூடாதா? இதைவிட்டுப் பார்ப்பார் கையில் கொடுத்து விட்டு அவர்கள் முன்னிலையில் யாசித்து உண்பது என்ன மதியீனம்! இப்படியும் மோசம் போவாருண்டா? இதுதான் விளக்கைப் பிடித் துக்கொண்டு கிணற்றில் விழுவதென்பது. இருபதினாயிரம் முப்பதி னாயிரம் செலவுசெய்து கோவில் கட்டிக் கும்பாபிஷேகமும் உற்சவ மும் செய்து அர்ச்சகர், பட்டாச்சாரி, குருக்கள் முதலானவர்களுக் குச் சம்பளமும் கொடுத்து, நித்திய நைவேத்தியமும் குறைவின்றி நடத்தும் நாம் தூரவே நிற்கவேண்டியது. ஐயோ! இது எவ்வளவு அநியாயம்!

கிறிஸ்தவப் பாதிரிகளும் மகமதிய குருமாரும் மோசமின்றித் தங்களுக்கு எவ்வளவு பாத்தியம் உண்டோ அவ்வளவு சுதந்திரம் சகலரு மனுபவிக்க இடம் கொடுக்கிறார்கள். தச்சன், கொல்லன், கருமான், முதலியவர்களைப்போல் கூலி வேலையாக நினைத்துப் பய மாவது பக்தியாவது சிறிதேனுமின்றி ஏனோதானோ வென்று ஒரு குடம் ஜலத்தை அப்படியே கொட்டி, நேற்றைய சந்தனத்தை அப் படியே நிறுத்தி, இருக்கிற துணியை அப்படியே வலித்துக் கட்டி விட்டுப் போகிற பிராமணர்களுக்குச் சொந்தமாய் இருக்கிற சாமி நமக்கு எட்டப் போய்விடுவது நாம் செய்த பாக்கியந்தான் போலும்! இதுதான் போகட்டும், சாதாரண காலத்தில் ஒருழக்கு அரிசி நைவேத்தியமா யிருக்கக் கிருத்திகை, சஷ்டி, பிரதோஷம், பௌர் ணமி, விசாகம் முதலிய விசேஷக நாட்களில் மாத்திரம் பத்துப்படி சுண்டல், 500 தோசை, 1000 வடை, 8 படி சர்க்கரைப் பொங்கல், 10 படி புளியோரை, 12 படி ததியோதனம், முதலியவற்றை அக் கடவுள் எப்படி ஏற்றுக்கொள்ளுகிறதோ தெரியவில்லை! கல்லால் அடித்தவனுக்கும் வில்லா லடித்தவனுக்கும் காட்சி கொடுத்த கருணையங்கடவுள் பிராமணர் பக்கம் மாத்திர மிருப்பது யார் செய்த சூது என்பதை நம்மவர் தெரிந்துகொள்ள வேண்டும்.

---

## 11. அர்ச்சனை திருவிளக்குத் தர்மம்

மதுரை, சிதம்பரம், ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை முதலிய க்ஷேத் திரங்களிலுள்ள பிராமணர்கள், சென்னை முதலிய பெரிய நகரவாசங்

களுக்கு வந்து தனவந்தர்களையும் உத்தியோகஸ்தர்களையும் வர்த்தகர்களையும் கண்டு, பகவத் விஷயமாய்ப் பழுத்த பழம்போல் பேசி "இன்ன முதலியார் போரால் ஓர் அர்ச்சனையும், ஒரு நெய் தீபமும் சிதம்பர க்ஷேத்திரமாகிய தென் கயிலாயத்தில் நடந்து வருகிறது. தவிர, முத்தியாலுப்பேட்டை மண்டி, பாலு செட்டியார் சுமார் பதினைந்து வருஷமாக அர்ச்சனை நடத்தி வருகிறார்" என்று, சிற்சில பெரியமனுஷர்களைக் குறிப்பிட்டுச் சொல்லுவார்கள். நமது ஆத்துமா கடைத்தேறும் பொருட்டுப் பகவத் விஷயத்தில் ஈடுபடவேண்டியதாகையால், தாங்களும் தங்கள் பேரால் ஓர் அர்ச்சனை ஏற்படுத்தினால் மிகவும் நன்மையாயிருக்கும். சிவாலயங்களில், நெய்தீப மிடுவதினா லுண்டாகும் பலன்கள் விசேஷமென ஆகமங்கள் முறை யிடுகின்றன. சில தக்க பெரிய மனுஷாளிடம்தான், நான் ஒப்புக்கொண்டு செய்து வருகிறேன். சிலர் பணமனுப்பக் காலதாமதம் செய்தபோதிலும், நான் அர்ச்சனையை மாத்திரம் சில பிராமணர்களைப்போல் நிறுத்திவிடுவதில்லை. கேவலம் பணத்திற்காகவா பாடுபடுகிறது? தங்களைப் போன்றவரைச் சத்விஷயத்தில் ஈடுபடுத்த வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது" என்று சர்க்கரைக் கஞ்சி வார்த்துப் பக்குவப் படுத்தி "மாதம் 1-க்கு அர்ச்சனைக்கு ஒரு ரூபாயும் நெய் தீபம் வைப்பதற்கு ஒருரூபாயுமாகும். தங்களுக்கு இது ஒரு லட்சியமா?" என்று மாதக்கட்டணமாக முடிவு செய்துகொண்டு போய்விடுவார்கள். தாங்கள் அர்ச்சனை செய்வதாகவும் நெய் தீபம் வைப்பதாகவும் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறவர்களுக் கெல்லாம் பிரதி மாதமும் தவறாமல் (சென்னையில் வர்த்தகர்கள் மெயிலுக்கு லெட்டர் எழுதுவதுபோல்) இதற்காக அச்சிட்ட நோட்டீசில் எழுதவேண்டியவைகளை எழுதி அதனுள் கொஞ்சம் விபூதியும் குங்குமமும் வைத்துப் பாக்கி ஜாபிதாவுடன் அடியிற்கண்டபடி அனுப்புவார்கள்.

உ.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த சிதாகாச சின்மய தேஜோரூபியாய் ஸகளீகரித்த அகிலலோக மாதாவாகிய ஸ்ரீசிவகாமி சுந்தரி அம்பாளோடு, சிதம்பரம் சிற்சபையின் நடுவில் எழுந்தருளிச் சதாகாலமும் ஆனந்தத் திருநடனஞ் செய்யாநின்ற ஸ்ரீநடராஜ மூர்த்தியினுடைய கிருபா விலாசத்தினாலே, சகல சற்குண

தயா தாக்ஷணியாதி அநேக மங்கள குணமுள்ளவராயும் சிவபக்த சிரோமணியாயுமுள்ள மகா-ள-ள-ஸ்ரீ ............... ......அவர்கட்கு, தெண்டபாணி தீக்ஷிதர் அநேக ஆசிர்வாதம் செய்து எழுதும் நிருபம்: இவ்விடத்தில் க்ஷேமம்; அவ்விடத்திய க்ஷேமங்களை எழுதியனுப்பிவைக்கவேண்டியது. ஸ்ரீமந் நடராஜர் சந்நிதியில் தங்களுடைய...............கட்டளையை நடத்திக் கொண்டும் தங்களுடைய குடும்பத்தின் க்ஷேமங்களைக் குறித்துப் பிரார்த்தனை செய்து கொண்டும் வருகிறேன். நாளதுமீ ஸ்ரீமந் நடராஜ மூர்த்தி குஞ்சித பாதத்தில் சாத்திய விபூதிப் பிரசாதமும், சிவகாமி சுந்தரி அம்பாளுக்கு அர்ச்சனை செய்த குங்குமப் பிரசாதமும் இதில் அனுப்பியிருக்கிறேன். தாங்களும் தங்களிஷ்ட மித்திர பந்துக்களும் தரிசித்துக் கொள்ளவேண்டியது. அநேக ஆசிர்வாதம்.

அ. தெண்டபாணி தீக்ஷிதர்
சிதம்பரம் தேரடிப் பிள்ளையார்
கோவிலுக்கடுத்த சைனத் தெரு.

மேற்படி கைங்கரியம் நடத்துகிறவர் எப்பொழுதாவது ஒரு காலத்தில் போய் "நம்முடைய தீபம் வைக்கப்படுகிறதா?" என்று மேல் சொன்ன தீக்ஷிதரைக் கேட்டால், அவர் மனங்கூசாமல் அந்தக் கோவில் தீபத்தைக் காட்டுவார். திருவிளக்குத் தருமம் நடத்துகிறவர் நம் பேரால் அர்ச்சனை செய்யவில்லையே என்றால் "இம்மாதம் நம்முடைய முறையல்ல; முறைக்காரர்கள் கண்டிப்பாய் அர்ச்சனை செய்துவிடுவார்கள். நம்முடைய முறையில் அவர்கள் கட்டணக்காரர்களது அர்ச்சனையை நாம் நடத்துகிறோம். அப்படியே இவர்களும் நடத்துவார்கள்" என்றுமெழுகி வழிகூட்டி யனுப்புவார்கள். சுவாமி பேரைச் சொல்லிக் காப்பு, கொலுசு, காசுமாலை முதலியவற்றை இவர்கள் செய்து கொள்வதற்காக நாம் அருமையாய்த் தேடிய பொருளைச் செலவிடுகின்றது, தேச விருத்திக்காகப் பொது விஷயத்தில் செலவழித்தால் நாடெங்கும் வாழக் கேடொன்று மிராதே.

---

## 12. உத்தியோக மிழந்ததாய் யாசகம்

ஒருவன் ஓரைப்படி அரிசியை முன்தானையில் முடிந்து தோளில் போட்டுக்கொண்டு வருவார் போவாரை ஒருசிட்டிகைப் பொடி கேட்பான். பின்பு அவன் பொடி கொடுப்பவரை, "நீங்கள்

எங்கே போகிறீர்?'' என்று கேட்பான் அவர்கள் சூளைக்குப் போகிறேன் என்றால் தானும் வேப்பேரிக்குப் போகவேணுமென்று அவர்கள் கூடவே தொடருவான். அப்போது அவன் தன் கஷ்டத்தைப் பக்குவமாய் எடுத்துச் சொல்வான். எப்படியெனில், "ஐயா! நான் சூரமங்கலத்தில் (Sub Post Master) சப் போஸ்ட் மாஸ்டர் உத்தியோகம் செய்திருந்தவன். தங்கள் புண்ணியத்தால் முப்பது ரூபா கிடைத்துக்கொண்டிருந்தது. மேல்வரும்படி இருபதுக்குக் குறையாமல் கிடைக்கும். கிட்டத்தட்டப் பதினெட்டு வருஷம் சர்வீசும் ஆயிற்று. என் பொல்லாத காலத்தால் சேலம் டிப்டிகலெக்டருக்கு வந்த ஒரு லெட்டரை, போஸ்ட்மென் திருப்பத்தூருக்கனுப்பும்படி ஷரா எழுதி என் மேஜைமேல் வைத்தான். என் பொல்லாத வேளையால் அதை எடுத்து உள்ளே வைக்க மறந்து விட்டுப் பின் பக்கம் போய் விட்டேன். என் பிள்ளையும் என் தமயன் பிள்ளையும் சேர்ந்து அதை எடுத்துக் கிழித்துக் காற்றாடி செய்து விட்டார்கள்.

பிறகு அந்தச் சங்கதி எனக்குத் தெரிந்தது; என்ன செய்கிறது? இந்த விஷயத்தை நானே போஸ்டல் சூப்பரின்டெண்டுக்குத் தெரியப் படுத்தினேன். அவர் மிகவும் நல்லவர்; ஆகையால், அவர் என்னைப்பற்றி மேலதிகாரிக்குக் கொஞ்சம் பக்குவமாய் எழுதினார்; எட்டாபீசில் எனக் காகாத ஒரு பாப்பாரப்பயல் அதைக் கிண்டிக் கிளறி விசாரணைக்கு வரும்படியான வழி செய்து விட்டான். சேலம் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட் எனக்கு வேண்டியவரானபடியால் சுவாமி புண்ணியத்தால் கேஸைத் தள்ளிவிட்டார். பிறகு டிபார்ட்மெண்ட் விசாரணையில் அது என்னுடைய அஜாக்கிரதை யென்று என்னை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். டைரெக்டர் ஜெனரல் வரைக்கும் எவ்வளவோ மனுச் செய்து பார்த்தேன்; அனுகூலப்படவில்லை. என் கதி இப்படி ஆயிற்று. இரண்டொரு வருஷம் உள்ளதை விற்றுச் சுட்டுக் காலம் கழித்தேன். என்றாலும் முடியவில்லை. கடைசியாக என் கிளாஸமெட் காஞ்சிபுரம் அண்ணாசாமி நாயகர் என்பவர் நான் படும் கஷ்டத்தைப்பார்த்து, ஊர்பர் ஆபீஸில் ஏழுரூபா சம்பளத்திற்குச் சிபார்சு செய்தார். அதுவும டெம்பரரி வேலையாகையால் நாலைந்து மாதங்களாய் அந்த வேலையும் கிடையாது. பாருங்கள்; "பட்டகாலிலேயே படும், கெட்டகுடியே கெடும்" என்ற மாதிரியாய் என்ன கஷ்டமெல்லாம் படவேண்டியிருக்கிறது. என் பிள்ளைக்குப் போன வருஷம் புண்ணியவான் சிவானந்தம் செட்டியார் M. R. C. லோகோ ஆபீஸில் பத்து ரூபா சம்பளத்திற்குச் சிபார்சு

செய்தார். அந்தத் தேவடியாள்பிள்ளை ஒரு விதவையை யிழுத்துக் கொண்டு ரங்கோனுக்கு ஓடிபோய் விட்டான். இப்போது யாதொரு வழியுமில்லாமல் நான் தேனில் விழுந்த ஈயைப்போல் தவிக்கிறேன். தாங்கள் தயைசெய்து ஒரு வேலைக்குச் சிபார்சு செய்தால் வெகு புண்ணியமாயிருக்கும்" என்பான்.

அதற்கு அவனோடு போகிறவன் "அய்யோ! என்னால் என்ன வேலை செய்து வைக்க முடியும்? இது என்னால் முடிகிற காரியமல்லவே" என்பான். அதற்கு அந்தப் பிச்சைக்கார சப் போஸ்ட் மாஸ்டர் "பாருங்கள் இதுவெல்லாம் கடவுள் செயல்; என்ன செய்கிறது? நான் உத்தியோகம் செய்கிற காலத்தில் என் சிநேகர்களுக்கு எவ்வளவோ உபகாரஞ் செய்தேன். இப்போது அதைச் சொல்கிறதில் பிரயோசனமில்லை. தாங்கள் ஒரு அரையணா தயை செய்தால், இதோ அரைப்படி யரிசி யிருக்கிறது, பச்சைத் தண்ணீர் வாயில் வார்த்து, இரண்டு நாள் ஆயிற்று. வீட்டில் பெண்பிள்ளை என்னை எதிர்பார்த்தவண்ணமாயிருப்பாள். உங்கள்புண்ணியம்; இன்றைக்காவது ஒருவேளை ஆகாரம்செய்யும் பாக்கியம் உம்முடையது" என்று பல்லிளித்துக் கெஞ்சுவான். வழிப்போக்கன் "இந்தாரும் அரையணா" என்று அவனிடம் கொடுப்பான். இதைப் பெற்றுக்கொண்டு அவன் போய்விடுவான்.

இப்படியே இவர்கள் ஒரு நாளைக்கு ஆனை கெவுனி ரோட்டிலும் ஒருநாளைக்கு ஜெனரல் ஆஸ்பத்திரி ரோட்டிலும் வருவார் போவாரிடம் யாசிப்பார்கள்; ஆனால் தமது கதையை மாத்திரம் இடத்திற்கிடம் மாற்றி மாற்றிச் சொல்வார்கள். இரவும் பகலும் கைத்தொழில் வர்த்தகம் முதலியன செய்து மனம் நொந்து தேக மிளைத்துப் போகிற அயல் நாட்டார்கள் இவ்விடம் வந்தால் இத்தகைய உபாயத்தில் பிழைப்பதற்குரிய மோசங்கள் பலவற்றைக் கற்றுக்கொண்டு போகலாம். கஷ்டப்பட்டுக்கைத்தொழில் செய்ய மனமில்லாத சோம்பேறிகள் பலர் தாம் பிழைப்பதற்குப் பலமோசங்கள் செய்வார்கள். உண்மையில் துர்ப்பாக்கிய முற்றவர்களுக் குதவுவது உத்தம மென்பதை யார்தான் மறுக்க வல்லவர்?

## 13. பொங்கல் பிச்சை

போலீஸ் சேவகர், முனிசிபல் சேவகர்கள் மாத்திரம் பொங்கல் மரியாதை சேரவில்லை என்று கேட்பார்கள். பணிசெய்வோர், தோட்டிகள், வெட்டியார், அம்பட்டர், தாசிகள், புரோகிதர், வேலைக்காரர்கள் முதலானோர் வந்து "நல்ல நாள் ஆகையால் தங்களைக்காண வந்தோம்" என்று பல்லை இளிப்பார்கள். என்றும் முகமறியாதவர்கள் வந்து "நாங்கள் காலமெல்லாம் அய்யாவிடம் பிழைக்கிறவர்கள். நல்ல நாளதுவும் வந்தோம்; வருஷத்திற்கொருநாள். வருகிற வருஷம் சாவமோ பிழைப்பமோ" என்று நய்யப் பாட்டுப் பாடுவார்கள்; ஒரு அணுவுக்கு நாலு நாளானாலும் நடையாய் நடப்பார்கள். இவர்களன்றி மார்கழி மாதம் விடியற்காலம் பாடிவரும் கிளிப்பாட்டுக்காரன், சிறுத்தொண்டன் பாட்டுக்காரன், தாசிரி, பண்டாரம், பைராகி, பக்கிரி, முதலானவர்கள் ஒவ்வொருவரும் சென்னையிலுள்ள ஒவ்வொரு பேட்டைக்கும் அம்மாதத்தில் இரண்டொருநாள் வந்து போவார்கள்; ஆனால் தாங்கள் முப்பது நாளும் தவறாது வந்தவர்களைப்போல் வீடு ஒன்றுக்கு அரையணுவுக்குக் குறையாமல் கொடுக்க வேணுமென்று வம்பு செய்வார்கள். யாராவது குறைவாய்க் கொடுத்தால் மாதம் முப்பது நாளும் கண் விழித்துக் குளிரில் வந்து கஷ்டப்பட்டதாய் வெறுத்துக் கொள்வார்கள். மார்கழி மாதம் இரண்டொரு நாள் பாடிவந்தவர்கள் தை மாதம் முப்பதும் தண்டல் செய்வார்கள். கொடுத்தவர்கள் வீட்டில் தமது குறியாகிய கிளி, லிங்கம் வ, து, கி, முதலியவைகளில் ஒன்றை எழுதிச் சுண்ணும்பு அடித்த சுவற்றைக் கெடுத்து விடுவார்கள். இன்ன பேட்டைக்கு இன்னார்தான் வருவதென்ற நிபந்தனை கிடையாதாகையால் "தடியெடுத்தவர்களெல்லாம் தண்டற்காரர்" என்றபடி, கண்டவர்களெல்லாம் யாசிப்பார்கள். பாழும் கள் செலவாகிறதற்குச் சென்னை என்னென்ன பாடுதான் படும். துர்மார்க்கர்களால் தூக்கம் கெடுவதுமன்றித் துட்டும் தொலைக்கவேண்டும். யாராவது எத்தனை பேருக்குக் கொடுப்பதென்றால் "நாங்கள் இந்தவூர் சுதந்தரக்கார ராச்சுதே! எவனெவனோ வெளியிலிருந்து வந்தவனுக்கெல்லாம் கொடுக்கிறீர்களே" என்று வற்புறுத்தி வாங்குவார்கள். பெரிய நகர்களிலெல்லாம் ஒரு கட்டுப்பாடுங் கிடையாது. பூர்வத்தில் நாலுபேர் வருவதற்கு ஏற்பாடு செய்திருந்தது போய், இப்போது கட்டுக்குலைந்து கண்டவர்களெல்லாம் வந்து காசு பறிக்கின்றார்கள்.

## 14. திருவள்ளூர் முதலிய தவலை உண்டி தர்மம்

"சில மோசக்காரர்கள் இது திருவள்ளூர் தண்ணீர்ப்பந்தல் தர்மம். அவாளவாள் இஷ்டானுசாரம் தயை செய்யவேணும், திருவள்ளூர் வீரராகவப்பெருமாள் வேண்டிய பலனைக் கொடுப்பார். தீராதவினை தீர்க்கப்பட்ட திருவள்ளூர் வீரராகவர் தருமம்" என்று ஒரு கைத்தவலைக்கு நாலுபக்கமும் நாமத்தைப் பரக்கப்போட்டு மஞ்சள் துணியைக் கொண்டு அதன் வாயைக் கட்டி அதற்குக் கொஞ்சம் புஷ்பத்தைச் சுற்றிவிட்டுத் திருச்சின்ன மென்றதை ஊதிக்கொண்டு வீடுவீடாய் வந்து தாம் திருவள்ளூரில் விக்கிரஹம் செய்து வைக்கப் போவதாய் வீட்டிலுள்ள ஓட்டை உடைச்சல் கிண்ணி செம்புகளையும் இயன்றவரையில் ரொக்கமாவது அரிசியாவது போடும்படி வம்பு செய்வார்கள். இப்படிப்பட்டவர்களுடைய வேஷத்தையும் பகட்டையும் உண்மையென நம்பிச் சாதாரண ஜனங்கள் கொடுப்பவைகளைக் கொண்டு வெறிக்கக் குடித்துத் திரிவார்கள். இத்தகைய மோசங்கள் நாளுக்குநாள் பல்கிப் பெருகுவதனாலல்லவா உண்மையான தருமங்கள் ஒளி மழுங்கிப்போகக் காலம் நெருங்கிக்கொண் டிருக்கிறது. தாக்ஷிணியத்திற்கும் தயைக்கும் பெருமைக்கும் கொடுப்பவர்களும் இப்படிப்பட்ட மோசங்களைத் திருஷ்டாந்தமாகக் கூறி அநேக பொதுக் காரியங்களுக்குக் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொள்ளுகிறார்கள்.

---

## 15. திருப்போரூர் தர்மம்.

சில தடிப்பண்டாரங்கள் காவி உருத்திராக்ஷம் முதலிய சைவ சின்னங்களுடன் ஒரு கையில் சிறிய உண்டிப்பெட்டி ஒன்றும் அக்குளில் ஒரு கட்டுத் தையல் இலையும் வைத்துக்கொண்டு வீடுகள் தோறும் சென்று ஒவ்வொரு இலையாகப் போட்டுக்கொண்டே போய், மறுபடியும் திரும்பி வந்து "போரூர் முருகன் துணை; சத்விஷயமான தர்மம்; பழனியாண்டி எல்லாப் பாக்கியங்களையும் கொடுப்பார்; இல்லை என்னுமல் கொஞ்சம் அமுதுபடி யாவது போடுங்கள்" என்று வம்புசெய்து கேட்பார்கள். இப்படித் துட்டோ அரிசியோ ஏதாவதொன்றை வரப்படுத்திக் கொண்டு அன்றையதினம் குடிக்க வழிதேடிக் கொள்வார்கள். இந்த மோசக்காரர்கள் திருப்போரூர் தலத்திற்குப் போவதே வெகு துர்லபம். ஒருவேளை அவர்கள் போகும் பட்சத்தில் அங்கும் பிச்சை எடுப்பதே பெரிய தொழில்.

இவர்களுக்குள் சூதும் குடியுமில்லாதவர்களைக் காண்பது குதிரைக் கொம்பைக் காண்பதுபோலாம். பெரும்பாலரான சாமானிய வகுப்பினர் இப்படிப்பட்ட மோசங்களில் ஏமாந்து போவார்கள். சற்று உயர்ந்த அந்தஸ்திலிருப்பதாக நடக்கிறவர்களும் அச்சில் தங்கள் பேர் வரும் என்கிற நோக்கத்தோடு அவர்களுக்குப் பொருள்கொடுப்பார்கள். ஆனால் இந்த யாசகர்கள் நாலணு செலவு செய்துவிட்டு, நாலு ரூபா வரவிற்கு கைங்கரியக்காரர்களின் ஊர் பேருடன் வரவு விபரமும் வண்டிச் செலவுடன் செலவு விபரமுமடங்கிய ஜாபிதாவை வெளியிட உபாயம் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

---

## 16. திருப்போரூர் தண்ணீர்ப்பந்தல் தருமம்.

நம்மவர்களில் மெய்யன்போடு பிறர் சகாயம் பெற்றுத் தேவஸ்தானங்களில் அடியார் கைங்கரியம் செய்பவர்கள் மிகச் சிலர் இருப்பினும், பெரும்பான்மையோர் சுய சம்ரக்ஷணார்த்தம் சில வியாபாரிகளிடத்தும்,பாக்கியவான்களிடத்தும், செல்வந்தரிடத்தும் மாதக் கட்டணமாகவும், வேறு சிலரிடம் கிருத்திகை தோறும் ரொக்கமாகவும், யாசித்தும் சிலரிடம் சென்று "நீங்கள் பத்துப்படி உப்பு வாங்கிக் கொடுத்துவிடுங்கள்" என்றும், இன்னும் சிலரிடம் போய் "நீங்கள் நூறு எலுமிச்சம்பழம் வாங்கிக்கொடும்" என்றும், மற்றும் சிலரிடம் போய் "நீங்கள் ரொக்கம் கொடுக்கவேண்டாம்; இரண்டு வீசை சுக்கும் ஒரு மணங்கு வெல்லமும் வாங்கிக்கொடுத்துவிடும்" என்றும், பின்னும் சிலரிடம் "நீங்கள் பத்துப்படி தயிருக்கு உதவவேண்டும்" என்றும் 'தமக்கிஷ்டமானவர்'களிடத்திலெல்லாம் சென்று அவரவர் கொடுப்பதை ஒருவருக்கொருவர் தெரியாமல் வசூல் செய்துகொண்டு, திருப்போரூர் மாசிக் கிருத்திகைக்குப்போய் ஓரிடத்தில் நாலைந்துபடித் தயிரைத் தண்ணீராக விளாவி ஒரு கூலியாளைக்கொண்டு ஊற்றிக்கொண்டிருப்பார்கள். ஒரு சமயம் தண்டல் கொடுத்தவர்கள் "தர்மம் நடக்கிறதா?" என்று பார்க்கப்போனால் அவர்களை வலிய அழைத்துப்போய் உள் அறையில் அவர்களுக்கென்றே தயார் செய்து வைத்திருக்கிற காப்பித் தண்ணீரோ கட்டித் தயிரோ வெல்லத்தண்ணீரோ பயபக்தியுடன் கொடுத்து அவர்களைத் திருப்தி செய்வார்கள்.

பின்பு அவர்கள் "இவ்வருஷம் தண்டல் ஆகவே யில்லை, தர்மவான்கள் வெகுபேர் கவனிக்கவில்லை. என்ன செய்கிறது? உம்மைப்


போன்ற புண்ணியவான்கள் சிலருடைய உதவியைக்கொண்டு உபாயமாய் நடத்தலாயிற்று. சென்ற வருஷம் நூறு நூற்றைம்பது பேருக்குமேல் கைங்கரியம் நடந்தது. தர்ம காரியம் கெட்டுப் போகக் கூடாதென்று என்னாலியன்ற வரையில் இவ்வருஷம் போரூரான் கிருபையால் இதனை நடத்தினேன். நாலுபேர் கவனித்தாலல்லவா முடியும். இம்மகா க்ஷேத்திரத்தில் ஜனங்கள் தண்ணீர் தண்ணீரென்று தவிக்கிறார்கள். முருகர் புண்ணியத்தால் மேலைய வருஷம் உயிரோடிருந்தால் பொங்கல், புளியோரை முதலியவை கொடுக்கவேணு மென்கிற அபேக்ஷை யிருக்கிறது. ஆண்டவன் கிருபை எப்படியோ? உங்களைப் போன்ற புண்ணியவான்கள் உதவியிருந்தால் எல்லாம் நடத்தலாம்'' என்று பசப்பி யனுப்புவார்கள். சிலருடைய தண்ணீர்ப்பந்தல் தர்மம் எப்படித் தாகத்தைத் தணிக்கிறதென்றால் மூன்றுபடி தயிரில் மூன்றுசால் தண்ணீர்விட்டு விளாவி ஊற்றிவிடுவார். பின்பு நாலு ரூபா பந்தல், இரண்டு ரூபா வாழைமரம், இதர செலவு ரூபா இரண்டு, ஆக ரூபா எட்டு அல்லது பத்துக்குக் கணக்கு ஏற்படும். தயிரின் கிரயமோ அணா பனிரண்டுதான்! தருமம் செய்பவர் இன்னார் என்று தெரிவிக்கிறதற்கு இந்தத் தண்ணீர்ப் பந்தல் இருக்கிறதே தவிர, இது உள்ளபடி தாகத்தைத் தணிப்பதாய்க் காணோம். இத்தகைய கபடிகளுக்கு உதவும் பணத்தை நமது நாடு தழைக்கக் கல்விச்சாலை, கைத்தொழிற் சாலை, வைத்திய சாலை முதலியவற்றிற்கு உபயோகித்தால் எவ்வளவு நன்மை பயக்குமென்பதை யோசியுங்கள்.



## 17. திருப்பதிக்குப் போகிற பாவனையாக யாசகம்.

இந்நாடகத்திற்குப் பத்துப் பேர்களுக்குக் குறையாமல் ஆட்டக்காருண்டு. பித்தளைத்தட்டு, உண்டிச்செம்பு, கருடத் தம்பம், மஞ்சள் அங்கவஸ்திரம், புடவை ஆகிய இவைகளை மாத்திரம் இக்

கூட்டத்தார் தயாராக வைத்திருப்பார்கள். தப்பட்டை, சேமக்கலம், திருச்சின்னம் முதலிய வாத்தியக்காரர்களைத் தமக்கு வரும் வருமானத்தில் பங்கு கொடுப்பதாகச் சேர்த்துக்கொள்வார்கள். கம்மல், அட்டிகை முதலியன அக்கம் பக்கம் அறிமுக முள்ளவர்களிடம் வாங்கிக்கொண்டு அவற்றிற்குக் குடிக்கூலி கொடுப்பதாய் ஏற்பாடு செய்துகொள்வார்கள். பிறகு இவர்கள் தாங்களிருக்கும் பேட்டைகளைவிட்டு அடுத்த பேட்டைகளுக்கு வந்து மாலை ஆறுமணிக்கு மேல் வேஷம் கட்டுவார்கள். முறையின்றி, புருஷனும் பெண்சாதியும்போல் மஞ்சள் துணியை ஒருவர் முன்தானையுடன் ஒருவர் முன்தானையை முடிந்துகொண்டு பெரிய குடும்பிகளைப்போல் இரண்டொரு சிறு பிள்ளைகட்கு மஞ்சள் ஆடை உடுத்தி நல்ல அந்தஸ்துள்ளவர்களைப்போல் இரண்டொரு ஸ்திரீகள் நகை நட்டுகளுடன் தம்மைத் தொடர்ந்து 'வரும்படி இவர்கள் புறப்படுவார்கள். "வரதராஜர் வைபோக்கியம் வையகத்திலுண்டோ? வையகத்திலுண்டோ?" என்று தப்பட்டை யடித்து இரண்டு தாசிரிகள் பாடிக்கொண்டும் பின்னால் நாலைந்துபேர் "கோவிந்தா கோவிந்தா" என்று கூவிக்கொண்டும் வருவார்கள். அவர்களில் தாள் குத்திக் கொண்டு உண்டிபெட்டி வைத்திருப்பவன் முக்கியமானவன். அவன் "ஏழுமலையானுக் கொரு கோவிந்தம்! அலமேலம்மாளுக் கொரு கோவிந்தம்!" என ஓசை கிளப்புவான். அறுந்த விரலுக்குச் சுண்ணும்பிட மனமில்லாத புண்ணியவதிகளும் தங்கள் குழந்தைகள் கையில் காலணு அரையணு கொடுத்துப் போடச்சொல்லி அவன் கொடுக்கும் துளசியை வெகு கவனமாயும் உருக்கமாகவும் வாங்குவார்கள். இந்நாடகத்தில் நல்ல கந்தாயமாகையால் இவர்களில் பலர் முக்கியமாய்த் தாடி, தலைமயிர் வளர்த்திருப்பார்கள். வடக்கு மலையான் புண்ணியத்தால் இவர்கள் மூலமாய்க் கள்ளுக்கடைக்கு நல்ல லாபமே.



## 18. நடுத்தெருவில் புரளும் யாசகம்.

ஒரு சின்ன செம்பிற்கு நாமத்தைப் போட்டுப் புஷ்பத்தை அதன் கழுத்தில் சுற்றி மஞ்சள் துணியால் அதன் வாயை மூடி நடுவில் ஒரு துவாரம் செய்து அதைக் கையில் பிடித்துக்கொண்டு நடுத்தெருவில் ஒருவன் புரண்டுகொண்டு வருவான். அவனுக்குப் பின்னால் ஒரு பெண்பிள்ளை "கோவிந்தா! கோவிந்தா!!" என்று சொல்லிய வண்ணமாய் வருவாள். புரண்டுவரும் மனிதன்,

நான் பிறந்தது வளர்ந்தது புதுச்சேரி சீமை கோவிந்தா!
நாங்கள் அண்ணன் தம்பி ஏழுபேர் கோவிந்தா!
எனக்கு அஞ்சு பிராயத்திலே அறியாத நாளையிலே கோவிந்தா!
தீராத வயிற்று நோவு வந்தபடியினாலே கோவிந்தா!
பார்க்காத வயித்தியமில்லை; ஆடாத தீர்த்தங்களில்லை கோவிந்தா!
செய்யாத பிரார்த்தனைகளில்லை; அப்படியும் என் வயிற்றுநோவு [தீராதபடியினாலே கோவிந்தா!
புரட்டாசிமாதம் ஐந்தாம்கிழமை அறியாத பிள்ளைமேல் ஆவேசம் [வந்து கோவிந்தா!
அந்த ஏழுமலையான் வெங்கடேசப் பெருமாள் குறைதானென்று [கோவிந்தா!
இன்று முதல் இங்கேயிருந்து என் ஏழுமலைக்கு கோவிந்தா!
பிச்சை எடுத்து அங்கப் பிரதக்ஷணம் வந்தாயானால் கோவிந்தா!
பூமுடியைக் கொடுப்பாயானால் இந்த வயிற்றுநோவு தீருமென்று [கோவிந்தா!
அந்த வடக்கு மலையான் வாக்களித்தது முதல் கோவிந்தா!
எடுத்துக்கொடுத்ததுபோல் வயிற்றுநோவு நீங்கிவிட்டதுகோவிந்தா!

புண்ணியவதிகள் புண்ணியவான்கள் கொடுக்கும் பிச்சை காணிக்கை [கோவிந்தா !
அந்த ஏழுமலையான் சன்னிதிக்குக் கொண்டு சேர்ப்பது கோவிந்தா!
வட்டிப்போட்டு வாங்கும் வடக்குமலையான் கோவிந்தா !
புரண்ட வண்ணம் சேர்ந்த காசுகளை அள்ளிக்கொடுப்பேன் [கள்ளுக்கடைக்கு கோவிந்தா !


என்று பாடுவான். இவர்கள் இவ்வாறு கோவிந்தன் பேரைச் சொல்லிக் கள்ளுக்கடைக்காரன் பிழைக்க வழி தேடுவார்கள்.

---

## 19. திருப்பதி வெங்கலப்படி தருமம்.

இம்மோசக்காரர்கள் கோவில் குடைகளை குடிக்கூலிக்கு வாங்கிக்கொண்டு மேளம், தாளம், கணக்கப்பிள்ளை, சேவகர், ரசீது புத்தகம், கணக்குப் புத்தகம் முதலிய செக்கு பந்தியுடன் ஜனங்கள் நம்பும்படி தெருத் தெருவாய்த் திரிந்து ஏமாற்றுவது மாத்திரமல்லாமல் நாட்டுப்புறங்களிலும் போய்த் திருப்பதி வெங்கலப்படி தருமம் என்று யாசிப்பார்கள். அவரவர் கொடுக்கும் பணங்களுக்கும் ஓட்டை உடைச்சல் கிண்ணி செம்பு முதலியவைகளுக்கு விபரங்கள் கண்டு ரசீதும் கொடுப்பார்கள். சில ஏழை ஜனங்கள் பெருமாளுக்காகச் சேர்த்திருக்கிற உண்டிப் பணங்களையும் பிரார்த்தனைக்காகப் போட்டிருக்கிற கை கால்களிலுள்ள தங்கம் வெள்ளி நகைகளையும் தாம் போய்ச் செலுத்த மிகவும் செலவாகுமென்றும் இதில் சமர்ப்பித்துவிட்டால் தமது பிரார்த்தனைகள் செல்லாகுமென்றும் அதில் கொண்டுவந்து போட்டுவிடுவார்கள். சிலர் இவர்கள் படாடோபத்திற்குப் பிரமித்துப் பிடி ரூபா கொடுப்பார்கள். இப்படி இவர்கள் ஊர்கள் தோறும் சுற்றித் திரிந்து நாள்தோறும் குடி, சாப்பாடு முதலியவைகளின் செலவுகள் போக மிச்சத்தையும் பித்தளைச் சாமான்கள் விற்ற தொகையையும் முன்பே தீர்மானித்துக் கொண்டபடி இன்னின்னாருக்கு இவ்வளவிவ்வளவு பங்கென்பதாகப் பாகித்துக் கொள்வார்கள் பங்கு விகிதம் சரிப்படாத காரணத்தினாலும் முக்கியமானவர்கள் செய்யும் மோசத்தை முன்னிட்டும் இவர்கள் சிறு சிறு கூட்டத்தினராய்ப் பிரிந்துபோவதுமுண்டு. இம்மோச நடிப்பாளர்கட்குச் சென்னைதான் முக்கியஸ்தானம். அந்த சூரத்துக்கார சிப்பாய் ஏழுமலை வெங்கடேசப்பெருமாள் பிரார்த்தனைகளைச் செலுத்தத் தவறுகிறவர்களிடம் தமது சூரம் காட்டுகிறார். அவர் மோசக்

காரர்களிடம் அடங்கி ஒடுங்கிப்போவது நம்மவர் செய்த துர்ப்பாக்கியமே! இந்த மோசக்காரர்களுக் குடன்பட்டிருக்கும் பெருமாள் என்ன பெருமாள்?



20. திருப்பதிக் குடை.

தேசாயி வகுப்பாரில் ஒரு வீட்டாருக்கே இத் திருப்பதிக் குடைகள் சுதந்தரம்போலும்! இவர்கள் கொண்டுவரும் குடைகளுக்குத் தான் சென்னையில் மதிப்பதிகம். இக்குடைகள் தெருச்சுற்றும் காலத்தில் சில விடங்களில் இவ்வளவு கட்டணமென்றும் வேறு சில விடங்களில் மண்டகப்படி என்றும் பெரிய வழக்கமுண்டு. வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் கடன் வாங்கித் தாராளமாய்ச் செலவு செய்துவரு மிவர்கள் புரட்டாசி மாதம் ஆரம்பிக்கு முன், குடைகளுக்கு வேண்டிய பட்டுத் துணிமணி முதலியவைகளுக்கும் கடன் வாங்கி அவைகளைச் செய்துகொண்டு தெருச்சுற்ற ஆரம்பிப்பார்கள். இவர்கள் புரட்டாசி மாதத் துவக்கத்தில் குடைகளை விரித்துக்கொண்டு மேளதாளத்துடன் ஊர்வலம் வருவதில் பிரதிதினம் செலவினங்களுக்குச் சரிப்பட்டுப் போகும். கடைசியாகத் திருப்பதிக்குடை ஆனைகெவுனி பக்கம்வரும் ஒரு விசேஷ நாளில்தான் இவர்களுக்கு நல்ல கந்தாயம்; ஜனங்கள் காலணா முதல் ஒரு பிடி ரூபா வரையில் போடுவார்கள். நாள்தோறும் தமது பொழுதுகழிக்க வழியில்லாதவர்களும் இந்நாளைப் பெருநாளாகக் கொண்டாடுவார்கள். இதற்காகக் கவர்ன்மெண்டாரும் ஒரு பிரத்தியேக லீவு

கொடுத்திருக்கிறார்கள். அன்றையதினம் வசூலாகும் தொகையைக் கணக்காக்க ஏழுமலையான் தாயாதிகளான இவர்களைத் தவிர மற்றவர்கட்கு அதிகாரம் கிடையாது இப்படியாக அன்றையப் பொழுதெல்லாம் சேர்ந்த தொகையைச் சென்னைக்கடுத்த டாக்கர் சத்திரத் தண்டை கணக்குப் பார்த்து அதுவரையில் வாங்கியிருக்கும் கடன்களை அவ்விடம் வந்திருக்கும் கடன்காரர்களுக்குப் பைசல்செய்து விட்டு மிகுதியை எடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்புவார்கள். பின்பு சில பக்தர்களும் கூலி ஆட்களும் சேர்ந்து அக்குடைகளை ஆவடி, திருவள்ளூர் மார்க்கமாய்க் கொண்டுபோய்ச் சேர்க்கிறார்கள். திருப்பதிக்குப் போக முடியாதவர்களும் ஏழுமலையானைச் சிரமீது வைத்திருக்கிறவர்களும் மேல்படி குடைகளின்மேல் தமது மேல் துணியைப் போட்டு அதைக் கண்ணில் ஒற்றிக்கொள்வார்கள். அதனால், எல்லாப் பலன்களும் கைக்கெட்டி விட்டதுபோல் அவர்கள் எண்ணுகிறார்கள். நிஷ்கபடிகளாகிய நமது நாட்டார் இத்தகைய படுமோசத்திற்கு ஆளாகாமல், மிகு ஜாக்கிரதையாகத் தாம் வருந்தித் தேடியபொருளைப் பாதுகாத்து அதைப் பொது நன்மைக்கு வினியோகமாகும் வண்ணம் செய்தலே நமது நாட்டாரும் பிறநாட்டார் போல் முன்னுக்கு வருவதற்கு ஏற்ற குறியாம்.

## 21. காசிப்பிராமணர்கள் காவடி மோசம்.

**பா**லமணி கிளைமணி முதலியவற்றை விற்றுச் சீவனஞ் செய்யும் தாசிரிகளில் சிலர் குடியினால் வர்த்தகம் தவறிய காலத்துக் காசிப் பிராமணர் வேஷம்போட்டுக் கொள்வார்கள். இவர்கள் ஒரு செம்பையும் ஓர் இரும்புக் குறடாவையும் பிடித்துக்கொண்டு வேஷம் தரிக்கும்போது மாத்திரம் பூணூல் போட்டுக்கொள்வார்கள். இவர்கள் வேஷத்தோடு வரும்போது "தர்மனை, ராமேஸ்வர ஜாத்தா. அம்கு அர்ஷீ மாலும்னை," என்று இந்துஸ்தானியே பேசுவார்கள். வேறு சிலர் தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் பாஷைகளில் ஜெகநாதம் தாசில்தார் கையெழுத்தைப்போல் கையெழுத்திட்டுத் தமிழிலும், தெலுங்கிலும் இங்கிலீஷிலும் அச்சிட்ட நோட்டீசைத் தயார்செய்து வைத்துக்கொண் டிருப்பார்கள்.

அந்த நோட்டீசுகளில் "இவர்கள் முழுதும் ஊமைகள், தென்னிந்தியாவாசிகள், எழுபேர் சகோதரர்கள், ஒரு பெண்பிள்ளை. அவரவர்கள் தமது சக்தியானுசாரம் உதவிசெய்யவேண்டியது. கேலி செய்த

வர்கள் பாவப்பலனை யனுபவிப்பார்கள்" என்ற விஷயங்கள் அடங்கி யிருக்கும். இவர்கள் தாம் ஊமைகள்போல் எல்லாம் கை ஜாடையி லேயே காண்பிப்பார்கள். அன்றியும் தாம் பிறவி ஊமைகளென்று தமது நாக்கைத் தூக்கியும் காண்பிப்பார்கள். சிலர் காவடிகளைத் தூக்கிக்கொண்டு பெரிய வர்த்தக ஸ்தானங்களிலும் குஜராத்திப் பேட்டைகளிலும் போய் இந்துஸ்தானி பாஷை பேசித் தங்களிடம் கங்காஜல மிருப்பதாகச் சொல்லிச் சென்னைக் குழாய்த் தண்ணீரைச் சீசாக்களில் நிரப்பி வைத்துக்கொண்டு அந்தச் சீசாக்களுக்குக் காவித் துணிசுற்றி, அவைகளை வெகு பதனமாக வைத்திருப்பதுபோல் நடித்து, காவடியிலிருந்து எடுத்து கால் அல்லது அரை ரூபாய் வாங் கிக்கொண்டு வெகு பயபக்தியுடன் அந்தத் தண்ணீரை வெகு கொஞ் சமாகக் கொடுப்பார்கள். காவடி முதலிய வேஷ சாமான்களுக்கும் வழியில்லாமல் தங்களைப் போன்றவர்களிடம் குடக்கூலிக்கு வாங்கி வரும் இந்த மோசக்காரர்கள் தங்களிடம் சாளக்கிராம மிருக்கிறதாக வும் அதைப் பசுவின் பாலில் விட்டால் அது அதில் மேய்ந்து வருவ தன்றி ஒருபடி பசுவின்பாலை அது அப்படியே குடித்துவிடு மென் றும் சொல்லிக் கறுத்த குழாங்கல்லைச் சாளக்கிராமம்போல் வேலை செய்து "இது வேணுநாதன், இது கண்டகி தீரத்தில் கிடைக்கக் கூடியது; லேசில் கிடைப்பதரிது; இதை ஒருவர் கையிலும் கொடுக் கப்படாது" என்று தங்கள் கையிலேயே வைத்துக்கொண்டு பிறர்க் குக் காட்டித் துட்டுப் பறிப்பார்கள்.

இவர்களில் பேர்போன முனிதாசிரி என்பவன் அசல் காசிப் பிராமணனைப்போல் நடித்து, பிராமணர்களுடன் சமபோஜனஞ் செய்து அவர்களுக்குக் குழாங்கல்லைக் கொடுத்துவிட்டு அவர்களிட மிருந்த அசல் சாளக்கிராமத்தை அவன் கொண்டுபோய் இன்னும் வெகுநாளாகவில்லை. இப்படிப்பட்ட சமத்காரமும் இந்துஸ்தானி பாஷையைச் சரியாய்ப் பேசவும் தெரியாதவர்கள் சிலர் தெருக் களில் தலைகீழாய் நின்று ஏகத்தாரென்பதைக் கையில் வைத்துக் கொண்டு தெலுங்கில் பாடி கசரத் வித்தைசெய்து யாசிப்பார்கள். சிலர் ஆணும் பெண்ணுமாய் "சீதாக்கதை ரெட்டி ரெட்டி" என்ற கதைகளை ஒய்யாரமாகத் தெலுங்கில் பாடி யாசிப்பார்கள். இவர்கள் அவ்வளவு பேர்களுக்கும் சென்னைக்கடுத்த டாக்டர் சத்திரந்தான் முக்கியஸ்தானம். இவர்களுடைய மாயா ஜாலத்திற் குட்பட்டு வீணாய்த் தமது பொருளை யிழக்காமல் நம்மவர் ஜாக்கிரதையுடன் பொதுநன்மைக்குரிய தர்மங்களைச் செய்யும்படி இந்தியா கையேந்தி

நிற்கிறது. எந்தத் தேசத்தாராலும் எந்த ஜாதியாராலும் எந்த மதஸ்தாராலும் வேற்றுமையின்றிக் கற்பகவிருக்ஷம் போல் வேண்டியதைக் கொடுத்து ரக்ஷித்துவரும் நம்மிந்தியாவில் கிடைக்காத பொருள் வேறெங்கு மில்லையே. நம்மவர்களில் பலர் காலடியில் கிடைக்கும் பொன்குவியலைவிட்டு அன்னிய நாடுகளுக்குப் போய் மானத்தை இழந்து பரிதபிக்கிறார்களே அதற்காக அழுவதா? அல்லது அன்னியர் பொன்னாகவும், சம்பளமாகவும், பிஞ்சினாகவும், மண்ணாகப் போகக் கூடிய கண்ணாடி முதலிய உபயோகமற்ற பகட்டுச் சாமான்களைக் காட்டிப் பணமாகவும் கொண்டுபோக அதைக் கவனியாமல், மோசத்திலேயே காலங் கழித்துவிட்டுத் தான் பிறந்த தேசத்திற்கு இழிபெயரைக் கொடுக்கும் இப்பாவிகளுக் கழுவதா?

---

## 22. மூலவியாதி சிகிச்சை மோசம்.

சில தென்தேயத்து அனுமத் பேர்வழிகள் மூலம், பௌத்திரம் முதலிய நோய்களுக்கு வைத்தியம் செய்வதாய்ப் பிரசித்தப் பலகைகள் முழநீளம் போட்டிருப்பார்கள். சிலர் வீடு வீடாய் வந்து மூலம், பௌத்திரம் எடுப்பதாயும் இன்னும் பல வியாதிகளையும் சொஸ்தம் செய்வதாயும் சொல்வார்கள். ஒருவர் தமது மூலவியாதியைக் காண்பித்தால், அவர்கள் அதனுடைய குணம் குறிகளைச் சொல்லி "இது வேர்கொண்டிருக்கிறது. இது கெட்டது; நாலுநாளையில் சொன்னபடி கேட்குது கழுதை" என்று சொல்லி நோயாளியினிடம் ஒரு தொகை முடிவு செய்துகொண்டு நாலைந்துநாள் அம்மூலத்தின்மேல் காரச்சீலை போடுவார்கள். வியாதியஸ்தன் உபத்திரவம் பொறுக்க முடியாமல் கூச்சலிட்டால், "வேர் சாக வேண்டாமா? முதலில் அப்படித்தானிருக்கும். வேர் வந்துவிட்டால் நோய் லகுவாய்ப்போகும்" என்று சொல்லி நோயாளிக்கு நல்ல ஆகாரம் கொடுக்கும்படி திட்டம் செய்துவிட்டுக் குறித்த நாளில் வேரை எடுத்துக் காட்டுவதாய்ச் சொல்லி நோயாளியினிடம் ஒன்று அல்லது இரண்டு ரூபாய் அட்வான்ஸ் வாங்கிக்கொண்டு போய்விடுவார்கள். பின்பு அவர்கள் ஆட்டுச் சிறு நரம்புகளை மிகவும் மெல்லிய துண்டுகளாகச் செய்து பச்சையிலையைக் கசக்கி அதனுள் அந்த நரம்புகளை வைத்து எடுத்துக்கொண்டுபோய் மூலத்தின்மேல் வைத்து நன்றாய்ப் பிசைந்து கட்டிவிட்டு அதைத் தான் வந்து அவிழ்ப்பதாய்ச் சொல்லிப் போய் விடுவார்கள். மறுநாள் அதிகாலையில் வந்து வியாதிக்காரனுக்கு

வேண்டியவர்களைக்கூடவைத்துக்கொண்டு கட்டை அவிழ்த்தெடுத்து அதில் காணப்படும் ஆட்டு நரம்புகளைத் துடைப்பக்குச்சியால் தள்ளி அங்குள்ளார்க்குக் காண்பித்து "இதுதான் வேர். இது வந்துவிட்ட தால் இனி ஒருபொழுதும் மூலம் என்ற நாமதேயமே கிடையாது" என்று மற்றத் தொகையையும் தாம்பூலத்தோடு பெற்றுக்கொண்டு கம்பி நீட்டுவார்கள். இவர்கள் வைத்திருந்த காரச்சிலைகளின் வேகத்தால் நோயாளிக்குக் கொஞ்சநாள் வேதனை மாத்திரம் லகுவா யிருப்பதுபோல் காணப்பட்டாலும் சிலநாள் சென்றதும், மறுபடி யும் "பழையகுருடி கதவைத் திறடி" என்பது போல் மூலவியாதி வந்துவிடும்.

---

## 23. பௌத்திர சிகிச்சை மோசம்

பௌத்திரமென்பதே இன்னது என்று தெரியாத சில கேப் மாரிகள் பிரசண்ட வைத்தியர்களைப் போல் "அங்கே அந்த வியாதி யைத் தீர்த்தேன்? இங்கே முருகேச முதலியார் வீட்டில் ஒருவருக் குத் தேகமெல்லாம் புரை ஓடியிருநதது என்னவோ கடவுள் புண்ணி யத்தால் அதை வாசியாக்கினேன்" என்று தமது சாமர்த்தியத்தை யெல்லாம் கொஞ்சம் கொட்டியளந்து விட்டு "இது முளை பௌத்தி ரம்; முளையை எடுத்துவிட்டால் போகுது" என்று இடத்திற்குத் தக்கபடி தொகை முடிவு செய்துகொண்டு, ஐந்தாறுநாள் வெகு வேதனைப்படும்படி மிகவும் காரமான வஸ்துக்களைப் பற்றுப்போட்டு வருவார்கள். இரண்டொரு நாள் பொறுத்து "ஆச்சு, இரத்தமெல் லாம் செத்துவிட்டது; இன்னம் இரண்டு நாளையில் முளை வெளிக் காண வேண்டியதுதான். முளை வந்துவிட்டால் அதன்பிறகு அதன் செபம் சாயாது" என்று தைரியம் சொல்லிப் போவார்கள். மறுநாள் அதிகாலையில் வந்து தாம் வைத்தியம் செய்ய ஆரம்பிக்கும் போது வியாதியஸ்தன் கூச்சப்படுகிறதாய்க் கிட்ட இருக்கிறவர்களை அப்புறம் போகச் சொல்வார்கள். பின்பு அவர்கள் வியாதியஸ்தனைக் குனியவை த்து சிறுகுறடுகொண்டு பச்சைச்சதையைப் பிடித்திழுப்பார்கள். அப் போது நோயாளி நோய் பொறுக்காமல் கூச்சலிடுவான். வைத்தியர் கள் "பொறு பொறு! ஆச்சு ஆச்சு!!" என்று பின்னும் வேதனை செய்து தாங்கள் முன்பே தயார் செய்து வைத்திருக்கிற சீத்தாப்பழ த்தில் கொட்டையில்லாத சிறு சுளையை சீழ் இரத்தத்தோடு குறட்டி ஞல் பிடித்துக்கொண்டு, எல்லாரையும் அருகில் அழைத்து அவர்களு

க்குக் காட்டி "இது வருகிறது இலேசிலிருக்கிறதா? நான் என்ன செய்வேன்? இதற்காகத்தான் இவர் இவ்வளவு வேதனைப்படவேண்டியிருந்தது; இனி ஜென்ம ஜென்மத்திற்கும் இந்த வியாதியே தலைகாட்டாது; ஆனால் ஆகாத வஸ்துக்கள் பட்டால் இது மறுபடியும் வரும்; வந்தபோதிலும் இவ்வளவு உபத்திரவம் இருக்கமாட்டாது" என்று தாங்கள் பேசிய தொகையோடு இனாமும் சேர்த்துச் சில பேதைகளை ஏமாற்றிப் பெற்றுக்கொண்டு போவார்கள். இம்மோசக்காரர்கள் செய்யும் சூதையும் பேசும் பொய் புரட்டுகளையும் தெரிந்து கொள்ளச் சக்தியற்ற பேதை ஜனங்கள் இப்பாவிகள் சொல்லில் நம்பிக்கை வைத்து உள்ள நோயோடு அதிக நோயையும் வருவித்துக் கொண்டு அவஸ்தைப் படுவார்கள்.

---

## 24. பல்வைத்திய சிகிச்சை மோசம்

**ப**ல்நோய்க்குப் பலபல வைத்தியம் செய்து மனம் வருந்தி அவஸ்தைப்படுகிறவர்களிடம் சில சோம்பேறிகள் போய் "பல்லிலிருக்கிற புழுக்கள் வந்தாலொழிய இந்நோய் குணமாகாது" என்று பலவாறு சொல்லிக் கதையை அளப்பார்கள். பல் நோயினால் அவஸ்தைப் படுவோர் இவர்களால் இது எளிதில் குணமாகுமென்று நம்பும்படி அவர்கள் மிகவும் சாமர்த்தியமாய்ப் புளுகுவார்கள். இவர்கள் நல்லதிருஷ்டத்தால் நோயாளிகள் இவர்களையே பார்க்கும்படி கேட்டுக் கொண்டால் இவ்வளவு தொகை கொடுக்க வேண்டுமென்று அவர்கள் முடிவுசெய்து ஒன்று அல்லது இரண்டு ரூபாய் வாங்கிக்கொண்டு மறுநாள் வருவதாய்ப் போய்விடுவார்கள். மறுநாள்வந்து ஒரு குமிட்டியிலாவது வறட்டியிலாவது நெருப்பைக் கொண்டுவரச் சொல்லி சுக்குத் தூளுடன் கண்டங் கத்திரிக்காயின் விதைகளைக் கலந்து நெருப்பின்மேல் தூவி ஆமணக்கு இலைத்தண்டு வழியாய் நோயாளியை மருந்துப்புகையை வாயால் வலிக்கச்சொல்வார்கள். நெருப்பிலிருக்கிற கண்டங்கத்திரிக்காயின் விதைகள்வெடித்து அவ்விதைகளினுள்ளிருக்கிற முளைகள் புகைவழியாய் வாய்க்குள்செல்லும். பின்பு பல் நோய்க்காரன் எச்சில் உமிழும் போதெல்லாம் அச்சிறு முளைகள் எச்சிலுடன் வந்து விழும். வைத்தியர்கள் "பார்த்தீர்களா! பல்லிலிருந்த புழுக்களை" என்று அந்தச் சிறு முளைகளை அங்குள்ளாருக்குத் துடைப்பக்குச்சியால் தள்ளித் தள்ளிக் காட்டுவார்கள். பின்பு அவர்கள் இனிமேல் "பல்நோய் எப்போதும் அணுகாது; உன்னைப் பிடித்த

சனி ஒழிந்தது" என்று மிகுதித் தொகையைப் பற்றிக்கொண்டு கம்பி காட்டுவார்கள்.

எடுப்பார் கைக் குழந்தைகள் போன்ற நம் நாட்டு ஜனங்களை அன்னியநாட்டுப் பெண்பிள்ளைகளான சீனஸ்திரீகள்கூடவா ஏமாற்ற வேண்டும்? அப்பெண்கள் கண்ணில் பூழு இருப்பதாகவும் அதை எடுப்பதாகவும் இரண்டு இரும்பு ஊசிகளைக்கொண்டு கண்ணிலுள்ள பீளையை எடுத்துக்காட்டி எவ்வளவோ பணம்கொண்டுபோனார்கள். காட்டில் காய்கனிதின்று கோவணத்துடன் காலந்தள்ளிய மகரிஷிகளது பேரைக் கோத்திரப் பேராகக்கொண்டாடும் ஞானம் படைத்த சந்ததியாராகிய இந்தியரை அறியாமைக்கு ஆட்பட்டும் தெரியாமைக்குத் தொண்டுபட்டு முழுலத் தெய்வம் செய்துவிட்டது! களவு முதல் சகல விஷயத்திற்கும் மலை மலையாகவும் பொதி பொதியாகவும் சாஸ்திரங்களை எழுதி வைத்து விட்டுப்போன நமது முன்னோர்கள் மறுபடியும் வந்து பார்ப்பார்களானால் அவர்கள் நம்முடைய தற்கால நிலைமைக்குக் கண்ணீர் விட்டு அழுவார்களல்லவா?

---

## 25. பெண்பிள்ளையும் வைத்தியனும்

ஒரு பெண்பிள்ளை வீடுவீடாய்ப் போய் இங்கொரு வைத்தியர் வந்தாரா? இத்தெருவில்தான் ஒரு முதலியார் வீட்டிற்கு வருவதாய்ச் சொல்லியிருந்தார்; அவர் கருப்பாயும் கொஞ்சம் உயரமாயும் இருப்பார்; அவரைத் தேடிப் பிடிக்கிறது கொஞ்சம் கஷ்டமாயிருக்கிறது; அவரை எங்கு எங்குத் தேடுகிறது? அவர் கைப்பட்டால் போதும்; நல்ல கைராசியிருக்கிறது; படுத்த படுக்கையாயிருந்த என் பிள்ளையை எழுந்து உலாவும்படி செய்த புண்ணியவான் அவர்தான். பக்கத்து வீட்டில் ஒரு பெண்ணுக்கு தாரணை மாரணையா யிருக்கிறது. அவரையே கொண்டு வரும்படி தொந்தரவு செய்கிறார்கள். நீங்கள் யாராவது பார்த்தீர்களா? யாரோ முதலியாராமே? அவர் வீடு எது? அதை யாவது காட்டுங்கள்," என்று வெகு பரிதாபமாய்க் கேட்பாள். இப்படி இரண்டொரு வீடுகளைக் கேட்டுக்கொண்டு போகும்போது அவசரிக்காரியான ஒரு பெண்பிள்ளை தன் வீட்டில் வியாதியால் அவஸ்தைப்படுகிறவனுடைய வியாதி முதலியவற்றை விபரமாய்ச் சொல்லி "அம்மா நாங்கள் யார் யாரையோ கொண்டு பார்க்கிறோம்; கொஞ்சமாவது குணமாகவில்லை, அந்தப் புண்ணியவான் கைராசியாலா

வது கொஞ்சம் குணமாகாதா? அதையும் பார்க்கலாமென்று நினைக்கிறேன்'' என்று அங்கலாய்த்துக் கொள்ளுவாள். அவள் மூலமாய் எல்லா விபாமும் கண்டுகொண்ட கேப்மாரிப் பெண்பிள்ளையானவள் ஒருசமயம் அவர் தனக்குத் தென்பட்டால் அவருக்குச் சொல்லி யனுப்புவதாய்ப் போய் விடுவாள். மறுநாள் அவள் வைத்தியனிடம் அந்த வீட்டின் அடையாளமும் வியாதியஸ்தனுடைய ஸ்திதி நேர்மை முதலாகிய கூறுகளையும் சொல்லியனுப்புவாள்.

உடனே கைலாச வைத்தியன் சரேலெனக் கேப்மாரிப் பெண் பிள்ளை சொன்ன அடையாளப்படி அவ்வீட்டிற்குப்போய் "அம்மா! நேற்றுப்பகல் ஒரு பெண்பிள்ளை என்னிடம் வந்து இங்கு ஒருவர் வியாதியாய் இருப்பதாய் சொன்னாள். எனக்கு வரச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை; அந்தம்மாள் ரொம்ப தூரம் சொன்னதனால் நான் இங்குவர நேர்ந்தது. கேசவ நாயுடு வீட்டில் குளி குளித்து ஜன்னி பிறந்துபோச்சுது. முட்டாள் நாய்கள் ஒன்றுந் தெரியாதவர்களைக் கொண்டு மிகு கேவல ஸ்திதிக்குக் கொண்டுவந்து வைத்து விட்டார் கள். வைத்தியர்கள் எல்லாரும் தங்களால் முடியாதென்று சொல்லி விட்டபிறகு என்னைக் கூப்பிட்டுப் பார்க்கும்படி சொன்னார்கள். என்ன செய்து தொலைக்கிறது! பார்க்கலாமென்று சண்டமாருதக் குழம்பு வைத்து மாட்டிவிட்டேன்; கழுதை! இருந்தவிடந் தெரியாமல் ஜன்னி போய்விட்டது. துட்டுக்கு மாத்திரம் முன்னும் பின்னும் பார்க்கிறார்கள். நேர்வாளம் சுத்தி செய்ய வகை தெரியாதவர்களெல்லாம் வைத்தியரென்று வந்து விடுகிறார்கள். முதலாவது நாடிப் பரிக்ஷை தெரியாமலே எத்தனையோ பேர்கள் இந்தப் பட்டணத்தில் துட்டு சம்பாதிக்கிறார்கள். ஊர் பேச்சு நமக்கென்னத்திற்கு? எதோ குழந்தையைக் கொண்டுவா பார்ப்போம்'' என்று நோயாளியின் கையைப் பிடித்துப் பார்த்து, விரலைப் பூமியில் தட்டிப் பிள்ளையை ஏற இறங்கப் பார்ப்பான். பிறகு நாக்கை நீட்டச்சொல்லியும் கண் இரப்பையை நீக்கியும் பார்த்துவிட்டு வியாதியின் கூறுகளைத்துந் தனக்குத் தெரிந்தமாதிரி தலையை அசைத்து "சரி இருக்கட்டும்'' இது கெட்டுது,

"ஆமேதான் நாடிமூன் றேடிற் றானால்
அப்பனே ஜன்னியது வந்து கூடும்
போமேதான் வாதமது திமிர்த்து நின்றால்
பொல்லாத ஏமனுக் கறுதி யாகும்

சாமேதான் பித்தமது அழுந்திற் ருனல்
சார்வாக அசாத்திய முடனே சேரும்
காமேதான் சிலேத்மமது கோபித் தக்கால்
சடுதியில் எமன்பதி சேரு வாரே"

என்று தனக்கு உளவாளிப் பெண்பிள்ளை சொன்னபடி வியாதியினுடைய குணதோஷங்களைப் பிட்டுப் பிட்டுச் சொல்லுவான்.

அங்குநிற்கும் தடிப்பெண்கள் அந்த வைத்தியன் மகாகெட்டிக்காரனென்று மகிழ்ந்துபோவார்கள். பின்பு வீட்டுக்குச்சொந்தக்காரியானவள் "ஐயா உங்கள் புண்ணியம்; எப்படியாவது சொஸ்தப்படுத்துகிறது உங்கள் பாரம்; முன்னே இதைப்பாருங்கள்" என்பாள். வைத்தியன் சமயோசிதமாய் அவரவர் நிலைமைக்குத் தக்கபடி லகுபிகுவாய்ப் பணத்தை முடிவு செய்துகொண்டு வெறும் நேர்வாள நாற்றம் வீசுகிற தன் மருந்துப்பையில் மான் கொம்பு, மாட்டுக் கொம்புகளால் செய்த பரணைகளைச் சிறு சிறு சீசாக்கள் முதலியவைகளில் அடைத்து வைத்திருக்கும் மருந்துகளில் ஏதாவதொன்றைக் கொடுத்து "இதை இஞ்சி சுரசஞ்செய்து இரண்டு வேளை கொடுங்கள். மீன், கருவாடு, அகத்திக்கீரை, கொள் பருப்பு, பூசணைக்காய் இவைகள் ஆகா. கடுகு, நல்லெண்ணெய் கூடவே கூடாது. அவபத்தியம் செய்துவிட்டு என் மருந்தின்மேல் தோஷம் சொல்வதில் பிரயோஜனமில்லை" என்று அட்வான்ஸ், மருந்து செலவு, வண்டி சார்ஜ் முதலானவைகளை வந்தவரைக்கும் லாபமென்று வரப்படுத்தும் நோக்கத்தில் கருத்தாயிருப்பான். அந்த வீட்டுக்காரி தன் குழந்தையின் குணம் தெரியாதமுன்பே அண்டை அயலார்களுக்கும் "இந்த வைத்தியர் மகா நிபுணர்; கெட்டிக்காரர்; நல்ல கைராசியு மிருக்கிறது; ஒரே வேளையில் வியாதியை நிறுத்திவிடுகிறார்" என்று சிபார்சு செய்துவிடுவாள்.

கைலாச வைத்தியன் 'வீட்டுக்கொரு மொத்தை கேட்டுக்கோடி மாரி' என்ற கதையாய்த் தன் வயிற்றுப்பாட்டையும் அனுகூலப்பட்டால் தண்ணீர்ப்பாட்டையும் (குடி) பார்த்துக்கொள்வான். பின்பு அவன் "நேற்றைக்கு இன்று மெத்த குணமாய் இருக்கிறது. இது கெட்டுது; முன்னைக்கு இப்போது எவ்வளவோ வழிக்கு வந்திருக்கிறது" என்று குழந்தை முடிவாகிறவரை வேளைக்கு வேளை பணம் பறிப்பான். வியாதி தீராமற்போனல் "ஐயோ! நீங்கள் அவபத்தியம் செய்து விட்டீர்கள்; யார் யாரையோ கொண்டு பார்த்தீர்கள்.

அவர்கள் வீணுகத் தேகத்தைக் கெடுத்துவிட்டார்கள்" என்று வீணான தோஷங்கள் கற்பித்து நோயாளியின் உறவினரோடு சண்டை போட்டுக்கொண்டு போவான். 'காசுக்கொரு குதிரையும் வேண்டும்; அது காற்றைப்போல் பறக்கவும் வேண்டும்' என்ற பழமொழிப்படி, நம் நாட்டுச் சாமானிய ஜனங்கள் துட்டுக்குச் சுளுவாய்க் கால் மாட்டுத் தலைமாட்டு வைத்தியர்களையாவது வாய்ஜல்லி அடிக்கும் கேப்மாரிகளையாவது கொண்டுவந்து தங்கள் உயிருக்கே வழிதேடிக் கொள்வார்கள்; அல்லது இல்லாத நோயையாவது வருவித்துக் கொள்வார்கள். நம் நாட்டு மூடப்பெண்கள் தமது குழந்தைகளுக்குக் காணும் வியாதிகள் மாயமாய்ப் போய்விடவேண்டுமென ஆத்திரங்கொண்டு, ஒரு பாலடை பால் குடித்து ஜீரணஞ் செய்துகொள்ள முடியாததும் பால்மணம் மாறாததுமாகிய பச்சைக் குழந்தைகளுக்கு ஒருபிடி நுணுவிலை, இரண்டு பிடி புங்கனிலை, இரண்டுபிடி புளியனிலை, மூன்று பிடி வில்வ இலை, கஞ்சாங்கோரை, நிலத்துளசி இவைகளைச் சேர்த்து எந்த வைத்திய முறையினலோ மூன்று அறுப்பு அறுத்து ஒன்றை எறிந்துவிட்டு இரண்டு பாகத்தை உரலிலிட்டு இடித்துச் சாறுபிழிந்து கொள்வார்கள். பின்பு அக்குழந்தைகள் திமிறுவதையும் அவைகளுக்குப் புரையேறுவதையும் சிறிதும் சட்டை பண்ணுமல் "கட்டையிலே வைப்பான் பெற்றது; குடிக்க மாட்டேன் என்கிறதே" என்று அவைகளின் மூக்கைப் பிடித்து அடிமேல் அடி அடித்து நாலைந்து பாலடை சாறு ஊற்றுவார்கள். இதனுல் மூச்சு திணறிச் சாகும் குழந்தைகளின் கணக்கை ஜனன, மரண விகிதத்தால் தெரிந்துகொள்ளலாம்.

இப்படி மூடத் தாய்மார்களால் லட்சக்கணக்கான குழந்தைகள் வருஷம் ஒன்றுக்கு இரையாகின்றன. பெண்கள் கல்வியை நன்ருய்க் கற்று வைத்தியத்திலும் உருப்பட்டாலல்லது இதற்கு வேறுவிதமான பரிகாரமில்லை. இத்தகைய சம்பவங்களை அநேகமாக நான் கண்டிருந்தாலும், எனக்குப் பந்துவான ஒரு புண்ணியவதி வருஷம் இரண்டு பூர்த்தியாகாத தன் ஆண்மகவுக்கு அந்து கடுக்காயை அதனுள் இருக்கும் கொட்டையை நீக்கி அறைத்து மொத்தையாக்கித் தண்ணீரில் கரைத்து (அவ்வளவு பிரமாணம் சர்க்கரைப் பொங்கலானுலும் தின்னமுடியாத குழந்தையை) அதன் கைகால்களை இரண்டுபேர் அமுக்கிப் பிடிக்க நெஞ்சிரக்கமில்லாமலோ அல்லது நோய் அப்போதே பறந்துபோகுமென்ற எண்ணத்தாலோ அடியும் உதையும் கொடுத்து வார்த்தாள். வார்த்த அன்

றைக்கே அக்குழந்தைக்கு அளவில்லாமல் பேதி காணவே, யமனும் மனந்தாளாமல் கிட்டவிருந்து அதை அழைத்துக்கொண்டு போன சம்பவம் நான் மறக்கக்கூடியதாயில்லை; காருண்ய துரைத்தனத்தார் இந்திய ஸ்திரீகளை வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள். இஃது எம்மட்டும் வேலை செய்யுமோ என்பதை நான் இப்போதே சொல்ல முடியாது. எத்தனைபேர்கள்தான் L. M. S. M. B. முதலிய பட்டங்கள் பெற்றாலும் நூற்றுக் கணக்காய்த் தாதிமார் தேர்ச்சி பெற்றாலும் ஆங்கிலேய ஸ்திரீகளைப்போல் சண்டைக்காலத்திலும், பூகம்பம், அக்கினி, வெள்ளம் முதலிய அபாயகாலத்திலும் ஜனங்களுக்கு உதவிபுரிவதுமாத்திரமல்லாமல் ஆஸ்பத்திரிகளிலும் வலியப்போய்ப் பாடுபடும் ஜீவ இரக்கமான பொதுப்பான்மை உண்டானால்தான் இந்தியப்பெண்கள் வைத்தியம் சிறப்புடையதாகக் காணப்படும்; தவிர, சிசுக்கள் மரணமும் குறைவுபட ஏதுவாகும்.

இது நிற்க, சில கேப்மாரி வைத்தியர்கள் கஷாயங்களுக்குச் சுமார் முப்பது நாற்பதுமருந்து தினுசுகள் பேரைப் பட்டியில் எழுதி இன்ன கடையில் தான் சரியான மூலிகைகளிருக்கின்றன. நான் சொன்னதாகச் சொல்லி அறு பன்னிரண்டு கொடுத்துவிட்டால் எதெதை எப்படி யெப்படிக் கொடுக்கவேண்டுமோ அதை அப்படியெல்லாம் கொடுத்து விடுவானென்று அனுப்புவார்கள். மருந்து கடைக்காரன் சீட்டு எழுதி அனுப்பிய வைத்தியனுக்குக் சரிபாகம் கொடுக்கவேண்டுமென முன்பே அவர்களுக்குள் ஏற்பாடாய் இருக்கிறபடியால், அவன் சுமைக் கணக்காய்த் தான் வாங்கி வைத்திருக்கிற தழைகளையும், வேர்களையும், பட்டைகளையும் வெறும் கடிதாசி தான் செலவென்று ஒரு தினுசை ஒன்பது பொட்டளங்களாகக் கட்டிக்கொடுப்பான். இப்படி நம்மவர் எவ்வகையிலும் மோசம் போவார்களானால், நாம் இதர தேசத்தவர்களை நொந்து கொள்வதனால் என்ன பிரயோஜனம்?

---

## 26. மராட்டிய வைத்தியர்.

இந்த வைத்தியர்கள் வருஷத்திற்கொரு முறை, ஒவ்வொரு பட்டணங்களுக்கும் போவதுபோல் சென்னைக்கும் ஒரு பயணம் வருவார்கள். இவர்கள் தமது காதில் பொன் பரவளியும் தலையில் முறுக்குத் தலைகுட்டையும் நெற்றியில் செந்தூரத் திலகமு மிடுவார்கள். இவர்கள் பார்வைக்கு வடதேயத்து மாராட்டியரைப் போல் இருப்பார்

கள். தமிழ்ப் பாஷையைத் தங்கள் வயித்தியத்திற்கு வேண்டிய வரையில் தெரிந்திருப்பவர்களைப்போல் இவர்கள் தெற்றித் தெற்றிப் பேசுவார்கள். இவர்கள் பெரும்பாலும் வாலிப வயதுடைய பிள்ளைகளிடம்போய் "உன் தேகம் மேகவட்டையா யிருக்கிறது; கைகால் குத்தல் குடைச்சலாயிருக்கும்; சுத்தமாய்த் தாது கெட்டுப் போயிருக்கிறது" என்றும் சிலருக்குக் கொஞ்சம் புரட்டி பித்தச் சூடு என்றும் இன்னொருவருக்குப் பித்தவாயுவு சம்பந்தம் அதிகப்பட்டிருக்கிறது; தலைவலி, கழுத்துவலி, மார்பெரிச்சல், தலை மயக்க முதலியனவிருக்கும் என்றும் சொல்லி "என்னிடம் தக்க செந்தூர மிருக்கிறது கொடுக்கிறேன்; வியாதி குணமானால் உங்களுக்கிஷ்டப்பட்டதைக் கொடுங்கள். நான் மேல் வருஷம் வருவேன். நீங்கள் விரும்பிய தொகையை எழுத்து மூலமாய் எழுதிக் கொடுக்கும் பக்ஷத்தில் மருந்து கொடுக்கிறேன். இப்போது எனக்கொன்றும் கொடுக்க வேண்டியதில்லை" என்பார்கள்.

இதைக் கேட்ட வாலிபர்கள் "நோய் தீர்ந்த பிறகு தானே நாம் கொடுக்கப் போகிறோம்; நமக்கென்ன செலவு இப்போது? ஏதாவது கிஞ்சித்துக் கொடுக்கவேண்டி யிருந்தால்தான் விழிக்க வேண்டும்; பார்க்கலாம் ஒருகை" என்று "ஐயா வயித்தியரே! எனக்கு மூலச் சூட்டிற்கு மருந்துகொடும். நோய் லகுவானால் ரூபாய் பத்தல்ல இருபது கொடுக்கிறேன்" என்று சொல்வான் ஒருவன்; இன்னொருவன் "ரூபாய் பத்துக்கு எழுதிக் கொடுக்கிறேன்" என்பான். இப்படி ஒவ்வொருவரும் ரூபாய் பத்தென்றும் இருபதென்றும் முடிவு செய்துகொண்டு எழுதிக் கொடுப்பார்கள். வயித்தியன் நாலைந்து பேரிடம் ஏற்பாடு செய்துகொண்டபின், ஒருவனை நல்லெண்ணெய் பத்துப் பலமும் மிளகு பத்துப் பலமும் வாங்கிவரச் சொல்வான். இன்னொருவனை நல்லெண்ணெய் ஐந்து பலமும் மஞ்சள் ஐந்து பலமும் மற்றொருவனை நெய் பத்துப் பலமும் சீரகம் பத்துப் பலமும் வாங்கிவரச் சொல்வான். இப்படி ஒவ்வொரு நோயாளிக்கும் ஒவ்வொரு மாதிரியாய்ச் சொல்லி எல்லாரும் அவைகளை வாங்கி வந்த பிறகு மிளகு, மஞ்சள், சீரகம் முதலியவைகளைத் தனித்தனியாகத் தூள் செய்துகொண்டு வரச்சொல்வான்.

பின்பு அவன் தன்னிட மிருக்கிற மருந்துப் பெட்டியை அவிழ்த்து அதனுள் சிறு சிறு கல் ஜாக்குகள் போட்டு அடைத்து வைத்திருக்கிற சீசாக்களிலுள்ள ஏதோ ஒரு தூளை "இது ஒரு

வாரகனிடை; இது அரை வாரகனிடை" என்று நிறுத்துப்போட்டு அதனோடு மேல்படி மிளகு, மஞ்சள் சீரகத் தூள்களையும் ஒன்றாய்க் கலந்துவிட்டு, அவர்களில் ஒருவனைப் பார்த்து "நீ பெரியகடைக்குப் போய்க் காந்தச் செந்தூரமென்று கேள்; கொடுப்பார்கள். வாரகனெடை ரூபாய் இரண்டிருக்கும்; நல்லதாய்ப் பார்த்து வாங்கிவந்து இதில் போட்டுச் சாப்பிட்டுவர வேண்டியது. பத்தியம் இச்சாபத்தியம் தான்; ஸ்திரீ போகம் கூடாது; கடுகு, நல்லெண்ணெய், பூசணைக்காய், கொள்பருப்பு அகத்திக்கீரை இவைகள் ஆகா. செந்தூரம் ஏமாந்து வாங்கிவிட்டு என்மேல் குறை சொல்லக்கூடாது. அதை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்து வாங்கவேண்டும். அவர்கள் ஒஸ்தி செந்தூரம் கொடுக்கமாட்டார்கள்" என்று எல்லாப் பழியும் செந்தூரத்தின்மேல் போட்டுவிடுவான். அவர்கள் இதைக்கேட்டு "என்ன ஐயா! நாலணா ஐந்தணா செலவுசெய்து வாங்கிய மிளகு, மஞ்சள், சீரகம் இவைகளை ஒன்றாய்க் கலந்துவிட்டீர். இனி என்ன செய்கிறது? அதிலும் என்னமோ மருந்தைப் போட்டுக் கொடுத்துவிட்டீர். பிறகு செந்தூரத்தின்மேல் பழி சொல்வீர்போலிருக்கிறது. நோய் விஷயத்தில் நான் உத்தரவாதி ஆகமாட்டேனென்றால், ஒருவேளை கடைக்காரன் மட்ட செந்தூரத்தைக் கொடுத்து என் மருந்தைக் கெடுத்துவிட்டால் என்ன செய்கிறது?" என்று சொல்வார்கள். அதற்கு, மாட்டிய வைத்தியன் "அப்படி நீங்கள் வாங்குவதற்குச் சமுசயப்பட்டால், நான் ஒருவருக்காக இச்செந்தூரம் செய்திருக்கிறேன். அதன் கிரயம் கொடுத்தால் கொடுக்கிறேன். அவர்கட்கு நாளைக்காவது இதைச் செய்து கொடுக்கிறேன். இஷ்டமிருந்தால் பாருங்கள்" என்று சொல்வான். அவர்கள் "அதன் விலை என்ன?" என்றால், "அவன் வாரகனெடை இரண்டு ரூபாய்; அதில் ஒரு காசும் குறைக்க முடியாது" என்பான். இப்படி அவர்கள் லகுபிகுவாய்ப் பேரம்பேசிக் கால் அரை குறைத்து வந்தவரையில் பிடுங்கிக்கொண்டு கம்பி நீட்டுவார்கள். "பத்தோடு பதினொன்று அதனோடு அது வொன்று" என்ற மாதிரியாய் நல்லெண்ணெய் முதலான நஷ்டத்தோடு ஒன்று அல்லது ஒன்றரை ரூபாயை அவர்கள் கொடுத்தனுப்புவார்கள்.

## 27. பஞ்சாப் வைத்தியர் மோசம்.

இந்த வைத்தியர்கள் கும்பல் கும்பலாய்த் தென் தேசங்களி லுள்ள பெரிய பட்டணங்களிலெல்லாம், சுற்றித் திரிவதுபோல் சென்னைக்கும் ஒரு பயணம் வருவார்கள். வடதேயத்து இந்துஸ் தான் பாகங்களி லிருக்கு 'றவர்கள், முற்றும் வடதேயத்து மாதிரி உடை உடுப்பார்கள்; இந்துஸ்தானி பாஷை பேசுவார்கள்; நாம் பேசுவதை ஒருவாறு தெரிந்துகொள்வார்கள்; ஒன்றிரண்டு தமிழ்ச் சொற்களுடன் தமது கருத்தைச் சைகையால் தெரிவிப்பார்கள்; கல் கார்க்குப் போட்டு அடைத்து வைத்திருக்கிற சீசாக்களில், அநேக மருந்துவகைகளை ஒரு மூட்டையாகக் கட்டித் தமது முதுகில் வைத் திருப்பார்கள்; "பஞ்சாப் பாபு லட்சுமணதாஸ் மருந்து" என்று, ஒரு புஸ்தகம் தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் பாஷைகளில், விபரமாய் அச்சிட்டிருப்பதைக் காண்பிப்பார்கள்; எந்த வியாதியா யிருந்த போதிலும் அதைத் தீர்ப்பதாய்ச் சொல்லி உடனே பணம் கொடுத் தால், தோலா 1—0—0, 1—8—0, 2—0—0 ரூபா வீதம் கொடுக்க வேண்டுமென்றும், தற்சமயம் ரொக்கம் கொடுக்க முடியாவிட்டா லும், அல்லது மருந்தில் நம்பிக்கை யில்லாவிட்டாலும், மேல்வரு ஷம் நோய் தீர்ந்தபிறகு 50 ரூபாய் அல்லது 100 ரூபாய் கொடுப்ப தாய்ப் பத்திரம் எழுதிக் கொடுத்தால் மருந்து கொடுப்பதாகவும் சொல்லுவார்கள். சிலர் எழுதிக் கொடுத்திருக்கிற பத்திரத்தையும், எடுத்துக் காண்பிப்பார்கள். பின்பு அவர்கள் "ஐயா! நாங்கள் சுமார் முந்நூறு பேர் வெளிப்பட்டோம். நாங்கள் எல்லாரும் இமய கிரியிலிருந்து மூலிகைகள் கொண்டு வந்தோம். எங்களுக்குச் சம்ப ளம், சாப்பாட்டுச் செலவு முதலியவற்றைப் பஞ்சாப் பெரிய அக் கீம் கொடுத்து வருகிறார். இங்கு அவர் உத்தரவின்படி காரியஸ்தர் கள் எல்லாக் காரியங்களையும் நடத்தி வருகின்றனர். நாங்கள் மருந்து விற்கும் தொகையை, அல்லது வசூலை மேல்படி காரியஸ்த ரிடம் பிரதிதினம் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் அப்பணத்தைச் சாதுக்களுக்கும் பைராகிகளுக்கும் தர்மம் செய்வார்கள்" என்று சொல்லி ஜனங்கள் தமது மருந்தை நம்பும்படி பேசிப் பச்சென்றிருக் கும் ஒரு மருந்தைத் தண்ணீரில் குழப்பி மயிரிருக்கிற இடத்தில் தடவுவார்கள். கொஞ்சநேரத்திற்கெல்லாம், கத்திகொண்டு சிறைத் ததுபோல் அவ்விடத்திலுள்ள மயிரெல்லாம் உதிர்ந்து போகும். இதைப் பார்த்து ஜனங்கள் குஷ்டம் முதலான வியாதிகளுக்கு, ஒன்

திரண்டு கொடுத்து மருந்து வாங்கிக்கொள்வார்கள். பத்திரம் எழுதிக் கொடுக்க எட்டணு ஸ்டாம்பு வாங்குவதைவிட, அந்த எட்டணுவைக் கொடுத்து மருந்தையே வாங்கிக்கொள்வார்கள்.

இவர்கள் தம்மிடம் வைத்திருக்கும் புஸ்தகங்களில் சொல்கிற விதமாவது:—

ஸ்ரீமகர் பாபு லட்சுமணதாஸ் குமஸ்தா, ரஞ்சிதசிங்கு சகலருக்கும் தெரியப்படுத்துவ தென்னவென்றால், என்னிடத்திலிருந்து கொடுக்கும் மருந்துகள் சரியாகச் சுத்தி செய்தவை. இம்மருந்துகளை வாங்குவோர், மருந்தின் விலையை முதலில் கொடுத்தாலும் அல்லது அந்த மருந்துக்காகக் கண்டிருக்கும் இனம் தொகையை ஒரு வருஷம் பொறுத்துக் கொடுக்கிறேனென்று முத்திரைக் கடிதாசியில் எழுதிக் கொடுத்தாலும், அம்மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம். ஏழைகளுக்குச் சும்மா மருந்து கொடுக்கப்படும். இம்மருந்து செய்யும் மூலிகைகள், இமயகிரியிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன. எவராவது முத்திரைக் கடிதம் எழுதிக்கொடுத்து, மருந்து வாங்கிக்கொண்டு ஒரு வருஷம் பொறுத்து நாங்கள் வந்து கேட்கும்போது இனம் பணத்தைக் கொடுக்காமல் மோசஞ்செய்தாலும் சரி, அல்லது அந்த வியாதி தீரவில்லையென்று பொய் சொன்னாலுஞ் சரி, கோவிலுக்கு முன்போய்ப் பிரமாணம் செய்துவிட்டால், சுவாமியின்பேரில் பாரத்தைப் போட்டுவிட்டு, எழுதிக் கொடுத்த முத்திரைக் கடிதாசியைக் கிழித்துப் போட்டு விடுவோம். இம்மருந்தைச் சாப்பிடுவோர்களுக்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

(Sd.) RALLIA SINGH PARIN SINGH,
Shafa Khana Sadh Sangat
Kadar Dal Mandi,
Amritsar.

(Sd.) BILSUA SINGH,
Registered Travelling Agent.

மூன்று லட்சத்து எண்பதினாயிரம் அருமையான மருந்து தினுசுகளை மூந்நூறு குமஸ்தாக்களிடம், விற்பனைக்குக் கொடுத்தனுப்பியிருக்கிறது.

இப்படிக்கு,
பாபு லட்சுமணதாஸ்.

வியாதிகளின் கூறுகளும் மருந்து சாப்பிடவேண்டிய விதமும்:

அமிர்த சஞ்சீவி சூரணம்:—இது வெகுநாளிருக்கும் மஞ்ச வெள்ளை, கன்னப்புற்று, மேகம், மந்தாரகாசம், காசம், இரைப்பு, ஒற்றைத்தலைவலி, பலவகைக் காய்ச்சல், தாதுபுஷ்டி உடைந்திருத்தல், ஆண்பிள்ளை தத்துவமில்லாதிருத்தல், நீர் அடைப்பு, சுத்தமாக நாம்புகளில் நல்லரத்த மில்லாமை, பலயீனமாக விருத்தல் முதலிய பலவகை வியாதிகளுக்கு இந்தச் சூரணத்தை 25 பொட்டளம் செய்து நாள் தோறும் காலை 1 பொட்டளம் வீதம் சர்க்கரையில் கலந்து, 25 நாள் சாப்பிடவும். இந்தச் சூரணத்தின் மகிமை, என்னால் எடுத்துரைக்க முடியாது. இதைச் சிறியவர்கட்கும், பெரியவர்கட்கும், பெண்களுக்கும் கொடுக்கலாம். தடையில்லாமல் வியாதியைச் சௌக்கியப்படுத்துமென்று உண்மையாகச் சொல்வேன்.

இந்தவிதமாகத் தாங்கள் அச்சிட்டு வைத்திருக்கும் புத்தகங்களில் அநேக வியாதிகளின் கூறுகளையும் குணதோஷங்களையும் புருஷ தத்துவத்தைப்பற்றியும் வாசிப்பவர் அறுவறுக்கத் தக்கவைகளை விஸ்தரித்து எழுதி யிருப்பதுடன் இன்னின்ன பஸ்பம் செந்தூரம் கொடுப்பதானால் தோலா 1-க்கு 1-0-0, 1-8-0, 2-0-0 என்றும் வருஷம் பொறுத்துக் கொடுப்பதானால் முறையே 25-0-0, 50-0-0, 100-0-0 என்றும் கண்டிருப்பார்கள். இதை நம் நாட்டுப் பாமர ஜனங்கள் மெய்யென நம்பி மோசம்போவார்கள். உண்ணும் உணவின் வகையறியாத பேதை ஜனங்களுக்கு அமிர்த சஞ்சீவிதான் ஈனகாரியம் செய்துவிடும்.

## 28. கோரோசனை மோசம்.

முருக்கம்பூ, மஞ்சள், அடுப்புக்கரி, சுண்ணாம்பு ஆகிய இவைகளை நன்றாய் அரைத்துக் குழம்பாகக் கலக்கிக்கொண்டு மிளகவ்வளவு சிறு உண்டைகளாகச் செய்து காயவைத்து, தினந்தோறும் அந்தக் குழம்பிலேயே அவ்வுருண்டைகளைத் தோய்த்துத் தோய்த்துக் காயவைத்து வருவார்கள். அவை சுண்டைக்காய் அல்லது கோலியளவு ஆனபிறகு உடைத்தால் அவை துவரம்பருப்புப்போல் பிளந்து போகும். அப்படிப் பிளந்தவைகளில் ஐந்தாறு துண்டுகளைச் சிறு சிறு பொட்டளங்களாகக் கடுதாசியில் மடித்துக்கொண்டு சக்கிலிப் பெண்கள் ஒவ்வொரு பொட்டளமாகக் கையில் வைத்துக்கொண்டு கோரோசனை என்று விலைகூறி வருவார்கள். கோரோசனையைச் சுண்

ணும்பைக்கொண்டு சோதிப்பார்கள். அப்போதும் அது சிவப்பு நிறம் அடைவதில்லை. அதனால் அதை உயர்ந்த கோரோசனமென்றே ஜனங்கள் மதிப்பார்கள். இது அரையணாமுதல் நாலணா வரையில் அவரவர் சாமர்த்தியத்திற்குத் தக்கபடி விலையாகும். இதை நல்ல ரோஷக்கார மாடுகளிலிருந்து எடுத்ததாக அந்தப் பெண்கள் பலம் கூட்டிப் பேசுவார்கள்.

---

## 29. கஸ்தூரி மோசம்.

கஸ்தூரியை விற்பவர்களில் அநேகர் வடதேயத்துக் கேவல ஜாதியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்களை ராஜபுத்திரர் என்று சொல்லிக் கொள்வார்கள். இவர்கள் கும்பல் கும்பலாய் ரங்கோன், சிங்கப்பூர், பினாங்கு முதலிய தேசங்களிலெல்லாஞ் சுற்றித் திரிவார்கள். நாம் சொல்வது தெரியாதவர்போல் நடிப்பார்கள். தமக்கு அநுகூலமானவைகளுக்கு இவர்கள் 'அச்சா அச்சா' என்பார்கள். கஸ்தூரி, சாலாமிசிரி, நாராயணத்தயிலம், சிலாசத்து முதலியவை தம்மிடம் இருப்பதாய் இவர்கள் சொல்வார்கள்; ஒவ்வொரு வஸ்துவும் இன்னின்ன வியாதிகளைக் கண்டிக்குமெனவும், சேர் துலாம் இன்னின்ன விலையென்றும் குறித்து விபரமாய் அச்சிட்ட தமிழ், இங்கிலீஷ் சர்டிபிகேட்டுகள் வைத்துக்கொண்டு பிறர்க்குக் காட்டுவார்கள். இவர்கள் தமது மருந்தைப் பிறர் நம்பும்படி நாராயணத் தைலமென்பதை ஒருவர் உள்ளங்கையில் விட்டுத் தேய்ப்பார்கள். உடனே அவர்கள் பின்கை ஊறும். இதைக்கொண்டு எல்லாரும் அவர்கள் மருந்தை நம்புவார்கள்.

இவர்கள் வேலன் பட்டை, புங்கன் பட்டை, புளியம் பட்டை முதலிய மரப்பட்டைகளை ஈரப்பசையோடு கொண்டு வந்து நன்றாய் இடித்துப் பெரிய இரும்புக் கடாயிகளில் விட்டுக் காய்ச்சுவார்கள். பட்டைகள் காயக்காய அவைகளின் சாரமானது கருத்த நிறமாகி மெழுகு போன்ற பதமாய் வரும். அது கொஞ்சம் சூடாயிருக்கும் போதே ஆட்டுத்தலைத் தோலை மெல்லிய சிறு சிறு துண்டுகளாக அறுத்து அவற்றைக் கொஞ்சங் கொஞ்சம் அதில் விட்டு நெல்லிக்காய் பிரமாணங்களாக, டொயின் கயிற்றால் இறுகக் கட்டிவிட்டு மாலைமாலையாகக் காயவைத்து விடுவார்கள். பிறகு கட்டிய இடத்தில் ஒட்ட அறுத்துவிட்டு, அறுத்தவாயில் கொஞ்சம் சரியான கஸ்தூரியை ஊசியைக்கொண்டு தடவி வைப்பார்கள். கஸ்தூரி காய்

காயாகத் தம்மிடம் இருக்கிறதென்றும், ஒரு காயின் விலை ரூபாய் மூன்றரை யாகுமென்றும் இவர்கள் சொல்வார்கள். யாராவது அதைச் சோதனை காட்டும்படி கேட்டால், தங்களிடமிருக்கிற அசல் கஸ்தூரியையாவது, காயில் திணித்திருக்கிறதை ஊசியைக்கொண்டு தள்ளியாவது தண்ணீரில் விட்டுக் காண்பிப்பார்கள்.

---

## 30. சாலாமிசிரி மோசம்.

ஒரே ரகமான உருளைக்கிழங்குகளைக் கொண்டுவந்து, அரை வேக்காடு வேவித்து அவைகளின் தோலைப் போக்கிவிட்டு அக் கிழங்குகளின் பக்கத்தில் ஊசியைக்கொண்டு துளைசெய்து, உள்ளே யிருக்கும் சதையைத் தோண்டிப் போலாகச்செய்து காயவைத்து விடுவார்கள். அவை உலர்ந்த பிறகு அவற்றிலுள்ள துளைகள் மறைந்து சப்பையாய் வெகு கெட்டியாய் இறுகிவிடும். அவைகளைத் தான் இந்த மோசக்கார வியாபாரிகள் சாலாமிசிரி என்றும், தோலா ஒரு ரூபாய் என்றும், அவற்றைப் பசும்பாலில் பொடிசெய்து போட்டுச் சாப்பிட்டால் தாதுபுஷ்டி யுண்டாகுமென்றும் சொல்லி ஜனங்களை ஏமாற்றுவார்கள். பண்டைக்காலத்தி லிருந்தவர்கள் சரியான சரீர கஷ்டமும், சத்துள்ள மிதமான ஆகாரமும், குறித்த வயதுக்கு மேல் கலியாணம் செய்துகொள்ளும் நியமமும் அநுசரித்துப் பர ஸ்திரீகளின் நேத்திரங்களென்னும் பாணத்தாலடிபடாத சூரர்களாய் இருந்தார்கள். அவர்களுக்கு இம் மோசக்காரர்களுடைய தாது புஷ்டி லேகியம் என்னசெய்ய வல்லது? பிஞ்சில் பழுத்த சில வாலி பர்கள் வெல்லம் என்று எழுதினசீட்டை சுவை பார்ப்பதுபோல் இவர்களுடைய ஜெகஜால வித்தைகளுக்கு மயங்கி ஏமாந்து போகி றார்கள்.

---

## 31. சிலாசத்து மோசம்.

சிலாசத்து வியாபாரிகளில் சில மோசக்காரர்கள் வெள்ளைப் பல்பக் கற்களை நன்றாய்த் தூள்செய்து, விளாம்பிசினில் கலந்து உருண்டைசெய்து காயவைத்து விடுவார்கள். பிறகு அவ்வுருண்டையை சிறு சிறு துண்டுகளாகச் செய்து டப்பிகளில் வெகு பதனமாய் வைத்து அவை மிகவும் உயர்ந்த சாலாமிசிரியென்று அவற்றைக் கேட்பவர்களுக்குக் காண்பிப்பார்கள். இதையும் தோலாக் கணக்குப் படி வந்தவரைக்கும் விற்பார்கள். தாமரையிலை நீர்போலச் சலனப்

படும் மனமுடைய பல வாலிபர்கள் தமது மானம், தனம், ஆயுள் முதலியவற்றில் லட்சியம் வையாது 'கண்டதேகாட்சி கொண்டதே கோலம்' என்று கெட்ட சகவாசங்கள் செய்து அவைகளால் வரும் கேட்டிற்கு இந்த மோச சிலாசத்தைத் தேடுவது கெட்டப்பாரையை விழுங்கிவிட்டு சுக்குக் கியாழம் குடிப்பதைப் போலாம்.

---

## 32. நரிக்கொம்பும், நரிநகமும்.

விசேஷமாய் ஜோகி வகுப்பைச் சேர்ந்தவர்கள் நரிக்கொம்பையும் நரிநகத்தையும் காட்டி மோசம்செய்வார்கள். இவர்கள் "இடுப்புக் குடைச்சலுக்கு மருந்து, பித்த வாயுவுக்கு மருந்து, பாம்புக் கடிக்கு மருந்து, தேள்கடிக்கு மருந்து" என்று, தெருத்தெருவாய்ச் சுற்றி வருவார்கள். யாராவது அழைத்து இவர்களை வயித்தியம் கேட்குங் காலத்தில் இவர்கள் தங்களிடம் நரிக்கொம்பு இருப்பதாகவும் அது பல விஷயங்களுக்கு உபயோகப்படுமென்றும் சொல்வார்கள். அவர்கள் ஏதாவது ஓர் எலும்பைக் கூராகச் செய்து அதைச் சுற்றிலும் நரித்தலைத் தோலால் பிசைந்து காயவைத்துக் கொண்டு, "ஐயா எங்களிடமிருப்பது ஒரே ஒரு நரிக்கொம்புதான்; இந்த நரிக்கொம்புக்கு வெள்ளிப்பூண் கட்டி அதைச் செவ்வாய்க் கிழமைகளில் சாம்பிராணி தூபங்காட்டி ஒரு மஞ்சள் கொம்புடன் நாலு அரிசி போட்டு எட்டு நாள் பொறுத்தெடுத்தால் எட்டரிசியாகும்; இதுதான் நரிக்கொம்பு சோதனை; இதைக் கடைகளில் வைத்திருந்தால் நல்ல வியாபாரம் நடக்கும். இதை எடுத்துக் கொண்டு போலீஸ் கோர்ட்டுகளுக்குப் போனால் கேஸ் ஜெயமாகும். பிரதிதினம் இதன் முகத்தில் விழித்தால் நல்ல லாபம் கிடைக்கும்" என்பார்கள். "நீங்கள் நரிக்கொம்புடன் வருகிறீர்களே; உங்களுக்கும் நல்ல லாபந்தானே" என்று யாராவது அவர்களைக் கேட்டால், அதற்கு அவர்கள் "நாங்கள் நரியை அடிக்கிறோம்; கொல்லுகிறோம்; தின்னுகிறோம் ஆகையால் எங்களுக்குப் பலிக்காது; இது சாபக் கட்டு. தவிர, நரி நகம் குழந்தைகளுக்குக் கட்டினால் காற்று கறுப்பு அண்டாது" என்று பலவிதமாய்ப் புளுகி, ஒரு நரிக்கொம்பை ஒரு ரூபாய் முதல் ஓர் அணா வரையிலும் ஒரு நரிநகத்தை ஓர் அணாவிலிருந்து காலணா வரையிலும் சமயத்திற்குத் தக்கபடி விற்பார்கள்.

நரி தந்திரமுள்ள ஜந்துவாதலால், அத்தந்திரமுள்ள பிராணியைப் பிடித்து ஜீவிக்கும் ஜோகிகள் முதலியவர்களது மோசத்தை

யும் சூதையும் சாமானியர் எளிதில் ஏமாந்து போகாமல் கண்டு கொண்டாலல்லவா ரூபாய்க்கு மூன்று படி அரிசிவிற்கும் இக்கஷ்ட காலத்தைக் கடக்கலாகும். 'பிச்சைக்காரன் சோற்றில் சனீஸ்வரன் புகுந்தான்' என, என்னைத் தர்மவான் என்று எண்ணிக்கொண்டிருக்கிறவர்களில் சிலர் தூஷிக்கிறார்கள். வெகுகாலங்களுக்கு முன் ஏனைய நாட்டார் மிருகத்திற்கு ஒப்பாயிருந்தனர். அப்போதே நமது நாடு நாகரிகம், கல்வி, கைத்தொழில், வியாபாரம், அரசு, நடனம், சிற்பம், சங்கீதம், ஞானம் முதலியவற்றிற்குத் தாயகமாய்ச் சீரும், சிறப்பும், பேரும், புகழும் பெற்றிருந்ததாகச் சாட்சி, அநுபவ லிகிதங்களால் தெரிய வருகிறது. அப்படிப்பட்ட இந்தியா பழமைபோல் பிரக்யாதியடையவேண்டுமென விரும்புகிறவர்களுக்கு ஒருவர் தூஷிப்பும் ஒருவர் பூஷிப்பும் ஆகிய இவையிரண்டும் ஒன்றுதான்.

---

## 33. வாதப்பித்தானிக்கு மருந்து.

இந்த மருந்தை விற்பவர்கள் ஜோகி வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நாட்டிலுள்ள பலவகைச் செடிகளின் இலைகளையும் பட்டைகளையும் வேர்களையும் தனித்தனி இடித்துத் தூள்செய்து, சுமார் நாற்பது ஐம்பது கடுதாசிகளில் பெரிய பெரிய பொட்டளங்களாக மடித்துக் காவடியில் எடுத்துக்கொண்டு வருவார்கள். இவர்கள் நாலுபேர் கூடும் இடங்களில் தமது கடையைப் பரப்புவார்கள். இதனோடு நிலப்பனங்கிழங்கு நன்னாரிவேர் முதலிய தினுசுகளும் சின்ன சின்ன புட்டிகளில் பலநிறமுள்ள பஸ்பங்களும் வைத்திருப்பார்கள். இவர்கள் "இதிகோ வாதபித்தானிக்கு மந்து! இதிகோ மண்டை குடைச்சலுக்கு மந்து! இதிகோ அண்டவாயுவுக்கு மந்து! இதிகோ கால் குடைச்சலுக்கு மந்து!" என்று ஒய்யாரமாய்ப் பாட்டுப் பாடுவார்கள். பேதை ஜனங்கள் இவர்களிடம் தங்கள் நோய்களைச் சொன்னால் இவர்கள் "எல்லப்ப செட்டி லெக்க ஏக லெக்கா" என்றபடி ஓர் அணா இரண்டணா மூன்றணாவுக்குத் தகுந்தமாதிரி ஒவ்வொரு பொட்டளங்களிலுள்ள ஒவ்வொரு தினுசையும் போட்டுக் கலந்து அதனுடன் சர்க்கரையும் சீரகமும் சேர்த்துச் சாப்பிடச் சொல்லுவார்கள். இவர்கள் இதற்குப் பத்தியம் இச்சாபத்தியம் என்று சொல்லிப் பணத்திற் கேற்றபடி புட்டி மருந்தையுங் கலந்து கொடுப்பார்கள்.

## 34. மூக்குக்கண்ணாடி விற்றல்.

சென்னைக் குஜிலியிலும் மூர்மார்க்கட்டிலுஞ் சிலர் மூக்குக்கண்ணாடி, கத்தரிக்கோல், கிலிட்டுப் பூசியிருக்கிற பொத்தான் முதலிவைகளில் ஏதாவதொன்றை வைத்துக்கொண்டு அதை அடிக்கடி துடைத்துக்கொண்டே திரிந்துகொண் டிருப்பார்கள். அவர்கள் வருவார் போவாரிடம் அதை விற்றுவிடுவதாய்க் காண்பிப்பார்கள். அவர்களோடு கடைக்காரன் உளவாயிருப்பதால் கடைக்காரனே ஓர் அணா பெறுமானதைப் பதினாறு அணா ஒரு ரூபாய் வரையிலுங் கேட்பான். பேரஞ்செய்துகொண்டிருக்கிற ஆசாமி கடைக்காரனே அந்த விலைக்குக் கேட்கும்போது அது சரியான விலையாய் இருக்குமென்று நம்பித் தானும் கேட்பான். உடனே அவர்கள், லகுவு பிகுவாய் அந்தப் பொருளைக் கொடுத்து விடுவார்கள். இவர்களில் சிலர் தாங்கள் வெளியூருக்குப் போய்விடுவதால் அதை விற்கிறதாகவும், வேறு சிலர் கைச்செலவுக்கு இல்லாமையால் இந்தக் குறைந்த விலைக்குக் கொடுத்துவிடுவதாயும் சொல்லி ஜனங்களை ஏமாற்றுவார்கள்.

---

## 35. பித்தளைக் கடுக்கன் ஏலம்.

ஏலம் போட்டு மோசம் செய்பவர்கள் நாலைந்துபேர் ஒன்று சேர்ந்து பகட்டுத் துணிகளையும் டாமேஜ் துணிகளையும் ஏலம் போட்டுக்கொண் டிருப்பார்கள். துணிக்குத் தகுந்த விலை வருகிறவரையில், அவர்கள் தங்களுக்குள்ளேயே விலையைக்கேட்டு உயர்த்துவார்கள். வெளி ஆசாமிகள் யாராவது ஏலக்காரர்கள் திட்டம்போட் டிருக்கும் விலைக்குக் கேட்குங்கால், உடனே "ஒருதரம்! இரண்டுதரம்! மூன்றுதரம்!" என்று பீட்செய்துவிடுவார்கள். அச்சமயம் நாட்டுப்புறத்தார்களில் சிலர் அங்கு வந்திருப்பதைப்பார்த்தால், உடனே அவர்களில் ஒருவன் தன்னிடமிருக்கும் கிலிட்டிட்ட பித்தளைக் கடுக்கன்களைக் கொடுத்து அவைகளை ஏலம்போடச் சொல்லுவான். ஏலம் கூறுபவன் "ரூபாய் ஒன்றுக்கு ஓர் அணா கமிஷன் கொடுக்கவேணும். வந்த விலைக்குக் கொடுத்து விடுவேன். ஏழு ரூபா நகை எட்டு ரூபா நகையென்றால் முடியாது. இஷ்டமானால் போடுகிறேன்! சம்மதமா?" என்பான் "சுமாராய்ப் பார்த்து விடுங்கள், என் கஷ்டத்தைப் பற்றி விற்கிறேன்" என்று கடுக்கனுக் குடையவன் சொல்வான். இவ்வித நிபந்தனைகளின் மேல் ஏலம் கூறப்படும். பின்பு நாட்டுப்புறத்தார்க்கு அருகில் அம்மோசக்காரர்களில் வேறு ஒருவன்

இருப்பான். அவன் அந்த நகையை தான் வாங்குவதுபோல் நடித்து அதை நாட்டுப்புறத்தவர்களில் ஒருவனிடம்காட்டி மதிப்புப் போடச் சொல்வான். நாட்டுப் புறத்தான் ரூபா இரண்டரைக்குக் கேட்கலாம் என்ருல், அவன் 'நீயே கேள்; நான் அதை எடுத்துக் கொள்ளுகிறேன்'' என்று அவர்களைக் கொண்டே கேட்கச்செய்வான். ஏமாந்த ஆசாமிகள் பதறிக் கேட்டுவிட்டால் 'சட்டி சுட்டது கைவிட்டது' என்பதுபோல் ஏலங்கூறுகிறவன் உடனே பீட்டு செய்துவிடுவான், நாட்டுப் புறத்தான் தன்னிடம் ரூபா இல்லையென்ருல் அவன் மேல் துணியைப் பிடுங்கிக் கொண்டு அவர்கள் வம்பு செய்வார்கள். அவர்களிலேயே ஒருவன் கேட்டிருந்தால் கடுக்கனுக்குச் சொந்தக்காரன் அந்த விலைக்குக் கொடுக்கமாட்டேன் என்று தன் நகையை வாங்கிக் கொண்டு போய் விடுவான்.

பட்டணவாசங்களில் மூன்று வீட்டிற்கொரு ஓட்டல் ஏற்பட்டு வருவதுபோல் இந்த ஏல ஷாப்புகளும் வீதிக் கொன்ருய் இருக்கின்றன. விலையை தூக்கிக் கேட்க ஆள்கள் சேர்ந்ததும் அவர்கள் ஏலம் ஆரம்பிக்கிருர்கள். குறித்தவிலை வந்தாலல்லது அவர்கள் பீட்செய்கிறதில்லை. அவசியமில்லாததும் ஆபத்துக்குதவாததுமாகிய ஒடிந்த நாற்காலி, பழைய மேஜை, கெட்டுப்போன கெடியாரம், பாபுரா சரிகைத் துணி, சாய துப்பட்டிகள் முதலியவைகளை வீம்புக்கு விலையேற்றிக் கேட்கிறவர்களே! அவை விலை சகாயமாயிருந்தாலும் அவைகளைப் பழுதுபார்க்கப் பணச் செலவு எவ்வளவு! காலவிரய மென்ன! தேக கஷ்டமென்ன! இவைகளையெல்லாம் யோசியாமல் துரியோதினுதியர்கள் வரகு வைக்கோலைக் கொண்டு வீட்டை நிரப்பியதைப்போல் இந்தத் தரித்திர சாமான்களைக் கொண்டு நம் வீட்டை நிரப்பிக் கொள்வானேன்? 'அடுக்குகிற அருமை உடைக்கிற பூனைக்குத் தெரியாததுபோல' நாம் புஸ்தகம் வைக்க விரும்பும் இடத்தை நமது வீட்டுக் குலதெய்வப் பெண்பிள்ளைகள் துடைப்பம் முறம் முதலியவற்றை வைக்க இடமாக்கிக் கொள்கிருர்கள். முத்திரையுள்ள மூன்றுபை அல்லது ஒரு காலணவை எட்டு மூடி போடுகிற அந்தச் சீமாட்டிகள் அரையணு போட்டு வாங்குகிற பென்சலை அலட்சியமாக எறிகிருர்கள். இது நிற்க இந்தச்சாமான்களில்லாமலே நமது பொழுது போகுமானுல் விலை சகாயமென்று அவசியமில்லாததைத் வாங்கிக் காசைப் பாழாக்குவானேன்? முன்னுளில் ஏலவிற்பனை என்கிற சம்பிரதாயமிருந்ததாக எவ்வகை ஆதாரவுங் காணேம். இது ஆங்கிலேய வர்த்தகருடன் கப்பலிலிருந்து இறக்குமதி யானதாக இருக்கவேண்டு

மென்றே யூகிக்கவேண்டி யிருக்கிறது. "கூறி விற்காதே கோரிவாங் காதே" என்ற பழமொழியை யோசித்து மறந்தும் ஏலத்திற்குப் போகாதீர்கள்.

---

## 36. குடிக்கூலிக்கு வருவதாய் மோசம்

ஒரு கிழவனுங் கிழவியுமாய் வந்து, "வீடு குடிக்கூலிக்குக் கிடைக்குமா" என விசாரிப்பார்கள். வீடு இருந்தால் அதற்கு எவ்வளவு குடிக்கூலி இருந்த போதிலும், கிழவன் கொஞ்சநேரம் மல்லாடிப் பார்த்து ஒருவாறாய் ஒத்துக்கொள்ளுவான். கிழவி வீடு முழுமையும் பார்த்துத்தனக்குஞ் சம்மதிதான் என்றும், நாளையதினம் நமக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு வாலாமென்று கிழவனைக் கூப்பிடுவாள். அதற்கு அந்தக்கிழவன் "இனி அந்தச்சண்டாளன் முகத்தில் விழிக்கவே மாட்டேன்; இனி யொருகால் வருவேன் என்று நினையாதே; என்னைத் தொந்தரவு செய்யாதே; உனக்குப் பிள்ளை வேணுமானல் நீ சுகமாய் போய்விடு;என்னவோ எனக்குக் கடவுள் கொடுத்தது எட்டுரூபா யிருக்கிறது, நானிருக்கிறேன்; அவனுடைய சம்பாத்தியத்திற்குக் காத்திருக்கிறது போல் அவன் தன் பெண்சாதி மெச்சும்படி கழுதை காமாட்டி என்று சொன்னான். அவன் முகத்திலா இனி விழிக்கிறது; அவன் கெட்டான் சண்டாளன்; நியாயமாய்ப் போய்விடு ; இனி வம்புசெய்யாதே" என்று கிழவியைப் பலவாறு திட்டுவான், கோபம் வந்ததுபோல் அடிக்கவும் போவான்.

கிழவி அவ்வீட்டிலுள்ளாரிடம் நியாயம் மெய்ப்பிப்பாள்; என்னவோ கோபமோ பாபமோ? இன்று விஷகடி வேளை; இவருக்கும் இவர் பிள்ளைக்கும் சண்டைவந்தது; "இவரைமறுபடியும் யார் அங்கே வாச்சொல்லுகிறார்கள்; வாவேண்டாம். வீடுதான் இஷ்டம்போல் கிடைத்துவிட்டது. ரூபாயிருந்தால் எல்லாம் ஆய்விடுமா? புது இடத்தில் பானை சட்டி முதலியன இல்லாமல் என்ன செய்கிறது? நாளைக்கு நமக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு வந்தால் போச்சுது, அப்படியில்லாமற்போனாலும் சூளையில் இவர் தங்கை வீட்டிற்குப் போய் இருந்து பொறுத்து வாலாமே ! பிடித்தபிடி விடாமற் பேசுகிறாரே! நீங்கள்தான் கொஞ்சம் சொல்லி அவரை யனுப்புங்கள், எனக்குப் போதும் போதும்; அந்தப் பக்கம் பிள்ளையைப் பார்க்கிறதா? இந்தப் பக்கம் புருஷனைப் பார்க்கிறதா? நல்ல இழவு; நான் பெண்ணாய்ப் பிறந்ததோஷம்" என்று சலித்துக் கொள்வாள். கிழவன் கழுதே!

நீ என்னடி எனக்கு என்னமோ பூச்சி காட்டுகிறாய். கூழை தங்கச்சி என்று சொல்கிறாய்; கொண்டான் கொடுத்தான் வீட்டில் போகிறது யார்? நான் என்ன அவர்கள் சோற்றுக்குக் காத்திருக்கிறவனா? இது வெல்லாம் நாளைக்கொரு பேச்சல்லவா? நாலுநாளிருந்து சாப்பிட்டா லும் அப்போதும் வரவேண்டியதுதானே. நாம் ஏதாவது கொடுத் தால் வாங்குவார்களா? நமக்கும் அது சரியா? அதெல்லாம் வேண் டியதே இல்லை. உனக்கிஷ்டமானால், இந்தா ரூபா! அரிசி முதலா னவை வாங்கிச் சமையல் செய்கிறதைப் பார். வீணான பேச்சு வளர்த்த வேண்டாம்" என்பான். கிழவியோ "இவர் இப்படித்தான்; என்ன செய்கிறது?" என்று அவ்வீட்டில் கூடை எண்ணெய்க் கிண் ணம் முதலானவைகள் வாங்கிக் கொண்டுபோய் அரிசி, பருப்பு, காய் கறி, கட்டை, எண்ணெய் முதலானவை வாங்கி வருவாள். பின்பு அவள் அவ் வீட்டிற்கு வந்து அவ் வீட்டிலுள்ளாரிடம் தவலை சொம்பு, தேக்சா முதலிய பித்தளைச் சாமான்களை வாங்கிச் சமையல் செய்து இருவர்களும் சம்பிரமமாய்ச் சாப்பிடுவார்கள். விடியற்காலத் தில் கிழவன் தெருவிற்கு வருவதும் போவதுமாயிருப்பான். அன்று இராத்திரியாவது மறுநாள் இராத்திரியாவது தக்க சமயம் பார்த்து அகப்பட்டதைச் சுற்றிக் கொண்டு அவர்கள் இருவரும் போய் விடு வார்கள்.

## 37. அரிசி மண்டித் தரகரி மோசம்.

இந்தத் தரகரிகள் கூலிக்கு அரிசிமூட்டை எடுக்கிறவர்களைப் போல் ஒரு சாக்குப்பையும், மூட்டை தாங்கும் கோணிப்பட்டையுந் தமது தோள்மேல் போட்டுக்கொண் டிருப்பார்கள். நல்ல சிறுமணி யில் பழைய அரிசியாக ஒருபிடி அரிசி மடியில் வைத்திருப்பார்கள். இவர்கள் மண்டிக்கு அரிசி வாங்கவரும் பெண்களை, "கூலி உண்டா அம்மா ? அரிசி வாங்கப் போகிறீர்களா?" என்று விசாரித்துக் கொண்டே யிருப்பார்கள் யாராவது "அரிசிதான் வாங்கவந்தேன்" என்றால், "அந்த மண்டிக்கு வாருங்கள்; அங்கே பழைய நாட்டரிசி சகாயமா யிருக்கிறதென்று அவர்களை அழைத்துப்போவார்கள். தர கரிகளுக்கு ஜீவனம் இந்த மாதிரி என்று அரிசி மண்டிக்காரர்களுக்கு நன்றாய்த் தெரியுமாகையால், அவர்கள் வ்ராகனுக்கு இரண்டுபடி குறைத்துச் சொல்லுவார்கள். வாங்க வந்தவர்களைப் பக்குவப் படுத் துவது தரகரிகள் வேலையாகையால் அவர்கள் சாம்பல் போட்டு

மிதித்து வந்திருக்கிற தொள்ளகாதர் குடிசை அரிசி அம்பாரத்தண்டை அவர்களைக் கொண்டுபோய்த் தமது மடியிலிருக்கிற அரிசியைக் கையில் எடுத்து மூடிக்கொண்டு அம்பாரத்தின் நடுவில் கையைவிட்டு அள்ளினமாதிரி ஊதிக்காட்டி "நொய் இல்லை, நல்ல தீட்டல்; காய்ச்சல் வாட்டு; ஒரு அரிசியை வாயில் போட்டுப்பாருங்கள்" என்பார்கள். கையிலிருக்கிற அரிசியைப் பார்க்க அது வெகு பக்குவமாயிருக்குமாகையால், தெரியாதவர்கள் ஏமாந்து விலை ஒருபடி குறையவிருந்தாலும், போட்டுக்கொள்ளுவார்கள். தரகரிகள் கூலிக்கு வரமாட்டார்கள். அவர்கள் வேறு கூலி ஆளைக் கூப்பிட்டு அனுப்புவார்கள். பிறகு தங்களுக்குச் சேரவேண்டிய தரகை மண்டிக்காரரிடமிருந்து பெற்றுக் கொள்ளுவார்கள். என்ன கேடுகெட்டாலும் வாரகன் ஒன்றுக்கு இரண்டணா மூன்றணா கிடைக்குமாகையால், இரண்டு மூன்று பேரம் பார்த்துக்கொண்ட பிறகு இந்தத் தரகரிகள் கள்ளுக்கடையை எதிர்பார்ப்பார்கள்.

---

## 38. அரிசிமண்டிக் கூலிக்காரர் மோசம்.

கூலிக்கு அரிசியெடுக்கிற கூலிக்காரர்கள் தாங்கள் வைத்திருக்கும் சாக்குப்பைக்குள் ஒருசின்ன கள்ள அறைவைத்துத் தைத்திருப்பார்கள். எவ்வளவு குறைந்த கூலியானாலும் இவர்கள் ஒப்புக்கொண்டு தங்கள் சாக்குப்பைகளில் பிடித்துக் கொள்ளுவார்கள். அவர்கள் அரிசி வாங்கினவர்கள், வீட்டண்டைப்போய், முதுகிலிருந்தபடியே அரிசியைக் கொட்டிவிட்டுச் சாக்குப்பையின் அடி இரண்டு மூலைகளையும் பிடித்துக்கொண்டு கோணியை நன்றாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று உதறிக்காட்டி, அதை அப்படியே சுருட்டி அக்குளில் வைத்துக் கொள்ளுவார்கள். எப்படிப் பார்த்தாலும் ஒருபடி அரிசிக்குக் குறையாமல் சாக்குப்பையிலிருக்கும். அவர்கள் இன்றைக்கு விழித்தமுகம் நல்லமுகம் என்று நினைத்து அளவுக்குமேல் வந்த அநுமத் வருமானத்தைச் செலவுசெய்ய வகையறியாது வெறிக்கக் குடித்துக் காலம் கழிப்பார்கள். நாளைக்கு வேணுமே என்கிற எண்ணமில்லாத இவர்கள் உண்மையான வேதாந்திகளா யல்லவோ விருக்கிறார்கள்!

---

## 39. அரிசிமண்டி அளவுக்காரர் மோசம்.

ஒவ்வொரு அரிசிமண்டிக்கும், ஒவ்வொரு அளவுக்காரன் இருப்பான். வராகன் ஒன்றுக்கு நான்கு பை என்று இவர்கட்கு அளவு கூலி யுண்டு; வண்டியில் வருகிற அரிசியின் மரக்கால் ஏர்வை சரிப்படுத்துவதற்கு, மரக்காலைப் பாய்ச்சி அளக்கமாட்டார்கள்; மரக்கால் உதடுக்குக் கீழே இருக்கிற அரிசியும் வரும்படி தலைவழிப்பார்கள். மரக்காலில் அரிசியை அளக்கும்போது, மெதுவாய் அளப்பார்கள். மரக்காலைச் சாய்த்தும் அளப்பார்கள். கொஞ்சம் கைதேர்ந்த புண்ணியவான்கள் மரக்காலிலிருந்து அரிசியைக் கொட்டும்போது ஆழாக்கு அரிசியை மரக்காலிலேயே நிறுத்திக் கொள்ளுவார்கள். அளக்கிற சொகுசும் மரக்காலை நிமிர்த்துகிற வன்மையும், கண்டு பிடிக்க வெகு கஷ்டமாயிருக்கும். சிலர் அரிச்சந்திரன் பேரப்பிள்ளைகள்போல் 'குறையச்சொல்லி நிறைய அள' என்னும் பழமொழியை அடிக்கடி சொல்வார்கள். சிலர் இந்த அகவிலையான காலத்தில் குறைந்த படியையும் மரக்காலையும் கொண்டு கூசாமல் அளப்பார்கள். இங்கு லாபம் கூடுவதுபோல் நாளை பாவங்கள் குவிந்து குஷ்டத்தால் தமது கைகால்கள் குறையுமென்ற பீதிகொண்டு இவர்கள் சுவாமிக்கு அடிக்கடி அபிஷேகம், உற்சவ முதலிய லஞ்சங்கொடுத்து வருவார்கள்.

---

## 40. அரிசி மண்டிக்காரர் மோசம்.

அரிசி மண்டிக்காரர்களில் சிலர் வெளியூர்களிலுள்ள லாவாதேவி ஆசாமிகளுக்கு, இந்தச் சமயம் அரிசி சூடாயிருக்கிறதென்று கடிதம் எழுதுவார்கள். அவர்கள் இவர்களை நம்பி அரிசிகொண்டு வந்துவிட்டால், "கொளும்பு கிராக்கி அடங்கிவிட்டது; அரிசி மிகவும் சபதமாயிருக்கிறது; பானையத்து அரிசிக்குமுன் இது விலை ஓங்காது; நாலுநாள் முந்தி கொண்டுவந்திருந்தால் நல்ல விலை விற்கும்; பொறுத்துப் பார்க்கச் சொன்னால் பார்க்கிறேன்" என்பார்கள். வந்திருக்கும் ஆசாமிகள் முன்னிலையில் அரிசியைக் கைவிலைக்கு விற்க மாட்டார்கள். இவர்கள் கடைக்காரர்களிடம் துணி மறைவில் இந்த மரக்காலும் இந்தப் படியும் என்று பேசுவார்கள். ஆசாமிகளிடம் இரண்டு படி அதிகம் கேட்கிறதாகச் சொல்லுவார்கள். அரிசி கொண்டுவந்த ஆசாமி மனமேங்கிப் பெருமூச்சுவிட்டு "வண்டி சத்தம்கூடக் காணவில்லையே" என்றால் மண்டிக்காரர் "என்ன செய்

கிறது! வேணுமானால் இன்னம் நாலுநாள் பார்க்கிறேன்" என்று நாற்பதோ ஐம்பதோ கொடுத்து அனுப்பிவிடுவார்கள். ஆசாமி ஊர்ப்போய்ச் சேர்ந்ததும் அந்த அரிசியை ஒன்றும் பாதியுமாய்த் தங்களிஷ்டம்போல அளந்துகொண்டு, விலையும் இரண்டுபடி தூக்கிக் கொண்டு அளவு காசு, தர்மம், தரகு இவைகளை விவரம் கண்டு "கால விலை ஏறும்போ லிருந்தபடியால், ஊர் விலைப்போல் விற்றுப் போட்டேன்" என்று, முழுநீளம் பட்டி எழுதி 'அவர்களுக்கு அனுப்புவார்கள்.

---

## 41. அரிசி வாங்கிக் கொடுப்பதாய் மோசம்.

அரிசிமண்டியில் அரிசி எடுக்கும் கூலிக்காரரைப்போல், ஒரு சாக்குப்பை வைத்துக்கொண்டு சிலர் திரிவார்கள். மண்டி மண்டியாய் அரிசியை அள்ளிப் பார்த்துக்கொண்டு விலை அதிகம் கேட்டுக் கொண்டு போகிற பெண்பிள்ளைகள் யாராவது தனித்திருப்பதை இவர்கள் கண்டால், அவர்களிடம் போய், "அம்மா அரிசிவேணுமா? பக்கத்துத் தெருவில் மாணிக்க நாயகர் வீட்டில் நல்ல பழைய அரிசி வந்திருக்கிறது. விலை ஒரு படி கூடப்போடுவதாய் அந்த அம்மாள் என்னிடம் சொன்னார்கள். வேணுமானால் நான் வந்து போட்டுக் கொடுக்கிறேன். அங்கே தரகுகூடக் கொடுக்கவேண்டியதில்லை. இந்த இழவில் தலைவெட்டி அளக்கிறார்கள். அங்கே நிறைபடி போடுவதாய்ச் சொன்னார்கள் வா" என்று அழைத்துப் போவார்கள்.

இன்னம் ஒருபடி அரிசி என்றால் காஞ்சீபுரம் கூடப்போகும் அவ்வளவு ஆசையுடைய அப்பெண்பிள்ளையை அவன் இட்டுக் கொண்டுபோய், ஒரு வீட்டண்டை நிறுத்தி, இன்னொரு வீட்டில் போய்"அம்மா! முதலியார் இருக்கிறாரா?" என்பான். வீட்டிலுள்ள வர்கள் இல்லையென்று சொல்வது சகஜம் தானே. ஒருகால் முதலி யாரே இருந்து "நீ யார்" என்றால், "நீங்கள் அல்ல, மாரியப்ப முதலியார் வீடு அல்லவா இது?" என்பான். இல்லையென்று பதில் வருவதற்குள்ளே வெளியே வந்து அரிசிக்கு வந்திருக்கிற பெண் பிள்ளையை நோக்கி "அம்மா! மாணிக்க நாயகர் வெளியே போயிருக் கிறாராம். ஒரு சமயம் அவர் உடனே வந்துவிடுவாரென்று வீட்டி லிருப்பவர்கள் பயப்படுகிறார்கள். நாயகருக்குத் தெரியாமல் அவர் சமுசாரம் அரிசியை விற்கிறார். நீ என்னோடு வந்தால் ஒரு சமயம் அவர் வந்துவிட்டால் 'என்ன? ஏது?' என்று விசாரிப்பார். இப்

படிக் கொடு ரூபாயை; மூனு மாக்கால் இரண்டுபடி இந்த அரிசி தான்'' என்று, தன்னிடமிருக்கும் அரிசியைக் காட்டி "சீக்கிரம் கொடு, நான் அளந்துகொண்டு வருகிறேன். நீ வீட்டில் சுகமாய் அளந்து கொள்'' என்று பணத்தை வாங்கிக்கொண்டு ஒடி வீட்டிற் குள் நடைவரையில் நுழைந்து வெளியே வருவான். வெளியே வந்து "அம்மா, அடுத்த வீட்டில் படி வாங்கிவரச் சொன்னார்கள். போய் வாங்கி வருகிறேன்'' என்று இரண்டொரு வீடு நுழைவது போல் சமயம் கண்டு கம்பி நீட்டுவான். அரிசிக்கு வந்த பெண் எவ் வளவுநேரம் காக்கவேணுமோ அவ்வளவு நேரமும் காத்துக்கொண் டிருந்த பிறகு தானே அந்த வீட்டில்போய் விசாரித்துச் சண்டை யில்லாமல் வந்துவிட்டால் அதுவே இழந்த பணம் வந்ததற்கு அடையாளம். இப்படிப்பட்ட பேராசைக்காரப் பெண்பிள்ளைகள் சிலர் இதை வெளியில் சொல்லவும் வெட்கப்பட்டுத் தமது வீடு போய்ச் சேர்வார்கள்.

---

## 42. அரிசி வந்திருப்பதாக மோசம்.

சில மோசக்காரர்கள் பண்ணுருட்டி, திருக்கோயிலூர் முதலிய ஸ்டேஷன்களில் Forwarding Note & Risk Form என்னும் ரசீ தைத் திருடிக்கொண்டு, அதில் அனுப்புகிறவர் பெயர், மூட்டை களின் தொகை, எடை, சார்ஜ், அரிசி அனுப்பப்பட்ட ஸ்டேஷன், மதிராஸில் பெற்றுக்கொள்ளுகிறவர் தாமே என்று ஸ்டேஷன் மாஸ் டர் கையெழுத்து முதலியவைகளை எழுதிக்கொண்டு அந்த ஸ்டே ஷன் ரப்பர் ஸ்டாம்பு குத்தி எடுத்துக்கொண்டு சென்னைக்கு வரு வார்கள். பின்பு அவர்கள் சென்னை மண்டித் தெருக்களில் வந்து மண்டிக்காரர்களிடம், 185 மூட்டை அரிசி வந்திருக்கிறதென்றும் சிறுமணி நல்ல தீட்டல்; பூச்சி இல்லை என்றும் விலை விஷயம் எப்படி இருக்கிறதென்றும் விசாரிப்பார்கள். பேராசை கொண்ட மண்டிக் காரன் தன் மண்டிக்குக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளும் விஷயத்தில், அப்படியே கொண்டு வருவதாய்த் தம்மிடமிருக்கும் ரெயில் பையை மண்டியில் வைத்துவிட்டு, ஸ்னப்புக்குப் போய்விடு வார்கள். சாப்பிட்டு வந்ததும், அவர்கள் தம்மிடமிருக்கும் ரெயில்வே சீட்டைக் காண்பித்து, ரெயில்சார்ஜ் நாற்பத்தினாலும் அணா ஒன்ப தும் தேவையா யிருக்கிறது, ரூபாய் நாற்பத்தைந்தாய்க் கொடுங் கள்'' என்று மண்டிக்காரனை கேட்பார்கள். அது கொடுக்க வேண்

டிய சமயமாகையால், மண்டிக்காரன் பக்கத்து மண்டிகளில் கை பதிலாகவாவது வாங்கிக் கொடுப்பான். உடனே அந்தக் கேப்மாரிகள், "ஐயோ! அரிசி மூட்டைகளை என்ன செய்துவிட்டார்களோ" என்ற ஏக்கத்துடன் கம்பி நீட்டுவார்கள். அவர்கள் வைத்திருக்கிற எட்டணு ரெயில்பைதான் ரூபா நாற்பத்தைந்துக்கும் ஜாமீன்.

---

## 43. அரிசி கொண்டுவந்திருப்பதாக மோசம்.

வீட்டில் ஆண்பிள்ளைகள் வேலைக்குப் போயிருக்குஞ் சமயம் பார்த்து, கேப்மாரிகளில் எவனாவதொருவன் "அம்மணி யம்மாள் வீடு எங்கே? இந்தத் தெருவுதானென்று சொன்னார்கள்; எங்கெங்கே தேடுகிறது; நேற்று அரிசியிலே எல்லாம் முடிவு செய்துவிட்டார்கள். இரண்டு மூட்டை அரிசிக்காக வண்டிக்காரன் எவ்வளவு நேரம் காத்திருப்பான். இதோ! இந்த அரிசிதான்; நான்குபடி நிறைபடி அளக்கிறதாக அந்த அம்மாளிடம் பேசினேன். ஊரிலே ரூபாய்க்கு மூன்றுபடி விற்கிறது; அந்த அம்மாள் வீடு தெரியவில்லை; உங்களுக்கு வேணுமானால் அதே விலைக்குப் போட்டு விடுகிறேன்; வண்டிக்காரன் லச்சை பெரிதாக விருக்கிறது; உங்களுக்கு வேண்டியதாயிருந்தால் சொல்லுங்கள்" என்பான். நான்குபடி நிறைபடி என்றால் கொஞ்சம் ஆசைதானே. அவர்கள் "அப்படியே வாங்கிக் கொள்ளுகிறோம், அரிசியைக் கொண்டுவா பார்ப்போம்" என்பார்கள். மோசக்காரன் அந்த இரண்டு மூட்டைகளையும் ஒரு சின்ன வண்டியிலாவது, அல்லது அந்த வண்டியிலேயேயாவது, கொண்டு வந்து சேர்ப்பதாய்ச் சொல்வான், பின்பு அவன் நான் மூட்டைக்குச் சத்தம் பன்னிரண்டணாவும், அவனிடம் ரொக்கமாக வாங்கிக் கொண்ட ரூபாய் நாலும் கொடுக்கவேண்டும். வண்டிக்காரன் பிண்ணுக்குப் பிடிக்கிறவனாகையால், தொந்தரவு செய்கிறான். ரூபாயை எடுத்துக்கொண்டு நீங்கள் யாராவது ஒருவர் வந்தால் ரூபாயைக் கொடுத்துவிட்டு அரிசி மூட்டைகளைக் கொண்டுவந்துவிடலாம். பிறகு உங்களிஷ்டம்போல் இங்கே அளந்துகொள்ளலாம். மற்ற ரூபாயை உடனே கொடுத்துவிடவேண்டும். நான் செலவு வாங்க வேண்டியிருக்கிறது" என்பான்.

அவர்கள் அரிசி மலிவாய்க் கிடைக்கிறதே என்னும் ஆசையால் அக்கம் பக்கத்திலாவது, சீட்டுப் பிடிக்கிற சீமாட்டிகளிடத்திலாவது, ரூபாய்க்கு ஓர் அணு வீதம், வட்டிக்குக் கடன் வாங்கிக்

கொண்டு அவனோடு போவார்கள். கேப்மாரியானவன் வண்டி மேட்டிற்கு அவர்களை யழைத்துப்போய் மூட்டையுடன் விட்டிருக்கிற ஒரு வண்டியைக் காட்டி, "இதுதான் வண்டி; இந்த மூட்டைகளில் என் இரண்டு மூட்டை அரிசியு மிருக்கிறது; இங்கேயே இருங்கள். வாணியத் தெருவிற்கு வண்டிக்காரன் போயிருப்பான். எவ்வளவு நேரம் காத்திருந்தாலோ தெரியவில்லை. ரூபாயைக்கொடுங்கள். அதை வண்டிக்காரனிடம் கொடுத்து அவனை அழைத்து வருகிறேன். ஒரு சமயம் அவன் வந்துவிட்டால், அந்த இரண்டு மூட்டைகளையும் கீழே இறக்கும்படி சொல்லுங்கள். இதோ வந்து விடுகிறேன்" என்று அவர்களிடம் ரூபாயை வாங்கிக்கொண்டு அதே ஓட்டமாக ஓடிவிடுவான். போனவன் போனவனே. ஆறுபடி நிறைபடி வாங்குகிற சீமாட்டிகள் வண்டிக்குச் சொந்தக்காரன் வந்ததும் அவனோடு வீணாய்ச் சண்டையிட்டு வீட்டுக்குத் திரும்புவார்கள்.

---

## 44. வண்டி மேட்டில் மோசம்.

நெல்மண்டி, அரிசிமண்டி முதலியவைகளில் கணக்குத் தீர்த்து ரூபாய் ஐம்பது அறுபது வாங்குகிற நாட்டுப்புறத்து வண்டிக்காரர்களைப் பார்த்திருக்கிற மோசக்காரர்கள், வண்டிக்காரர்கள் பின்னாலேயே போய் "வண்டி சத்தத்திற்கு வருமா?" என்று விசாரிப்பார்கள். அவர்கள் எந்த ஊருக்கு என்று கேட்டால் "நீங்கள் எந்த ஊர்க்குப் போகவேண்டும்?" என்பார்கள். வண்டிக்காரர் காஞ்சீபுரம் என்றால், மோசக்காரர்கள் காவேரிப்பாக்கம் போக வேணுமென்பார்கள். அவன் "சரி வருகிறேன்" என்றால், இவர்கள் "மளிகை சாமான்கள்தான், சத்தம் சுமாராய்க் கேளுங்கள்" என்று மல்லாடி வழக்காடி கால் அரை ரூபாய் குறைக்கப் பிசினாரித்தனம் செய்வதுபோல் நடிப்பார்கள். கடைசியில் "சாமான்களைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்; உங்களிஷ்டம்போல் அந்த அரை ரூபாயும்போட்டு நாலுரூபாயாகக் கொடுக்கிறோம்; இரண்டு வண்டி கட்டிக்கொண்டு வாருங்கள்" என்று நேராய்க் கோமுட்டித் தெருவிற்குப்போய்ப் பருப்புத் தினுசுகள் விலை பேசுவார்கள். விலை விஷயம் வெகு குறைவாய்க் கேட்பார்கள். பிறகு தங்களில் ஒருவனை நிறுத்தி "நீ இன்னும் விசாரித்து, உழக்கு கூடி வருகிற விடத்தில் பதினாறு மூட்டை போடு; துவரம்பருப்பு மாத்திரம் நல்லதாயிருந்தால் இன்னம் இரண்டு மூட்டை அதிகமாய்ப் போடு, இதற்குள்

நான் மளிகை சரக்கு வாங்கி வருகிறேன்'' என்று பணம் வைத்திருக்கிற வண்டிக்காரனை அழைத்துக்கொண்டு, கோணிப்பைகளையும் எடுத்துக்கொண்டு வரச்சொல்லுவான்.

அவன் இரண்டொரு மண்டிகளில் நுழைந்து வந்து வண்டிக்காரனைப் பார்த்து உன்னிடம் ரூபாய் இருந்தால் கொடு; பாக்கைப் பார்த்து வரலாம்'' என்று சொல்லி இருக்கிற ரூபாயை வாங்கிக்கொண்டு பாக்கு மண்டிக்கு அழைத்துப்போய், இரண்டொரு மண்டியில் பாக்கைக் கடைக்காரன் கொடுக்க முடியாதபடி விலை குறைத்துக் கேட்பான். கடைசியில் ஒரு மண்டியில் பாக்குத் தனக்குப் பிடித்து விலையும் சரிப்பட்டால்போல் ஒப்பி “சரி எடுங்கள் நாலு மணங்கு பாக்கு'' என்று சொல்வான். பாக்கு மண்டிக்காரன் பாக்குத் தயார் செய்வதற்குள், “எனக்கு வயிறு நோகிறது; இங்கே கக்கூஸ் எங்கே?'' என்று கேட்பான். மண்டியிலேயே காட்டினால் “எனக்குப் பிடிக்கவில்லை; பக்கத்துவீதி பார்த்தசாரதி முதலியார் கடையில் சௌக்கியமாயிருக்கிறது. இதோ இரண்டடியாய்ப் போய் வருகிறேன்'' என்று போய்விடுவான். கோமுட்டி வீதியிலிருக்கும் புண்ணியவான் “பருப்பு தினுசு சரிப்படவில்லை, அந்த ஆள் வந்து இஷ்டமானதைப் பிடித்துக்கொள்ளட்டும்; என்னால் கெட்டுவிட்டது என்று சொல்லுவார்; ரூபாயும் எடுத்துக்கொண்டு போய்விட்டார், உன்னிடமிருக்கிற ரூபாயைக் கொடு. பெரியகடை சாமான் வாங்கி வந்துவிடுகிறேன்; அவர் வந்ததும் இன்னவீட்டில் விலை சுமாராயிருக்கிறது; அதையே பிடிக்கச் சொல்'' என்று அவனிடமிருக்கும் ரூபாயை வாங்கிக்கொண்டு “இதோ வந்து விடுகிறேன்'' என்று போய்விடுவான். மோசக்காரர்கள் கேட்கும்போதே வண்டிக்காரர்கள் கொடுத்து விடுவார்களா வென்ற கேள்வி பிறக்கலாம். அவர்கள் தங்களை நம்பி சரக்குப் போடுவதாய்ச் சொன்னது ஒரு நம்பகம்; தவிர, தங்கள் ரூபாயைக் காப்பாற்றுவது அவர்களுக்குக் கஷ்டம்; இவைகளை அனுசரித்தே வண்டிக்காரர்கள் ஆசாமிகளிடம் தமது பணத்தை வலியக் கொடுப்பது வெகு நாளைய பழக்கம்.

---

## 45. சுண்ணும்புக்காளவாய் மோசம்.

சுண்ணும்புக்காளவாய் சொந்தக்காரர், அளவுகாரர், வண்டிக்காரர்கள் முதலியவர்கள் எல்லாரும் மொத்தத்தில் கொஞ்சம் அசட்டுப்புத்தி யுடையவர்களென அக்காளவாய்களிலுள்ள கௌளிகள்

சொல்லிய வண்ணமாக விருக்கும். சுண்ணும்புகொள்ள வருகிறவர்கள் எவ்வளவுதான் சாமர்த்தியசாலிகளா யிருந்தபோதிலும் வராகன் ஒன்றுக்குக் கால்வராகன் சுண்ணும்பாவது அவர்கள் திருடாமற் போகார்கள். காளவாய்க்காரர்கள் முதலில் சரியான விலை சொல்லிப் பார்ப்பார்கள். சுண்ணும்பு வாங்க வருகிறவர்கள் ஒரு புரை அல்லது இரண்டு புரை அதிகமாகக் கேட்டபோதிலும் அவர்கள் அப்படியே போடுவதாய் ஒத்துக்கொள்வார்கள். பிறகு அவர்கள் சுண்ணும்பைத் தாளிக்கும் பொழுதே ஆசாமியைக் கிட்ட நெருங்க ஒட்டாமல், சுண்ணும்பு தள்ளும் கோலால் சுண்ணும்பு நீரை அடித்துத் தூசு எழுப்புவார்கள்; களத்திலும் அளவு அளக்கும் புரையிலும் சுண்ணும்பு பிடித்துக் கொள்ளும்படி தண்ணீரைப் புஷ்களமாய் ஊற்றுவார்கள். 2×2×7 அளவு இருக்கவேண்டிய புரைக்குப் பதிலாக 2×2×6 புரை வைத்து அளப்பார்கள்; புரையை வழிக்கும்போது வளைவு மட்டப்பலகையால் புரையிலுள்ள உள் சுண்ணும்பு வரும்படி ஆழமாய் வழிப்பார்கள்; புரையை எடுத்துக் கொட்டும்போது சுமார் கால்புரை சுண்ணும்பு புரையிலிருக்கும்போதே புரையை நிமிர்த்திவிடுவார்கள்; அல்லது புரையின் அடிச்சட்டத்தால் அளந்த சுண்ணும்பை இழுத்துக்கொள்வார்கள். புரையில் சுண்ணும்பைப் பூப்போல மெதுவாய் விடுவார்கள்; கூடுமானுல் பாட்டையும் தூக்கிப் பாடுவார்கள். வண்டிக்காரர்கள் வண்டியில் வாரிக் கொட்டுவதுபோல் கூடை கூடையாய்க் கொண்டுபோய்ச் சுண்ணும்பைக் கொடுத்துக்கொண்டிருப்பார்கள். வண்டியின் பின்பக்கம் வேறொருவன் இருந்து அதை அப்படியே கொண்டுபோய் விடுவான்.

சுண்ணும்பு வாங்கவரும் ஆசாமிகளுடன் கொல்லத்து மேஸ்திரிகள் வந்துவிட்டால் சுண்ணும்புக் காளவாய்க்காரர்கள் விலையிலாவது அளவிலாவது மோசம் செய்து கொல்லத்து மேஸ்திரிக்குத் தரகு கொடுப்பார்கள். இப்படித் தங்களால் கூடுமான மோசங்களெல்லாஞ் செய்து இரண்டு வராகன் சுண்ணும்பில் கண்டிப்பாய் அரை வராகன் திருடாமற்போனுல், அவர்கள் மனம் திருப்தி யடையாது. இந்தப் புண்ணியவான்கள் இவ்வாறு மோசஞ் செய்தாலும் தாம் செய்யும் மோச பாவம் தீர தண்ணீர்ப் பந்தல் முதலிய தருமங்களைத் தாராளமாய் நடத்துவார்கள். அதனுல் யமலோகத்திலுள்ள சித்திராபுத்திரன் கணக்கில் தாம் செய்த மோசத்திற்கும் நடத்திய தர்மத்திற்கும் சரிப்பட்டுப் போய்விட்டதென அவர்கள் எண்ணு

கிறார்கள் போலும். பசுவைக் கொன்று பிராமணனுக்குச் செருப்புத் தானஞ் செய்ததுபோல் இவர்கள் பிறர் பொருளைத் திருடித் தருமம் செய்வதில் என்ன பிரயோஜனம்? இதனால் இம்மோசக்காரர் ஒரு போதும் புனிதராகமாட்டார்கள்.

---

## 46. செங்கற்சூளை வண்டிக்காரர் முதலியோர் மோசம்.

செங்கற்சூளை வண்டிக்காரர்கள் பலர் ஓரிடத்தில் கும்பலாய்க் குந்தியிருப்பார்கள். அவர்களில் எவனொருவன் செங்கல் வாங்க வரும் ஆசாமிகளைத் தூரத்தில் கண்டுவிட்டு "அதோ குடைக்காரன்" "அதோ சிகப்புத் தலைக்குட்டைக்காரன்" "அதோ ஜட்காவண்டி" என்று முதலில் குறிபார்த்துச் சொல்கிறானோ அவன் தான் வருகிற ஆசாமியின் கல்லுகளைக் கொண்டுபோகும் கூலிக்குச் சுதந்திரக்காரனாவான். "இரண்டாவது, மூன்றாவது" என்று சொல்லுகிறவர்கள் படிப்படியாய்க் கூலிக்கு உரியவராவார்கள். ஒவ்வொரு சூளையிலும் செங்கல் விற்கிற விலையும் அவைகளின் நாணயமும் இந்தக் கேப்மாரி வண்டிக்காரர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால், அவர்கள் தங்களுக்கு எங்கே நல்ல கந்தாயம் கிடைக்குமோ அந்தச் சூளைக்குக் கல்வாங்க வந்தவர்களை முதலில் அழைத்துக்கொண்டு போகாமல், விலை கொஞ்சம் அதிகமாகச் சொல்கிறவர் சூளைக்கு அழைத்துப்போய்க் காண்பிப்பார்கள். அங்கே கல் வாங்குவதற்கு ஆசாமி இஷ்டப்பட்டால் அவர்கள் இரகசியமாய், "ஐயா! இது நல்ல சரக்கல்ல; இரைச்சல் சரக்கு; சாம்பல் கலந்திருக்கிறது; ஆவாரம்பட்டை சாயத்தால் சிறிது சிவந்திருக்கிறது; உங்களுக் கிஷ்டமானால் வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொல்லுவார்கள். சூளைக்காரன் எவ்வளவு உண்மையாய்ச் சொன்னபோதிலும் கல் வாங்க வந்தவர்கள் சூளைக்காரன் சொல்லை நம்பவே மாட்டார்கள். பின்பு வண்டிக்காரர்கள் தமக்கு இலாபம் கிடைக்கிற சூளைக்குக் கல் வாங்க வந்தவர்களை அழைத்துக்கொண்டு போவார்கள்.

அங்கே இருக்கும் கற்கள் எவ்வளவு கேவலமாய் இருந்தபோதிலும் அவர்கள் "இது நல்ல சரக்கு; அழுத்தமாயிருக்கிறது; உங்கள் பணம் நல்ல பணம்; கஷ்டப்பட்ட சொத்து; நல்ல சரக்கு கிடைத்தது; விலை கால் ரூபாய் ஏறினாலும் பாதகமில்லை. இந்தக் கல்லுக்கு நான் ஜவாபுதாரி; அந்தச் சூளையில் கேடுகெட்ட கல்லை வாங்குவதற்கு எனக்கு இஷ்டமேயில்லை. நல்லவர்களுக்கு நல்லபடிதான்

கிடைக்கும்; எனக்கென்ன கூலிக்காரன்; உங்களிஷ்டம்போல் வாங்கிக்கொள்ளுங்கள்'' என்று 'ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்தி யழுகிற' பாவனையாய்ச்சொல்லி இரண்டொரு கற்களை யெடுத்துத் தட்டித் தட்டிக் காண்பிப்பார்கள். சரக்கு வாங்க வந்தவர்கள் ஜெயம் சாயாதபடி இவர்கள் தில்லும் பில்லும் பேசுவார்கள். இவைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிற சூளைக்காரன் ஆயிரம் நாலு ரூபாய் விற்கிற கல்லை ஐந்து ரூபாய்க்குக் குறையாதென்று விலையைத் தூக்கிச் சொல்வான். உடனே வண்டிக்காரன் "அந்தச் சூளையில் அப்படிச் சொன்னார்கள்; இந்தச் சூளையில் நாலு ரூபா எட்டணு விலை என்றார்கள்; நான் நல்ல சரக்கிருக்கிறதென்று இங்கே இட்டுக் கொண்டு வந்தேன். நாலரை ரூபாய் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சிபார்சு செய்வார்கள். பிறகு சூளைக்காரன் லகுபிகுவாய் ஒத்துக்கொள்ளுவான்.

வண்டியில் சரக்கை ஏற்றும்போது இந்தக் கூலி வண்டிக்காரர்கள் இரண்டொரு நல்ல கல்லுகளை 'இந்தக்கல் உதவாது, அந்தக் கல் உதவாது,' என்று கல் வாங்க வந்தவர்களுக்குச் சகாயம் செய்வது போல் நடித்துப் பிறகு வெள்ளை, ஓட்டை, மூளி முதலியவைகளை யெல்லாம் போட்டுக் கொள்ளுவார்கள். ஆயிரங்கல் போட வேண்டிய இடத்தில் கணக்கில் மோசம் செய்து தொளாயிரம் கல்தான் போட்டுக் கொள்ளுவார்கள். சூளைக்காரன் இவர்களிஷ்டம்போல் கற்களைக் குறைத்துப் போட்டு மிச்சக் கற்களையும் விலை வாரடை அணு எட்டையும் வண்டிக்காரர்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். அப்படிச் செய்யாத பட்சத்தில் இந்த சரக்கு நல்ல தல்லவென்று ஆசாமிகளுக்குச் சொல்லி அவர்களை வேறே சூளைக்கு இட்டுக்கொண்டு போய் விடுவார்கள். வண்டிக்காரரிஷ்டம்போல் சூளைக்காரன் விலையிலும் எண்ணிக்கையிலும் மோசஞ் செய்து வண்டிக்காரருக்குக் கொடுக்க வேண்டும்.

வண்டியில் கல் ஏற்றிய பிறகு வண்டிக்கூலி பத்தணுவுக்கு ஒரு ரூபாய் கொடுக்கவேண்டுமென்று இவர்கள் வம்பு செய்வார்கள். அதற்கு ஆசாமி ஒத்துக் கொள்ளாமற் போனல் "இந்தக் கூலி எனக்கு வேண்டாம்'' என்று வண்டியிலிருக்கும் கல்லுகளைக் கண்டபடி யெடுத்துப் போடுவார்கள். சூளைக்காரன் இவ்விருவர்களுக்கும் சமாதானஞ் செய்வதுபோல் பதினைலு அணுவுக்கு முடிவு செய்து விடுவான். வண்டிக்காரர்கள் இப்படியெல்லாம் செய்வதுமல்லாமல் வழியில் திருட்டுக்கல் வாங்குகிறவர்களிடம் ஐம்பது அல்லது நூறு

கற்களை விற்று விடுவார்கள். கடைசியில் கல் வாங்கினவர்கள் தமது வீட்டண்டை போய்க் கற்களை எண்ணி ஒப்புவிக்கும்படி கேட்டால் இம்முழு மோசக்காரர்கள் "ஐம்பது ஐம்பத்தொண்ணு" என்று எண்ணியவுடனே எண்பத்திரண்டு என்று பாட்டைத் தூக்கிப் பாடுவார்கள். இதில் ஏமாராவிட்டால் வண்டியின் முன்பக்கமே கல்லுகளை எடுத்து விட்டுச் சரக்கோடு வண்டியை நாட்டிக் கொள்ளும்படி செய்து கற்களை துண்டு துண்டாய் உடைத்து விடுவார்கள். பின்பு அவர்கள் உடைந்தகல்லுகளை எண்ணி ஆயிரமென்று கணக்குச் செய்வார்கள். அப்படியு முடியாவிட்டால், வண்டிக்காரர்கள் வேணுமென்றே தங்களுக்குள் சண்டையை வளர்த்தி ஒருவரை ஒருவர் திட்டுவதும் வண்டியிலிருக்கும் கல்லுகளால் அடிப்பதும்போல் பிரமாத சண்டை போடுவார்கள். சொந்தக்காரர்கள் தமது கல்லுகளை எண்ணி ஒப்பித்துக்கொள்ள வேண்டியதைவிட்டு இவர்களைச் சமாதானஞ் செய்து கூலியைக் கொடுத்தனுப்பும் வரையில் இவர்கள் தமது சண்டையை விடமாட்டார்கள். இப்படியெல்லாம் செய்தும் கல் குறைந்து விட்டதாக ஏற்பட்டால் "அந்தச்சூளைக்காரன் பெரிய கேப்மாரி; நீங்கள் விலையைக் குறைத்துக் கேட்டதற்கு ஒத்துக் கொண்டு அவன் கல்லைக் குறைவாக எண்ணிவிட்டிருக்கிறான். இவ்வளவு கல் குறைவென்று ஒரு ரசீது எழுதிக் கொடுங்கள்; சூளைக்காரன் தாலியை யறுத்துவிடுகிறோம்" என்று தாங்கள் மிகவும் யோக்கியர்களைப்போல் சூளைக்காரனைத் திட்டுவார்கள்; இப்படியெல்லாம் தங்கள் கூலிக்குப் பழுதில்லாமல் மேல் வருமானமும் தேடிக் கொள்ளுவார்கள்.

இவ்வண்ணம் வண்டிக்காரர்கள் ஒவ்வொருவரும், நாள் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றிரண்டு மோசஞ்செய்து சம்பாதித்து வெறிக்கக் குடிப்பார்கள். ஆனால் "மோசம் நாசம்" என்பதுபோல் இவர்களும் இவர்கள் மனைவி மக்களும் உண்ணச் சோற்றுக்கும் உடுக்கக்கந்தைக்கும் நிற்க நிழலுக்கும் வழியின்றித் தெருவில் நின்று தேங்கி யழுவார்கள். உண்மையாய் உழைத்துத் தேடிய பொருளே நிற்காமல் போகும்போது, இப்படிப்பட்ட படுமோசக்காரர்கள் பணம் எப்படி நிலைக்கும்? அதனால் அவர்களும் அவர்கள் குடும்பஸ்தர்களும் "கஞ்சியோ ராமச்சந்திரா!" என்று அலைவார்கள்.



## 47. கொத்தவால் சாவடி மோசம்.

சென்னைக் கொத்தவால் சாவடியில் உண்மை என்பது தவிர மற்றவைகள் ஆளுக்குத் தக்கமாதிரி கொஞ்சம் மலிவாகக் கிடைக்கும். காய்கறி வியாபாரிகள் தம்மிடம் எவ்வளவு வாடி வதங்கின காய் கறிகள் இருந்தபோதிலும், அவைகளின்மேல் தண்ணீர் தெளித்த வண்ணமாயிருப்பார்கள் இவர்கள் அழுகின காய்கறிகளையும் கிழங்குகளையும், அழுகல் வரையும் அறுத்து விட்டு அந்த அழுகலை மறைத்து வைப்பார்கள். பின்பு அவைகளை அடியில் வைத்து இரண்டொரு நல்ல காய்களையோ கிழங்குகளையோ அவைகளின் மேலே வைத்து மோஸ்தர் காட்டுவார்கள். கொத்தவால்சாவடியிலே நிமிஷத்திற்கு நிமிஷம் ஆளுக்கு ஒருவிதமாய் ஓர் அணு ஏறின வண்ணமா யிருக்கும். எலுமிச்சங்காய், மாங்காய் முதலியவைகளை யோக்கியர்களாய் இருப்பவர்கள் எண்ணினாலும் நூற்றுக்குப் பத்தாவது குறைந்துதானிருக்கும். கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, கருணைக்கிழங்கு முதலியவைகளை நிறுப்பதில் சத்திய சந்தர்களாயிருந்தாலும் வீசைக்குப் பத்துப்பலம் குறைபத்தா னிருக்கும். இந்தப் புண்ணியவான்கள் கல்லாப் பெட்டியின்மேல் குந்தினபடி நிறுக்கும்போது பண்டமிருக்கும் தட்டைத் தமது கால் பெருவிரலால் தாங்குவார்கள்; நின்றபடி நிறுக்கும்போது, தராசுக் கயிற்றை பிடித்திருக்கும் கையால், குண்டிருக்கும் பக்கம் தட்டை எழும்பவிடாமல் அழுத்துவார்கள்; இவ்விரண்டுமல்லாமல் பண்டமிருக்கும் தட்டில் ஒரு காயையாவது கிழங்கையாவது தொப்பென்று போட அந்தத் திட்டு கீழுக்குப்போகும். அது மேலெழும்பி வருவதற்குள் அதைப் பிடித்துக்கொண்டு அதிலுள்ள பண்டத்தைக் கொட்டிவிடுவார்கள்.

சுமார் ஆறுமாத காலம் தண்ணீர் இறைத்துக் கஷ்டப்பட்டு, கழுதைப்போல் சுமந்துவரும் தோட்டக்காரனுக்கு நாலணுவும் ஒரு மணி நேரம் நிறுத்துப் போடுகிற கொத்தவால்சாவடி தரகரிகளுக்கு எட்டணுவுமாகப் பாழுங் கடவுள் பாகித்துக் கொடுத்துவிடுவார். கொத்தவால் சாவடியில் விநாயக சதுர்த்தியில் மண் பிள்ளையாரை மாதக்கணக்காய் வைத்துக்கொண்டு பச்சை மிளகாய் விற்பவர்கள் ஒரு நாள் உற்சவமும், வெங்காயக் கடைக்காரர்கள் ஒருநாள் சாத்து படியும், இஞ்சி வர்த்தகர்கள் ஒருநாள் உபயமும், கத்தரிக்காய் தரகரிகள் ஒருநாள் முத்துச் சாத்துபடியுமாக ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு திருவிழா செய்வார்கள். இதனுல் இவர்கள் செய்யும் மோசமும் நடத்தும் தருமமும் சரிப்பட்டுப்போகும். ஆனுல், மோசக்காரர்களுக்குத் துட்டு மிச்சமும், மண்பிள்ளையாருக்குக் கண் குளிர்ச்சியும் வாங்குவோர்களுக்கு வயிற்றெரிச்சலுமாய் முடியும்.

---

## 48. ஜவுளிக்கடை வியாபார மோசம்.

சென்னையில் மோசங்களுக்குத் தாயிடமா யிருப்பது குஜிலிக் கடை என்று நான் சொல்லவேண்டியதில்லை. ஜவுளிக்கடைக்காரர்களுக்கு நாட்டுப்புறத்தாரா யிருந்தால்தான் கொஞ்சங் கஷ்டம். ஜவுளிக் கடைக்காரர்களை நம்புவதென்பது நாட்டுப்புறத்தார்களுக்குப் பாம்பரையாய்க் கிடையவே கிடையாது. அவர்களிடம் கடைக்காரர்கள் உயர்ந்த தினுசுகளைக் காட்டி மட்ட தினுசுகளைக் கொடுப்பார்கள். நாட்டுப்புறத்தான் விலைகேட்க வாய்திறக்கு முன்பே துணியைக் கிழித்துவிட்டு அவன் ஜெபம் சாயவொட்டாமல் தங்கள் விலையின்படி கூடுமானுல் அவனை அடித்தாவது அவனிடமிருந்து பணத்தைப் பிடுங்கிக் கொள்வார்கள். ஏமாந்தவர்களிடம் மேல்துணி பிடுங்குகிறவர்களைப்போல் குஜிலிக் கடைக்காரர்கள் "இதுதான் போணி" யென்று பணத்தைப் பிடுங்கும் முயற்சியிலிருப்பார்கள். நாட்டுப்புறத்தான் தன் இஷ்ட தேவதைகளிடம் தன் குறையைச் சொல்லிக்கொள்ள வேண்டியதே தவிர ஜவுளிக்கடைக்காரர்களிடம் அவன் செபம் ஒன்றும் சாயாது. அந்த வியாபாரிகள் நாலுமுழத்தை அஞ்சு முழமாகவும் இரண்டரைமுழ அகலமுள்ளதை மூன்று முழமாகவும் முழக்கட்டையான இரண்டு மூன்று துண்டுகளை

விரித்துவிட்டு நீளமும் அகலமும் இருப்பதாக அவனுக்குக் காட்டுவார்கள்.

ஜவுளிக்கடைக்காரர்களுக்குச் சென்னை வாசிகளில் கொஞ்சம் மிலிடெரியா யிருப்பவர்கள் வந்தால்தான் நல்ல கந்தாயம். அடுப்பூதி யொருவன் அவர்களோடு வரும்பட்சத்தில் அப்போது அவர்களுக்குக் கொஞ்சங் கஷ்டந்தான். துணிவாங்கவரும் தடபுடல் ஆசாமி தனக்குத் துணிகளினுடைய மர்மங்களெல்லாம் தெரிந்த பாவனையாய் இரண்டொரு தினுசுகளான புஞ்ஞசி மடி, தேசுராஞ்சி மடி, கர்ப்பூராஞ்சி மடி, கோட்டஞ்சுமடி, முத்துப்பேட்டு மடி முதலியவை வேண்டுமென்றால் கடைக்காரன் "அடே பையா! அந்த ஒஸ்தி ஒப்பந்த மடி எடு; இவருக்கு மட்டமெல்லாம் கொடுக்கக் கூடாது, தெரியாதவர்களா யிருந்தால் பரவாயில்லை" என்னும் போதே கடையிலிருக்கும் பையன் மட்டத்தைக் கொண்டுவந்து கொடுப்பான். மிலிடெரி யாசாமிக்குத் துணியினுடைய வளப்பம் தெரியாவிட்டாலும் தான் கொஞ்சம் தெரிந்தவனைப்போல் "இன்னம் கொஞ்சம் மலப்பாய் இருக்கட்டும்; விலையைப்பற்றிக் கவனிக்கவேண்டாம்; நல்லதாய் இருக்கட்டும்; வேறே எடு" என்பான். கடைக்காரன் "சரி இன்னம் கொஞ்சம் ஒஸ்தியாக வேணுமாம்; அந்தப் பெரிய மூட்டையிலிருக்கிற சாலியன் தினுசு கொண்டுவா" என்பான். அவன் எத்தனைதடவை கேட்டபோதிலும் அந்தப் பையன் முன்பு கொண்டு வந்ததையே திருப்பித் திருப்பிக் கொண்டு வருவான். அவன் நாலைந்து தடவை கொண்டுவந்தபின் கடைக்காரன் படுதாக் கோணியை மறைவு விட்டுவிடுவான். மிலிடெரிக்குக் கவைக்குதவாத துணியும் கண்பூத்துப் போகும்படி பளபளப்புக் கொடுக்கும். பிறகு நாலு ரூபாய் துணியை எட்டு ரூபாய் என்று கடைக்காரன் சொல்வான். மிலிட்டெரி அதை நாலு ரூபாய் நாலரை ரூபாய்க்குக் கேட்பது தனக்கு அகௌரவமென்று ரூபா ஏழு அல்லது ஏழரை வரையில் கேட்பான். அதற்கு ஜவுளிக் கடைக்காரன் "ஐயா! நான் மனுஷத் தனத்துக்குத் தள்ளிக் கொடுக்கிறேன்; இன்னொரு வேளையில் தங்களிடம் சம்பாதித்துக் கொள்ள என்றால் முடியும். இன்றைக்கு அரை காலுக்காகப் பேரத்தை விடக்கூடாதென்று கொடுக்கிறேன். தாங்கள் எல்லா சங்கதியும் தெரிந்தவாரகையால் தங்களுக்கு மலப்பு மடி கொடுத்தேன். உங்களுக்கெல்லாம் மட்டத்தைக் கொடுக்க முடியுமா? அதற்கு வேறே ஆசாமிக ளிருக்கிறார்கள்" என்று அவன் தலையில் அதைக் கட்டுவான்.

தவிர ஜவுளிக் கடைக்காரர்கள் தங்களுக்கு உண்மையாய் வரும் பட்டியை மறைத்துவிட்டு வேறே பில் ஜாபிதா தயார் செய்து போஸ்டல் முத்திரையோடு பில்லைக் காட்டி "தாகு, ரெயில் சார்ஜ் மாத்திரம் கொடுங்கள்; எங்களுக்கு லாபம் வேண்டியதில்லை" என்று துணி வாங்க வருகிறவர்களிடம் ஜால்ஜாப் செய்வார்கள். அன்னிய நாட்டார்கள் ஒரு பேலுக்கு இத்தனை பீஸ்களென்றும் ஒரு பீஸுக்கு இத்தனை கெஜமென்றும் தமக்கு வந்த சரக்கைப்போல் நாணயம் தவறாமல் வியாபாரம் செய்வார்கள். நமது சென்னை ஜவுளிக்கடைக் காரர்கள் எவ்வளவு பொய்சொன்னாலும் அவைகளைத் தாங்குவதற்குக் கீழே போட்டிருக்கிற கம்பளியும், அவர்கள் செய்யும் மோசங்களைத் தாங்குவதற்கு வருஷவாரி உற்சவம் பெற்றுக் கொள்ளும் திருக்கச்சி நம்பி முதலிய தெய்வங்களுமிருக்கின்றன. ஆகையால் அவர்கள் இதுவும் செய்யலாம்; இதற்கு மேற்பட்டும் செய்யலாமல்லவா? இவர்கள் சீமை பீசுகளை வாங்கிவந்து அதில் இரண்டு மூன்று கெஜம் கிழித்து விட்டுக் கிழித்த முனையில் மாவு முத்திரை அடையாளம் போட்டு "இது 20 கெஜம் பீசு; இது 8 கெஜம் சேலை" என்று மெய்ப்பிப்பார்கள்; அல்லது மத்தியிலாவது கிழித்துக் கொண்டு தைத்து வைப்பார்கள். இவர்கள் மோசத்தைச் சொல்ல ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனாலும் முடியாது.

'உழக்கில் கிழக்கு மேற்கு பார்ப்பதுபோல்' அற்ப லாபத்திற்கு "கறார்விலை, சரிவிலை, தயவுசெய்து மறுவிலை கேட்கவேண்டாம்" என்று விளம்பர பலகைகள் தொங்கவிட்டிருக்கிறவர்களே! ஒருகாலத்தில் ரோமாபுரி சக்கரவர்த்திக்கு அழகு செய்து பேர்பெற்ற இந்திய டக்கா மசிலின் நாணய உடைகளைத் தயார் செய்த இந்தியராகிய நாம் இலைகளையும் மரப்பட்டைகளையும் ஆடையாகவுடுத்திக் காலங்கழித்த மேனாட்டார்களிடமிருந்து இக்காத்தில் நமக்கு வேண்டும் துணிகளுக்கு எதிர் பார்க்கிறோம்; சீமைத் துணிகளை விற்கும் குமஸ்தாக்களாகவு மிருக்கிறோம். ஒரு ரூபாய் பஞ்சை அறுபது ரூபாய் துணியாகச் செய்யும் மான்செஸ்டர் வாசிகள் சுகமனுபவிக்கும் பொருட்டுச் சீமை ஜவுளியின் நயமும் பகட்டும் நமது மனதைக் கவர்கின்றன. 1703-மல் துணியின்மேலுள்ள மோகமானது நாட்டுத்துணியைக் கண்ணால் பார்க்கவும் ஒட்டாமல் தடுக்கிறது. செய் தர்மங்கள் ஆயிரமாக வளருமிடத்திலுள்ள இந்தியர்களே! உங்களுக்கு உள்ளபடி தர்மம் செய்ய வேணுமென்கிற இஷ்டமிருந்தால் மோசங்களை அறவே ஒழிக்க முயற்சி செய்யுங்கள். எவ்வளவு காடுமுரடானாலும்

அதிக விலையானாலும் சுதேச சாமான்களை வாங்கிப் பசியால் வருந்தியலையும் ஏழை ஜனங்கள் பிழைக்க வழிதேடுங்கள். முப்பத்துமூன்று கோடி தெய்வங்களைப் போன்ற நம்மிந்திய மக்களை வயிறெரியச் செய்யாதேயுங்கள்.

---



## 49. பசுமாடு வியாபார மோசம்.

சித்தூர் முதலிய இடங்களிலிருக்கும் துலுக்கர்கள் தாம் விற்கும் பசுமாடுகளை மணி, சலங்கை, கொலுசு, கம்பளக்கயிறு, பாலடை முதலியவைகளால் சிங்காரித்துச் சென்னைக்குக் கொண்டுவந்து எள்ளுப் புண்ணாக்கைச் சிறு சிறு பொடியாகச் செய்து அதனோடு உப்புத்தூள் கலந்து வைப்பார்கள். மாடுகள் அதனைத் தமது வயிறு நிறையத் தின்று வேணுமான தண்ணீரை நெட்டுவதினால் அவை பார்வைக்கு நல்ல புஷ்டியுள்ள மாடுகளாய்க் காணப்படும். அம்மாடுகள் விலையாகிற வரையில் அவர்கள் அவைகளுக்குப் பச்சைப்புல்லைத் தளராமல் போட்டுக்கொண்டிருப்பார்கள்; ஒவ்வொருநாளும் இரவு பன்னிரண்டு மணிக்குக் கன்றைவிட்டுப் பாலைக் குடிப்பிப்பார்கள்; யாராவது ஒருவர் முதல்நாள் வந்து ஒருபசுவை விலைபேசிப்போனால், அவர்கள் மறு நாள் சாயங்காலம் வந்து பால்கறந்து காட்டும்படி சொல்கிற வரையில் பாலைக் கறக்கமாட்டார்கள். பேரக்காரர்களுக்குப் பாலைக் கறந்து காட்டும்போது பால் குடுவையை அனலில் காட்டிக் கறப்பதினால் நுரை அதிகமாகக் காணப்படும். அதனால் அவர்கள் அரைப்படி பாலை ஒருபடி பாலாகக் காட்டுவார்கள். பிறகு பசுவை விலை தீர்த்து வாங்கிக் கொண்டு போனவர்கள் எவ்வளவு தீனி வைத்த போதிலும் உழக்குப்பால் கிடைப்பதும் கஷ்டமாகவிருக்கும்.

பசுமாடு தரகரிகள் உழக்குப் பால்கூடக் கொடுக்காத பசுக்களைத் துலுக்கர்களிடம் முன்பே ரூபாய் முப்பது அல்லது முப்பத்தைந்

திற்கு விலைதீர்த்துக் கொள்வார்கள். பசு வாங்குகிறவன் வந்து நல்ல மாட்டை விலைகேட்கும்போது, தரகரிகள் 'வாழைப்பழத்தில் ஊசியை நுழைப்பதுபோல்' வெகு பக்குவமாய் "அது தப்புச்சுழி; கொடை மேல் கொடை; இடபக்கம் கவ்வமிருக்கிறது; மடியில்லை; முலைக்காம்பு சரியாயில்லை; கபடுமாடு; மேலும் வாதக்கால்" என்ற தோஷங்களைக் கற்பித்துச் சொல்வார்கள். பின்பு அவர்கள் தாங்கள் முன்பே முடிவு செய்திருக்கிற பசுவுக்குச் சொந்தக்காரரிடம் அவர்களை அழைத்துப் போய், அவனிட மிருக்கும் பசுவை அவர்களுக்குக் காண்பிக்கச் செய்து "இது நல்ல பசு; லக்ஷ்மிகாமுள்ளது. இது நல்ல குண முள்ளது. நீர் அதிர்ஷ்டசாலி; கொடுத்து வைத்தீர்கள்" என்று சொல்லித் தங்கள் தரகு பணம் மல்லாடி வழக்காடிப் பெற்றுக்கொள் வார்கள். பசுவுக்குச் சொந்தக்காரனிடம் முன்பு பேசி முடிவு செய்தி ருக்கிற தொகையைக் கொடுத்து விட்டு மற்றதைத் தரகரிகள் எல்லா ரும் பங்கிட்டுக்கொள்வார்கள். இப்படிப் பட்ட மோசங்களுக்கு உட் பட்டிருக்கும் நம் தேசத்தை நாம் புண்ணியபூமி என்றும் ஞானபூமி என்றும் பெருமையாய்ச் சொல்லிக் கொள்வது நகைப்புக்கிடமே! கெம்பு முதலிய நவரத்தின வியாபாரங்களிலும் இத்தகைய மோசங் கள் ஏராளமாய் நடக்கின்றன.

## 50. பாளையத்தரிசி மோசம்

சென்னையில் தொள்ளைக்காதர் குடிசை என்கிற இடத்திலிருக் கும் நெல் குற்றும் தொள்ளைக்காதர் முதலியோர் பின்னும் ஒருமாக் கால் சகாயமாய் விற்கும் பூரிகலந்த நெல்லாகிய செம்பாளை, வெள் ளைக்கார் முதலியவற்றை வாங்கிவந்து, வெண்புழுக்கலாக அவிக்க வும், இடியாதிருக்கவும், ஒரே ஆவியில் எடுத்துக் கொட்டிவிடவும் அனுகூலமாகவிருக்க நாலுநாள் ஐந்துநாள். அழுகல் தண்ணீரில் ஊற வைத்து வேகவைப்பார்கள். பின்பு அசுத்தமான இடத்தில் அவற்றை ஈறபதமாகவே உலர்த்தி, மேல் உமியை கைந்நகத்தால் உரிப்பதுபோல் உலக்கை கொண்டு உமிநீக்கி கல், மண், நொய், இவைகளை அப்புறப் படுத்தாமல், நெல் அவிக்கும் உமிச்சாம்பலில் பூத்திருக்கிற சாம்பலை எடுத்து உரலிலிடித்துத் தூள் செய்து அரிசி யின்மேல் வெந்நீர் தெளித்து அந்தச் சாம்பல் தூளைக் கலப்பார்கள். கொஞ்சம் கஷ்டமெடுத்துக் கொண்டு வேலை செய்கிறவர்கள் ஒரு வண்டி அரிசிக்கு ஒரு மூட்டை சாம்பலைத் துணிந்து போடுவார்கள். இப்படிச் சாம்பல் கலப்பதினால் முதலாவது மாக்கால் கூடிவரும்; இரண்டாவது பூரி தெரியாது; மூன்றாவது அரிசி தீட்டல்போல் பார் வையா யிருக்கும்; நான்காவது நாட்டரிசி போலிருக்கும்; ஒரு

மூட்டை உமிச் சாம்பல் ஒரு வராகன் லாபத்தைக்கொடுக்கும். ரசாயன சாஸ்திரப்படி தோல் பதனிடும் தொழிலைவிடப் பாளையத்தரிசி எந்த விதத்தில் குறைந்திருக்கிறது?

ஆகையால் நம்மூர் மாணவர்கள் அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளில் பாளையத்து அரிசி வித்தைகளைக் கற்பித்து அவ்விடத்துக் கைத்தொழிலைச் சுலபமாய்க் கற்றுவரலாமே. 5-6 நூற்றாண்டுகளுக்கு முன்னர் "இந்த ஆனிவிரையில் இந்தப் பத்து வராகனையும் நான் கொடாமற்போனால் இலுப்புக்கிளையை ஒடித்த பாவத்தில் போகக்கடவேன்" என்று ஸாசன மெழுதிக் கொடுத்த சத்யசந்தனர் வம்ஸத்தில் பிறந்தவர்கள் இப்போது நாணயத்தை இரவல் கொடுத்துவிட்டுத் தாங்கள் செய்யும் வர்த்தகச் சாலைகளுக்கும் 'தொழிற் சாலைகளுக்கும் கர்ஸன் & Co பென்னன் & Co புல்லர் & Co. என்ற ஆங்கிலேயப் பேர்களைக் வைத்து அந்தப்பேர்களுக்குப் பங்கம் வரவொட்டாமல் இரவு பகலாய்ப் பாடுபடுவானேன்? நம்மிடத்தில் உள்ளபடி நாணயமிருக்குமானால் மங்களகாமான லட்சுமி, வாணி, கிஷ்டன் முதலிய தெய்வப் பேர்களையாது, வமிசத்தின் பெரியோர்கள் பேர் அல்லது நமது பேர்களையாவது வைத்து இந்தியர்களுக்கு யோக்கியதையையும் கண்ணியத்தையும் தேடாமற் போய்விடுவோமானால் வர்த்தகத்திற்கும் நமக்கும் எவ்வளவு தூரம்?

---

## 51 திருநெல்வேலி செட்டில்மெண்டு.

பெரும்பாலும் தென் தேயத்துத் தொளளைக்காரர்களும், சிறுபான்மை பலஜாதிப் பேர்வழிகளும், கைம்பெண்களை வலித்துக் கொண்டு வருகிறவர்களும் ஜீவனஞ்செய்ய வழியில்லாக் காலத்து நேரே சென்னைத் தொள்ளைக்காரர் குடிசைக்கு வந்து சேர்வார்கள். அங்கே இரண்டொரு மாதம்வரை அவர்களில் பெண்பால் நெல்குற்றவும் ஆண்பிள்ளை நெல் அவிக்கவும் வேலையில் அமருவார்கள். பிறகு தாங்களே சொந்தமாய் நெல்குற்றல் செய்வதற்குரிய சங்கதிகளையெல்லாம் தெரிந்துகொள்வார்கள். உடனே நெல்குற்றல் வியாபாரம் செய்வதற்கு ஒரு வீட்டைக் குடிக்கூலிக்கு எடுத்துக்கொள்வார்கள். இவர்கள் முதலில் நெல்மண்டி, ரேவுத்துறை, படவுத் துறைகளில் மற்றவர்களைக் கொண்டு லாபம் கொடுப்பதாய் லாவாதேவி செய்துகொள்வார்கள். ஆரம்பத்தில் இவர்கள் மிகவும் நாணயமாகக் கொடுக்கல் வாங்கல் செய்வார்கள். நாளடைவில் தண்டல் கட்டும் ஏற்பாட்

டிற்குக் கொண்டுவந்து விடுவார்கள். இந்தச் சமயத்தில் ஓரிடத்தில் வாங்கிய தானியத்தை விற்று அதை மற்றொரு ஆசாமிக்குப் பைசல் செய்வார்கள். அந்த வருஷ முடிவிற்குள் அவர்கள் நாலுபேருக்குச் சிபார்சு செய்யக்கூடிய அவ்வளவு உயர்ந்த அந்தஸ்திற்கு வந்துவிடு வார்கள். இந்தச்சமயம் தான் இவர்களுக்குக் குரு ஒன்பதில் உச் சம்பெற் றிருப்பானுகையால் 'அறுப்புக் காலத்தில் எலிக்கு நாலு கூத்தியார்' என்ற கதையைப்போல் இவர்கள் சம்பிரமமாய்ச் சாப் பிடுவதும் குடிப்பதும் சுபசோபனங்களை வெகு விமரிசையாய் நடத்துவதுமாய் இருப்பதுமாத்திர மல்லாமல் தங்கள் பெண்சாதி களைப் பொன்காய்க்கு மரமெனச் செய்துவிடுவார்கள். கொடுத்தவ னுக்குப் பட்டைநாமம் போடுகிற இந்த ஆசாமிகள் நெல் மூட்டை களைத் தமது மனம் கொண்டமட்டும் வாங்குவார்கள். விலை விஷயம், கணக்கு விஷயம் முதலியவற்றை மண்டிக்காரர் தமது இஷ்டம் போல் எழுதிக்கொள்ளலாம். ஆனால், தண்டல் மாத்திரம் வர வரக் குறைந்துகொண்டே போகும். நிலுவை பாக்கி வாவேண்டுமென்ற எண்ணத்தால் மண்டிக்காரர்கள் மேலும் மேலும் விலையைத் தூக்கி அவர்கள் வீட்டிற்குச் சரக் கனுப்புவார்கள். ஆயிரக் கணக்கில் பாக்கிகள் ஏற்பட்டு ரேவு ஆசாமிகள் தங்கள் கழுத்தைப் பிடிக்கும் பொழுது இவர்கள் இராத்திரியோடு இராத்திரியாய்த் தமது சுய தேசம் போய்ப் பழைய குடித்தனமா யிருப்பார்கள். இப்படிப் பட்ட மோசங்கள் வளர்ந்து வந்தால் நம்நாடு எந்தக்காலத்தில் முன் னுக்கு வரும்.

---

## 52. ஜோகிகள் கலியாண யாசகம்.

ஜோகிகள் பெரும்பாலும் பன்றி வளர்ப்பதும் விற்பதுமான தொழிலை யுடையவர்கள். இவர்கள் சென்னை முதலிய இடங்களுக்கு வந்து பன்றி வியாபாரம் செய்து ஒழிந்த நேரங்களில் தமது அக் காளையோ, தங்கையையோ, அல்லது வேறு ஒரு பெண்ணையோ கலி யாணப்பெண் என்று மஞ்சளை அவள் கன்னத்திலும் முழங்கையி லும் பூசிக் கோடு கோடாய்க் கீறிவிடுவார்கள். ஒரு ஜோகிக் கிழவி புள்ளாங் குழலோடு "கௌரீ கலியாணமே வைபோகமே" என்று பாடிக்கொண்டு யாசிப்பாள். வருஷம் முந்நூற்றறுபத்தைந்துநாளும் கலியாணம் கலியாணம் என்று ஜோகிகள் அவ்வளவு பேரும் ஊர் ஊராய்ச் சென்று யாசித்து வெறிக்கக் குடிப்பார்கள். எல்லாத்

தானங்களையும்விட அன்னதானமே சிறந்ததென்று பெரியோர் சொல்லி யிருக்கின்றனர். உண்மையில் துர்ப்பாக்கிய முள்ளவர் களுக்கு உதவிசெய்யவேணு மென்பதற்கே "பாத்திர மறிந்து பிச்சை யிடு" என்ற பழமொழியுள்ளது. ஆனால் காமியம் கருதியோ, அல் லது இளகிய மனத்தாலோ மோசக்காரர்களுக்குச் செய்யும் தருமம் யாதொரு பிரயோசனமு மில்லாமல் போகின்றது.

---

## 53. குறப்பெண்களும் சிறுபிள்ளைகளும்.

குறப்பெண்களில் சிலர் தாம் அணிந்திருக்கும் நல்ல சேலையை அவிழ்த்து வைத்துவிட்டுப் பழைய கந்தல் துணிகளைச் சுற்றிக் கொள்வார்கள். பின்பு அவர்கள், அக்கம்பக்கமுள்ள இரண்டு மூன்று சிறு பிள்ளைகளை யழைத்து அவர்களுக்குத் தனக்குக் கிடைக்கும் வருமானத்தில் பங்கு கொடுப்பதாய்ச் சொல்லி அவர்களை அம் மணத்துடன் ரோட்டுகளில் வெறும் புழுதியில் கிடத்தி நாலுநாள் பட்டினி கிடப்பவர்கள்போல் மெல்லிய குரலாய், அவ்வழியாய்ப் போவார் வருவாரை நோக்கி "வயிறு பசிக்குதே அய்யா? இந்தப் பாலகன் முகத்தைப் பாருங்கள் அய்யா? தோசை வாங்கிக் கொடுங் கள் அம்மா?" என்று யாசிப்பார்கள். பேதை ஜனங்கள் "இது உண்மைதான்" என்று நம்பி இளகிய மனதுடன் அரைத்துட்டு ஒரு துட்டு வீதம் மனமிளகிப் போடுவார்கள். இப்படி வசூலாகும் பணத்தை அந்தச் சிறுபிள்ளைகளுக்குப் பங்கு கொடுக்க மனம் வரா மல் அவர்கள் கையில் இரண்டொரு தம்படியைக் கொடுத்து அவர் களை அனுப்பிவிடுவார்கள். பின்பு அவர்கள் இரவு எட்டு மணிக்கு மேல் தமது புருஷர்களுடன் சேர்ந்து வெறிக்கக் குடித்து வெறி தெரியாமல் வீட்டிற்குத் திரும்புவார்கள்.

---

## 54. குறப்பெண்கள் யாசகம்.

ஒரு குறக்கிழவியும் ஒரு யௌவனப் பெண்ணுமாய்த் தக்க பெரிய மனிதர்களிடம் போய்"ஐயா! நாங்கள் இருப்பது புதுச்சேரிக் கடுத்த மயிலமென்னும் ஊர். இந்தப் பெண்ணுக்குப் புருஷனாகிய என்பிள்ளை விரைவாதத்தைக் சிகிச்சை செய்துகொள்ளும்படி இவ் விடம் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு வந்து மாதம் இரண்டாகின்றன. நாங்கள் அவனைத் தேடிக்கொண்டு வந்தோம். தேடிவந்த இடத்தில் அவனைக் காணோம்; நேற்று முதல் எங்களுக்கு அன்ன ஆகாரம்

கிடையாது. மிகவும் பசியாயிருக்கிறது. தர்மப் பிரபுக்கள் தயை செய்து ரயில் சார்ஜ் உதவி செய்தால் உங்கள் புண்ணியத்தால் ஊர் போய்ச் சேருகிறோம். இதோ சில புண்ணியவான்கள் கொஞ்சம் உதவி செய்தார்கள்'' என்று தமது கைத்துட்டைக் காட்டி யாசிப்பார்கள். இவ்வாறு இவர்கள் சென்னையில் பல பேட்டைகளிலும் மாறி மாறி யாசிப்பார்கள். வேறு சில பெண்கள் தமது குழந்தைகளை எடுத்துக்கொண்டுபோய், "ஐயா! என் புருஷன் என் குழந்தையையும் என்னையும் அனாதியாக விட்டுவிட்டுத் தேசாந்தரம் போய் விட்டான்'' என்று யாசிப்பார்கள். நாம் இது தகாத காரியமென்று சொன்னால் கிருபா சமுத்திரமெனப் பிறர் தங்களை மெச்சும்படி பேசும் சிலர் இது எல்லாம் வயற்றுக்குத்தானே என்கிறார்கள். எவ்வளவோ யுக்தி யோசனைகளும் சாமர்த்தியங்களும் கொண்டுள்ள திருடர்களை அரசாங்கத்தார் சிட்சியாமல் விட்டுவிடுவார்களா? அந்தத் திருடர்களுக்கும் இந்த மோசக்காரர்களுக்கும் என்ன வித்தியாசம்? நாம் மாத்திரம் இம்மோசக்காரர்களுக்கு ஏன் இடம் கொடுக்கவேண்டும்?

---

## 55. பெட்டிச்சாவிக்காரர் மோசம்.

இவர்களில் பெரும்பாலோர் தமிழ்க் குறவர்கள். சிறுபான்மை பல ஜாதியாருமுண்டு. இவர்கள் அநேக சாவிகளைக் கோவை கோவையாகக் கோத்துக் கையில் பிடித்துக் கொண்டு பணை, அறம் முதலிய சாமான்களோடு தெருத்தெருவாய் "பெட்டி சாவி போடவில்லையா? பெட்டிசாவி போடவில்லையா?'' என்று கூவி வருவார்கள். சென்னையிலுள்ள மட்டிப்பெண்களில் பலர் எந்நேரமும் கைச் சுண்டு விரலிலாவது இரவாணங்களிலாவது சாவியை மாட்டிவைப்பது வழக்கம். அஞ்சுநாளில் பத்துச்சாவி போடுகிற கருத்துள்ள சீமாட்டிகளைச் சென்னையில்தான் பார்க்கலாம்.

இந்தப் பெண்கள் பெட்டிக்சாவிக்காரனுக்கு எதிரில் பெட்டியைக் கொண்டுவந்து வைத்துக் கூலியில் ஒருகாசுக்கு ஒன்பது நாழிகை மல்லாடுவார்கள். பெட்டிச்சாவிக்காரன் கூலியை ஒருவாறாய் முடிவுசெய்துகொண்டு ஒவ்வொரு சாவியாகப் போட்டுப் பார்த்துக்கொண்டே வருவான். பெட்டிக்குப் பிடிக்கும் தக்க சாவி கிடைத்ததும், அவன், "அம்மா? கொஞ்சம் விளக்கெண்ணெய் வேண்டும். பூட்டுத் துருப்பிடித்திருக்கிறபடியால் சாவி திரும்ப

வில்லை. ஒரு விரலில் கொஞ்சம் எண்ணெய் கொண்டுவாருங்கள்'' என்பான். அவள் விளக்கெண்ணெய்க்குத் திரும்பின க்ஷணமே ஒரு நொடிப் பொழுதில் பெட்டியைத் திறந்து ரொக்கமாகவோ நகைநட்டுகளாகவோ அகப்பட்டதை ஒரு ஜட்கா அடி அடித்துக் கொண்டு பெட்டியை மூடிவிட்டு வேறு சாவியைக்கொண்டு திருப்பிக்கொண்டிருப்பான். விளக்கெண்ணெய் வந்ததும், சாவிக்குத் தடவிப் போட்டுப் பார்த்துச் "சாவி சரிப்படவில்லை; நாளை இதற்குத் தக்க சாவி கொண்டு வருகிறேன்; இன்று விழித்தவேளை ஒரு காசுக்கும் வழியில்லாமற் போய்விட்டது'' என்று மிகுந்த மனவருத்தத்தோடு போய் விடுவான். ஒருகால் பெட்டியில் ஒன்றுமில்லாதிருந்தால், நன்றாயிருக்கும் பெட்டியின் பூட்டைக் கெடுத்துவிட்டு அதிக கூலி பெற்றுக்கொண்டு அன்றையப்பொழுது செலவுக்கு வழி தேடிக்கொள்வான்.

---

## 56. குடுகுடுப்பைக்காரர்கள் மோசம்.

குடுகுடுப்பைக்காரர்கள் மிகவும் விடியற்காலத்தில், தெருக்களில் வந்து ஒவ்வொரு வீட்டண்டையும் "அம்பா! பலுக்கடி; மலையாளதேவி! பலுக்கடி; பகவதிதேவி! பலுக்கடி; இந்த வீட்டில் காப்புப்போட்ட பையனுக்கு அதஷ்டம் வருது, நீங்கள் நினைத்த காரியம் ஜெயமாகுது; இந்த வீட்டின் வடவண்டை மூலையிலே உங்களைக் கெடுக்க நினைத்தவன் கெட்டுப்போறான், இந்த வீட்டில் ஒரு பீடை இருக்குது; அது தொலைந்துபோனால் எல்லாம் சுகமாகுது'' என்று சொல்லிக்கொண்டு போவார்கள். இவர்களோடு மலையாள பகவதி பிரத்தியக்ஷமாய்ப் பேசுவதாயும் இவர்கள் விடியற்காலம் சொல்லும் வாக்குத் தவறாமல் பலிக்கிறதென்றும், தமது வீட்டில் பீடையிருப்பது வாஸ்தவமா யிருக்கலாமென்றும் சில பேதைப் பெண்கள் நம்பி இவர்களைக் கூப்பிட்டு இன்னொருதரம் சொல் என்று கேட்பார்கள். உடனே இவர்கள் அதிகமாகப் பயமுண்டாகும்படி அக்கதையைக் கொஞ்சம் வளர்த்திச் சொல்லி, "அந்தப் பீடை தொலைந்து போக நானொரு கழிப்புச் செய்கிறேன்; எனக்கொன்றும் வேண்டாம். அம்மாள் பேர் சொல்லி மேலேப் போட்டுக்கொள்ள ஒரு கந்தை கொடுத்தால் போதும்'' என்பார்கள்.

வீட்டிலுள்ள நாசக்காரி "அப்படித்தான் செய்; நீ கேட்டபடி ஒரு துணி கொடுக்கிறேன்'' என்பாள். உடனே குடுகுடுப்பைக்

காரன் "அம்மா! எனக்கு எதுவும் வேண்டியதில்லை, ஒரு முறத்தில் ஒருபடி யரிசியும் கொஞ்சம் மிளகாயும், புளியும், உப்பும் கொண்டு வாங்க. கழிப்பு செய்து முடிந்ததும் அவைகளை நீங்களே எடுத்துக் கொள்ளலாம். அவைகளில் எனக்கு ஒண்ணும் வாணும். ஆனால், அம்மா எனக்குமாத்திரம் அய்யாபோட்டு கயட்டிவிட்ட ஒரு கிழிஞ்ச சொக்கா கொடுத்தால் போதுமானது" என்பான். வீட்டிலுள்ள நிர் மூடி பழைய கந்தல்தானே; வேறு ஒன்றுமில்லையே என்று, ஒரு முறத்தில் அரிசியும் புளி மிளகாயும் கொண்டு வருவாள். குடுகுடுப் பைக்காரன் முறத்திலுள்ள அரிசி, மிளகாய், புளி இவைகளின்மேல் தன்னிடமிருக்கிற ஒரு அழுக்குத்துணியை மூடி மனிதன் முழங் கால் எலும்பை எடுத்து அதன்மேல் வைத்துக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரச்சொல்லி அதை அந்த அரிசியின்மேல் சோரத் தெளிப் பான். பிறகு அவன் அம்முறத்தை யெடுத்து அந்தப்பெண்ணை உட் காரவைத்து மூன்று சுற்றுச் சுற்றின பிறகு அதன்மேல் காரிக்காரி உமிழ்ந்து எலும்பையும் துணியையும் எடுத்துவிட்டு முறத்துடன் அரிசி முதலானவைகளை அவளை எடுத்துக் கொளளச் சொல்லித் தனக்கு ஒரு கிழிந்த சொக்காய் கொடுக்கும்படி கேட்பான். இவ்வ ளவு செய்தும் சூது தெரியாத பேதைப் பெண்கள் எலும்பு வைத்து தண்ணீர் தெளித்துக் காரி உமிழ்ந்ததை எடுத்துக் கொள்ள மனம் ஒப்பாமல் அதை அவனுக்கே கொடுத்து விடுவார்கள். பின்பு அவன் பிடிவாதத்திற்குப் பயந்து அவனுக்கு ஒரு துணியும் கொடுப்பார்கள். குடுகுடுப்பைக்கார ஸ்திரீகள் "துணி தைக்கிலேயோ? துணி தைக் கிலேயோ?" என்று தெருத்தெருவாய்க் கூவி வருவார்கள். பாமர ஜனங்கள் கூலி தீர்த்துத் தைத்துத் தரும்படி துணியைக் கொடுத் தால், அவர்கள் அதில் இரண்டொரு முழும் கிழித்துக் கொண்டு மற்றதை இணைத்துக் கொடுப்பார்கள்.

சாதாரண காலங்களில் போட்டது போட்டபடி கிடத்தித் தம் மால் ஒன்றும் செய்ய முடியாதென்று சோம்பலாயிருக்கிற அல்லது சண்டித்தனம் செய்கிற மூடப் பெண்பிள்ளைகள் தீபாவளி, பொங்கல், போகி முதலிய விசேஷ தினங்களில் நாலு பெண்பிள்ளைகளாலும் செய்ய முடியாத வேலைகளை 'மந்திரக்காரனுக்கு வசியப்பட்டுச் செய் யும் பேயைப்போன்று' அவர்கள் செய்யும் வேலையையும் எடுத்துக் கொள்ளும் கஷ்டமுங் கொஞ்சமல்ல. அக்காலங்களில் இவர்கள் வேண்டுமான சாமான்கள் வாங்கி வீடுவாசல் சுத்தி செய்து நாலு வகைப் பதார்த்தங்கள் சமைத்துப் பண்டம் பலகாரங்களையும் தயார்

செய்து விடுவார்கள். அப்பப்பா! எவ்வளவு வேலை! என்ன கஷ்டம்!! வாயால் சொல்லவும் முடியாது. அவ்வளவு வேலைகளையும் காலில் சதங்கை கட்டாமல் ஒருத்தியே நாடகமாடிச்செய்யும்போது அதைப் பார்க்க விகாரமாயிருக்கும். வீட்டிலுள்ள கிழங்களைச் சண்டைக்கு வலிக்கும்போது தோட்டிச்சியாகவும் வேலைக்குத் தக்கபடி நீலியாக வும் வேஷம் போட்டு ஆக்ட் செய்கிற நமது பெண்பிள்ளைகள் இம் மோசக்காரர்கள் நாடகத்தையும் கண்டுகொள்ள வேண்டுமல்லவா?

---

## 57. வம்புச்சிறுக்கிகள் மோசம்

சில மானங் கெட்ட ஸ்திரீகள், இரவு காலம் முன்னேரத்தில் அந்தஸ்துள்ள வீட்டுப் பெண்பிள்ளைகளைப்போல் தகுந்த சேலை ரவிக்கையுடன் கிலிட்டு நகைகளைப் போட்டுக் கொண்டு வெகு அடக்க ஒடுக்கமாய்ச் சாலையோரத்திலுள்ள மரத்து நிழலில் மெதுவாய் நகர்ந்து கொண்டிருப்பார்கள். இவர்களைப்பார்த்ததும் சில ஆண் பிள்ளைகள் இவர்கள் பின்னே தொடர்வதுண்டு. அப்படி அவர்கள் தொடர்ந்து வாரவிட்டால், அந்தப்பெண்கள் தனித்து வருகிற ஓர் ஆண்பிள்ளையைக் கண்டதும் தாமே வலிதில் அவர்கள் கிட்ட நெருங்கி "அய்யா! நீர் எங்கே போகவேணும்?" என்பார்கள்.

**ஆண்பிள்ளை:**—நான் சூளை கரையாங்குட்டைக்குப் போகி றேன்; ஏன் கேட்கிறாய்?

**பெண்பிள்ளை:**—நான்கூட புரசவாக்கம் என் தங்கை வீட்டிற் குப் போகவேணும்; எங்க முதலியாருக்கு சமயல் செய்து விட்டு வரு வதற்கு நேரமாய்விட்டது, அவர் வருவார் என்று இங்கேநாம் காத் திருந்தும் இன்னம் வரவில்லை; என்ன செய்கிறது? அவசரமாய்ப் போகவேண்டிய வேலை இருக்கிறது. துணையும் யாருமில்லை; பயமா யிருக்கிறது. ஜனங்கள் போக வர இருப்பார்களே என்று வந்து விட் டேன். நல்ல வேளையாய் சூளை வரையில் நீர் வருகிறபோது பய மென்ன? அதன் பிறகு புரசவாக்கம் கிட்டதானே.

**ஆண்:**—சரி வாருங்கள்; மணி குண்டுபோடப் போகுது; பய மென்ன? போகலாம்.

**பெண்:**—தனக்குத்தானே தன்னோடு வரும் மனிதன் தெரிந்து கொள்ளும்படி சிரிக்கிறாள்.

**ஆண்:**—என்ன அம்மா? சிரிக்கிறீர்கள்; என்ன சமாச்சாரம்?

பெண்:—(கொஞ்சம் நாணினவள்போல்) அதற்கல்ல; எங்கள் முதலியார் ஒரு நாளைக்கு நானில்லாவிட்டால் தூங்கவே மாட்டார்; அதிலும் படுத்துக் கொள்ளும்போது கொஞ்சம் தொலைவில் படுக்கச் சம்மதிக்கமாட்டார். இன்று இராப்பொழுது அவர் தனியாய் எப்படியிருப்பாரோ என்று நினைக்கச் சிரிப்பு வந்தது.

ஆண்:—(திரும்பிப் பார்த்து) கொஞ்சம் அந்தஸ்துள்ள வீட்டுப் பெண்பிள்ளையா யிருந்தாலும் இவள் பேசுவதில் கொஞ்சம் பசை உண்டுபோலிருக்கிறது என்று எண்ணிக் கொள்கிறான்

பெண்:—நீங்களும் இப்படித்தானா! ஒரு நாளைக்கில்லாவிட்டால் என்ன முழுகிப் போகும்?

ஆண்.—(இருக்கிற ஜாடையைப் பார்த்தால் நமக்கு இணங்குவாள் போலிருக்கிறது என்று கொஞ்சம் பரிகாசமாய்ப் பேச ஆரம்பித்து) சரி. இன்றிரவு உனது தங்கை வீட்டில் நீயும் ஒண்டியாய்த் தானே படுத்திருக்க வேணும்.

பெண்:—இணங்காதவள்போல் கொஞ்சம் பிகுவோடு பேசாதிருக்கிறாள்.

ஆண்:—என்ன? பதில் ஒன்றுங்காணோம்; நான் விசேஷம் ஒன்றும் சொல்லவில்லையே.

பெண்:—நீர் என்ன விசேஷம் சொல்கிறது? அதற்குத் தகுந்தவர்களிடத்தில் சொன்னால் கேட்பார்கள். பசங்களுக்கு ஏதாவது வாங்கிக்கொண்டு போகவேணும். பாவிமுண்டை! இருட்டிப்போகிறதே என்று அவசரத்தில் கையில் துட்டு கொண்டுவர மறந்துவிட்டேன். அதுவே ஒரு பெரிய ஏக்கமாயிருக்கிறது.

ஆண்:—ஏன் ஏக்கம்? வேணுமானால் நான் கொடுக்கிறேன். அதற்காக விழிக்கவேண்டியதென்ன?

பெண்:—வேணுமானால் கொடுக்கிறேன் என்கிறீரே! அப்படி என்ன கொடுப்பீர்?

ஆண்:—உனக்கு வேண்டிய லெலவுக்குக் கொடுகிறேன்; இதற்கா பயந்து போவார்கள்! நீதான் என்னமோ ஒருமாதிரியாய்ப் பேசுகிறாய். இங்கே நம்மிருவரை விட யாரிருக்கிறார்கள்?

பெண்:—ஒரு பெரிய மரத்தின் நிழலில் நிற்கிறாள்.

ஆண்:—அவள் கிட்ட நெருங்குகிறான்.

பெண்:—அவன் மடியையும் ஜேபியையும் சோதனை போடுகிறாள்.

ஆண்:— அவள் மேலே கையைப் போடுகிறான்.

பெண்:—(ஆண்பிள்ளையினுடைய மடியிலிருப்பதைத் தானாக வாவது அவன் கொடுக்கவாவது பெற்றுக் கொள்கிறாள்.) பிறகு இரு! இரு!! மனுஷாள் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருக்கிறார்கள். 'கிணற்று நீரை வெள்ளமா கொண்டுபோகிறது' இன்னமப்படிப் போய்விடலாம். (நடு ரோட்டிற்கு வந்து விடுகிறாள்.)

ஆண்பிள்ளை வெட்கத்துடன் மரத்து நிழலில் நின்றுகொண்டு, அவளைக் கேட்கவும் கூப்பிடவும் பயந்து விழித்துக் கொண்டிருப்பான். அந்தத் தட்டுவாணி ஸ்திரீ கொஞ்சங் கொஞ்சமாய் நகர்ந்து வழியில் போகிறவர்களுடன் கூடி நடந்து விடுவாள். இப்படிச் சில மானங்கெட்ட ஸ்திரீகள் அந்தி பட்டதும் இதை ஒரு தொழிலாக எடுத்துக்கொண்டு ஆடவர் பலரை ஏமாற்றுவார்கள். 'படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன் கோயில்' என்றபடி சில யோக்கியர்களும் அற்பத்திற் காசைபட்டுத் தமது கைப்பணமுமிழந்து தட்டுவாணி ஸ்திரீகளால் ஏமாந்து போகிறார்கள்.

இத்தகைய பெண்கள் பேச்சில் அரிச்சந்திரனைப்போல் பேசுவார்கள். இவர்கள் தமது முன்னோர் ஆஸ்திக்கு அழிவில்லாமலும், அன்னியர் பொருளை விரும்பாமலும் தாய்வீட்டுச் சீதனத்தை எதிர்பாராமலும், புருஷன் சம்பாத்தியத்தைக் கோராமலும் கைச்சிலுவாணம் செலவழியாமலும், தேக கஷ்டமில்லாமலும், பிறருடைய சகாயமில்லாமலும் வெகு சுலபத்தில் பணத்தைச் சேர்த்து விடுகிறார்கள். ஆனால் இந்தத் துஷ்டப்பெண்கள் தமக்கும், தாம்பிறந்த அகத்திற்கும் புகுந்த வீட்டிற்கும், தம்மினத்திற்கும் பொதுவாய்த் தமது நாட்டிற்கும் பெரும்பழியையும் அவமானத்தையும் தேடி வைக்கிறார்கள். சூரிய சந்திரர்களைத் தமதாணைப்படி நிலை நிற்கச் செய்வதும் ஏழேழு தலைமுறையார்களைச் சொர்க்கம் புகுத்துவதும் உறுதியைப் பயக்கக் கூடியதுமாகிய "கற்பு" என்னும் ஒரு பொக்கிஷத்தை நிலை நிறுத்த வேண்டிய இந்தப் பெண்கள் கால் அணு அரை அணுவுக்கு அதனை விற்க ஏற்படுவார்களானால் இவர்களுக்காக ஏற்பட்ட "மாதர் கற்புடைய மங்கையர்க்கோர் மழை" என்பது பெய்யாது போய் விடுமா? நமது நாட்டில் நடக்கும் மோசங்களோடு மழையுங் குறையுமானால் 121 லட்சம் ஏகர் நிலத்தைக் காடுமேடு காம்பு திருத்திப் பயிரிட்டாலும் நாம் காணும் மூன்று படி அரிசியையாவது நம் சந்ததியார்கள் எப்படிப் பார்ப்பார்கள்? நகைக்கும் கற்புக்கும் ஒருவித சம்

மர்தம் ஏற்பட்டிருப்பதினுல் கடவுள்செயலால் நகை ஆசை ஒழிந்து நம் நாட்டு ஸ்திரீகள் எந்தக்காலத்தில் முன்னுக்கு வரப் போகிருர் கள்.

---

## 58. நெட்டாலிலிருந்து வந்ததாக ஏமாற்றல்

நெல் குற்றுகிற வீடுகளிலும் பலகாரஞ்செய்து விற்கிற வீடு களிலும் முக்கியமாய்ப் பெண்பிள்ளைகள் சம்பாத்தியம் செய்கிற விடங்களிலும் பெண்பிள்ளைகளின் பெரிதனம் கொஞ்சம் தலைவிரித் தாடும். இப்படிப்பட்ட வீடுகளைச் சில மோசக்காரர்கள் மிகவும் கருத் தாய்க்கவனித்து வருவார்கள். அவர்கள் அந்தப் பெண்பிள்ளைகளுக்கு எங்கெந்த ஊர்களில் பாத்தியஸ்தர்கள் இருக்கிறுர்க ளென்பதையும் விசாரித்துக் கொள்வார்கள். பின்பு அவர்களில் ஒருவன் தக்க சமய மறிந்து நெட்டாலிலிருந்து வருகிற பாவனையாய் ஒரு கம்பளிக் கோட்டும் ஒரு நிஜாரும், தலையில் ஒரு சிகப்புக் குட்டையும் அணிந்து கொண்டு பழைய கோணிமூட்டை ஒன்றைத் தலைமேல் சுமந்து வரு வான். இவன் நாலைந்து வீடுகளுக் கப்புறம் வரும்போதே ஒன்றும் அறியாதவன்போல் "அம்மணியம்மாள் வீடு எங்கே?" என்று ஒரு வாறுய் அந்தம்மாள் அங்கம் அடையாளம் சொல்லி விசாரிப்பான். அவ்வீதியிலுள்ள சில பெண்பிள்ளைகள் "இவர் சொல்லுகிற அடை யாளம் அரிசிக்கார அம்மணியம்மாள்போ லிருக்கிறது" என்று அவனை நேரே இட்டுக்கொண்டு வந்து அம்மணி வீட்டில் விடு வார்கள்.

அம்மணி.—(அவனை ஏற இறங்கப் பார்த்து), "இது யாரோ யெனக்குத் தெரியவில்லை; எப்பவோ பார்த்த மாதிரியா யிருக்கி றது" "நீ யார்? எவ்விடம்?"

நெட்டால்காரன்:—(அம்மணியம்மாள் தனக்கு அடையாளம் தெரியாததுபோல் கொஞ்சநேரம் மயங்கி பிறகு,) சாணுன் குப்பத் தில் உனக்கு யாராவது மனுஷா ளிருக்கிறுர்களா? சாணுன்குப்பம் வள்ளியம்மாள் உனக்குத் தெரியுமா?

அம்மணி:—"ஆமாம்; என் தங்கச்சி தான் வள்ளியம்மாள். நீ யார்? எனக்குத் தெரியவில்லையே?

நெட்டால்:—இப்போ தெரியுமா? உங்க அண்ணன் அடைஞ்சா கவுண்டன் மச்சினி மகனல்லவா நான்; என் அடையாளம் உனக் குத் தெரியவில்லைபோ லிருக்கிறது. நான் ரொம்பவும் சின்ன வய

தில் உன்னைப் பார்த்திருக்கிறேன்; அது எனக்குக் கவன மிருக்கிறது; ஆனால் என்னை உனக்குத் தெரியவில்லை. நான் செட்டால் போய்ப் பதனஞ்சு வருஷமாகிறது. இன்னைக்குத்தான் வந்தேன். நான் சின்னவனா யிருக்கும்போது இங்கே வந்திருக்கிறேன். அந்த அடையாளத்தின் மேல் தான் நேராய் இங்கே வந்தேன். அண்ணா அடைஞ்சா கவுண்டன் எல்லாம் நல்லா இருக்கிறாங்களா?

அம்மணி;—அல்லாம் நண்ணாதான் இருக்கிறாங்கோ. அடபடவா! நீ சின்ன பய்யனா யிருக்கிறபோது பார்த்தது; இப்போ அடையாளமே தெரியவில்லை. கடக்கட்டும்; வாடா! சாப்பிட்டு கண்ணுக்குத் தெரியாத சீமை பேர்யி முகத்தை கொணர்ந்து காட்டினையே அதுவே போதும்.

நெட்டால்:—என்னமோ சுவாமி புண்ணியம்; உங்கள் முகத்தை யெல்லாம் பார்க்கக் கொடுத்து வைத்திருந்தேன்; இந்தக் கரைவந்து சேர்ந்தேன். பெரியம்மா! இந்த மூட்டையைப் பத்திரமாய்ப் பெட்டியில் வை. நான் இங்கு மதராஸ் பாங்கியில் ரூபா 600-க்கு சீட்டு எடுத்திருக்கிறேன். அதை நாளையதினம் வாங்கிக்கொண்டுதான் ஊருக்குப் போகவேணும்.

அவன் தன் ஊர்பேர் உற்றார்பேரைச் சொன்னபோதே அம்மணி யம்மாளுக்கு ஒரு புஜம் இருபுஜமாகப் பூரித்துவிடும். மேலும் ரூபா 600 வாங்கப் போகிற சங்கதி கேட்டதும் அவள் மயங்கிப் போவாள். பின்பு அவள் "நீ சாப்பிடு; அதன் பிறகு எல்லாம் பேசலாம்" என்று அவனுக்குச் சாப்பாடுபோட்டு அவன் சாப்பிடும் போதே எல்லா க்ஷேமங்களையும் விசாரிப்பார்கள். அந்த மோசக்காரன் அம்மணியம்மாள் வாக்கைக்கொண்டே அவள் நம்பும்படி அவளுடன் கலந்து பேசுவான். இப்படி நாலைந்து நாள் வரையில் அவன் தன் பணத்தைத் தாராளமாய்ச் செலவு செய்வதன்றி வீட்டிற்கு வேண்டிய காய்கறி முதலானவைகளையும் வாங்கிக் கொடுப்பான். பிறகு அவன் சமயம் நோக்கி "என்னிடம் அறுபது காசுகளிருக்கின்றன. அதற்கு இங்கேயே ஒரு வீடு வாங்கலாமா? அல்லது ஊரில் நிலத்தின்மேல் போடலாமா? உன் சம்மத மெப்படி யிருக்கிறது? உன் மாரிபத்திலேயே ஒரு பெண்பேசி எப்படி யாயினும் கலியாணத்தை முடித்துவைக்க வேண்டியது உன் பாரம்" என்று சொல்வான். அதன்பிறகு அவன் நான் போய் "என் தாயார் முதலானவர்களைப் பார்க்கவேணும். இத்தனை நாள் பொறுத்துச் சும்

மாப் போகலாமா? நீ போட்டிருக்கிற மின்னல் மாதிரி என் தாயா ருக்கு ஒன்று செய்துகொண்டு போகலாமென்றிருக்கிறேன். இது எத்தனை பவுனில் செய்தது? எங்கே செய்தது? இது மிகவும் நன் ருய் இருக்கிறது. இதைப்போலவே செய்யச் சொல்கிறேன். உன் கழுத்திலிருக்கிற மின்னலைக்கொடு" என்று அதை வாங்கிக்கொண்டு கம்பி காட்டுவான். இவ்விதம் ஏமாருத விஷயத்தில் தானிருக்கும் நாலைந்து நாளைக்குள் இருப்பு, வைப்புமுதலானவைகள் வைத்திருக்கு மிடத்தைக் கண்டுகொண்டு சமயம் பார்த்து அவைகளை எடுத்துக் கொண்டு ஓடிப்போவான்.

அற்பசடங்கிற்கும் இடும் பூஜைகளுக்கும் ஆயிரம் வருஷ மிருந்து அனுபவப்பட்டவர்களைப்போல "அதை அப்படிச் செய்ய வேணும்; இதை இப்படிச் செய்கிறது வழக்கமில்லை; அங்கே இரட் டைப் பிள்ளையார் வைக்கவேண்டும்; இங்கே கள், சாராயம், கெஞ்சா, மாஜினம், சுருட்டு, படைக்கவேணும், அம்மாளண்டை மாவு, பால், பழம், அவல்கடலை படைப்பது நமது முன்னோர் வழக்கம், நம்மில் முனீஸ்வரன் கிடையாது; காட்டேரி கோடிக்கிற வழக்கம்" என்று புஸ்தகத்திலிருந்து எடுத்துச் சொல்வதுபோல் அதி கவனத்தோடு சொல்கிற இந்தப் புண்ணியவதிகள், கொஞ்சத்தில் ஏமாந்து ஒப்பா ரிப் பாட்டுப்பாடி அழுவார்கள். இதுதவிர பாடல்பெற்ற பெரிய பெரிய தேவஸ்தானங்களிலெல்லாம் ஒரு தேங்காயை உடைத்து நாலாயிரம் சுவாமிகளுக்கு ஊப்புகாட்டி வருகிருர்கள். ஆனல் சாஸ் திரவிதிகள் சகலமு முணர்ந்த இந்தப் புண்ணியவதிகள் நடுவீட்டி லொன்று, பிள்ளையாரண்டை ஒன்று, சூரியனண்டை ஒன்று, பொங்க லடுப்பண்டை ஒன்று, ஒவ்வொரு படையலிலை யண்டையிலும் ஒவ் வொரு தேங்காய் உடைக்கவேணு மென்று பலவந்தம் செய்கிருர் கள். தேங்காய் விலை தெரியாமலும், உடைத்த தேங்காய்களை உப யோகிக்கும் விதமறியாமலு மிருக்கிற நமது நாட்டுப்பெண்களுக்கு ஊர்மோசங்களாயினும் தெரிந்திருக்க வேண்டியது அவசிய மல் லாவா?

## 59. பகல் கூத்தாடிகள் வேட்டை.

வண்ணார், வள்ளுவர், வைணியர் முதலியவர்களும் ஜாதிகெட்ட சங்கமர்களும் சென்னை முதலிய பெரிய பட்டணங்களின் அருகாகாமையிலுள்ள மைதானங்களில், அல்லியரசாணி நாடகம், சித்திராங்கத நாடகம், நீலிநாடகம், கிருஷ்ண விலாசம் முதலிய கூத்துக்களைப் பகற்காலங்களில் இரண்டுமணிக்குமேல் ஓர் ஆண்வேஷமும் ஒரு பெண் வேஷமும் ஓர் அகசியக்கார வேஷமும் கட்டி ஆடுவார்கள். இவர்கள் பெரும்பாலும் ஆண் பெண் மோகிக்கும் பாகங்களில் தருக்கமான இடத்தில் ஆரம்பித்து ஆடுவார்கள். அச்சமயம் அகசியக்காரன் காட்டும் நடிப்பு யோக்கியமான பெண்களும் கெட்டுப் போகக்கூடிய நடிப்பாகவிருக்குமாகையால் சாதாரணப் பெண்களுக்கெல்லாம் அது மிகவும் பிரியமாய் இருக்கும். அனேக இளவயதுள்ள கைம்பெண்களும், "அன்னமோ ராமச்சந்திரா" என்று வேலைக்குப் போய்விடும் புருஷர்களின் மனைவிகளும், கழுகுகளானவை சுகந்த பரிமளத்தோடு கூடிய வஸ்துக்களையெல்லாம் விட்டுத் துர்நாற்றம் வீசும் அழுகிய பிணங்களையே மோப்பம் பிடித்து அவாவுதல் போல் நாளைக்கு இன்ன இடத்தில் இன்ன நாடகமென்பதை முன்பே தெரிந்துகொண்டு அங்கே போய்க் காத்திருப்பார்கள்.

சில பெண்கள் தமது புருஷர்களுக்குக் கொதித்த ரசமும் பருப்புத்துவையலும் பத்தியமிருப்பவர்களுக்கு வைப்பதுபோல் வைத்துத் துட்டை மிகுத்தி வகை வகையாகச் சமையல் செய்து எடுத்துக் கொண்டுபோய்க் கூத்தாடிகளுக்குப் போடுவார்கள். சில பெண்கள் மிளகாய்ச் சீட்டு, பாக்குச் சீட்டு, உலையரிசியில் பிடியரிசிச் சீட்டுகளும் போட்டுச் சேர்த்த காசை ரொட்டியிலும் வாழைப்பழத்திலும் அரைக்கால் ரூபாய் அல்லது கால் ரூபாய்களை வைத்துக் கொடுப்பார்கள். சிலர் கைக்கொண்ட வெற்றிலைப் பாக்கு வைத்துக் கொண்டு கூத்தாடிகேட்கும் சமயத்தை எதிர்நோக்கி இருப்பார்கள். தான் தோன்றி தம்பிரான்மார்களைப்போல் நடக்கும் பெண்கள் அந்தக் கூத்தாடிகளை நேரே தமது வீட்டிற்கே வரும்படி செய்துகொள்வார்கள். வெட்கம் கெட்டு வெளிப்பட்ட முண்டைக்கு முக்காடு ஏதுக்கடி ? குதும்பாய் முக்காடு ஏதுக்கடி ?" என்றபடி, சிலர் பகிரங்கமாய்க் கூத்தாடிகளுடன் சேர்ந்தும் வருவார்கள். இப்படிச் சீர்குலைந்த பெண்கள் கடைசியில் காரியுமிழக் கால்பணத்திற்கு முத

வாமல் தெருவில் நின்று தேங்கி அலேவார்கள். இந்தப் பாவிகளான பகல் கூத்தாடிகளால் நாடகங்களின் உண்மை நோக்கங்கள் ஒளி மழுங்கிப் போவதன்றிச் சமுசாரியான பெண்களும் அவிசாரிக ளாய்த் துர்நடத்தைக் குட்படுகிருர்கள். ஆங்காலமெல்லாம் அவி சாரியாகி "சாங்காலத்தில் சங்கரா சங்கரா" என்பதுபோல் எத்த னேயோ பெண்கள் பிற்காலத்தில் தெருவில் நின்று தேங்கி யழுகிருர் கள். பார்லிமெண்டு ஸ்தானத்திற்குப் பட்டினி அடம் சாதிக்கிற ஆங்கிலேய ஸ்திரீகளுக்கும் நம் நாட்டு மூடப் பெண்களுக்கும் எவ் வளவு வித்தியாச மிருக்கிறதென்பதை எந்த சாஸ்திர நிபுணர்களும் சொல்ல வல்லவராகார்.

## 60. பலவித வர்த்தகர்களின் பரிபாஷை அல்லது குழூஉக்குறி

| ரூபாய் விவரம். | ஜவுளிக் கடை | பூட்டுக் கடை கோமுட்டிகள். | மதுரை சௌராஷ்ரா. | மதுரை சௌராஷ்ரா. | ஜவுளி புடவைக் கடை. | ஜவுளி கடைப் பொது. | ஆட்டு மண்டி. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மதி | சேவு | பாங்க் | பீ | நபி | சா | பண்டி |
| 2 | விளை | ராயம் | அடைகா | லா | டிமி | தோ | எசப்பு |
| 3 | குணம் | உத்தரம் | பவுஞகா | லே | சொளம் | திரிவான்டே | சூலம் |
| 4 | சுருதி | பனம் | அக் | யா | குழிப்பி | பாத்தான்டே | நடவா |
| 5 | சரம் | மூலம் | சாவாங் | லீ | கிழம் | குளசி | செய் |
| 6 | மதம் | தீபனம் | பவுரேடு அக் | மா | நயம் | கிருதி | சுரூபு |
| 7 | திரி | மராம் | பபுஞேடு | வா | பெழும் | பிச்சு | சத் |
| 8 | கிரி | தாமம் | கு அக் | நா | கிரி | வலவாண்டே | அட்டு |
| 9 | ம்ணி | தீமசம் | | தை | மணி | தாழாண்டே | நவ் |
| 10 | தசம் | காலம் | அடை அக் | தூ | சிணி | புலிமி | கடப்பா |
| $\frac{1}{8}$ | பூ | | அடகா காணி | | தூஞை | | |
| $\frac{1}{4}$ | பிஞ்சி | தாபிதெலுபு | சாவாங் காணி | | திங்கு | | |
| $\frac{1}{2}$ | தங்கம் | நகலிதெலுபு | அடகா பரன் | | சாண்ஞே | | |
| $\frac{3}{4}$ | பழம் | | பவுஞகா பான் | | தரம் | | |
| ரூபா அஞை | வெள்ளிஞை | தெபுலு | | | | | |
| குறையப்பார் | பதியப்பார் | சீவு | | | | | சூசி செப்பு |
| அதிகம்-பார் | மூடுகா-பார் | | | | | | பெட்டி செப்பு |
| விலை வைத்துச்சொல் | சிவன் தாம்பிரம் | | | | | | மன மூலு கு சுகோ |

அஷ்டைஸ்வரியம் பெற்று மேலோங்கிவருகிற மேஞட்டார்கள் பலவித வியாபாரம்செய்தபோதிலும்அவர்கள் அளவிலாவது,எண்ணிக்கையிலாவது,

எடையிலாவது, பிறர் குறை கூறுவண்ணம், விலையிலாவது சரக்குகளிலாவது, ஒருவித மோசமுமில்லாமல், ஒரேவிதமாய்க் கொடுப்பார்கள். நம் நாட்டு வர்த்தகர்களோ அதற்கு முற்றும் எதிரிடையாய்க் குறுகின நோக்கமுடையவர்களாய்ப் பெரும் லாபத்தைக் கோருவதைவிட்டு மோசத்தில் சம்பாதிக்கும் அற்பலாபத்திலே அகமகிழ்ந்து போகிறார்கள்.

## 61. நாடகக்காரர்கள் படாடோப நோட்டீஸ் மோசம்

இன்றிரவு! **To - Night** இன்றிரவு!!

**ஆரம்பம் 9 மணி** **ஆரம்பம் 9 மணி**

1925ஞு டிசம்பர்மீ 16உ புதன்கிழமை

A. T. S. இராஜபார்ட் சுகசரீர சபாரஞ்சித

கோமாளி நாயுடு அவர்கள் சிறந்த மானேஜ்மெண்டுக் குட்பட்ட

**கிருஷ்ண விநோத டிராமாடிக் கம்பெனியாரால்**

சென்னை காமாட்சி தோட்டத்தில் அமைத்துள்ள

நவநீத நாடக நியான மந்திரத்தில் ஆட்டம்.

தாரை எண்ணெய் தேக்கிற பாகமும்,

துரௌபதியின் துகிலை அவிழ்க்கிற பாகமும்

முக்கிய ஆக்டர்கள்:

A. T. S. கோமாளி நாயுடு அவர்கள்—நிகரற்ற சந்திரன்

பரதநடன சரசரஞ்சித மனமோகன டி. வி. கே. தர்மலிங்கம் பிள்ளை [சாதுரிய தாரை

இராஜபார்ட் ஆனந்த அதிமோக சி. யம். சிதம்பர ஆசாரி—அழகு.

ஜெகத் பிரகாச க. கா. கீ. சாமிநாதம் பிள்ளை

பிரசண்ட சாமார்த்திய விதூஷகன்.

மற்ற ஆக்டர்கள் சமயோசிதம்போல் நடிப்பார்கள்.

**முக்கிய அறிக்கை.**

இந்த சரித்திரங்களை அநேகர் நடத்தி யிருப்பினும் எமது ஆக்டர்களைப்போல் ஒருவரும் நடத்தாரென்பது திண்ணம்! திண்ணம்!! திண்ணம்!!! நோட்டீஸ் படாடோபமாய்ப் போடவில்லை என்பதாக யோசிக்க வேண்டாம். எமது கம்பெனி எல்லாருக்கும் தெரிந்ததுதானே என்று நாங்கள் விசேஷமாய் எழுதவில்லை, இக்கம்பெனி

யானது ரங்கோனுக்குச் செல்வதாயிருந்தும் துர்சாதனன் திரௌபதியினுடைய சேலைகளை அவிழ்க்கிற பாகத்தையும் சந்திரனுக்குத் தாரை எண்ணெய் தேய்க்கிற பாகத்தையும் பார்க்கவேண்டு மென்று அவாவுற்ற பல கனவான்கள் நேரிலும் கடித மூலமாயும் கேட்டுக் கொண்ட விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் பொருட்டு மேல்கண்ட சரித்திரங்களை இன்று ஸ்பெஷலாய் நடத்தலாயிருேம். இது சமயம் தவறினல் மற்றெப்போதும் வாய்க்காதென்பதை ஸ்திரமாய் நம்பி முன்னடியே டிக்கெட் பெற்றுக் கொள்வது நலம். பிறகு எங்கள்மேல் பழி சொல்வதில் பயனில்லை.

டிக்கெட்டுகளின் விவரம்

| | | | |
|---|---|---|---|
| பாக்ஸ் சீட் | 2-0-0 | புருஷாள் தரை | 0-4-0 |
| 1-வது சேர் | 1-0-0 | ஸ்ரீகள் சமுக்காளம் | 0-4-0 |
| 2-வது சேர் | 0-8-0 | ஸ்ரீகள் தரை | 0-3-0 |
| 3-வது சேர் | 0-6-0 | | |

10-வயதுக்குட்பட்ட சிறுவர்கட்கு அரை டிகட் 0-1-6

ஸ்ரீகளுக்குப் பிரத்தியேகமாய் இடம் உண்டு. இடமிருக்கும் வரையில் டிக்கட்டுகள் விற்கப்படும். வாங்கின டிக்கட்டிற்கு எவ்விதக் காரணங்கொண்டும் பணம் வாபீஸ் செய்யப்படமாட்டாது.

லாகிரி, சுருட்டு முதலிய வகையராவுடன் உட்பிரவேசிக்கப் படாது. கைதட்டி கூச்சலிட்டு கலகம் செய்யப்படாது. அந்தந்த வகுப்பு டிக்கட் வாங்குகிறவர்கள் அந்தந்த வகுப்பிலேயே உட்கார வேண்டியது. இல்லாவிடில், இரட்டிப்பு சார்ஜ் வசூல் செய்யப்படும். தயவு செய்து டிக்கட் பரிசோதகர்கள் டிக்கட்டைக் கேட்கும்போது காட்ட வேண்டியது.

ஆப்தமித்திரர்களாயினும் பிரீ டிக்கட் கிடைக்கமாட்டாது.

N. B. ஆட்டமுடிவில் தாசில்தார் பார்ஸ் ஒன்று நடத்தப்படும்.

பாக்ஸ்சீட் டிக்கட்டுகள் 50-க்குமேல் விற்கும்பட்சத்தில் ஒரு வெள்ளிகெடியாரமும், 1- 2 &3 நாற்காலி டிக்கட்டுகள் ஒவ்வொன்றிலும் 100-க்கு மேல் விற்றால் ஒரு டைம்பீசும், தரை டிக்கட்டுகள் 200-க்கு மேல் விற்றால் ஒரு அரை சவரனும், லாட்டறி சீட்டுப் போட்டு எந்தெந்த நெம்பர் டிக்கட்டுகளுக்கு வருகிறதோ அவர்க

ளுக்கு அவை கொடுக்கப்படுமாகையால் அவரவர்கள் தங்கள் டிக்கட்டுகளை ஜாக்கிரதையாய் வைத்திருக்க வேண்டியது.

R. M. ரங்கசாமி நாயுடு, மானேஜர்.
A. M. சிவசிதம்பரத் தேவர், Pripriotor.
A. T. S. கோமாளி நாயுடு, ஸ்டேஜ் மானேஜர்.
T. R. M. மாணிக்க முதலியார், ஏஜண்டு.
P. T. M. சீதாராம செட்டியார், அஸிஸ்டெண்ட் ஸ்டேஜ் மானேஜர்.
T. G. N. P. Naydoo, Contractor.
R. Rugoonatha Nayager சயன்ஸ் ஆர்ட்டிஸ்.

என்று நாடகக் கம்பெனியார் மிகவும் ஆடம்பரமாய் விளம்பரப் பத்திரிகைகளை வெளியிடுவார்கள். அவர்களிலேயே சிலர் அக்கம்பெனியின் ஆக்டர்களைப் புகழ்ந்து அடியில் வருகிறபடி வேறு விளம்பரங்களைப் பிரசுரம் செய்வதுமுண்டு.

## முக்கிய கவனிப்பு

ஸ்பெஷல் ஆட்டம்! ஸ்பெஷல் ஆட்டம்!

பார்சி வர்ணமெட்டமைந்த புகழ்பெற்ற கீதம்
வேறு கம்பெனியாருக்கு நிகரற்ற நாடகம்
இது கம்பெனி இனிமை தரும்
இவர்கள் நாடகம் இந்திரனுக் கொப்பாகும்.

மாக்ஷிமை தங்கும் இச்சேத்திர வாசிகட்கோர் விஞ்ஞாபனம்:— அதாவது, இக்கம்பெனியார்கள் சென்னையில் இக்கதைகளை முன்பு நடத்தியபோது தங்களுக்கு நிகராக வேறு எந்தக் கம்பெனியாரும் நடத்த முடியாதென பகிரங்கமாக நோட்டீஸில் வெளியிட்டிருந்ததைப் பார்த்து நானும் என் சிநேகிதருமாகச் சென்று அவைகளில் ஏதாவது குறைகளிருக்கும் பட்சத்தில் "நீங்கள் நோட்டீஸில் அப்படி எழுதத்தகாது" என்று அந்தக் கம்பெனியாரைத் தடுக்கவே திடம் கொண்டு சென்றோம். அடடா! இவர்கள் சரித்திரக் கோர்வையும் நடத்திய நேர்மையும் சீன்களின் சிறப்பும் செந்தமிழ்ப் பாடல்களினிப்பும் உடைகளில் ஒளிவும் கண்ணிமை கொட்டாமல் நிஸப்தமாகப் பார்த்து களித்த ப்ரஜைகளின் நேர்மையுங் கண்டு நாங்கள் நாணமுற்றதன்றி நாங்கள் கொண்டிருந்த கருத்தையும் மாற்றிக் கொண்டு குதூகல மடைந்தோம். அன்று நாங்கள் பரிசளிக்க யோசித்து அவ்விடமே மறுபடியும் இக்கதையை நடத்த சந்தர்ப்பப்படாமையால், வெளியூருக்குப் போகச் சித்தமானவர்களையும் நிற்கச்

செய்ததோடு இன்னமவர்களிட மிருக்கும் மிக்க மேன்மை தங்கிய பார்ஸி கதைகளையும் பார்த்து யாங்கள் திருப்தி யடைவதைப் போலவே இங்குள்ளவர்களும் கண்டதிசயித்து மேல்படி கம்பெனி யார்களை யாசீர்வதிப்பார்களென்றே அதேகதைகளை முதலிங்கு வைத்து மேற்கூறியவருக்கு பரிசளிப்பதையும் பார்க்க யாவரும் விஜயஞ்செய்வீர்களென்று பிரார்த்திக்கின்றனம்.

இனியொரு முறை இதைப்பார்க்க விரைவில் வாய்ப்பதரிதுஅரிதாம்

உண்மை விளம்பிகள்.

சில நாடகக் கம்பெனிக்காரர்கள் இவ்வாறு விளம்பரங்களின் மூலமாய்ப் பொதுஜனங்களை ஏமாற்றுவது மாத்திர மல்லாமல் பரிசுகளையும் கம்பனிக்கே கொடுப்பார்கள். இதுநிற்க தற்காலம் நாடகங்களும், பயாஸ்கோப்களும் எங்கேபார்த்தாலும் கூட்டங் கூட்டமாய்க் கிளம்பிப் பல ஏழைக் குடும்பங்களை அழித்து வருகின்றன. 'குடல் கூழுக்கழுகிறது; கொண்டை பூவுக்கழுகிறது' என்னும் பழமொழிக்கிணங்க ஏழைகளில் பலர் தமது வயிறு நிறையச் சோறுண்ணாவிட்டாலும் நாடகங்களைப் பார்ப்பதில் மிகவும்ஆவலுள்ளவர்களாய் இருக்கிறார்கள். நாடகங்களைப் பார்ப்பவர்கள் தமது பணத்தை வீணில் செலவழிப்பது'மாத்திரமின்றி அன்று இரவெல்லாம் கண்விழித்து மறுநாள் முழுதும் வேலையை ஒழித்துச் சோம்பேறிகள் போல் நிலைகுலைந்து நிற்கிறார்கள். இதைப் புத்திசாலியான ஒவ்வொரு உழைப்பாளியும் உன்னிப்பார்த்தால் நாடகத்துக்காகக் காசைச் செலவழிப்பது மாத்திரமின்றித் தன் சுகத்தையும் கெடுத்துக்கொள்ள மாட்டான்.

ஐயோ! நாடகம் ஒருரூபாய், முக்கால்ரூபாய், அரைரூபாயோடு போகிறதா? நாடகத்துக்குப் போகிறவர்கள் இரவல் சரிகைதுபட்டா வாங்கி உடுத்திக் கொண்டால் ஜட்காவண்டி இல்லாமல் கால் நடையாய்ப் போகமுடியாது. எப்படியாவது (செண்ட்) வாசனைத் திரவியம் கட்டாயம் வேண்டியது. அன்றையதினம் வீட்டில் அடுப்புப் புகைவது கஷ்டமாயிருந்தாலும் சோடா, லிமினெட் முதலிய பானவகைளுக்குக் கடனாவது வாங்கவேண்டும். கேவலம் பட்டிக்காட்டானைப் போல் போனால் பைகாட் சிநேகர்களும் பட்டுப்புடவை லேடிகளும் ஏளனஞ் செய்வார்களல்லவா? வரவு வருமுன் செலவு வந்து காத்துக் கொண்டிருக்கிற இந்தக் கஷ்டமான காலத்தில் காசைக் கரியாக்கி

ஞல், இனி வரும் எதிர்காலத்தை எப்படிக் கழிப்பது? அப்போது பேசப்போகிற ஞானத்தை இப்போதே கவனிக்கக் கூடாதா?

## 62. குறவர் கால் சவரன் விற்பதாய் மோசம்

குறவன்:—(மிகவும் ரகசியமாய்) ஐயா! காதுவைத்த அறுபது கால் சவரன்கள் என்னிடமிருக்கிறது. அவைகளை ரூபா இரண்டரை வீதம் விற்றுக் கொடுத்தால் எனக்கு ஏதாவது கமிஷன் கிடைக்கும். (பேசும்போது சுற்றும் முற்றும் பார்த்து மிரள மிரள விழித்து) இது சங்கதி வெளியில் தெரியக்கூடாது. சாணிக்குளத்துக் குறவர்கள் நெல்லூர் வீரண்ணரெட்டி வீட்டில் கொள்ளையிட்டு இந்தச் சவரன் களைக் கொண்டு வந்திருக்கிறுர்கள். இன்னம் வேண்டியநகைகளெல் லாமிருக்கின்றன. உமக்கு நல்ல பத்தியம் கிடைக்கும். பத்திரம்! பத் திரம்!! வெகு உஷாரா யிருக்கவேண்டும்.

முனிசாமி செட்டி:—சரி; விலை அதிகமாய் இருக்கிறது. கொஞ் சம் பார்த்துச் சொல்.

குற:—விலை என்ன சொல்கிறது? தெரிந்த விலைதானே; காசு ஒன்று குறைந்தது ரூபா மூன்று விற்கிறது, எங்களுக்கு ரூபா இரண்டரை வீதம் கொடுத்து விடும். மேல்கொண்டு வருவதை நீர் பார்த்துக்கொள்ளும். வெளியில் மாத்திரம் சங்கதி தெரியக் கூடாது நீர் வாங்காமற் போனாலும் போகுது. காபூராய்விடும்.

முனி:—சரி; எடுங்கள் காசுகளைப் பார்க்கலாம்.

குற:—இதோ இருக்கிற இந்த மாதிரிதான். (இரண்டொரு காதுவைத்த கால் காசுகளைக்காண்பித்து) மற்ற காசுகள் வீட்டிலிருக் குது. ரூப தயாராயிருந்தால் போய் கொண்டுவந்து விடுகிறேன். நீர் எங்க வீட்டுக்கு வந்தால் காபுராவாய் விடும். சேவகப் பசங்கள் சுத்திக்கொண்டே யிருப்பார்கள். ஒருவேளை அகப்பட்டுக்கொண் டால் உமக்கும் மேஷாணம் வரும். ஆகையால் மொத்தம் ரூபாய் களைத் தயார் செய்து கொண்டு நாளைப் பகல் பன்னிரண்டு மணிக்கு மேல் பீப்பில்ஸ் பார்க் தோட்டத்திற்கு வாருங்கள். உம்முடன் கும்பலை யிட்டுக்கொண்டு வாாமல் நீர் மாத்திரம் தோட்டத்துவட வண்டை கேட்டுப்பக்கம் வந்திரும். காசுகளைக் கொடுத்துவிட்டு ரூபாயைப் பெற்றுக் கொள்கிறோம். அவ்வேளை ஜனங்கள் நடமாட்ட மிருக்காது; சல்லீசாய் போகும். இப்போது ஏதாவது ஒன்றிரண் டிருந்தால் கொடுத்துவிட்டுப்போங்கள் நாளை கணக்கில் பிடித்துக்

கொள்ளுங்கள். என்னோடு வந்திருக்கிற குறவர்கள் கள்ளு செலவுக்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். இன்னொரு சங்கதி; நாளைக்கு ரூபா ஒன்றிரண்டு குறைந்தால் அவர்கள் கேட்கமாட்டார்கள். உமக்கு வேண்டியது இவ்வளவென்று இப்போதே சொல்லிவிடும் அவ்வளவு மாத்திரம் கொண்டுவருகிறோம்.

முனி:—உங்களிடம் அறுபது காசுகளிருப்பதாய்ச் சொன்னீர்களே; அவ்வளவும் கொண்டு வாருங்கள். காசு ஒன்றுக்கு இரண்டு ரூபா வைத்துக்கொள்ளுங்கள்.

குற:—அது முடியாது. வேண்டுமானால் இரண்டேகால் ரூபாய் சொல்லிப் பார்க்கிறேன்.

முனி:—அப்பால் கால் ரூபாயா ?

குற:—சரி, உங்களிஷ்டப்படியே செய்கிறேன். என்னை மறந்து போகாதீர்.

முனி:—அதற்கென்ன ? அப்படியே ஆகட்டும்.

குறவன் போனபின் முனிசாமி செட்டி நாய் அலைகிறதுபோல் அலைந்து கைப்பதிலோ அல்லது நகைகளை அடமானம் வைத்தோ ரூபா ஒன்றுக்கு இரண்டணா வீதம் வட்டிக்கோ ரூபாய் வாங்கிக் கொண்டு மறுநாள் பகல் பன்னிரண்டுமணிக்குள் பீப்பில்ஸ்பார்க் கேட்டண்டை போய்க் காத்துக்கொண்டிருப்பான். குறவன் பானை ஓடுகளைச் சக்கரமாகச் செய்து அவைகளைக் கந்தைத்துணியில் அறுபது காசுகள் அளவுக்கு நீட்டாகக் கட்டிச் சீக்கிரத்தில் அவிழ்க்க முடியாத வண்ணம் மெல்லிய நூலால் சுற்றுமேல் சுற்றாகச் சுற்றி அடிக்கொரு முடிபோட்டுப் பதனஞ் செய்துகொண்டு தங்களுக்குள்ளாகவே போலீஸ் சேவகனைப்போல் ஒருவனைத் தயார் செய்து கொண்டு வருவான். பின்பு அவர்கள் எல்லாரும் பீப்பில்ஸ்பார்க் கேட்டண்டை வந்து முனிசாமி செட்டியை ஜாடை காட்டி அழைத்துக்கொண்டு தோட்டத்துக் கீழண்டை கழிப்பக்கமாய்த் திரும்பித் திரும்பிப் பார்ப்பதும் மிகவும் பயந்தவர்கள்போல் அபிநயங் காட்டுவதுமாய் நடப்பார்கள். அவர்கள் தயார் செய்திருக்கிற போலீஸ் சேவகன் கொஞ்சம் தொலைவில் வரப்பார்த்து, முனிசாமி செட்டியோடு பேசிப்போன குறவன் அவனை "எடு ரூபாய்" என்பான். முனிசாமி செட்டி "எடு காசுகளை" என்பான். குறவர்களில் ஒருவன் தவிர மற்றவர்கள் எல்லோரும் போலீஸ் சேவகனைப் பார்த்துப் பயந்தவர்கள்போல் மூலைக்கொருவராய் நழுவிவிடுவார்கள்.

இதற்குள் காசு முடிப்புவைத்திருக்கிற குறவன் காசு முடிப்பைச் செட்டியிடம் கொடுத்து "அதோ! போலீஸ் சேவகன் வருகிறான்; ரூபாயைக் கொடுத்துவிடு. பிறகு காசுகளை எண்ணிக்கொள்" என்று முன்னே ரூபாய் 120-ம் பெற்றுக்கொள்வான். அதன் பின்பு அவன் "நாங்கள் தொலைவிலிருக்கிறோம்; நாங்கள் சமுசயப்பட்ட ஆசாமிகளாகையால் சேவகப் பசங்கள் கண்டால் எங்களைச் சோதனை போடுவார்கள். மேலும் எங்கள் மேலேயே கண்ணாயிருப்பார்களாகையால் நாங்களிங்கே இருக்கக்கூடாது" என்று விசையாய் நடந்துவிடுவான். முனிசாமிசெட்டி முடியை அவிழ்க்கத் தொடங்குவதற்குள் சேவகன் அவன் அருகில் நெருங்குவான். காசு முடிப்பை மறைப்பதே செட்டிக்கு வெகு கஷ்டமாய் முடியும். இதற்குள் போலீசு சேவகன் " நீயார்? இங்கே இரண்டு மூன்று குறவர்களிருந்தார்களே அவர்களெங்கே?" என்று செட்டியைக் கேட்பான். அவன் தைரியஸ்தனாயிருந்தால் "அது யாரோ? எனக்குத் தெரியாது" என்று சொல்லத்தான் முடியும். பயஸ்தனாயிருந்தால் நாவறண்டு பேசக்கூடச் சக்தியின்றி வாய் குளறும் நிலைமையிலிருப்பான். சேவகன் குறவர்களைப் பார்க்கும் பாவனையாகச் சுற்றிச் சுற்றிப் பார்த்துக்கொண்டே போய்விடுவான்.

சேவகன் போனதும், முனிசாமி செட்டி 'தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியம்' என்று கொஞ்சம் தைரியம் கொண்டு சீக்கிரமாய் முடிப்பை அவிழ்க்க முடியாமல் பல்லால் கடித்து அவிழ்த்துப் பார்ப்பான். உடனே அவனுக்கு அழுகையும் துக்கமும் ஆங்காரமும் ஓங்காரமும் ஏககாலத்தில் வந்துவிடும். அதனால் அவன் நடக்கமுடியாமல் ஓட்டின் பில்லைகளைப் பார்த்துப் பார்த்து வயிறெரிவான். குறவர்கள் போனாலும் போகிறார்கள்; சேவகன் எங்கே தன்னைப் பிடித்துக்கொள்ளுகிறானோ? வென்று அவன் மிகவும் பீதியோடு தன் வீடுவந்து சேர்வான். பாவி மகன்! வருஷம் பத்தானாலும் அவன் இதை ஒருவரிடமும் சொல்லவே மாட்டான். சொன்னால் வெட்கம், அழுதால் துக்கம், என்னசெய்து தொலைக்கிறது? ஐயோ பாவம்! 'தாம் ஏமாந்த மாதிரி வேறு ஒருவரும் கெட்டுப்போகா வண்ணம் இதை வெளியில் சொல்லவும் வெட்கப்படுவார் செட்டியார். இப்படிப்பட்ட புண்ணியவான்கள் இன்றைக்குச் சுதேசியத்தைப் பற்றிப் பிரசங்கம் நடக்கிறது என்றால், "நமக்கென்னத்திற்கு? பிழைக்கிற வேலையைப் பார்க்காமல் 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?' " என்று பரிகாசம் செய்வார்கள்.

## 63. கொள்ளைப் பொருளை குறைந்த விலைக்கு விற்பதாய் மோசம்.

இம்மோசத்திற்குச் சென்னைதான் முக்கியஸ்தானம். ஆயினும் இதை அடுத்துள்ள இடங்களும் அதற்கு ஏற்றவையே. இம்மோசக் காரர்களில் ஒருவன் ஏமாறும் ஆசாமிகளின் ஊர், பேர் முதலிய வற்றை முன்பே விசாரித்து அறிந்துகொள்வான். பின்பு அவன் சென்னையில் பணவாசை பிடித்தலையும் சில அவிவேகிகளிடம் போய் அவர்களைப் பின்வருகிறபடி ஏமாற்றத் தொடங்குவான்.

**வெங்கடரமணன்:**—ஐயா! முதலியாரே ரூபா இரண்டாயிரம் தாளும்படியான நகைகள் ரூபா அறுநூறுக்கு வருகிறது. அது வந்தவழி எனக்குத் தெரியும். நமக்கேதாவது கொடுக்கும் பட்சத்தில் நான்கூட இருந்து அதை முடித்து வைக்கிறேன். நம்மைவிட்டு அது வெளியில் போகாது. முதலில் நமக்கு இவ்வளவென்று ஏற்பாடு செய்தால் உங்களிஷ்டம்போல் அதை முடித்துவைக்க என்னால் முடியும். 'குடல் அறுந்த நரி எங்கே ஓடப்போகிறது?' என்ன சொல்லுகிறீர்? இராகவ முதலியாரே!

**இராகவ முதலி:**—என்ன சமாசாரம்? விவரமாய்ச் சொல்லும். பின்பு நான் அதைக் கவனிக்கிறேன்.

**வெங்க:**—என்ன சொல்லுகிறது? நமது மாரிபத்தில் ஒரு விஷயமாய்ச் சில நகைகள் வந்திருக்கின்றன. மிகவும் குறைச்சலாய் அடித்துவிடலாம்.

**இராகவ:**—இரண்டாயிரம் ரூபாய் நகைகளை ரூபா அறு நூறுக்கு எப்படிக் கொடுத்துவிடுவார்கள்? நம்பத் தகுந்ததா யில்லையே; திருட்டு நகையோ!

**மோசக்:**—திருட்டு நகை கிருட்டு நகை; உமக்கென்ன? அதற் கெல்லாம் நானிருக்கிறேன். எதற்கும் முன்னே நகையை மதிப்புப் போட்டுக் கொள். ரூபா இரண்டாயிர மிருந்தால், ரூபா அறுநூறு கொடுத்துவிட்டு நீ வீட்டுக்குக் கொண்டு வந்துவிடு. மற்ற சமாசார மெல்லாம் உனக்கென்னத்திற்கு?

**இராகவ:**—உங்களிஷ்டம்போல் செய்யுங்கள், திருட்டு நகையா யிருந்தால் வம்பாச்சுதே. அதற்காகத்தான் பார்க்கிறேன்; பொல் லாத வெளையால் அகப்பட்டுக் கொண்டால் என்ன செய்கிறது? நீங்களே சொல்லுங்கள்.

மோசக்:—இது எத்தனை கை மாறிப்போச்சுது தெரியுமா? இப்போ என்னிடம் விலைக்கு வந்திருக்கிறது? முதலில் உன்னைக் காட்டுவேனே? அது எனக்கே மோசமல்லவா? நானும் இன்னொருவனு மிருந்து முடித்து வைக்கிறோம்; முன்னே நமக்கு இவ்வளவென்று முடிவாகட்டும்; அதன் எல்லா சங்கதியும் பேசலாம்.

இராகவ:—இடம் எங்கே? யார் நகை? என்ன சங்கதி?

மோசக்:—இடத்தைப்பற்றி உமக்கு அவசியமில்லை. அதுவும் இந்த டோல் கேட்டுக்குள் இல்லை. அப்படி யிருந்தால், இன்னம் கூடவா? எப்பவோ காரியம் முடிந்து போயிருக்குமே. உமக்கிஷ்டமிருந்தால் நமக் கிவ்வளவென்று இப்போதே சொல்லிவிடும். மற்ற சங்கதி உமக்கு வேண்டியதில்லை.

இராகவ:—உமக்கு ரூபா இருநூறு கொடுக்கிறேன்; எப்படியாவது பாரும்.

மோசக்:—இரண்டாயிரம் ரூபா நகைகளை ரூபா அறுநூறுக்கு வாங்கிக் கொடுத்தால் எனக்கு இருநூறு ரூபாய் கொடுக்கப் போகிறீயா? ஐயோ பாவம்! கரும்பு தின்னக் கசக்குதுபோ லிருக்கிறது.

இராகவ:—இன்னம் அம்பது மேலே கொடுக்கிறேன்; பார்த்துச் சரிப்படுத்து. ஒருவேளை மேஷாணம் வந்தால் எவ்வளவு பணம் செலவாகும்? அதையெல்லாம் கவனிக்க வேண்டாமா?

மோசக்:—சரி. ரூபாயை எடுத்துக்கொண்டு புறப்பட்டுப் போவோம். உனக்கு எல்லாம் சரிவர இருந்தால் இன்னம் ஏதாவது என்னைப் பார்த்துக்கொள்.

இவர்கள் இருவரும் புறப்படுகிறதற்கு முன்பே தக்க நபர்கள் ஆவடியைப் போன்ற ஓர் ஊரில் ஒரு தனித்த இடத்தில் கிலிட்டு நகைகளடங்கிய முடிப்பு ஒன்று தயார்செய்து வைத்துக்கொண்டிருப்பார்கள். தவிர, அவர்களில் ஒருவன் போலீஸ் இன்ஸ்பெக்டர் போலவும் வேறு இரண்டுபேர் போலீஸ் கான்ஸ்டேபில்கள் போலவும் வேஷம் போட்டுக்கொண்டு அங்கே தயாரா யிருப்பார்கள். இராகவ முதலியாரும் வெங்கடாமணனும் ஆவடியிலிறங்கி அங்குத் தயார் செய்திருக்கிற தனித்தவிடத்திற்போய் உட்காருவார்கள். உடனே அங்குள்ள மோசக்காரர்கள் அவர்கள் இருவர்க்கும் இளநீர், வெற்றிலைப் பாக்கு முதலியவை கொடுத்து அவர்களை உபசரிப்பார்கள். இதற்குள் வேறு இரண்டொருவர் சுமார் இரண்டாயிரத்திற்கு மதிப்புள்ள சரியான நகைகளைக் கொண்டுவந்து காட்டுவார்

கள். இராகவ முதலி 'திருட்டு உடமைக்கு மத்தள மாக்கால்' என்றபடி, அவைகளை ஒன்றும் பாதியுமாய் மதிப்பிட்டு "ரூபா நானூறு பெறும்; பழைய நகைகளாய் இருக்கிறதால் இன்னும் ஐம்பது கொடுக்கலாம், என்ன சொல்லுகிறீர்கள் ?" என்பான். உடனே வெங்கட்ரமணன் "இராகவ முதலியாரே! வீண்பேச்சு என்னத்திற்கு?" ரூபா அறுநூறு கொடுத்துவிடு. நான் முன்பே முடிவுசெய்திருக்கிறேன்" என்றதும், அவர்கள் ரூபாயை எண்ணி வாங்கிக்கொண்டு முன்பே தயார்செய்திருக்கிற கிலிட்டு நகை முடிப்பை முதலியாரிடம் கொடுப்பார்கள். வெங்கடரமணன் நகை விற்றவர்களிடம் தாருக்காக மல்லாடி வழக்காடி ரூபா பத்துப் பதினைந்துவரையில் இராகவ முதலியார் எதிரிலேயே பெற்றுக்கொள்வான். பின்பு அவன் முதலியாருடன் ரயிலுக்கு மாலை ஆறுமணிக்குமேல் பிரயாயாணப்பட்டு வருவான்.

ரயிலுக்கு வரும் வழியில் மைதானமாக உள்ள இடத்தைப் பார்த்து நாலைந்துபேர் வந்து இராகவ முதலியாரையும் வெங்கடரமணனையும் நன்ருய் அடித்து அவர்களிடத்திலுள்ள நகை முடிப்பையும் ரூபாயையும் பிடுங்கிக்கொண்டு போய்விடுவார்கள். சிறிது நேரம் சென்றதும் வேஷம் போட்டுக்கொண்டிருக்கிற போலீஸ் இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டேபில்களும் அங்குவந்து அவர்கள் இருவர்களையும் பிடித்துக்கொண்டு "நீங்கள் யார்? என்ன சங்கதி? இங்கே கேப்மாரிகள் வந்திருக்கிருர்களென்று போலீஸ் சூப்ரிண்டெண்டுக்குப் பிடீஷன்மேல் பிடீஷன்கள் வந்துகொண்டிருக்கின்றன" என்று அவர்களை வெருட்டுவார்கள். அப்போது வெங்கடரமணன் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து "ஐயா! நாங்கள் மாடு பிடிப்பதற்காக மெய்யூர்த் தேவந்தவாக்கம் போனேம். மாடுகள் சரியாய்க் கிடைக்கவில்லை. நாங்கள் திரும்பி வரும்போது சில திருடர்கள் எங்களை அடித்து எங்கள் கையிலிருந்த ரூபாய்களைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள்" என்பான். உடனே போலீஸ்காரர்கள் "நீங்களிருவரும் வெங்கல் போலீஸ்டேஷனுக்கு வரவேண்டும். வெகு நாளாய் இந்த இடத்தில் இந்த காபரா நடக்கிறபடியால் நீங்கள் வந்தால் புலம் விசாரிக்கலாம். அந்த நபர்கள் உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்பார்கள். அதற்கு இராகவ முதலியார் "ஐயா! என் மேல் துணிதான் போய்விட்டது. வேறு ஒன்றும் போகவில்லை" என்று போக்குச் சொல்லித் தன்னைவிட்டால் போதுமென்று

போலீஸ்காரரைக் கேட்டுக்கொள்வான். பின்பு அவர்கள் இருவரும் ரயிலுக்கு வருவார்கள். அப்போது வெங்கடரமணன் இராகவ முதலியாருடன் வாய்விட்டு அழாத குறையாய் வெகுவாய் விசனப் பட்டு அவருடன் வர மனதில்லாதவனைப்போல் நடித்து அவரை மாத்திரம் ரயிலேற்றி அனுப்பிவிடுவான்.

அதன் பிறகு மோசக்காரர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு இவ் வளவென்று பங்கிட்டுக்கொண்டு நகை கொடுத்தவர்கட்கும் இவ்வள வென்று கொடுத்துவிடுவார்கள். இந்தத் துரோகிகள் இவ்வாறு ஒவ் வொரு வருஷமும் நல்ல கந்தாயம் அடிப்பார்கள். இப்படி ஏமாறத் தக்கவர் வருஷத்தில் இரண்டொருவர் கிடைத்தால் போதுமானது. ஆனால், இவர்கள் ஓரிடத்தில் நிலையாய் இருக்கமாட்டார்கள். பருத் திப்பட்டு, வெள்ளேரித் தாங்கல் முதலான விடங்களுக்கு மாறிக் கொண்டே யிருப்பார்கள். வருஷத்தில் நூறு இருநூறு கிஸ்தி கட் டக்கூடிய பெரிய குடும்பிகளும் இதில் சேர்ந்திருப்பார்கள். ஐயோ பாவம்! இராகவ முதலியார் இனி என்ன செய்வார். கிலிட்டு நகைக ளாயினும் தம்மிடமிருந்தால், அவர் தாம் மோசம் போனதைப் போலீசுக்குத் தெரிவிப்பார். அவைகளும் இல்லை. தவிர, அந்த ஊர் போலீஸ் அதிகாரிகள் தம்மை விசாரித்தபோது தமது மேல் துணி மாத்திரம் போய்விட்டது என்று தானே அவர் தெரிவித்தார். அத னால் அவர் இதை வெளியில் சொல்லவும் வெட்கப்பட்டு சும்மா இருப்பார்.

---

## 64. நகை அடகுவைக்கும் தரகரிப்பெண்கள் மோசம்.

வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்யும் மதிகெட்ட பெண்களில் சிலர் தமது நகையை எடுத்துக்கொண்டுபோய் "இதன்மேல் இரண்டு ரூபா தேவை" என்று தமக்குத் தெரிந்த ஒரு பெண்ணை மிகவும் கெஞ்சிக் கேட்பார்கள். அந்த மோசக்காரப் பெண் "அந்த மார் வாடி எனக்குத் தெரியும். சொல்ப வட்டிக்குத்தான் நான் அவ னிடம் பணம் வாங்குகிறது. நகைகள் தாளிக்கையில்லாவிட்டாலும் என் விஷயத்தில் நகை மதிப்பை அவன் கவனிக்கிறதில்லை" என்று பட்டாங்கு படித்து இரண்டு ரூபாய் வாங்கிவரச் சொன்னால் மேலே இரண்டு ரூபா தனக்கு வேறே வாங்கிக்கொள்வாள். நகைக்குச் சொந்தக்காரி வட்டியு முதலும் கொடுத்து நகையை மீட்டுவரச் சொன்னால் தான் ரூபா சௌகரிக்கிற வரையிலாவது இன்னொரு

வருக்கு நகையின்மேல் ரூபா வாங்குகிற வரையிலாவது "மார்வாடி வூருக்குப் போயிருக்கிறான்; அவன் வரட்டும்; வாங்கிக் கொடுக்கிறேன்" என்று காலஹரணஞ் செய்து வருவாள். நகைக் குடையவள் தெருச் சண்டைக் கிழுக்கிற வரையில், அவள் அந்த நகையை மீட்டுக் கொடுக்கமாட்டாள். அல்லது "அந்த மார்வாடி முகமறியாதவன் போல் இன்னொரு பாபத்தில் நான் கொடுக்கவேண்டியதற்காக இதைப்பிடித்து வைத்திருக்கிறான். இந்தச் சமயம் உன்னிடம் ரூபா இருந்தால் கொடு; வருகிற சயில் சம்பளத்திற்குப் பூமேல் வைத்து வட்டியுடன் கொடுத்து விடுகிறேன். இந்த இழவுக்குத்தான் நான் யாருக்கும் ரூபா வாங்கிக் கொடுப்பதில்லை. அப்பவே என்னால் முடியாதென்றால் இந்தச் சங்கடமெல்லாம் வாராதே; அப்போ அம்மா! தாயி! என்று வாங்கிவரச் சொல்லி இப்போ மென்னியைப் பிடித்தால் என்ன செய்கிறது?" என்று வெகுவாய்ச் சலித்துக் கொள்வாள். இப்படி இவர்கள் ஒருவரை அறியாமல் மற்றொருவரிடம் வாங்கிக் கொடுத்துப் பேதைப்பெண்களை ஏமாற்றி வருவார்கள்.

சில சமயங்களில் இந்த மோசக்காரிகள் "அங்கே கலியாணம், இங்கே சீமந்தம்" என்று பிறர் நகையை இரவல் வாங்கிக்கொண்டு போய் அவைகளை அடகுவைத்து விடுவார்கள். அன்றியும் இவர்கள் மாமியின் கீழும் தாயின் கீழுமிருக்கிற அறியாப்பெண்களிடம் பசப்பு வார்த்தைகள் பேசி அரிசி, மிளகாய், புளி முதலியவைகளை வாங்கிக் கொண்டுபோவார்கள். அல்லது நான் இருபத்தைஞ்சு ரூபா சீட்டுப் பிடிக்கிறேன்; முதல் சீட்டு நான் எடுத்துக்கொண்டதும் இரண்டாவது சீட்டு உனக்குக் கொடுக்கிறேன்; நீ மொத்தமாய்க் கொடுக்காவிட்டாலும் கையில் கிடைத்தவரையில் கொடு; பெற்றுக் கொள்ளுகிறேன். ஒரு சீட்டு எடுத்து ஒரு பட்டைக்கொலுசு பண்ணிப் போட்டுக்கொள்" என்று சிறுகச் சிறுகத் திருடும்படி போதனை செய்து ஏமாற்றிப் பிடுங்கிக்கொண்டு போய் மோசஞ் செய்வார்கள் இத்தகைய மோசக்காரப் பெண்பிள்ளைகளால் ஏழைக் குடும்பங்களிலுள்ள அறியாப் பெண்கள் பலர் ஏமாந்துபோய் 'உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனிகள்போல்' பிறரிடம் சொல்லவும் பயந்து சும்மா இருந்து விடுவார்கள்.

## 65. டாபர்கள் மோசம்

சென்னை முதலிய இடங்களில் கட்டுக் காயிதாவாக விருக்கப் பட்ட தடிப் பெண்களுக்கும் முட்டாள் பிள்ளைகட்கும் எல்லாக் காரியத்தையும் நடுவிலிருந்து முடித்து வைப்பதற்குக் கைக்கூலி வாங்கும் டாபர்கள் இல்லாமல் முடியாது. இந்த டாபர்கள் அவர்கள் இருதிறத்தரையும் தமது நெறியிலிருந்து தவறும்படி செய்வதன்றி, "பெண் இன்னது வேண்டுமென்கிறாள்" என்று புருஷர்களிடத்தும் "புருஷன் இன்னது வாங்கி வரச் சொன்னான்" என்று பெண்களிடத்தும் தமக்கு வேண்டியவைகளைக் கேட்டு வாங்கிக் கொண்டு போய் அவர்களை மோசஞ்செய்வார்கள். ஒரு சமயம் அவர்கள் இதைத் தெரிந்து கொண்டாலும் இவர்களை நேரே பகைத்துக் கொள்ள முடியாது. ஆகையால் தங்களுடைய அந்தரங்கம் தெரியாமலிருக்கும்பொருட்டு டாபர்கள் மனங்கோணுமல் நடந்து கொள்வதில் வெகு கவனமாய் இருப்பார்கள். பெண்ணுவது புருஷனுவது இவர்கள் கேட்டதை இல்லை என்றாலும் இவர்களைக் கவனியாது ஸ்திரீ புருஷர்கள் மனமொத்துப்போனாலும் "உங்களைப்பற்றி இன்னார் இபபடிச் சொன்னார்கள்; அவர்கள் என்னவோ ஒரு மாதிரியாய்க் கேட்டார்கள்" என்று அவர்களுக்குப் பயத்தை உண்டாக்குவார்கள்" சமயம் வாய்த்தபோது தூற்றியும் விடுவார்கள். கேடுகெட்ட தொழிலாகிய டாபர் தொழில் செய்து திரியுமிவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களிடத்தில் எல்லாம் "இன்னின்னார் இப்படிப்பட்டவர்கள்; நீ இதை யாரிடத்திலும் இதைச் சொல்லவேண்டாம்" என்று ஊர்முழுதும் தமுக்கடித்து விடுவார்கள். கருக்கொலை முதலிய துர்கிருத்தியங்களுக் கிடமாயுள்ள இவர்கள் நற்சந்ததிகளை உண்டாக்கக்கூடிய அநேகம் பெண்களைச் சிற்றின்பக் கருவிகளாகச் செய்து நாட்டிற்கு அவமானத்தையும் கேட்டையும் தேடிவைக்கிறார்கள்.

---

## 66. தவசுப்பிள்ளைகள்

தஞ்சை, திருச்சி, மதுரை முதலிய விடங்களிலுள்ள கள்ளர், மறவர், அகமுடையர் முதலியவர்களின் வகுப்பைச் சேர்ந்த சில நாடோடிகள் அங்குள்ள கேடுகெட்ட விதவைகளை வலித்துக் கொண்டு நேரே சென்னைக்கு ரயிலேறி வருவார்கள், அவர்கள் ரயிலை

விட்டு இறங்கினதும் குஜிலிக்கடைக்கு வந்து நாலணு கொடுத்து ஒரு ஜல்லி காண்டி வாங்கிக்கொண்டு செங்கான் கடையண்டை ஒரு வீடு குடிக்கூலிக்கு எடுத்துக்கொண்டு அதில்குடியிருப்பார்கள். தங்கள்வீட்டில் பிறர் போஜனம் செய்யமாட்டார்களென்ற எண்ணமுடைய சில ஜாதியார்களும் கைவண்டி இழுத்துக்கொஞ்சம் பணம் சம்பாதித்து அதில் பிரக்யாதி அடையவேணுமென்ற நோக்கமுடையவர்களும் சொற்பப் பிரயோசனத்திற்கும் தவசுப் பிள்ளையைத் தேடுவார்கள். இப்படிப்பட்டவர்கட்கு ஏற்றமாதிரி மேல்படி நாடோடிகள் "நாங்கள் சைவ தவசுப் பிள்ளைகள் உங்கள் வீட்டில் சாப்பிடமாட்டோம்; எங்களுக்குப் படியரிசியுடன் நாள் ஒன்றுக்கு ஒருரூபாய் கொடுத்து விட வேண்டும்" என்பார்கள். இவர்கள் சமையல் பாகம் நளபாகத்திற்குப் பதில் நுளபாகமா யிருக்கும். இந்தச் சுயம்பாகிகள் கடுகு, நல்லெண்ணெய் முதலியவைகளைத் தமது கைக்கொண்டமட்டும் போட்டுப் பதார்த்தங்களை வேவித்து வைப்பார்கள். நல்லெண்ணெய் கடுகு இவைகளின் முகத்தில் விழித்தறியாத சாமானிய ஜனங்கள் நாக்கைத் தட்டித் தட்டிச் சாப்பிட வேண்டியதுதான். மேல்படி தவசுப்பிள்ளைகள் ருசியாயுள்ள காய்கறி பதார்த்தங்களையும் கட்டித் தயிரையும் பலவிதப் பலகாரங்களையும் விலாப்புடைக்கத் தின்று ஏப்பமிடுவார்கள். நெருப்பனலில் இருப்பவர்கட்கு அன்னம் வெறுப்பாயிருக்கும். ஆகையால் அவர்கள் "நாங்கள் இங்கே சாப்பிடமாட்டோம்" என்று பிகுவாய்ச் சொல்லிவிடுவார்கள். "பலகாரங்களைச் சாப்பிட்டீர்களே!" என்று யாராவது அவர்களைக் கேட்டால் அவர்கள் "அவைகளுக்குத் தோஷமில்லை" என்று சொல்வார்கள். அந்தோ! சுயஜாதி கள்ளர், மறவர், அகமுடையவர்களா யிருந்தாலும் பாதகமில்லையே கேடுகெட்ட விதவைகளின் சவகாசமும் குடியுமுடைய ஈன ஜாதியார் கைச்சோறு உண்பதிலும் நமக்குத் தெரிந்த கலப்பில்லாத பணிச்சவர், வண்ணார், அம்பட்டர் முதலிய ஜாதியார்கள் எந்தவிதத்தில் தாழ்ந்தவர்களாவார்கள்.

சில தினங்களாய் ஆசார சீர்திருத்தக்காரர்கள் தாழ்ந்த வகுப்பாரை உயர்த்த வேணுமென்று பிரசங்க மேடையிலேயே துடிதுடிக்கிறார்கள். தாழ்ந்தஜாதியுண்டென்பதை அவர்கள் ஏன் ஒப்புக்கொள்ளவேண்டும்? முளையிலேயே கிள்ளி எறிவதுபோல் தாழ்வை ஒப்புக்கொள்ளாவிட்டால் உயர்த்தவேண்டிய ஆகாயத் தாமரையைக் கொய்யவேண்டியதில்லையே! காஞ்சிபுரத்துத் தாதாச்சாரி வைணவப்

பிராமணர்கள், தமது இனத்தவர்களில் அறுபது வீட்டுக்காரர்கள் அடியோடு சீமையில்குடியேறி அங்கே அவர்கள் தமது கைப்படச் செய்தனுப்புவதாக எண்ணிக்கொண்டோ மற்றெவ்விதசாந்திசெய்து கொண்டோ டின்டின்னாகவும், கட்டுக் கட்டாகவும், ராத்தல் ராத்தலாகவும், பிஸ்கோத்து பெப்பர்மென்டு, ஊறுகாய், தித்திப்பு ஜாம்பு, கேக்கு முதலியவைகளை வாங்கிச் சாப்பிடுகிறார்கள். கிளப்புகளிலும் முக்கியமாய் டியாஞ்சில்ஸ் முதலிய ஓட்டல்களிலும் வெட்கமில்லாமல் சாப்பிடுகிறவர்களாகிய அவர்கள், தாழ்ந்த வகுப்பாரது படிப்புக் குறைவையும் சீலத்தாழ்வையும் கவனிக்கும் காலமல்லவா நாம் முன்னேறுவதற் கடையாளம்.

---

## 67. காபி ஓட்டல்கள்.

ஒவ்வொரு ஓட்டலுக்கும் "கஸ்தூரி அய்யங்கார் காபி ஓட்டல்" "சேஷாத்திரி அய்யர் பலகாரக் கடை" என்ற போர்டுகள் போட்டிருக்கும். ஓட்டலுக்குள் நுழைந்தால் எங்குப் பார்த்தாலும் தண்ணீர் ஓதம் சதசதவென்று இருக்கும். சில இடங்களில் மிதித்த உடனே தண்ணீர் மேலே படாமற் போகாது. ஓட்டல்காரர்கள் பழைய கந்தல் கோணிகளையாவது பொத்தல் மூங்கில் பாய்களையாவது மறைவுகட்டி யிருப்பார்கள். உட்காருவதற்குக் கிருசலுயில் ஜாதிக்காய் பெட்டிகள் போடப்பட்டிருக்கும். அதன்மேல் ஒழுகின மோர் குழம்பாவது சாதப் பருக்கைகளாவது சிந்திக்கிடக்கும். தாகத்திற்குக் கொடுக்கும் தண்ணீரைச் சுண்ணாம்பால் கட்டின தொட்டிகளிலாவது மரத்தொட்டியிலாது நிரப்பியிருப்பார்கள். அவைகளில் பச்சென்று பாசிபிடித்திருக்கும். சுற்றுப்பக்கச் சுவர்கள் கிருசலுயில் விளக்குகளின் புகைபடர்ந்து கண்ணுக்கு ரமணியமாய்க் காணப்படும். தோசைமாவின் சட்டிகளைக் கழுவினால் ஒரு தோசைமாவு சேதமாகுமென்றோ கடை ஆரம்பத்தில் வைத்த மாவுச் சட்டியைக் கழுவினால் அதிர்ஷ்டம் போய்விடுமென்றோ அவர்கள் அவைகளைக் கழுவாமலே வைத்திருப்பார்கள். இதனால் மற்றவைகளை நீங்களே கவனித்துக் கொள்ளலாம்.

காப்பி ஓட்டல் அய்யர் இவர்தான் என்று சகலருக்கும் தெரியும்படி அவர் எண்ணெய்க் கசடு பிடித்த ஒரு ஸ்பெஷல் துண்டு கட்

குழம்பில உபபு அதிகமானல சடையையாவது கட்டை நெருபபையாவது தககபடி போட உப்பை வலிதுக்கொள்ளும். *

டிக்கொண்டிருப்பார். காப்பி ஓட்டல் அய்யரா! ஆ! அவர் இப்போ திருக்கிற 24 மணிக்குமேல் இருபத்தைந்துமணி நேரமிருந்தால் அப்பொழுதாயினும் தமது பாழும் நாற்ற உடலைக் கழுவித் துலைப்பாரோ அல்லது அந்த ஒருமணி நேரத்தையும் பணமாக்கி விடுவாரோ தெரியாது. ஆனல், இன்று பாலாமணி எண்ணெய் தேய்க்கிற பாகமென்றால் அதற்காகவாயினும் அவர் தமது தேகத்தை ஒரு முக்கு முக்கி ஒன்றும் பாதியுமாய் அலம்புவார் போலும். ஆனல், ஒன்று மாத்திரம் நிச்சயம். இரவு எட்டு மணிக்கு டிராமாவுக்குப் போவதற்குமுன் நின்றபடி நாமத்தை மாத்திரம் அவர் போட்டுக் கொள்ளுவார். அவர் இழுவெல்லாம் எப்படி யிருந்தாலும் பலகார வகையிலாவது குணமிருக்கு மென்றாலோ அதுவும் ஆண்டவனுக்கே வெளிச்சம். அவர் முன்னல் நிலுவையாயிருக்கிற புளியோரை, பொங்கல், ததியோதனம் முதலியவைகளை அரைத்து மறுநாள் தோசை சுடுவார்கள், முன்னாள் பலகாரஞ் செய்த எண்ணெயையாவது எரிந்த விளக்கில் பூச்சிகள் விழுந்திருக்கிற எண்ணெயையாவது தோசைச் சட்டியில் தடவச் சிந்தாமல் உபயோகித்துக் கொள்வார். தோசையைத் தொடும்போதே அது பிசுபிசுவென்றும் கரேலென்றும் கையில் ஒட்டிக் கொள்ளும். இந்தப் பிசுபிசுப்பைக் கழுவுவதற்கு நாலறு இங்கிலீஷ் சோப் இருந்தாலும் முடியாது. அவர் மோர் குழம்பு செய்யு முறையை எந்த ரளபாகத்திலிருந்து கையாளுகிருரோ? சாதம் வடிக்கிற கஞ்சித் தண்ணீரில் கொஞ்சம் மஞ்சளை அரைத்துக் கலக்கி அதை மஞ்சள் நிறமாகச் செய்து அதில் கடுகு, மிளகாய், உப்பு இவைகளைப் போட்டுக் குசும்பா எண்ணெய் விட்டுத் தாளித்துவிடுவார். அதில் மிளகாய் போடவேணுமென்கிற அவசியமில்லை. ஏனென்றால், அதில் விழுந்திருக்கிற கருப்பான் பூச்சி ரக்கைகளே மிளகாய்த் தோல்போல் காணப்படும். முன்னாள் விற்காம லிருக்கிற கடலையை வெந்நீரில் கழுவியும் வடை முதலானவைகளை அனலில் வைத்து எடுத்துக்கொண்டும் அன்று செய்யும் சாக்குகளோடு அவர் கலந்துவிடுவார்.

இந்தப் பழைய வடை முதலானவைகளை என்னைப்போன்ற ஏமாந்தவர்கட்கும் சிறு பிள்ளைகட்கும் பொறுக்கிக் கொடுப்பார்; கறவைப் பசுக்களுக்கு வைக்கிற பருப்பு, நொய் முதலியவைகளைப் பணத்திற்கு இரண்டுபடி மூன்றுபடி வீதம் வாங்கிவந்து ஊற

---

காரமதிகமாயிருந்தால் நல்ல வெல்லம் போடக் காரம் தெரியாது.

வைத்து உரலில் போட்டு உருப்பி வெங்காயத் தாள்களை முக்கால் வாசி கலந்து ஆமவடை சுடுவார். அவர் வெல்லம் வருகிற கோணிப் பைகளை ஊறவைத்தும் வெல்லம் கட்டி வருகிற ஓலைப்பாய்களைக் கழுவியும் காப்பித் தண்ணீர்க்கு வெல்லத்திற்குப் பதில் உபயோகப் படுத்துவார்; காப்பித் தூளுக்குப் பதில் பவுன் மூன்றணு வீதம் விற்கிற சீமைப்பவுடர் சிக்ரி என்பதைப் போடுவார்; சிலர் நல்ல வெல்லத்தைச் சட்டியிலிட்டுக் காந்தும்படி வறுத்த தூளையாவது புளியங்கொட்டைத் தோலையாவது சீக்காய்த் தூளையாவது காப்பித்தூளுடன் கலந்து காப்பி திக்காய் இருக்கும்படி செய்வார்கள். கண்டிப்பாய் ஒரு தவலைக் காப்பித் தண்ணீருக்கு அரையணு பாலை நம நல்லவென்று இவர்கள் துணிந்து வார்த்து விடுவார்கள். பச்சரிசி நொய்யை ஊறவைத்து அரைத்து அதன் பாலெடுத்துக் காப்பி வெள்ளையாகக் காண்பதற்கு அதில் சேர்ப்பார்கள். சாமானிய ஜனங்கள் வீட்டிலிருந்து வெளியில் புறப்படும்போதே தண்ணீர்ப் பந்தலுக்குப் போகவேணுமென்று யோசனை செய்துகொண்டு வருவார்கள். அவர்கள் இந்தப் புண்ணியவான்கள் வைத்திருக்கிற காபி ஓட்டல்களுக்கு வந்து கண்ட கசுமாலங்களை வாங்கித் தின்று வாந்தியெடுக்கக் கற்றுக்கொள்வார்கள். வாந்தி பேதிக்கு இதுவும் ஒரு தாய் வீடாகையால், இதில் சாப்பிடுகிறவனுக்கு அதிர்ஷ்டமிருந்து அவன் சாப்பிடும் பலகாரங்களில் ஒரு மயிருமிருந்தால் அவனுக்குப் பேதியுங் காணும். உடனே வாந்திபேதி வந்துவிட்டதாக முனிசிபாலிடி சிப்பந்திகள் தெருவெங்கும் தாரைக் காய்ச்சி ஊற்றுவார்கள். இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்தில் ஒருதரம் இரண்டுதரம் தானுகவே பேதி உண்டாகும்படி சென்னை ஜனங்கள் பீதியையடைவார்கள்.

பெரிய பெரிய கிராமங்களிலும், பட்டணவாசங்களிலும் தெருவிற்கு ஒன்றிரண்டு (Hindu Restaurant) இந்து பக்ஷண சாலைகள் ஏற்பட்டு முக்கியமாய் அநியாயத்தில் சம்பாதிக்கும் பணத்திற்கு

---

சூடான குழம்பாவது ரசமாவது கஞ்சியாவது நெருப்பாவது பட்டால் உடனே தேனைப் பூசவும். அல்லது உருளைக்கிழங்கை அரைத்துப் போடவும். இரண்டும் கிடையாவழி இங்கியையாவது சாக்கடைச் சேற்றையாவது உபயோகிக்கவும்.

அமரிக்கன் மதர் ஜீசல்ஸ் ஆயின்ட்மெண்டு (Mother Seigels Ointmɩnt) அல்லது பைகார்பிநெட் சோடாவை ஈரமாக்கிப் போடவும்.

உலைவைத்துக்கொண் டிருக்கிறது. 'கடல் மீனுக்கு நுளைய னிட்ட தெல்லாம் பேர்' என்றதுபோல் ஓட்டல்கார்கள் குறைந்தது முப்பது நாற்பது பக்ஷணங்கள் வகை வகையாய்ச் செய்து அவைகளுக்குப் புதிது புதிதாய் ஒவ்வோர் பேரிடுவார்கள். சாதாரணமாய்ப் பிராமண ரல்லாத ஏனையோர் செய்து விற்கிற காலணு பண்டம் அவ்விடத்தில் ஓர் அணுவுக்கு உச்சம் பெற்றுப் போய்விடுகிறது. அங்கே அரை ரூபா முக்கால் ரூபா செலவழித்தாலும் வயிறு நிரம்புவதில்லை. ஒரு ரூபாயை மாற்றினால், அதை மறுபடியும் முழு ரூபாயாகச் செய்து கொள்ள முடியாதென்றபடி, சம்பாதியத்தின் அருமை தெரியாத சில வாலிபர்கள் அங்குள்ள எலக்டிறிக் பங்கா விசிறிக்கும், எனமல் பிளேட்டுக்கும். வெள்ளைச்செம்பு கரண்டிக்கும், பெண்ட்வுட் நாற் காலிக்கும் நாம் பாத்தியஸ்தராவோமென்கிற அகம்பாவம் கொண்டு துட்டைக் கொடுத்துத் தமது பொன்னான தேகத்தையும் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

எப்படி என்றால், நாம் உபயோகித்து வரும் அம்மி எந்திரங்களி னால் அரைப்புண்ட பண்டங்களோடு தேய்ந்த கல்தூளையும் நாள் தோறும் உட்கொள்ளுகிறோமல்லவா? அதுபோல் மேற்படி பண்ட சாலைகளில் உபயோகிக்கும் கலாய்களில் பூசிய ஈயத்தையும், கலாய் பூசாதசெம்பு, பித்தளைப்பாண்டங்களின் களிம்பையும், எனமல் பிளேட் பாண்டங்களின் துருவையும் கொஞ்சம், கொஞ்சமாய் உட் கொள்ளுகிறோம் அதனால் நாம் வழக்கமாய் உட்கொள்ளும் போஜ னம் குறைவதன்றி அஜீரணமும் வேறு பல வியாதிகளும் வருகின் றன. சிலர் ஆசாரக் குறைவென்றோ அல்லது நாகரிகத்திற்கு ஒத்த தல்லவென்றோ தாமரை இலை, வாழை இலை, முதலிய சுத்த மானவைகளைத் தள்ளிவிட்டு பிளேட் எடுத்துக்கொண்டார்கள். காசி, கல்கத்தா முதலாகிய விடங்களில் பால், தயிர், காப்பி, சோடா, லிமினெட் முதலியவைகளை மண்பாண்டங்களில் உபயோகப்படுத்தி ஒரு விதத்தில் சுதேசியத்தை முன்னுக்குக் கொண்டு வருகிறார்கள். இங்கே நமது ஆசாரம் எனமல் பிளேட்டிலும் கிளாஸ்களிலும் குடி கொண்டிருக்கிறது.

## 68. அன்னசத்திரம்.

சாப்பாடு போடுகிற ஓட்டல்காரர் தாங்கள் எந்த ஊராயிருந்த போதிலும் "தஞ்சாவூர் ராமு அய்யர் ஓட்டல்" கும்பகோணம் நடேச அய்யர் ஓட்டல்" என்ற பேர்வரைந்த பலகைகள் போட்டிருப்பார்கள். வெகுநாள் இலமாயிருக்கிற பழைய வீடாகப்பார்த்து இவர்கள் குடிக்கூலிக்குச் சுலபமாய் எடுத்துக்கொள்வார்கள். பழைய கந்தல் கோணிகளை இவர்கள் மறைவுகட்டி யிருப்பார்கள்; சமையல் அறைகளில் உள்ள பெருச்சாளி வளைகளில் காய்கறிகளைக் கொட்டி வைத்திருப்பார்கள். சமையல் பாண்டங்கள் செப்பு, பித்தளைப் பாண்டங்களாயிருந்தால் இவர்கள் மறந்தும் கலாய் பூசமாட்டார்கள். மண்பாண்டமானால் அவைகள் உடைந்து விடுகிற அன்றைக்கு அவைகளைக் கண்டிப்பாய்ச் சுத்திசெய்வார்கள். ஐயோ! பாவம்! மேல்படி பாண்டங்களுக்குப் போட்டவிதி சுத்திசெய்யவும் ஓய்வு ஒழிச்சல் கிடையாது.

நெல்லூர் மட்ட அரிசிகள் எல்லாம் ஓட்டல்காரர்களுடைய அதிகாரத்துக் குட்பட்டிருக்கின்றன. ஆகையால் அவற்றைக் குற்றுகிறதா? கொழிக்கிறதா? நோம்புகிறதா? தாற்றுகிறதா? இந்த இழவெல்லாம் இந்த மட்ட அரிசிக்கு ஒத்துக்கொள்ளவே கொள்ளாது. ஆகையால் அதை மூட்டையி லிருந்தபடியே உலையில் போட வேண்டியது தான். சாதம் வெந்ததென்றும் வேகவில்லை என்றும் ஓட்டல்காரர்களுக்கு அவசியமில்லை. விதியில்லாமல் நாய்போல் கதுக்குகிறவர்களுடைய சொந்தப்பாடுதான் அது. அவற்றிலுள்ள கல் நெல்லைப் பொறுக்கி யெடுக்கும் வழக்கமும் சில ஓட்டல்களில் கிடையாது. அவர்கள் துவரம் பருப்புக்குப் பதிலாய் நாவுக்கு ருசியாயிருக்கிற பட்டாணிப் பருப்புகளை வாங்கி வருவார்கள். எந்தக் காய்கறிப் பதார்த்தங்கள் நயமென்பதை ஓட்டல்காரரை விசாரித்தால் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம். எந்தக்காலத்தில் எது நயமோ, அதை அவர்கள் கூடைக்கணக்காய் வேண்டிய அளவு தாராளமாய்த் துணிந்து வாங்குவார்கள்; ஒரு பணத்திற்கு அதாவது ஓர் அணா மூன்றுபைக்கு ஒருவீசை வீதம் விற்கும் கத்தரிக்காயை வாங்காமல் பத்துநாளாய் ரயிலிலும் கட்டை வண்டியிலும் கசங்கிப்

---

குழந்தைகளைப் போஷிக்கிறது தாய்மார்களின் பொறுப்பாயிருந்தாலும் அதில் தகப்பனுக்கும் பங்குண்டு.

பழுத்துப் போயிருக்கிற கத்தரிக்காயைப் பணத்திற்கு இரண்டு வீசை வீதம் வாங்கப் பின்வாங்கமாட்டார்கள். இப்படிப்பட்ட பதார்த்தங்களை வெந்ததும் வேகாததுமாய் அவித்துப் பிண்டச் சோறு படைக்கிற மாதிரியாய் வெகு சலிப்பாய் போடுவார்கள்; எண்ணிப் பதினஞ்சுபேர் சாப்பிட்ட இடத்தில் தண்ணீர் தெளித்து இலை போடுவார்கள்.

முதலில் ஒரு பொரியல் கொண்டுவந்து நின்றபடி போட அது எச்சிலிருக்கு மிடத்திற்கு எகிறிப்போகும். பிறகு ஒரு கூட்டைக் கொண்டு வந்துபோட அது இவ்வளவு அவசரமாவென்று குந்தி யிருப்பவன் மேல் சுரீலென்று படும். மூன்ருவது வாருமைய்யா ஒரு பச்சடி! அது "சாப்பிடுகிறவனை ஏன் லவுண்டி! எப்படி யிருந்தாலும் கதுக்குகிருயா?" என்று கேட்கும். நான்காவது வரும் சாதம்! அது கையை எடு; முகத்தைத் தூக்கு; இன்னம் ஒத்தி இரு; என்று சொல்லும் பாவனையாய் ஆவி கப்கப் வென்றடிக்கும். ஐந்தாவது நெய்வரும். அய்யர் வைத்திருக்கிற வெறும் காண்டியைக் காட்டினுலும் போதுமானது. அதிலுள்ள நெய்மணம் நாலுநாள் வரையில் கமகம வென்று வீசும். அய்யர் உயர்ந்த நெய்யையே விடுவதனுல் சில சமயங்களில் வாந்தியுமாகும். ஆருவது சாம்பார் வரும். சாதக் கட்டிகளை உடைக்குமுன் அதை ஊற்றின உடனே, அது ஒருபக்கம் பொரியலோடும் ஒருபக்கம் மிளகாய், புளி கொதிக்கவைத்த பச்சடியோடும் சண்டைக்குப் போகும். உடனே சாப்பிடுகிறவன் நாலைந்து பேரையும் சமாதானஞ் செய்கிற மாதிரி அவற்றை யெல்லாம் ஒன்ருய்ச் சேர்க்கும் நிலைமைக்கு வந்துவிடுவான். ரசம் நாலைந்து முழு மிளகாயுடன் கலந்து வந்து, தான் காரம்தாங்க முடியாததுபோல் இலையின் கீழ் போய் ஒளித்துக்கொள்ளும். மோர் தொட்டு முகர்ந்து பார்க்க வேண்டிய அவ்வளவு மணத்தோடும் கூடியிருக்கும்.

பணத்தைப் பெரிதென நினைக்காத இந்தப் புண்ணியவான்கள் மாங்காய் காலத்தில் வெதும்பின மாங்காய்ப்பிஞ்சுகளைப் பிளந்து அதில் உப்பில்லாமற் போனுலும் அதை ஊறுகாய் என்று காட்டுவார்கள். சிலர் அரைத்த மிளகாய்க்கூட்டை அதில் மன

---

சிறுபிள்ளைகளின் அடாத செய்கைக்குத் தகப்பனுக்குச் சொல்லுகிறே னென்று பயப்படுத்தாதே. தகப்பனுக்கு மரியாதையாய் நடந்துகொள்ள வேணுமென்று கற்பி.

மிசைந்து போடுவார்கள். சாப்பிடுகிறவர்கள் நடுவில்கூட்டோ பொரியலோ கேட்டால் அவர்கள் சாப்பிட்டுக் கைகழுவத்தக்க அவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிடும். சாப்பிடுகிறவன் இன்னுமொரு முறை கேட்டால், "கொண்டுவருவதற்குள் அவசரமா?" என்று சலித்துக் கொள்வார்கள். சில தடிப்பிராமணர்கள் சாதத்தை இலையில் வட்டித்து விட்டு மிகவும் இழிவாகிய ஸ்திரீகளுடன் சேஷ்டைசெய்து கொண்டிருப்பார்கள். சிலர் இதோ வந்தேன் என்று வேறே கிராக்கிக்காரர்களுக்குச் சமாதானஞ்சொல்லி அவர்களைச் சரிப்படுத்துவதில் காலத்தைப் போக்குவார்கள். ஆனால் இவர்கள் பணம் வாங்கும்போது பசுப்பு வார்த்தைகள் பேசி, "நான் பணத்தைக் கவனிக்கிறதில்லை. பெரிய மனுஷாளுக்குத் தக்கபடி பணம் பத்தானாலும் சரியாய் நடந்துகொள்ள வேணுமென்பது என்னிஷ்டம்" என்று தெருக்கடக்க வழிவிடுவார்கள். இப்போது பெய்கிற மழை "அரிசி விற்றிடு மந்தணர்க்கோர் மழை" என்றபடி, இவ்வந்தணர்கள் நிமித்தமே பெய்கிறது. இனி ஓட்டல்களில் சூதும், பெண்கள் வியாபாரமும் வைத்துக்கொள்ளும் பட்சத்தில் நாட்டுக்கு நல்ல காலம் சீக்கிரமே வரும்.

---

## 69. சோற்றுக்கடை.

**சோ**ற்றுக்கடை வைத்திருப்பவர்கள் பல ஜாதிப் பெண்களா யிருந்த போதிலும், சில காலடிப் பேர்வழிகளின் குலம் கோத்திரம் நடத்தை இவைகளைக் கண்டு பிடிக்கச் சர்வேஸ்வரனாலும் முடியா தென்றால் என்னால் முடியுமோ? இந்தப் புண்ணியவதிகள், சமைப்பது கொய்யல் கட்டையரிசி. அதை இவர்கள் ஒன்றும் பாதியுமாய் வேகவைத்துச் சுண்ணாம்பு நீர்தெளித்துச் சுடச்சுடப் போடுவார்கள். இலையோ உள்ளங்கை அவ்வளவு பெரியதாக இருக்கும். முந்திரியிலை, பேயத்தியிலை, பூவரசனிலை முதலிய இலைகளைத் தாங்களே தைத்து வைத்திருப்பார்கள். வேணுமானால் அரையணா, ஓர் அணாவுக்கும் சோற்றைக் கொட்டாங்கச்சியில் அளந்து போடுவார்கள். பதார்த்தமோ வாந்திபேதி யம்மாளை வலிய அழைப்பதுபோல் இருக்கும். கூடைத் தட்டின பொடி என்கிற பல ஜாதி மீன் பொடி

---

அறியாச்சிறுவர்கட்குப் பிரசங்கம் செய்யாதே? கீழ்ப்படிந்து நடக்கக் கற்றுக்கொடு.

களையாவது கூடைக் கணக்காய் வாங்குகிற ஆட்டு எலும்புகளையாவது அழுகிப்போன குடல்களையாவது நாற்றமடித்து நயமாயிருக்கிற நுரை யீரல்களையாவது இரண்டொரு கெளித்திக் கருவாட்டு மண்டைகளையாவது நாலு வீசைக் கத்தரிக்காயிலோ ஒரு சுமை கீரைத்தண்டிலோ ஒரு கூடை முள்ளங்கியிலோ போட்டுக் குழம்பு வைப்பார்கள். குழம்பு தடிப்பா யிருக்கும் பொருட்டு அதில் கேழ்வரகு மாவைப் போட்டுக் கலப்பார்கள். சில புண்ணியவதிகள் ரங்கோன் தவிட்டு நொய்யைப் பொங்கிப் போடுவதுமுண்டு. சிலர் பழைய சாதத்தைப் பிழிந்து வைத்து அதில் குழம்பைச் சுடச் சுட ஊற்றுவார்கள். சிலர் எதற்கும் இரண்டொரு சிறுக்கிகளைக் கைக் காவலாய் வைத்துக்கொண்டிருப்பார்கள். இவர்களால் யாருக்கு என்ன சகாயமென்பது மாத்திரம் வெகு ரகசியமா யிருக்கிறது. கடவுள்தான் அதை அறியவேண்டும்.

## 70. புரோகிதர் பிழைப்பும் எளியவர் வீட்டுத் திதியும்.

ஊர் மிராசு வீட்டுப் புரோகிதர்களுக்கு ஒருநாளையில் இரண்டு மூன்று பெரிய மனிதர் வீட்டுத்திதிகள் நேர்ந்துவிட்டால் அதே நாளில் வரும் சமானியன் வீட்டுத் திவசம் கொஞ்சம் நகர்ந்துவிடுவது வழக்கத்தில் வந்துகொண்டிருக்கிறது. புரோகிதர் தமக்குத் தீர்க்கையான காலம் பார்த்து எளியவனாகிய காளிநாயக்கன் வீட்டில் வந்து "உன் தாயார் திதி நாளைக்கு வருகிறது" என்று சொல்லுவார். காளிநாயக்கன், "என்ன சுவாமி? என் தாயார் திதி கார்த்திகை மாசமாச்சே ; இப்போ சொல்லுகிறீரே ? என்றால், புரோகிதர் "திதி புரண்டு வந்தது; நான் என்ன செய்யட்டும் ?" ஒரு வருஷம் போலவே வருமா ?" என்று சொல்வார், காளிநாய்க்கன் அது மெய்தானென்று திதிக்கு வேண்டிய சாமக்கிரியைகள் யாவும் தயார் செய்துகொண்டு அன்று பகலெல்லாம் புரோகிதர் வீட்டுக்கு நடையாய் நடந்துகொண்டிருப்பான்.

---

ஒரு சமுசாரி ஒரு உபாத்தியாயரிடத்தில் தன் பிள்ளையைக் காட்டி இவனுக்குக் கல்வி கற்பிக்க என்ன கேட்பாய் ?" என்றான். உபாத்தியாயர் ஐம்பது ரூபா கொடுக்கவேண்டு மென்றார். சமுசாரி "ரூபா ஐம்பதா ? ஒரு கிடா வாங்கலாமே!" என்றான். உபாத்தியாயர் "ஆனால் ரூபா செலவின்றிக் கிடாவுக்குப் பதில் இவனே உபயோகப்படுவான்" என்றார்.

புரோகிதர் காலையிலெழுந்து சாவகாசமிருந்தால் தந்தசுத்தி செய்துகொண்டு விபூதியைக் குழையல் தீர்த்துப் போட்டுக்கொண்டு பழைய சாதத்தில் மிளகாய்த் தூளும் கொஞ்சம் நல்லெண்ணெயும் விட்டுக் கலந்து பகல் இரண்டுமணி வரையில் தாங்கும்படி திருப்தியாய்ச் சாப்பிடுவார். பின்பு அவர் பஞ்சாங்கக் கட்டுடன் ஒரு கற்றைத் தருப்பையும் எடுத்துக்கொண்டு நாலைந்து பெரிய மனிதர்களைக் கண்டுகொண்ட பிறகு காளிநாயக்கன் வீட்டிற்குச் சுமார் பதினொரு மணிக்கு வருவார். அய்யர் வந்ததும் "வேண்டுமான சாமான்களைக் கொஞ்சம் அழைப்பியுங்கள்" என்று வீட்டிலிருக்கிற அரிசி அவ்வளவும் சமயோசிதப்படி பெற்றுக்கொண்டு மஞ்சள் பிள்ளையார் வைத்து,

" சுக்கிலாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர் புஜம்
பிரசன்ன வதனந் தியாயே
சர்வ விக்நோப சாந்தையே"

என்று சொன்னதும் காளி நாயக்கனைத் தலையில் குட்டிக்கொள்ளச்சொல்லிப் பிறகு,

மந்திரயீனங் கிரியாயீனம் பக்தியீனங் கணுதியத்பூஜியதே ||
மாயதேவ சம்பூரணந் ததஸ்துதே ||
அநேயதாய சோட சோபசார ||
சர்வ மங்களோபசார சர்வதாம புண்ணிதவ் ||

என்று இரண்டொரு சுலோகஞ் சொல்லி மஞ்சள் கலந்த அரிசியைக் கலசத்தின்மேலும் பஞ்சகௌவியத்தின் மேலும் போடச் சொல்லி, கொஞ்சம் ஓமம் வளர்த்தி அதற்கும் இரண்டொரு சுலோகம் சொல்வார். பின்பு புரோகிதர் அவனை இருபத்தேழுதரம் எண்ணி நெய்விடும்படி சொல்வார். இப்படிச் சுமார் கால் அல்லது அரைமணி நேரத்தில் அவர் எல்லாக் காரியங்களையும் முடித்து விடுவார். அதன் பிறகு புரோகிதர் காய்கறி பதார்த்தங்களையும் உளுந்து, பருப்பு, பச்சைப்பயறு, புளி முதலானவைகளையும் அவனைக் கையை மாற்றித் தொடச் சொல்லி "ஐயா சுவாமிகளே! என் தாயார் பேரைச் சொல்லிக் கொடுத்த இவைகள் கொஞ்சமாயிருந்தபோதிலும், வருஷம் முழுவதும் கொடுத்ததாய்ப் பாவித்துக்கொள்ளவேணும். காசியிலே கயாவிலே கொடுத்த பலன் உண்டாகக் கடவது" என்று சொல்லி அவனை விழுந்து சேவித்துக் கொள்ளச் சொல்வார். காளிநாயக்கன் சேவித்துக்கொள்ளும்போது நாலு அரிசியை அவன் தலையில் போடுவார்.

பிறகு கொஞ்சம் எள்ளும் அரிசியும் கொண்டு வரச்சொல்லி தர்ப்பணஞ் செய்வார். தாயார் தனகோடியம்மாள் தர்ப்பணம்! தர்ப்பணம்!! பாட்டியார் தெய்வானையம்மாள் தர்ப்பணம்! தர்ப்பணம்!! (இரண்டாம் பாட்டியார் பேர் தெரியாது) சரி! எக்கியமாதா தர்ப்பணம்! தர்ப்பணம்!! இன்னம் அறிந்த பேர் அறியாத பேர் தர்ப்பணம்! தர்ப்பணம்!! குருவே தர்ப்பணம்! தர்ப்பணம்!! குருபத்தினியாம் தர்ப்பணம்! தர்ப்பணம்!! ஆசாரியாம்! தர்ப்பணம்! தர்ப்பணம்!! ஆசாரிய பத்தினியாம் தர்ப்பணம்! தர்ப்பணம்!! ரிஷியீம் தர்ப்பணம்! தர்ப்பணம்!! ரிஷிபத்தினியாம் தர்ப்பணம்! தர்ப்பணம்!! என்று சொல்லி அவனை முழங்காலை முடக்கிக்கொண்டு பெருவிரல் வழியாய் ஜலம் ஊற்றும்படி செய்து தாம் ஜலத்தை விட்டுக்கொண்டிருப்பார். இப்படி காளி நாயக்கனுக்குத் தர்ப்பணம் என்றதை மாத்திரம் அநேகதடவை சொல்லித் தாம் செய்யவேண்டிய சடங்கை முன்னும் பின்னுமாய் மாற்றிச் செய்து ஒவ்வொரு சடங்கிற்கும் சொர்ன புஷ்பம் வைக்கவேண்டுமெனச் சில்லரை சில்லரையாய் நாலணு பைசாவரையில் வாங்கிக்கொள்வார். கடைசியில் மஞ்சள் கலந்த அரிசிப் பொட்டைக் காளி நாயகனும் மற்றுமுள்ளாரும் மறவாமல் புரோகிதர் கையிலு விடும்படி இட்டுக் கொள்வார்கள். பின்பு புரோகிதர் "நேரமாகிறது; செலவு கொடு காளிநாயகா! வருடத்திற்கோர்நாள்; தட்சணை கொஞ்சம் பார்த்துக் கொடுக்கவேணும்" என்று அதை வாங்கிக்கொண்டு, "இந்த அரிசி காய்கறிகளை நமது வீட்டில் சேர்த்துவிடு" என்று செலவு பெற்றுக் கொள்வார். நெய், தயிர் கொஞ்சம் எதேஷ்டமாக விருப்பதைப் பார்த்தால் தமக்கு நெய், தயிர் சேரவில்லை யென்பார். அவை இல்லாமற் போனுல் அவற்றிற்குத் துட்டாகவாவது பெற்றுக்கொண்டு வந்தவரைக்கும் லாபமென்று பிடுங்குவதிலேயே அவர் நோக்கமாயிருப்பார். குடும்பிகளுடைய ஹிதத்தைக் கவனியாது பணத்தையே பெரிதெனப்பாவிக்கும் இந்தப் புரோகிதர்களுடைய மோசங்களிலிருந்து சாமானிய ஜனங்கள். கண்திறந்து பார்க்கும் காலம் எப்போதோ அப்போதல்லவா இந்தியாவும் இதரநாடுகளைப்போல் மேன்மையுறும்.

---

பொது நலத்திற்குரிய தர்மமாகிய மூத்தபிள்ளையை வஞ்சிக்கின்றவனுடைய சொத்துக்களை இராஜா, அக்கினி, திருடன் முதலிய மூன்று பிள்ளைகளும் அபகரித்துக் கொள்வார்கள்.

## 71. ஊத்தியோகஸ்தர் திதி

புரோகிதர்:— முதலியார் அவாள்! நாளைக்குத் தங்கள் தாயார் திதி. பூர்வபட்சம் அஷ்டமி திதி.

முதலியார்:— அய்யரே! நாளைக்கு நமக்கு ஆபீஸ் வேலை மெத்த இருக்கிறது. என்ன செய்கிறது? வருகிற ஞாயிற்றுக்கிழமை வந்து விட்டால் மெத்த சௌக்கியமாயிருக்கும். ஏன்? அன்றைக்குச் செய்யக்கூடாதோ? சொல்லுங்கள்.

புரோ:— ஆஹா! ஏன் செய்யக்கூடாது? பேஷாய்ச் செய்யலாம். அதே பட்சத்தில் செய்வதால் பாதகமில்லை. சுகமாய்ச் செய்யலாம். அப்படி விதியு மிருக்கிறது.

முதலி:— தயை செய்து அன்றைக்கு வந்து விடுங்கள். (என்று அவரை அனுப்பிவிட்டு ஞாயிற்றுக்கிழமை அவர் வருவதற்குள் முதலியார் காப்பி, ஆப்பம் சாப்பிட்ட பிறகு வெந்நீரில் ஸ்நானஞ் செய்து தயாராயிருப்பார்.)

புரோ:— (வந்ததும்) ஏன்? நடத்தலாமா? வேணுமானால் கொஞ்சநேர மிருக்கிறேன்.

முதலி:— இல்லை இல்லை; எல்லாம் தயாரா யிருக்கிறது. கையோடு கையாய்ச் செய்து விடுங்கள்.

புரோ:— அம்மா! எல்லாம் கொண்டுவந்து வையுங்கள். முதலியார்! இப்படிக் கொஞ்சம் தயை செய்யவேணும்.

முதலி:— வேணுமானால் குந்திக்கொண் டிருக்கிறேன்? நீரே எல்லாம் செய்து விடும். நமக்கு (Trouble) தொந்தரவு கொடுக்க வேண்டாம்.

புரோ:— அப்படியே அதற்கென்ன? (என்று எல்லா மந்திரமுஞ் சொல்லிச் செய்துவிட்டு) முதலியார் அவாள்! கொஞ்சம் மஞ்சள் அக்ஷதைப் போட்டுக் கொள்ளுங்கள். நான் போய் வருகிறேன். 'சதாஸ்து சுபம் மகாராஜா யிருக்கவேணும்.' நமக்குச் செலவுதானே?

---

மனைவி பரிமாறப் பரிகலமெடுக்க தன்னுடனிருந்து போஜனம் செய்பவன் வீட்டிலல்லாது ஏனையோரிடத்தில் போஜனஞ் செய்யலாகா தென்பார்கள்.

முதலி:— (அரிசி, பருப்பு, காய்கறி, தக்ஷிணை முதலியவை களைக்கொடுத்து) போய் வரலாம். யாரங்கே? சாப்பாடு ரெடியாச் சுதா? கொண்டுவா.

பேன்ஜாதி:— நடுவீட்டில் இலைபோடவேணுமா ? கொஞ்சம் பொறுங்கள்.

முதலி:— நான்ஸன்ஸ்! சாவகாசமாய்ப் போட்டுக் கொள்ளுங் கள். எனக்கு முன்னே சாப்பாடு வேலை ஆகட்டும்.

இவ்விதமாய் ஆளுக்குத் தக்கபடி நடந்து மோசம்செய்யும் பிராமணர்களுடைய சூதுகளைத்தெரிந்து நாம் முன்னுக்கு வரும் காலம் எப்போது வருமோ? அல்லது ஆயுதச்சட்டம் அமுலுக்கு வந்து நமது ஆண்மை, வீரம், தீரம், முதலியவைகளை இழந்து நாம் பேடிகளாய் நிற்பதுபோல் இப்படிப்பட்ட மோசங்களினால் எடுப்பார் கைக்குழந்தையா யிருப்போமோ என்னவோ தெரியாது.

---

## 72. வேலைக்காரப் பிள்ளைகள்

காலையிலெழுந்து "அன்னமோ ராமச்சந்திரா" என்றுகூலிவேலைக் களையும் சில உத்தமர்களது பிள்ளைகளும், பெண்கள் கஷ்டத்திற்கு எதிர்பார்த்திருந்து அவர்களை வெருட்டி வயிறு வளர்க்கும் சில சோம்பேறிகளும் ஓர் ஆட்டுக் குட்டியையாவது, நாயையாவது புறாக்களையாவது, காடை கௌதாரிகளையாவது வளர்த்துக்கொண்டு காலத்தைக் கழிப்பார்கள். எவ்வளவு அவசியமான வேலைகளிருந்த போதிலும் அல்லது அன்று சாப்பாடு அம்பலமா யிருந்தபோதிலும் அவர்கள் அவற்றைச் சிறிதும் கவனிக்கமாட்டார்கள். ஆனால் இவர் கள் ஆட்டுக்குட்டிக்குத் தழை உருவிப்போடவும் நாயைப் பிடித்துக் கொண்டு உலாத்தவும் காடை கௌதாரிகளுக்குச் செல் தேடிப் போடவும் தமது காலத்தை வீணாய்க் கழிப்பார்கள். யாராவது "இப் படி யிருந்தால் எப்படி? வேலைக்குப் போகக்கூடாதா?" என்றால் "எங்கே? இந்தஇழவு இருக்கிறது. இதைத் தொட்டுப் பார்க்கிறேன். இல்லாவிடில் ஒரு நாளைக்கு நான் சும்மா இருப்பேனா?" என்று இவர்கள் பதில் சொல்வார்கள். ஒருசமயம் சிலர் கட்டாயத்தின்மேல்

---

வேதோக்தமான சத்கர்மமான யக்கியத்தைச் செய்கிற கிரகஸ்தன் பலத்தையும் பிரயோசனத்தையுமடைய சிஷ்டாசாரத்தில் நம்பிக்கையுடைய வனா யிருத்தல்வேண்டும்.

வேலை செய்தாலும் அவர்கள் வருமானம் ஆட்டுக்கும், நாய்க்கும், புறவுக்கும், காடை கௌதாரிகட்கும், மணி, சிலங்கை, கூடுமுதலிய வைகளுக்குஞ் சரிப்பட்டுப்போகும்.

பிள்ளைக்கு மனவருத்தம் வந்து எங்கே ஓடிப்போய் விடுகிறதோவென்று சில பேதைகள் இதைக் கண்டிக்கவு மாட்டார்கள். அவர்கள் கொள்ளிபோடப் பிள்ளை வருத்தப்படாமல் வளர்ந்துவந்தால் போதும் என்றோ இந்தியாவை ஆள ஏழாம் ஜார்ஜ் சக்கரவர்த்திக்குப் பின்னால் பட்டத்துக்கு வருகிற பிள்ளைகளாயிற்றே என்றோ இவர்களை அன்போடு வளர்த்து வருவார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகள் நாளடைவில் திருடவாவது பிச்சை எடுக்கவாவது காரியஸ்தராய்ப் போய்விடுவார்கள்.நாள் ஒன்றுக்கு ஆறணா ஏழணா சம்பாத்தியம் செய்யக்கூடிய பிள்ளைகள் ஒரு காசுக்குமுதவாத வேலைகளைச் செய்துகொண்டு காலத்தைக் கழிப்பார்களானால் அன்னியர் வந்து இந்தியாவின் பொருளைக்கொண்டு போகிறார்களென வயிற்றெரிச்சல் படுவதில் பிரயோஜனமென்ன?

---

## 73. ஷோக் பிள்ளைகள்.

நம் நாட்டுத் தடிப்பிள்ளைகட்குத் தம் வயிற்றுக்குக் கிடைட்பது நாலணா இட்லியோ? ஆள்வள்ளிக் கிழங்கோ? கார் அரிசியுண்டையோ? கூழோ? தெரியாது. இவர்கள் இவ்வளவு கதியிலிருந்தாலும், 'குடிக்கிறது கூழானாலும் கொப்பளிக்கிறது பனீநீர்' என்பது போல் இவர்கள் எந்தப் பாடுபட்டாவது ஒரு மல்ஜிப்பாவை தைத்துப் போட்டுக்கொள்வார்கள். இந்த ஷோக் மாப்பிள்ளைகள் பீடி பிடித்தால் நம் நாடு முன்னுக்கு வந்துவிடப் போகிறதென்று அமெரிக்கன் (Birds Eye) 'பர்ட்ஸ் ஐ' சிகரட் வாங்கிப் பற்றவைத்து அதை ஒரு நிமிஷம் (மினிட்டு) வரையில் இழுத்து அதன் புகையை அரை மணிநேரம் மெதுவாய்விட்டு, அந்தப் புகையைப்பார்த்து ஆனந்திப்பார்கள். இவர்கள் அண்ணன், மாமன், தகப்பன் முதலானவர்கள் யார் இருந்தபோதிலும் தமது முகத்தை மாத்திரம் ஒரு பக்கமாய்த் திருப்பிக்கொண்டு பொடி போடுவார்கள். பொடி உறிவது, கைதட்டுவது முதலியவற்றால் மாத்திரம் கொஞ்சம் சப்தம்செய்வார்கள். ஒற்றைக் குடுமியிலிருந்து மூன்று குடுமி, அதாவது மூணு சிலுப்பா, அதிலிருந்து தஞ்சாவூர் பாஷன், அதிலிருந்து கிறாப் செய்துகொள்

ளுதல், கிருப் மயிர்வந்து கண்ணை மறைத்துக்கொள்ளல் முதலிய பலவித வேஷங்களை இவர்கள் போட்டுக்கொள்வார்கள். இந்த கிருப் அநேக விதமாய் உருக்கொண்டிருக்கிறது.(Hair Cutting Saloon) என்ற மயிர் வெட்டுமிடத்தில் மன்கிஸ் கிருப், சம்மர் கிருப், சென்டர் கிருப் முதலிய பதினொருவகை கிருப்புகளும் அவைகளுக்கு இரண்டணு முதல் ரூபா $3\frac{1}{2}$ வரையில் கூலியுமிருக்கின்றன. சில பிள்ளைகள் குதிக்கால் தெரியும்படி துணிகட்டித் தொலைக்கிருர்கள். ஐயோ பாவம்! இவர்கள் என்னசெய்வார்கள்? அந்தப் பாழும் மான்சிஸ்டர் வர்த்தகர்கள் நாலுமுழம் அகலம் மல் அனுப்பாதபடியால் 'உள்ளதைக்கொண்டு குழப்படி மாமி' என்று மூன்றுமுழ அகலத்தைக்கொண்டு ஆனவரைக்கும் தமது பாதத்தை மறைத்துப் பார்க்கிருர்கள். காலணு சம்பாதிக்க வகையில்லாத இந்த முட்டாள் பிள்ளைகளெல்லாம் சரிகைவேஷ்டி யில்லாமல் வெளியில் வரமுடியாதென்ருல் தேசாபிமானிகள் படும் கஷ்டம் 'ஆற்றிற் கறைத்த புளியாகுமே' அல்லது வேறு என்ன பிரயோஜனத்தைத் தரும்?

---

## 74. பள்ளிப் பிள்ளைகள்.

தங்கள் பிள்ளைகள் இங்கிலீஷ் படிக்கிருர்களென்று மகிழ்ந்துகொண்டிருக்கிறவர்களும் தங்களுக்கே கல்வியின் வாசனைத் தெரியாதிருக்கிறவர்களும் தமது பிள்ளைகளின்மேல் கண்ணேக்கமில்லாதவர்களும் நமது நாட்டில் பலர் இருக்கிருர்கள். அவர்கள் படிப்பில் அக்கரையில்லாத சோம்பேறிப் பிள்ளைகளையும், மூக்குப்பிடிக்க அடைக்கும் மட்டிப்பிள்ளைகளையும், சட்டையும் கோட்டும் போட்டுக்கொண்டு தடபுடல் காட்டும் தறிதலைப்பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்புவார்கள். அந்தப் பிள்ளைகள் தங்களோடொத்த பள்ளிப்பிள்ளைகளுக்கு முன்னே பாடசாலைக்குப் போவதாய்ப் போக்குக்காட்டிக் கோட்டை மைதானம், கடலோரம், பீப்பில்ஸ்பார்க் முதலான இடங்களுக்குப்போய்த் தமது புஸ்தகங்களை மறைத்துக்கொண்டு திரிந்தாவது தூங்கியாவது காலத்தைக் கழித்துப் பகல் சாப்பாட்டிற்குக் காலந்தவருமல் வருவார்கள். ஒருவேளை இவர்கள் பாடசாலைக்குப்போனுலும் பாடம்கேட்கும் சமயம் பார்த்து மலஜலபாதைக்

---

இடத்திற்கேற்ற சகவாசம், சகவாசத்திறகேற்ற ஆகாரம, ஆகாரத்திற்கேற்ற புத்தி, புத்திக்கேற்ற சுகம்.

குப்போய்க் கக்கூஸ்களில் காலத்தைக் கழிப்பார்கள். இவர்கள் வகுப்பிலிருந்தாலும் பாடத்தைக் கவனியாமல் பிள்ளைகளைக் கிள்ளுவதும் அடிப்பதுமாய்க் காலத்தைக் கழிப்பார்கள். நன்றாய் வாசிக்கும் பள்ளித் தோழர்களுடன் இவர்கள் சகவாசம் வைத்துக் கொள்ளமாட்டார்கள்; சனி, ஞாயிறு கிழமைகளில் இவர்கள் மனம் பூரித்துக்கொண்டிருக்கும். திங்கட்கிழமை காலையில் இவர்களுக்கு எங்குமில்லாத ஏக்கம் வந்து மூடிக்கொள்ளும். இவர்கள் அடிக்கடி சுபாசுபங்களை எதிர்பார்த்திருப்பார்கள்; தாய் தகப்பன் முதலியோர் ஏவும் வேலைகளுக்குச் சித்தமாயிருப்பார்கள்; தங்களுக்குத் தெரிந்த பாடங்களையே திருப்பித் திருப்பி உறத்த சத்தமாய் வாசிப்பார்கள்; தங்களுக்குத் தெரியாத பாடங்களையாவது கொஞ்சம் வாசித்தவர்களிருக்கும்போதாவது இவர்கள் வாய் முணமுணவென்று அசைந்து கொண்டிருக்கும். கண் ஒருவரியைப் பார்த்துக்கொண்டிருக்க வாய் மற்றொன்றைச் சொல்லிக்கொண்டிருக்கும். மாதம் மாதம் சம்பளம், புஸ்தகம், காகிதம், பென்சல் இவைகளுக்குப் பணம் வாங்குவதில் இவர்கள் வெகு உஷாராயிருப்பார்கள். தகப்பன் முதலானோர் தங்கள் படிப்பின் பவுஷியைக் கண்டு நிறுத்துகிற வரைக்கும் வாசிக்க ஆசையுள்ளவர்கள்போல் இவர்கள் பாசாங்கு செய்வார்கள். இத்தகையோர்களில் ஸ்கூல் சம்பளத்தைத் தவறாமல் கட்டிவிட்டுத் திரிபவர்கள் கொஞ்சம் யோக்கியர்களே. அநேக தர்ம ஸ்தாபனங்களில் கொடுக்கும் பணத்தை வாங்கித் தமது இஷ்டம்போல் செலவு செய்யும் பிள்ளைகள் சென்னையில் பலர் கிடைப்பார்கள். கல்வியிலும் பூர்த்தியடையாமல் கைத்தொழிலுக்கும் வழியில்லாமல் திரிசங்கு சொர்க்கமாய் அலையும் பிள்ளைகளால் நம் தேசத்திற்கு என்ன நன்மை யுண்டாகப் போகிறது? அது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

## 75. வால்யு பேயபில் மோசம்.

காலணாவுக்கும் வழியில்லாதவர்களில் சிலர் ராஜு & கம்பெனி, பர்ட் & கம்பெனி, முனிசாமி முதலி & கம்பெனி, தங்கவேலு முதலி & கம்பெனி என்ற பேர்களை வைத்துக்கொண்டு கடனுடன் பட்டுக் குறைந்தது பத்துப் பாரத்தில் கேட்லாக் அச்சிடு

மிளகுதான் அரைதேக்கரண்டி, கருப்பு சர்க்கரை ஒரு கரண்டி, இவைகளை ஒரு கரண்டி பாலோடு பிசைந்து தடவி வைத்தால் இந்த செடிக்கு ஈக்கள் கிட்ட நெருங்காது.

வார்கள். அந்தக் கேட்லாக்கில் புஸ்தகங்களின் லிஸ்டு, வெள்ளிச் செம்பு நகைகளின் விபரமடங்கிய லிஸ்டு, வாசனைத் திரவியங்களின் லிஸ்டு, எண்ணெய் வகைகளின் லிஸ்டு, மருந்து வகைகளின் ஜாப்தா, லேகியங்களின் விபரம் முதலியவைகளை விளம்பரம் செய்வார்கள். அந்தக் கேட்லாக்கைப் பார்ப்பவர்கள் அந்தக் கம்பெனியார் ஆயிரம் பதினாயிரம் ரூபாய்கள் வைத்துச் சரக்குகள் வாங்கிக் கையிருப்பாக வைத்திருக்கிறார்கள் போலும் என நினைப்பார்கள்.

இவர்கள், 4000, 5000, கணக்காகக் கேட்லாக் தயார் செய்து கொண்டு, ரூபா ஒன்று அல்லது இரண்டாவது கொடுத்து இதர வி. பி. கம்பெனி வைத்திருக்கிறவர்களிடமிருக்கிற ஆட்களைக் கொண்டு மேல்விலாசம் திருடி வரும்படி செய்து அவ்வவ் விலாசங்களுக்கெல்லாம் தங்களுடைய கேட்லாக்குகளை அனுப்புவார்கள். ஒவ்வொரு வி. பி. கம்பெனிக்காரர்களும் தங்கள் கம்பெனி வெகு யோக்கியமாகவும் நாணயமாகவும் விலை சரசமாகச் சாமான்களை அனுப்புவதாகவும் மருந்துகள், லேகியங்கள், வாசனை எண்ணெய்கள் முதலானவைகளின் குணங்களை ஒன்றுக்குப் பத்தாகவும் விரித்தெழுதுவார்கள். இவர்கள் தேங்காய் ஓடு, உப்பு, சுக்கு, கொட்டைப் பாக்கு இவைகளை நன்றாய்த் தூள்செய்து ஒன்றாய்க் கலந்து விடுவார்கள். பின்பு அவர்கள் விலை மலிவாய் விற்கிற தகரடப்பிகளை டஜன் கணக்காய் வாங்கி அவைகளில் அந்தத் தூளை நிரப்பி அதன் மேல் 'ஆடும்பல் இறுகும் தூள்' என்று அதன் குணங்களையும் கண்டு ஒரு லேபில் ஒட்டி அனுப்புவார்கள்; அதே தூளை 'வஜ்ஜிர தந்தப் பொடி' என்ற பேர் கொடுத்து வேறுவிதமாய் லேபில் ஒட்டி அனுப்புவார்கள்; மேற்படி தூளையே இன்னொரு டப்பிக்கு 'பல்வலி சங்காரன்' என்ற பேர் கொடுத்து அதைத் தேய்க்கும் விதமும் விலையும் வேறு மாதிரி காட்டியிருப்பார்கள்.

இந்தக் கம்பெனிக்காரர் வெகு கொஞ்சமாக மோசம் செய்து ஜீவிக்கிற துலுக்கர்களிடம் 'மசாலா' என்ற எண்ணெயைப் புட்டி ஒன்றுக்கு ஒரு ரூபா அல்லது ஒன்றரை ரூபாய் வீதம் வாங்கிவந்து அதில் இரண்டு வீசை நல்லெண்ணெயைச் சேர்த்துச் சிறு சிறு சீசாக்களில் விட்டு நிரப்பி அரக்குச் சீல் வைத்துப் பாக்கிங்செய்து

---

மூக்கில் பீனிஸ் வந்தால் ஜில்லென்ற சாவியை மூதுகின் கீழ்வைக்கவும், பெரியவர்களானால் வாயை அடிக்கடி அசைபோடச் சொல்லவும், குழந்தைகளானால் கடுதாசியை துரிதமாய் மெல்லச் சொல்லவும்.

அதற்குக் கூந்தல் வளர் தைலமென்றும், சுகந்த பரிமள தைலமென்றும், சுகாஞ்சித எண்ணெய் என்றும் வெவ்வேறு பெயர் கொடுப்பார்கள்; பின்பு அது தலைமயிரைக் குதிக்கால்வரையில் வளர்க்குமென்றும் வாசனை எந்நாளும் நீங்காதென்றும் நரைத்த மயிரை உடனே கறுப்பாகச் செய்யக்கூடியதென்றும் எழுதி விலையும் வெவ்வேறே குறிப்பார்கள். இரண்டு மூன்று ரூபா செலவு செய்து ஒன்றுக்கு முதவாத ஏதாவதொரு லேகியத்தைச் செய்துகொண்டு இந்த ஒரே இழவு எடுத்த லேகியத்தை "இது கூழ்பாண்ட லேகியம்; இது இன்னின்ன வியாதிகளை அடியோடு போக்கடிக்கக் கூடியது; இது சேர் 1-க்கு விலை ரூபா 2—0—0 வி. பி. ஜார்ஜ் பிரத்தியேகம்" என்றும், அதே லேகியத்தை ஓர் இடத்தில் மன்மத காமேசுர லேகியமென்றும், இன்னோரிடத்தில் மன்மத சிந்தாமணி லேகியமென்றும் மற்றோரிடத்தில் கிழவனைக் குமாரனுக்கும் தாதுபுஷ்டி லேகியமென்றும் சேர் 1-க்கு விலை ரூபா எட்டு, பத்து என்றும் மனம் கூசாமல் விலை கண்டிருப்பார்கள்.

வைத்தியக் கண்ணாடி என்ற புஸ்தகம் அனுப்பும்படி வெளியிலுள்ளவர்கள் இந்த மகாத்மாக்கள் கம்பெனிக்குக் கடிதமெழுதினால் வைத்திய சிந்தாமணி என்ற குஜிலிக்கடை புஸ்தகத்தை வாங்கி புக்போஸ்டு V. P. P. யில் அனுப்புவார்கள். ஓர் அணா புஸ்தகத்திற்குக் கேட்லாக்கில் எட்டணாவிலை போடுகிறதுந்தவிர பாக்கிங் சார்ஜ் வேறே என்றும் அனுப்புவார்கள். வெளியூர் ஆசாமிகள் நான் கேட்ட புஸ்தகம் அனுப்பவில்லையே என்று கடிதம் எழுதினால் கொஞ்சம் யோக்கியர்களா யிருப்பவர்கள் பதில் எழுதாமலே இருந்து விடுவார்கள். இன்னும் மோசம் செய்ய வேணுமென்ற கம்பெனிக்காரர்கள், 'கைப்பிசகாய் அனுப்பிவிட்டோம்; மறுதடவை தங்கள் ஆர்டர் வெகுவாய்க் கவனிக்கப்படும்' என்று ஒரு கார்டு எழுதித் தொலைப்பார்கள். 'குதிரை செத்ததுமன்றிக் குழிதோண்டப் பத்துபணம்' என்பது போல் புஸ்தக கிரயத்தோடு தபால் சார்ஜ், வி. பி. சார்ஜ், பாக்கிங் சார்ஜ் முதலியவைகளையும் கொடுத்து 'உப்புக்கண்டம் பறிகொடுத்த

---

விக்கல் கண்டால் குழந்தைகளுக்கு துரும்பைக்கிள்ளி உச்சந்தலையில் வைக்கவும், பெரிய பிள்ளைகளானால் அபாண்டமான சங்கதியைச் சொல்லி பயப்படும்படி செய்யவும். ஸ்தூல தேகஸ்தர்களுக்கு இரண்டு காதுகளையும் விரல்களால் அடைத்துக்கொண்டு வேறொருவரை ஜலம் கொடுக்கச்சொல்லி குடிக்க நின்றுவிடும்.

பார்ப்பனி' போல் வெளி ஆசாமிகள் வாயில் விரலை வைத்துக்கொள்வார்கள்.

ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி விற்கிற இந்தக் கஷ்டகாலத்தில் பணத்தின் அருமை பெருமை தெரியாதவர்களும் 'குருட்டு நாய்க்கு எலும்பு கிடைப்பது போல்' துட்டு முகத்தைப் பார்த்தறியாத நாட்டுப்புற வாசிகளும் மலைநாடுகளிலுள்ள துரைகளிடம் உத்தியோகம் செய்து முள்ளங்கிப் பத்தையைப் போல் பளிச்சென்று நாலு ரூபாயைப் பார்க்கிற அறிவிலிகளும் வி. பி. பி. சாமான் பொருட்டுப் போஸ்ட் மேன்கள் தங்கள் பேரைச்சொல்லி விசாரித்துக்கொண்டு வருவதையே பெரிய பெருமையாக எண்ணிக்கொண்டு மாதத்திற்கு இரண்டு தடவையாவது இந்த மோசக்காரக் கம்பெனிகளுக்கு ஆர்டர் அனுப்புவார்கள். இந்தக் கம்பெனிக்காரர்கள் புதிதாய் யுக்தி செய்துகொண்டு பௌண்டன் பேனா, காப்பு, கொலுசு, அட்டிகை, கெடியாரம் முதலான ஒவ்வொரு வஸ்துவையும் பிளாக் செய்து அதற்குண்டான குணம் குறிகளையும் காட்டித் தாம் இத்தனை வருஷங்களுக்கு ஜாமீன் இருப்பதாகவும் கேட்லாக்கில் கண்டிருப்பார்கள். பிரதி தினம் குஜிலியில் போய் வாங்கி அனுப்பவும் கைமுதலுக்குக் கதியில்லாத சிலர் மேற்கண்ட சாமான்கள் தங்கள் கம்பெனிக்கென்றே ஸ்பெஷலாய்த் தருவிக்கப்பட்டிருக்கிறதென்றும் சாமான்கள் பிடிக்காத விஷயத்தில் வாபஸ் பெற்றுக் கொள்கிறோமென்றும் மனம் கூசாமல் எழுதுவார்கள். சிலர் 'பூமி வெடித்துப் பூதம்வந்து பெண்ணைத் தூக்கிக்கொண்டு போனது' என்ற நாவல்களும் புதிது புதிதான துப்பறியும் நாவல்களும் 'படுக்கை அறையில் பாசாங்கு செய்த பங்கஜவல்லி' 'போஜன சாலையில் போர் விளைந்த கதை' என்னும் இரட்டைப் பேர்களைப்பிணைந்த கதைப்புத்தகங்களும் இவ்வாறு 800 விதமான நாவல்கள் தமது கையிலிருப்பதாகவும் எல்லாம் செலவழிந்து கொஞ்சம் காபிகளே கையிலிருக்கிற படியால் காபிகளுக்கு முந்திக்கொள்ள வேண்டுமென்றும் பிறகு நிஷ்டூரப் படுவதில் பிரயோசனமில்லை என்றும் எழுதுவார்கள். அமெரிக்காவில் பிள்ளைகளைத் தபாலில் அனுப்புகிறார்கள். நம் நாட்டில் அது தவிர மற்றெல்லாம் வி. பி.யில் அனுப்பப்படுகின்றன. நமது ஆங்கிலேயர்களிடம் V. P. P. கவுபன் முதலிய விவரங்களைக் கற்றுக்கொண்ட நம்

---

* இரத்த ஓட்டம் நிற்பதினாலுண்டாகும் திமிருக்கு ஜில்லென்ற தண்ணீரை அடிக்கவும்.

மூர்வாசிகளிடம் கடுகத்தனை யோக்கியதை இருந்தால், நம்நாடு முன் னுக்கு வரச் சகுனம் பார்ப்பானேன்?

## 76. கள்ளுக்கடை ஆசாரம்.

கள்ளுக்கடைகளில் பெரும்பாலும், பறையர்களும் சிறுபான்மை வள்ளுவர், ஒட்டர் முதலிய ஜாதியார்களும் கள்ளுக் குடுவைகளைக் கழுவுவார்கள். குடுவைகள் யாவும் கழுவி உலர்ந்தபின்பு மொத்தமாக விருந்த குடுவைகளை "இது பறையர் குடுவை, இது சக்கிலிகள் குடுவை, இது தோட்டிகள் குடுவை, இது குறவர்கள் குடுவை" என்று அக்குடுவைகளைக் கழுவுகிறவர்கள் வெவ்வேறு மாடங்களில் பிரித்து வைப்பார்கள். ஒட்டர், உப்பரவர், வண்ணார், அம்பட்டர் முதலிய எல்லா ஜாதியார்களுக்கும் 'எல்லப்பசெட்டி லெக்கா ஏக லெக்கா' என்றபடி, அவை மொத்தமாயிருக்கும். ஒரு நாளையிலேயே முதலியார், நாய்க்கமார், செட்டிமார் முதலிய ஜாதியார்களுடைய குடுவைகள் பறையர்கள் அதிகமாக வந்துவிட்டால் பறையர்கள் குடுவைகளாகத் திடீரென மாறிப்போகும். உடனே உப்பரவர்களாவது ஒட்டர்களாவது ஒரு கும்பலாக வந்துவிட்டால் மேற்படி பறையர்கள் குடுவைகளை உப்பரவர், ஒட்டர்கள் குடுவைகளாக வேஷம் போட்டுக்கொள்ளும். 'கடல் மீனுக்கு நளையனிட்டது சட்டம்' என்றதுபோல் கள் விற்பவன் 'இது பறையர்குடுவை, இது வண்ணான் குடுவை, இது நாய்க்கமார் குடுவை' என்று பேரிடுவான். கொஞ்சம் ஜாதியில் பழுத்தவன்போல் பேசுகிற முதலியார் வந்துவிட்டால் "உங்கள் குடுவை அதோ மாடத்திலிருக்கிறது" என்று கடைக்காரன் பறையர்கள் குடுவையைக் காண்பிப்பான். அதிலும் கொஞ்சம் ஆசாரமுடையவனைப்போல் நடித்து மிடாக் கள்ளை அப்படியே நெட்டிவிடும் ஒரு நாய்க்கர் வந்துவிட்டால் தன் கையிலிருக்கிற அளவுக் குடுவையையாவது பக்கத்தில் ஒரு சக்கிலி குடித்து வைத்துப்போயிருக்கிற குடுவையையாவது எடுத்து அவனிடம் கொடுப்பான். இதைக்கண்டு பழுத்தமுதலியாரும் கொழுத்த நாயகரும் தங்களுக்காக வேறே குடுவைகள்வைத்திருப்பதாக வெகுவாய் மகிழ்ந்து போவார்கள்.

---

பக்தியைச் செய்கையா லறியலாம்; கள்ள எண்ணத்தைப் பட்டை நாமம், துளசிதாழ்வடம், விபூதிக் குழையல், ருத்திராக்ஷமாலை முதலிய போலிவேஷத்தா லறியலாம்.

சாராயக்கடைகளில் எல்லா ஜாதியார்களுக்கும் கிளாஸ்கள் தான். கண்ணாடி டம்ளர்களுக்கும் பீங்கான் வகைகளுக்கும் எச்சில் இல்லையென்று ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு வந்த சொற்ப காலத்திற்குள் வெகுநாளைய மனுதர்ம சாஸ்திரத்தில் எப்படியோ வரிபிளந்து எழுதி விட்டார்கள். அறியாமைக் காட்பட்டுத் தெரியாமைக்குத் தொண்டு பூண்டொழுகும் நம்மூர் மூடர்களில் பலர் வெறும் காற்று மூட்டையான ஜாதிமூட்டையைக் கள்ளுக்கடை, சாராயக் கடை வாசற்படியண்டை இறக்கி வைத்துவிட்டு, உள் நுழைந்து கள்ளையும் சாராயத்தையும் கலந்து மூக்குப்பிடிக்க மெட்டிவிட்டுத் திரும்பும்போது 'ஜாதியில் சைவ முத்தையா முதலி, சமைத்துப் போட வள்ளுவப் பண்டாரம்' என்றபடி ஜாதியைக் கட்டிக்கொண்டு அழுகிறார்கள். அந்தோ! ஜாதியில் ஆகாசத்தை எட்டிப்பிடிக்கும் அவ்வளவு உயர்ந்த படியிலிருப்பவர்கள் கள்ளுக்கடை, சாராயக்கடை ஆசாரத்தைக் கவனியாமலிருந்தால் எப்படி? ஓ பாழும் தெய்வமே! பீர், ஒயின், ஜின், ரம், உஸ்கி, பிராந்தி என்ற வகையில் அன்னிய நாடுகளுக்கு வருஷத்தில் இருபதுகோடி பவுன்களை வாரிக்கொடுப்பதை நிறுத்தக்கூடாதா?

---

## 77. கள்ளுக்கடை ஏற்பாடு.

பிரதி தினமும் வழக்கமாய்வந்து கள் குடிப்பவர்களில் சிலருக்குப் புட்டி சரக்கென்றும் குடுவை சரக்கென்றும் பாத்தியதையுண்டு. நினைத்தபோதாவது சமயம் வாய்த்தபோதாவது வந்து குடிப்பவர்கட்குச் சரக்கு எடுத்து வைத்திருந்து கொடுக்கவேணுமென்கிற கட்டாயம் கள்ளுக்கடைக்காரர்களுக் கில்லை. ஒவ்வொரு கள்ளுக்கடையிலும் ஒன்றே காலணுவுக்குக் குறையாமல் கள் குடிப்பவர்கள் ஆப்காரி ஆக்ட் 64-வது செக்ஷன் 11-வது பிரிவு A நமூனைப்படி ஒரு சுடுகாட்டுச் சுருட்டுக்காவது ஒரு காசுக்காவது பாத்தியஸ்தராவார்கள். மேற்படி ஆக்ட் 65-வது ரெகுலேஷன்படி கவர்னர் ஜெனரல் ஆலோசனை சபையில் ஆமோதித்தவண்ணம் வருஷம் முந்நூற்றறுபத்தைந்துநாளும் அதாவது நடந்த சங்கராந்தி பண்டிகையிலிருந்து நடக்கிற சங்கராந்திவரையில் தவறாமல் குடித்துக்கொண்டு வருகிற

---

தன் வசப்பட்டொழுகும் மனைவியும், தெளிந்தபுத்தியும், தைரிய வைபவங்களுமுடையவன் சோகத்தை யடையமாட்டான்.

அல்லது குடித்துவருவதாய் எண்ணப்படுகிற மாமூல்குடியர்கள் ஒவ்வொரு சீமை அங்கவஸ்திரத்திற்கு அருகாராவார்கள். மேலும் ஷெடிரெகுலேஷன் By Law படி இந்த வகையான மாமூல் குடியர்களுக்கு எந்தவிதக் காரணத்தைக் கொண்டாவது எந்த வேளையிலும் கள் இல்லை என்றாவது ஆய்விட்டது என்றாவது சொல்லக்கூடாது. ஒருசமயம் கள்ளுக் கடைக்காரனாவது கள் விற்கிற குமஸ்தாவாவது கவனப்பிசகாய் மறந்து போனாலும், வேணுமென்ற கெட்ட எண்ணத்தோடு கள் எடுத்து வைக்காமற் போனாலும் மாமூல் ஆசாமிகள் வருவதற்கு முன்னே எச்சில் குடுவைகளிலிருக்கிற மீதி எச்சிற் கள்ளையாவது சேர்த்துக் கொடுத்தனுப்ப வேண்டியது. இஃதின்றிப் பத்துப் பதினைந்து பேர்களைக் கூட்டிக் கொண்டு வரும் மேஸ்திரிகளுக்கும் நாலைந்து பேர்களுக்கு முன்னின்று கள் கடன் வாங்கிக்கொடுத்து நாணயமாய்ப் பணம் செலுத்துகிற ஆசாமிகளுக்கும் இதர ஆசாமிகளை விட மூன்று கொசர் தம்பர கள் தூக்கித் தூக்கி விடவேண்டியது. தவிர அவர்களுக்குப் புளித்த காடியில் ஊறவைத்திருக்கிற நுணுக்காய், வாழைக்கட்டை, பச்சை மிளகாய் முதலிய ஊறுகாய்களை வாரிக் கொடுக்க வேண்டியது. நம் சென்னை இராஜதானியில் ஏறியிறங்கும் திருமேனிகள் சுமார் நூறுலட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் பிழைப்பி னிமித்தம் எவ்வளவோ ஏற்பாடுகள் மூட்டை மூட்டையாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன.

---

## 78. கள்ளுக்கடை குமாஸ்தாக்கள் திறமை

ஒவ்வொரு கள்ளுக் கடையிலுமிருக்கும் குமாஸ்தாக்கள், காலை மாலை வரும் கள்ளைச் சரியான குடுவைகளில் அளந்து கொண்டு, ஆறு அல்லது ஏழு ஆழாக்குக் கொண்ட குடுவைகளால் அளந்து விற்பார்கள். தவிர அவர்கள் கள்ளை அளக்கும்போது முக்கால் குடுவையாக அளந்து அதைத் தூக்கி ஊற்றுவார்கள். அதனால் கள்ளில் நுரை கிளம்பி அது அதிகமாய்க் காணப்படும். அன்றியும், அளக்கும் குடுவைகளைக் குயவர்களிடம் சொல்லிப் பார்வைக்குப் பெரிதும் கள் கொஞ்சமாய்க் கொள்ளக்கூடியதுமாகிய தந்திரக் குடுவைகள் செய்துகொண்டு அவர்கள் அளப்பதும் உண்டு. வேண்டு

---

தன்பொருட்டாயினும் பிறர் பொருட்டாயினும் உழைக்காதவனுக்குக் கடவுள் அனுக்கிரஹம் கிடைப்பதில்லை.

மானால் இஷ்டமான வரையில் எடை போட்டுக்கொள்ளுதல் என்ற படி தண்ணீரைச் சேர்த்துக்கொண்டும் நிலுவையாயிருக்கிற பட்டாக் கள்ளில் சுண்ணாம்பு நீர், உப்பு இவைகள் போட்டு அடித்து அதில் தித்திப்பு என்கிற புதுக்கள்ளை சேர்த்தும் விற்பதுமுண்டு.

கடை குமாஸ்தாக்கள் எந்தவித மோசஞ்செய்தாவது கள் நிலுவையாய் நிற்க வொட்டாமலும் கடன்வார்க்கிற கள்ளைக் கணக்கில் எழுதாமலும் காலப்பணம், தோட்டப்பணம், மாமேறும் ஆள் சம்பளம், கடைக்குடிக்கூலி, கள் எடுகூலி, எஜமான் வாங்கியிருக்கிற * மார்வாடி கடனுக்கு வட்டி முதலிய செலவைப் பார்த்துக்கொண்டு மிச்சத்தை முடிப்புக்கட்ட வேண்டியது. குமஸ்தாக்கள் செய்யும் மோச பாபத்துகளில் தேறிய லாபத்தில் தர்மம், தீபம், சுரூட்டுக் கட்டு, கடைவேலைக்காரர்கள் கூலி, சேவகர் பீட்காசு, எஜமான் வீட்டுப் பிள்ளைகள் நாஸ்தா முதலிய செலவுகளை யெல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டியது. இவையெல்லாம் போய் மிகுதியான தொகை குமஸ்தாவுக்குச் சேரும். முதலில், ஒருவன் மரம் ஏறும் தொழிலில் அமர்ந்து பின்பு கள்விற்கும் குமஸ்தா ஆவான். அதிலிருந்து இரண்டொரு வருஷம் கள்ளுக்கடைகளை லாபச்சீட்டுக்கு எடுத்துக்கொண்டு பார்த்து வந்து கூடிய சீக்கிரத்தில் அவன் ஒரு கடைக்குச் சொந்தக்காரனும் ஆய்விடுவான். அவன் கட்டுவது வண்ணான் உடுப்பாகவிருந்தாலும் சுபசோபனுதிகள் ஒவ்வொன்றுக்கும் தாராளமாய்ச் செலவு செய்வான். சிலர் நான் வீணாக கதை வளர்ப்பதாக என்மேல் தோஷம் சொல்வார்கள். ஆனால், இவர்களுக்குக் கள் பொங்குகிற மாதிரி கள் விற்கும் பணமே பொங்குகிறதோ? அல்லது குடியர்களுடைய மனைவி மக்கள் கஞ்சிக்கின்றி, கண்ணீர் விட்டழும் வயிற்றெரிச்சல் பொங்குகிறதோ? அதை யார் கண்டார்கள். மதிராஸ் சர்க்கிலில் மாத்திரம் சுமார் 50 கள்ளுக்கடைகளிருக்கின்றன. கடை ஒன்றுக்குக் காலை மாலை சராசரி 300-ரூபாய் வீதம் வைத்துக்கொண்டாலும் ஒரு நாளையில் பதினையாயிரம் ரூபா எகிறிப் போகின்றன. சாராயம், பீர் முதலிய கணக்குகளை ஆப்காரி ரிபோர்ட்டால் தெரிந்துகொள்ளலாம். ஒரு செம்புத் தண்ணீரை ஏற்றுக்கொள்ளாத பாழும வயிறு பிரதிதினம் புழல் ஏரியில் எட்டில் ஒரு பங்கு கள்ளைக் குடித்துவிட்டு ஏப்பமிடுகிறது!

---

அற்பவட்டி என்று அசட்டையாயிராதே; அது நித்திரையாவது ஒழிவு ஓச்சலாவது இன்றி இரவும் பகலும் ஓடிக்கொண்டிருக்கும் இயல்புடையது.

## 79. குருவிக்காரர் மயிலெண்ணெய் மோசம்.

* குருவிக்காரர்கள் காட்டிலிருந்து காடை, கௌதாரி, காட்டுக்கோழி, மயில் முதலிய பட்சிகளைப் பட்டணவாசங்களுக்குக் கொணர்ந்து விற்பனை செய்து அங்கிருந்து மணி ஊசி முதலியவற்றை நாட்டுப் புறங்களுக்குக் கொண்டுபோய் விற்று ஜீவிப்பார்கள். இவர்கள் இந்துஸ்தானி தேயத்துத் தாழ்ந்த வகுப்பு ஜாதியார்கள். இவர்களில் ஆண்களும் பெண்களும் தாங்கள் ஒன்றும் பாதியுமாய் அவித்துத் தின்னும் மயில் கறியில் மிதக்கும் மயில் கொழுப்புடன் விளக்கெண்ணெயைச் சேர்த்து அதனோடு பச்சை இலைகளைப்போட்டுக் காய்ச்சி கால்குடுவை என்ற சிறிய கழுத்துள்ள மண் குடுவைகளில் அதை நிரப்பிக்கொண்டு "மயில் எண்ணெய் வாங்கலியா?" என்று கூவிவருவார்கள். இது வாதம், முகஜன்னி, கைகால் குடைச்சல் முதலிய எல்லா வியாதிகளையும் குணமாக்குமென்று சொல்லி அவர்கள் பேதை ஜனங்களை ஏமாற்றுவார்கள்.

சிலர் இதை எப்படி நம்புவதென்று அவர்களைக் கேட்டால் அவர்கள் தங்களிடமிருக்கிற காய்ந்த சிறு குச்சிகளை எடுத்து ஒடிப்பார்கள். அவை சிறுசிறு துண்டுகளாக ஒடிந்துபோம். பிறகு வேறொரு குச்சியை எடுத்துத் தாங்கள் வைத்திருக்கும் மயிலெண்ணெயில் நனைத்து உடனே கொஞ்சம் அனலில் காட்டி அதைச்சுடு கையிலே வளைக்க அது நாறு போல் வளையும். இப்படிக் குச்சிகள் வளைவதே மயிலெண்ணெய் என்பதற்குச் சோதனை என்று சொல்லி அதைப் பலம் ஒரு ரூபா முதல் வாங்குகிறவர்கள் சாமார்த்தியத்திற்குத் தக்கபடி ஓர் அணு வரையிலும் விற்று ஜனங்களை ஏமாற்றுவார்கள்; அந்த எண்ணெய் விற்குந்தோறும் அதில் விளக்கெண்ணெய் சேர்த்துக்கொண்டே அதைவிற்ற வண்ணமாயிருப்பார்கள். பாட்டிக் காலத்துக் கதையைக் கேட்டுக்கொண்டிருக்கிற பாமர ஜனங்கள் மயிலெண்ணெயால் எல்லா வியாதிகளும் நீங்குமென நம்பித் தமது கைத்துட்டை இழந்து மோசம் போவார்கள்.

---

## 80. லீவு வேண்டியதற்கு மோசம்.

தங்களுக்கு ரஜா வேணுமென்ற சேவகர்கள், சிப்பந்திகள், குமாஸ்தாக்கள், பாடசாலைப்பிள்ளைகள் முதலானவர்கள் (Smallpox)

* நீ அந்திய காலத்தில் அமைதியாய் உயிர்விட விரும்பினால் தேசவிஷயத்திலும் ஜனோபகார விஷயத்திலும் பாடுபட்டுக்கொண்டிரு.

வைசூரி காலத்திலும் (Cholera) வாந்திபேதி காலத்திலும் தங்கள் வீட்டில் மேற்படி வியாதிகளிருப்பதாகச் சுலபமாய் ஒரு லெட்டர் எழுதிவிட்டு நின்று விடுவார்கள். அடிக்கடி லீவு கிடைக்க முடியாத ரெயில்வே, போஸ்டல் முதலிய இலாக்காக்களிலிருப்பவர்கள் முத்துக்கொட்டையைப் பானையின்மேல் உரைத்துக் கண் இரப்பைகளில் தடவிக்கொள்வார்கள். உடனே கண் சிவந்து விடுவதன்றி வீங்கியும் போகும். அதை அவர்கள் தமது மேல் உத்தியோகஸ்தர்களுக்காவது டாக்டர்களுக்காவது காண்பித்து லீவு பெற்றுக்கொள்வார்கள். பின்பு அவர்கள் தாங்கள் விரும்பிய வரையில் தங்களிஷ்டம்போல் இருந்து விட்டு அடுத்து இரண்டு ஸ்நானஞ் செய்தால், கண் பழையபடி சொஸ்தமாய்விடும். உடனே அவர்கள் தமது வேலைக்குப் போவார்கள். வேணுமென்றுநோயை வருவித்துக்கொள்ளுகிற மடையர்களால் நமது தேசத்திற்கு என்ன நன்மை யுண்டாகப் போகிறது?

## 81. சிறுத்தொண்டன் படம்

சில பண்டாரங்களும் பூசாரிகளும் சிறுத்தொண்டன் கதையை மனப்பாடம் செய்துகொண்டு ஒரு கடுதாசியில் சிறுத்தொண்டன், வெண்காட்டு நங்கை, சீராளன், ஜங்கமர் முதலியவர்களின் உருவங்களை எழுதிக்கொள்வார்கள். இன்னொரு படத்தில் இக்கதையின் முக்கிய பாகமான சீராளன் பள்ளிக்கூடத்தில் படித்தல், தாயார் வெண்காட்டுநங்கை சீராளனை அறுத்தல், அவன் தகப்பனார் அவன் கை கால்களைப் பிடித்துக்கொள்ளுதல்போல் எழுதப்பட்டிருக்கும். தவிர, யமதூதர்கள் பாவிகளை எமலோகத்தில் செக்கில் வைத்து ஆட்டுவதுபோலவும், அக்கினி ஸ்தம்பத்தைத் தழுவச் சொல்லி அடிப்பதுபோலவும், தேள்களையும் பாம்புகளையும் விட்டுக் கடிக்கச் செய்வதுபோலவும் இன்னொரு படத்தில் இருக்கும். இவை சித்திரித்து வர்ணம் வைத்துப் பார்வைக்கு அழகாய் இருக்கும். அவர்கள் இந்தப் படங்களை வைத்துக்கொண்டு சாலைகளிலுள்ள மரத்தடிகளில் குந்திகொண்டு பிரம்பால், அப்படங்களைக் காட்டி,

---

சாக்குப் பையை நிரப்புவதுபோல உன் வயிற்றை நிரப்பிக் கொள்ளாதே. சத்துள்ள மிதமான ஆகாரம் சுக ஆரோக்கியத்தைக் கொடுத்து ஆயுளை வளர்க்கும்.

"கூலிக்குக் குத்தியன்னம் கொடுப்பாருண் டோஉலகில்?
கூசாமல் அன்னதானம் செய்வாருண்டோ?
தாலிவிற் றன்னதானம் செய்வாருண் டோஉலகில்?
சதாகித்த மன்னதானம் செய்வாருண்டோ?
ஒருதாயிக் கொரேபிள்ளை யாகவே னும்பத்தா!
தாயும் தகப்பனும் மனமொப்பி பத்தா!
பிள்ளையை அறுத்துக்கறி சமைத்திட்டால் பத்தா!
பிரியமு டனுண்பேன் சிறுத்தொண்ட பத்தா!

என்று ஒருவகையாய்ப் பாடி ஜனங்கள் கும்பல் சேர்ந்தவுடன்,

பெற்றதா யார்க்கன்னம் இடாத பாவிகளை
எரிவாய்நர கத்தில்தள்ளி குத்துவா ராம்தூதர்
வாத்தியார் கூலிதன்னைக் கொடாத பாவிகளை
ஏழாம்நர கத்தில்தள்ளி இடிப்பாராம் தூதரவர்
கொண்டபுரு ஷனைவிட்டுக் கண்டவ னைத்தேடும்
சதிகாரப்பாவிகளை அக்கினித்தம்பத்திலே மோதுவாராம் தூதர்
சிறுத்தொண்டன் கதைகேட்டுத் தருமம்செய் யாதபேரைக்
கருங்கல்செக் கில்போட்டுத் திருப்புவா ராம்தூதர்"

என்று பேதைப் பெண்கள் பயப்படும்படியாகப் பாட்டுகளைப் பாடி கிடைக்கும் காசை எடுத்துக்கொண்டு நேரே கள்ளுக்கடைக்குப் போய்ச் சலிக்கக் குடிப்பார்கள். நாமும் நமது நாடும் முன்னுக்கு வரவேணுமானால் இப்படிப்பட்ட மோச எண்ணமுடைய கேப்மாரிகளால் ஏய்க்கப்படுவதிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டியது அவசியமல்லவா? நம் நாட்டு உப்பைத்தின்று வயிறு வளர்க்கும் அன்னியர்களால் நாம் Native Beggars என்று அழைக்கபடும் கிறோமே. 'நாம் வசிப்பது ஞானபூமி' என்று பெருமை பேசிக் கொள்ளும் இந்தியர்களுக்கு இதைவிட வேறே அவமானம் வேண்டுமா?

## 82. துலுக்கர் கலியாண யாசகம்.

இரண்டு *துலுக்கர்கள் ஒரு தட்டில் வெற்றிலைப் பாக்கையும் நாலைந்து ஈரோட்டு வாழைப்பழங்களையும் வைத்து எடுத்துக் கொண்டு வர்த்தகர், பெரிய மனிதர்கள், உத்தியோகஸ்தர்கள் முத

நீ வாங்கும் சாமானில்லாமல் உன் பொழுதைக் கழிக்கக்கூடுமானால் நயத்தைக்கோரி அவசியமில்லாததை வாங்கி வீட்டை (ஷாப்பு) கடையாகச் செய்துகொள்ளாதே.

வியவர்களைப்போய்க் காண்பார்கள். அவர்களில் ஒருவன் பெண்வீட்டுக்காரனென்றும் மற்றொருவன் பிள்ளைவீட்டுக்காரன் என்றும் சொல்லித் தட்டிலிருக்கிற வெற்றிலைப் பாக்கு, பழம் இவைகளை எடுத்துக்கொள்ளும்படி அவர்களை வற்புறுத்துவார்கள். அவர்கள் "சங்கதி என்ன ?" என்று கேட்டால், இந்த மகம்மதியர்கள் "முன்னே தாம்பூலத்தை எடுத்துக்கொள்ளுங்கள்" என்பார்கள். "சங்கதி தெரியாமல் எப்படி எடுத்துக்கொள்ளுகிறது ? முன்னே விபரம் சொல்லுங்கள்" என்று அவர்கள் கேட்டால், எங்களிருவர் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் விவாகம் நடத்தவேண்டி யிருக்கிறது. நான் கலெக்டர் ஆபீஸில் டபேதார் வேலையிலிருந்தேன். இவர் இப்போதுதான் ரயில்வே ஓர்க்ஷாப்பில் சொற்ப சம்பளத்தில் பியூன் வேலையில் அமர்ந்திருக்கிறார். என் வேளை பொல்லாப்பால் என் வேலை போய்விட்டபடியால், இப்போது பெரிய கஷ்டகாலமா யிருக்கிறது. இச்சமயம் இந்தக் கலியாணம் நேர்ந்துவிட்டது. தாங்கள் தங்களால் கூடுமான சகாயம் செய்ய வேண்டியதென்று சொல்லி இவர்கள் விடாக்கண்டர்களாய் மல்லாடுவார்கள். இந்த இரண்டு மகமதியர்கள் உடுத்தி யிருக்கிற வேஷத்திற்காவது கால் அல்லது அரைக்கால் ரூபாயாவது கொடுத்தனுப்பவேண்டி யிருக்கிறது. இப்படியே பேட்டைகள்தோறும் அவரவர்கள், பேர், உத்தியோகம், வியாபாரம் முதலியவைகளை அவர்கள் விசாரித்துக்கொண்டு வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் கலியாண யாசகமே செய்வார்கள்.

இஸ்லாம் மதஸ்தாபகராகிய மகமதும் அவர் மருகர் ஆலியும் நாளைக்கு வேணுமே என்கிற சிந்தனையில்லாமல் தானஞ்செய்து வந்ததன்றித் தமது சிஷர்களுக்கும் அதையே போதித்து வந்தார்கள். தீன் என்னும் அனுஷ்டானங்கள் ஐந்தைவிட மகம்மது சமயத்தின் திலகம்போன்ற பிரதான உபதேசமாவது "உன் சம்பாதியத்தை உன் சகோதரர்களுக்குப் பங்கிட்டுக் கொடு" என்பதேயாம். கொரானில் சொல்லியபடி செய்வது அல்லது அனுஷ்டிப்பதையே விருதமாகக்கொண்ட ரோஷமுள்ள ஜாதியார்களாகிய மகம்மதியர்களும் தேசத்துரோகிகளாகிறார்கள். அந்தோ ! இதுவும் இந்தியாவின் தலைவிதி தானோ ?

---

முகட்டுப் பூச்சிக்கு வீட்டை வெள்ளை அடித்து நல்லெண்ணெய் தீபம் வைத்துக்கொள்ளவும், என் புண்ணுக்கு புகைபோடவும்.

## 83. அநாதிப்பிணத் தகன யாசகம்.

சில தம் அடிக்கிற சோம்பேறிப் பயல்கள் திக்கில்லாமல் இறந்து கிடக்கிற பிணங்களை நடுத்தெருவில் கிடத்திவிட்டு வருவார் போவார்களிடம் தாங்கள் வெகு உருக்கமாய் அவற்றை எடுத்துத் தகனம் செய்பவர்போல் நடித்து ஒரு மண் தட்டெடுத்துக்கொண்டு யாசிப்பார்கள். சிலர் தங்கள் பெண்சாதி, தாயார் முதலியோர் இறந்துவிட்டதாகப் பொய் சொல்லி யாசிப்பார்கள். இப்படி அவர்கள் பொய், புளி சுருட்டு முதலியவைகளால் யாசகம் செய்த பணத்தைக்கொண்டு சலிக்கக் குடித்து அந்தக் குடி வெறியில் பிணத்தைத் தூக்கிக்கொண்டுபோய்ச் சுடுகாட்டில் யாரிடமும் சொல்லாமலே போட்டுவிட்டு வந்துவிடுவார்கள். சிலர் தாங்கள் தண்டிய பணத்தை அப்பிக்கொண்டு தலை மறைந்து விடுவார்கள். தங்கள் வயிற்றுப் பாட்டுக்கே காற்றாய்ப் பறக்கும் தடியர்களிடம் திக்கற்ற பிணங்களைத் தகனம் செய்வதற்குத் தருமம் செய்யும் புண்ணியவான்கள், கொஞ்சம் தயைசெய்து கார்ப்பொரேஷன்சிப்பந்திகளிடம் சொல்லும் பட்சத்தில் அந்த ஏழைப்பிணங்கள் நல்ல பிணங்களாய் விடுமல்லவா ?

---

## 84. பொய்ச்சாட்சி உத்தியோகம்

எச்சிற் கள்ளுக்கு இதம்பாடுகிற சில அயோக்கியர்கள் இருப்பதால்தான் பொய்சாட்சி உத்தியோகம் நடந்துவருகிறது போலும். சிலர் போக்கிரித் தனத்தில் பிரக்யாதி யடைந்திருப்பதுபோல் பொய் சாட்சி சொல்வதிலும் சிலர் கியாதி பெற்றிருக்கிறார்கள். பொய்ச் சாட்சி சொல்வதில் பேர் போனவர்களைத் தங்கள் வீடுதேடி வந்து சில வழக்குக்காரர்கள் கூப்பிட்டுப்போவார்கள். அடிதடி கேஸ்களில் டக்கு டமாகம் செய்யும் சிலர் பிரதிதினமும் போலீசில் போய்க் காத்துக்கொண் டிருப்பார்கள். அவர்கள் தங்கள் கேஸ்களைக் கூப்பிடும்போது தண்ணீர்ப்பந்தல் லாயர்களை ரூபா ஒன்று அரைக்குப் பேசி முடிவு செய்து கொள்வதுபோல் பொய்சாட்சிச் சொல்வதற்கே காத்துக்கொண்டிருப்பவர்களையும் அதே வேளையில் கால்

---

காலை ஆகாரத்தைப் பற்றிக் கவலையில்லாத பட்சி மிருகாதிகளை விட மனுஷன் தொட்டில் முதல் சுடுகாடு வரையில் பல இடுக்[illegible]களுக்கு இலக்காயிருக்கிறபடியால் வீணில் கழியும் காலத்திற்கு விசனப்படவேண்டியது.

அறை கொடுப்பதாகச் சொல்லித் தயார் செய்துகொள்வார்கள். தண்ணீர்ப்பந்தல் வாயாராவது நின்றபடியே நீ வாதியா பிரதிவாதியா என்று கட்சிக்காரனை ஒருசமயம் விசாரித்துக் கொள்ளுவார்; பொய் சாட்சிச் சொல்லவிருக்கும் ஹுத்தர்கள் அதையும் கேட்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் நெய் வாற்ற பணம் முழுகிப்போகிறதுபோல் முதலில் தங்கள் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு பின்பு அவர்களைச் சமாதானமாய்ப் போகும்படி கொஞ்சம் பிரயாசை எடுத்துக் கொள்வார்கள். கேஸ் விசாரணைக்குப் போவது போலிருந்தால் அந்தச்சமயம் இவர்கள் வாதி, பிரதி வாதிகளுடைய விருத்தாந்தங்களை ஒருவாறு தெரிந்துகொண்டு தம்மைக் கடைசி சாட்சியாகக் கூப்பிடும்படி ஏற்பாடு செய்து கொண்டு சாட்சி சொல்லப் போவார்கள். சண்டை போட்ட இடம் எங்கே யிருந்தாலும் அங்கேதான் தமது மாமியார் வீடென்றும் சண்டை நேர்ந்த சமயத்தில் தாம் வந்துக் கொண்டிருந்ததாகவும் எதிரி இடுப்பில் ஒரே துணியுடன் இருந்ததாகவும் அங்கே இன்னும் சிலர் கும்பலாயிருந்ததாகவும் அவர்களெல்லாரும் தமக்குப் பரிச்சியமில்லை என்றும் பிரதிவாதி திட்டிக்கொண்டே வாதியை ஓங்கி ஓர் அறை கொடுத்ததைத் தாம் பார்த்ததாயும் இவற்றையெல்லாம் தாம்நேரிலிருந்து பார்த்தவர் போல் சொல்லுவார்கள். இவர்களில் சிலர் இரண்டிடங்களிலும் துட்டைப் பெற்றுக்கொண்டு "அவர்கள் இருவர்களும் சண்டைபோட்டுக்கொண் டிருந்தார்கள். வாடு கொட்டினுடோ வீடு கொட்டினுடோ நாகு தெலிது" என்ற கோமுட்டி சாட்சிபோல் மாங்காயிலும் படாமல் மரத்திலும்படாமல் சொல்வார்கள். பொழுதுவிடிந்தால் இம்மாதிரி உத்தியோகம் செய்து கள்ளைக்குடித்து காலம் கழிக்குமிவர்களால் நமது நாட்டிற்கு என்ன நன்மை யுண்டாகப்போகிறது?

---

## 85. குடியைக் கெடுக்கும் குண்டுணிகள்.

பெண் பிள்ளைகளின் கஷ்டத்திற்கு எதிர்பார்த்திருக்கும் சில சோம்பேறிகள் உருத்திராக்ஷப் பூனைபோல் வேடம் பூண்டு வெகு யோக்கியர்களைப்போல் நடிப்பார்கள். அவர்கள் ஒரு குடும்பத்திலுள்ள சகோதரர்களில் இளையவனுடன் வெகுவாய்ப் பரிந்து பேசி "உன் தமையன் சுத்த பயித்தியக்காரன்; ஒருவன் எத்தனை பெண்

---

நாம் ஈரனென்றும், பொழுதென்றும், காலமென்றும் சொல்கிறோம். நாகரிகம் பெற்ற நாட்டார்கள் அதை அவ்வளவும் பணமென்கிறார்கள்.

சாதிகளை யானாலும் மாமி மாமன்மார்களையானாலும் சம்பாதிக்கலாம். ஆனால் பிறந்த சகோதரன் வருவானா? அவன் உன்னையும் தன்னைப் போல ஒரு வீட்டுக்காரனாகச் செய்ய வேணுமென்கிற எண்ணமில்லாமல் ரகசியமாய் மாமியார் வீட்டிற்குப் பணத்தை யனுப்பி அவர்கள் நகை நட்டுகள் செய்துபோடுவதுபோல் தன் பெண்சாதிக்கு நகை நட்டுகள் செய்துகொண்டு வருகிறான். தவிர, உன் அண்ணன் தன் மைத்துனன் பேரால் முக்கால் காணி நிலம் வாங்கி யிருக்கிறானே? இதெல்லாம் எப்போது தெரியும்? நீ யோக்கியனாயிருந்து தகப்பனுக்குப் பின் தமையன் என்று எண்ணி உன் சம்பாதியத்தை அவனிடம் அப்படியே கொடுத்து வருகிற படியால் அவன் எல்லா ஆட்டமும் ஆடுகிறான். சில துன்மார்க்கப் பிள்ளைகள்போல நீயும் கண்டபடி செலவுசெய்தால் இதுவெல்லாம் எப்படியாகும்? அவனுடைய பெண் சாதிக்காவது உன்னிடம் கொஞ்சம் பட்சமிருக்கிறதா? அவள் தன் புருஷனுக்கொரு மாதிரியும் உனக்கொரு மாதிரியுமாய் நடக்கிறாள். இதுவெல்லாம் வெகுநாளாய் எனக்குத் தெரியும். இத்தனை நாளாய் நமக்கென்ன.வென்றிருந்தேன். எத்தனை நாளைக்குத்தான் பார்க்கிறது? கடைசியில் அவர்கள் உன்னை ஓட்டாண்டி ஆக்கிவிடுவார்களென்று எனக்கே பொறுக்க முடியாமையால் அதைச் சொல்ல வந்தேன். எல்லாவற்றிற்கும் தெய்வம் ஒன்றிருக்கிறது. நீ கெட்டுப் போகமாட்டாய். அண்ணன் தம்பி துரோகம் விடுமா?" என்று இளையவனைக் கொஞ்சம் தூக்கி விடுவார்கள்.

பிறகு அவர்கள் அவனுடைய தமையனிடம் சென்று "தம்பி! நீதான் நம்மவர்களில் கொஞ்சம் பதமுடையவன். தகப்பன்பேர் போக ஓட்டாமல் தம்பி, தங்கைகளைச் சேர்த்துப் பிடித்துப் பார்ப்பவர்களுக்கு ஒரு குடித்தனமாய்க் கோபிதமாய் நடந்து வருகிறாய். உன்னைப்போல் உன் தம்பியும் குடித்தனத்தில் கவிழ்ந்திருந்தால் மிகவும் நலமாயிருக்கும். அவன் சிறுபிள்ளைத்தனமாய்க் கேட்பார் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஆட்டம் ஆடுகிறான். இல்லாமற்போனால், என் தமையனும் அண்ணியும் தங்கள் வரையில் பார்த்துக்கொண்டு எனக்கு ஒருமாதிரியாய் நடக்கிறார்களென்று வீட்டிலிருக்கிற இருப்பை வெளியில் சொல்லிக்கொண்டு திரிவானா? இதை நாலு

---

உனக்கு நல்லதென்று தோன்றுவதை யுடனே செய். கெட்டதென்று தோன்றுவதைச் செய்யவே செய்யாதே. நாலுபெயர் சொல்வதை மெதுவாய் செய்.

பேர் கேட்டால் என்ன சொல்வார்கள்? ஊரிலிருக்கிற பிள்ளைகளைப் போல் நீயும் உன் வரைக்கும் பார்த்துக்கொண்டு பிற்காலத்துக்கு உதவும்படி நாலு பணத்து நகை நட்டுகள் தேடிக்கொண்டால் உன்னை யார் என்ன கேட்கப்போகிறார்கள்? குடும்பம் சின்னதும் பெரிதுமா யிருக்கிறதே என்று நீ எவ்வளவோ கஷ்டமெல்லாம் படு கிறாய். இதுவெல்லாம் 'விழலுக்கிறைத்த நீர்' ஆகும்போ லிருக் கிறது. வீட்டில் பெரியவனாகிய நீ யிருக்க அவன் உனக்குத் தெரி யாமல் அந்தக் கடைக்கார மாணிக்கச் செட்டியிடம் என்னவோ சேர்த்து வைத்திருக்கிறதாய்க் கேள்வி. அந்தக் கடைக்காரன் கடைசியில் 'நீ எப்போது கொடுத்தாய்? என்ன கொடுத்தாய்?' என்றுதான் கேட்கப் போகிறான். நீ எவ்வளவு பாடுபட்டாலும் அதுவெல்லாம் பாழாய்ப் போகும்போலிருக்கிறது" என்று அவர் கள் இருவர்களுக்கும் க்ஷணநேரத்தில் பகையை யுண்டாக்கி விடு வார்கள்.

பின்பு தமையனுக்குத் தாமே முன்னின்று புத்தி சொல்வ தாய்த் தம்பிக்கும், தம்பிக்கு வேண்டியபடி சொல்லுவதாயும் அடக் குவதாயும் அண்ணனுக்கும் சொல்லி நாளாவட்டத்தில் பகை என்ற பயிருக்குக் குண்டுணித்தனம் என்கிற நீரைப் பாய்ச்சி அதை நாளொரு மேனியாய் வளரும்படி செய்வார்கள். இப்படி இவர்கள் கொள்வன கொடுப்பன விஷயத்திலும், வியாச்சிய வில்லங்க விஷ யத்திலும், லாவாதேவி விஷயத்திலும், அடிதடி சண்டை விஷயத்தி லும் அண்ணன் தம்பிகள் இரண்டுபேரையும் ஏற்றபடி தூக்கிவிட்டு அவர்கள் இருவர்களும் தம்மையே தேடும்படி செய்துகொள்வார் கள். அவர்கள் தமது வியவகாரம் தீர்க்கும்படி இவர்களைக் கூப்பிடும் போது இவர்கள் "நான் ஒரு வேலையாய்ப் போகிறேன். போனால், ஒன்றிரண்டு கிடைக்கும். இப்போது வரமுடியாது. வேணுமானால் நாளைக்கு வருகிறேன்" என்று சொல்வார்கள். இவர்கள் செய்யும் சூதை யறியாத மூட ஜனங்கள் இவர்கள் மிகவும் நியாயம் தெரிந் தவரென்றும் தம்முடைய விவகாரத்தை எடுத்துக் கண்டித்துப் பேசக் கூடியவரென்றும் நினைத்து அவர்களுக்குக் கைநொக்கம் கொடுப்பதன்றிக் கள்ளும் சாராயமும் ஊற்றி அவர்களைக் கிட்ட

கொள்வினை கொடுப்பினை விஷயத்தில் தற்கால அனுஷ்டானத்திற்கு மூன்று ப. வேண்டியது. 1-பந்து அதமம், 2-படிப்பு மத்திமம், 3-பணம் உத்தமம், மூன்றுமிருந்தால் 8-வித பொருத்தம் அனுகூலியம்.

இருந்து அழைத்துப் போவார்கள். இந்த வஞ்சகர்களுக்கு இதுவே தொழிலாகையால், இவர்கள் எந்த இடத்தில் அற்ப மனஸ்தாப மிருக்கிறதோவென்று இரவும் பகலும் மோப்பம் பிடித்துக்கொண் டிருப்பார்கள். கோடிக்கணக்கான ஜனங்களை அடிமைப்படுத்திய ஆங்கிலோ இந்தியன் பத்திராதிபர்களை விடச் சில குடிகளைக் கெடுத் துப் பெரிய மனிதர்களென்று மனப்பால் குடிக்கு மிவர்கள் கொஞ் சம் யோக்கியர்களே.

---

## 86. பெண்பேசும் தரகரிகள்.

பெண்பேசும் தரகரிகள் எல்லாச் சாதியிலும் இருந்தாலும் முதலிமார் ஜாதியில் மாத்திரம் விசேஷமாயும் கொஞ்சம் சமத்கார முடையவர்களாயு மிருக்கிறார்கள். சிலர் தமது தாய் ஒரு ஜாதியும் தகப்பன் ஒரு ஜாதியுமாய் இருந்தாலும் தமிழ் பேசுபவர்கள் முதலி யார் என்றும் தெலுங்கு பேசுபவர்கள் நாயுடுகார் என்றும் தம்மைச் சொல்லிக் கொள்வார்கள். தக்க இடத்தில் பெண்கொள்ள வேணு மென்கிற நோக்கம் அனுபோகத்தில் வந்துவிட்டபடியால், தரகரிக ளுடைய சகாயமின்றி இப்படிப்பட்டவர்கள் கலியாணம் நிறை வேறாது. 'தடி எடுத்தவர்களெல்லாம் தண்டற்காரர்' என்றபடி இரண் டோரிடம் தெரிந்தவர்களெல்லாம் தரகரிகளே. இந்தத்தரகரிகள் ஒரு வனைப் பிடித்து அவனுக்கு மிலிடெரி சாப்பாடும் தண்ணீர் பாபத் தும் தளராமல் நடத்தினால், அவன் நித்திய தரித்திரனைக் குபே னென்றும் முழுமூடனைக் கம்பனென்றும் முழுதும் அன்னியனைத் தாயாதி வர்க்கமென்றும் முடிபோடுவான். குடிப்பழக்கமில்லாத தரகரிக்குச் சமயோசிதம் போல் பேசவும் இலேசில் அவிழ்க்க முடி யாத முடிபோடவும் சாமர்த்தியமிராது. இதுநிற்க, அந்தத் தரகரியி னிடம் இன்னார் வீட்டுப்பெண்ணை எப்படியாவது முடித்தால், அவ னுக்கு அதிக தொகை கொடுப்பதாய் அவனிடம் ஏற்பாடு செய்து கொண்டால், அவன் அதிகாரி வீட்டுப் பெண்ணுக்கும் ஒரு காசுக் கும் உதவாத உலுத்தனுக்கும் பொய்யையும் புளுகையும் சொல்லிக் காரியத்தை நடத்தி விடுவான்.

எப்படியெனில், தரகரியானவன் பெண்ணின் தகப்பனிடம் சென்று அவன் க்ஷேமலாபங்களை முதலில் விசாரிப்பான், பின்பு

---

படிப்பும் பணமும் பெரிய உத்தியோகமுமிருந்தால் பரம்பரையைப் பார்ப்பவன் பெரிய பைத்தியக்காரன்.

அவன் பெண்ணின் கலியாண விஷயத்தை முக்கியமாய் எடுத்துக் கொண்டு "பெரிய பெண் கமலாவுக்கு கிடைத்த இடம் மிகவும் நல்ல இடம். என்னவோ அது விஷயத்தில் நமக்கு யாதொரு சிந்தனையு மில்லை. கமலா குணத்திற்குத் தக்கபடி தக்க இடம் கிடைத்தது. நமது குழந்தை அபுரூபத்திற்கும் இங்கொரு தக்கவிடமிருக்கிறது. ஆனால், அவர்கள் இன்னம் கொஞ்சம் மேலான இடமாகப் பார்க்கிறார்கள். அவர்கள் நல்ல பரம்பரையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் யாரோவென்று நினைக்கிறீர்களோ? தூரமல்ல; நம்மச்சினி அமிர்தத்தின் நாத்தனாருக்குச் சொந்த ஓரகத்திப்பிள்ளை. அவனை உமக்குக் கூடத் தெரிந்திருக்கலாம். அவன் தஞ்சாவூரில் சிரஸ்தாராரா யிருந்த தானப்ப முதலியார் சட்டகர்பிள்ளையின் மகன். மெட்ரிக் வாசிக்கிறான். அவன் தகப்பனார் கணியம்பாக்கத்தில் சுமார் 500 ரூபா பேரிஜ் கட்டக்கூடிய பெரிய சமுசாரி. ரொக்கத்தில் மாத்திரம் இரண்டு பெரிய ரூபாய்க்குக் குறையாமல் இருக்கிறது. சென்னையிலும் இரண்டு மூன்று வீடுகளிருக்கின்றன. அவன் ஒரே பிள்ளை. அவர்கட்கு வேலூரில் பெண்கொள்ள வேணுமென்கிற இஷ்டம் பிள்ளையாண்டான் சென்னையிலேயே வேணுமென்று பிடிவாதம் செய்வதாய்க் கேள்வி. அதனால் தான் போன வருஷமே ஆகிற கல்யாணம் தடைப்பட்டுப் போய்விட்டதாம். நான் நமது அபுரூபம் ஞாபகம் வரவே அவர்கட்குச் சொன்னேன். அவர்கள், புதுப் பாத்தியம் வேண்டியதில்லை என்றார்கள் பிறகு சில பாத்தியங்களை எடுத்துக் காண்பித்ததின் மேல் நகைநட்டுகள் எவ்வளவு போடுவார்கள் என்று பிள்ளையின் தாயார் கேட்டாள். நான் என்ன பயித்தியக்காரனா? அவர்களைச் சும்மாவிட்டேனா? நீங்கள் எவ்வளவு நகைகள் போடுவீர்கள்?" என்றேன். "தாய்வீட்டார் போடும் நகைகளுக்கு நாங்கள் குறைத்து போடமாட்டோம்" என்று அந்த அம்மாள் சொன்னாள். நான் ஒரே அடியாய் பெண்ணின் தகப்பனார் முதலாவது சம்மதிப்பாரோ என்னவோ தெரியாது. அது தெரிந்த பிறகு எல்லாம் பேசிக்கொள்ளலாமென்றேன். ஆனால் பிள்ளையாண்டான் "இவர்கள் நகை நகை என்று அழுவார்கள். நாட்டுப்புறத்தில் கட்டிக்கொண்டழ இவர்களுக்கு இஷ்டம். எப்படியாவது போகட்டும்; எனக்கக்கறையில்லை" என்று சரேலெனப் போய்விட்டான். பெரியவர் மிகவும் யோக்கியர்; நல்ல குடும்பி; அந்தம்மாள் மாத்திரம்

தனமொருபக்கம் ரோணமொருபக்க மிருக்கிறவர்களே? தனமிருப்பது ஊருக்குப்பெருமை ரோணமிருப்பது உடலுக்குச்சிறுமை.

கொஞ்சம் அழுத்தம்; அப்படித்தானே இருக்கவேணும்; பெண்ணின் தகப்பனாரிஷ்டம் தெரியாமல் ஒன்றுஞ்சொல்ல முடியாதென்று நான் பிடிகொடுக்காமலே வந்துவிட்டேன். எனக்கு அந்த இடம் பிடித்திருக்கிறது. அது தக்க இடமென்றே நான் நினைக்கிறேன். தங்களிஷ்டம் என்னவோ தெரியாது" என்று வாயில் வந்தவரையில் அளப்பான்.

பெண்ணின் தகப்பனார் "எல்லாம் சரிதான். அபுரூபம் குழந்தைதானே! இப்போது என்ன மூழ்கிப்போச்சுது? எதற்கும் தாயார் இஷ்டம் எப்படியோ! அவளுக்குத் தன் தமையன் பிள்ளைக்குக் கொடுக்கவேணு மென்கிற பிரியமிருக்கிறது. கடைசியில் அதற்கு எங்கே வழியிருக்கிறதோ? அதை யார் பார்த்தார்கள்? எதற்கும் வீட்டில் நீங்கள் ஆண்டு பாருங்கள்; நானும் தீரவிசாரித்துப் பார்க்கிறேன்" என்பார். அதற்குத் தரகரி, "நீங்கள் என்ன விசாரிக்கிறது? அபுரூபம் விஷயத்தில் எனக்கு இல்லாத அக்கறையா உங்களுக்கு?" என்று, முதலியார் சமுசாரத்தண்டைபோய் "அம்மா! நீங்கள் எல்லாம் எப்படி யிருக்கிறீர்கள்? அபுரூபம் விஷயமாய் முதலியாரிடம் பேசியதில் நான் சொன்னவிடம் அவருக்குப் பிடித்துவிட்டது. ஆனாலும், தாயாராகிய உங்கள் இஷ்டம் தெரிந்து கொண்டு சொல்வதாய்ச் சொல்கிறார்; நான் சொல்லுகிற இடம் நமக்கு நெருங்கிய பந்துக்கள். தவிர கொஞ்சம் பசையுள்ள இடமாயுமிருக்கிறது. மேலும் அவன் ஒரே பிள்ளைதான். வேறேபெண்கள் பிள்ளைகள் இல்லை. பிள்ளைக்குத் தாயார் தன் மருமகளுக்கிட்டு அழகுபார்க்க இரண்டு மாதமாய் வீட்டிலே தட்டானை வைத்து நகைசெய்துகொண்டு வருகிறார். பிள்ளை யாண்டான் நன்றாய் வாசித்தவன். அநேகர் தங்கள் பெண்களைக் கொடுப்பதாக எவ்வளவோ முயற்சி செய்கிறார்கள். நான் நமது குழந்தை அபுரூபம் விஷயத்தைப் பற்றிப் பிள்ளையாண்டானுக்குச் சொல்லித் தடுத்து வருகிறேன். பிள்ளை கொஞ்சம் வாட்டம் சாட்டமா யிருக்கிறபடியால், அநேகர் கன்னிகாதானமாய்ப் பெண்ணைக் கொடுத்து வீடு எழுதிவைப்பதாகவும் சொல்கிறார்கள். நான் அதை யெல்லாம் தட்டிவிட்டுத் தம்பிக்கு மந்திரம் போட்டிருக்கிறேன்; உங்க ளிஷ்டம் தான் பாக்கியிருக்கிறது. கமலாவைவிட அபுரூபம் நல்ல புண்ணியஞ் செய்தவள்தான். கமலா புருஷனைவிட இவனை எத்த

---

வித்தையிருக்கிறது வேலையில்லை. புத்தியிருக்கிறது பணமில்லை.

ளையோ பங்கு மேலாகச் சொல்லவேண்டும். எதற்கும் நீங்கள் ஒரு தடவை வந்து பார்வையிட்டால் அதன்பிறகு எல்லாம் தெரிந்து விடும். நான் சொல்வதில் பிரயோசனமில்லை'' என்று மேளம் அடித்து 'வாழைப்பழத்தில் ஊசியை நுழைப்பதுபோல்' சர்க்கரைக் கஞ்சி வார்த்து அவர்களிருவர் மனதையும் திருப்பி அவர்களிடத் திலும் சிறிது தொகை பெற்றுக்கொண்டு 'மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோட்டு விடுவார்கள்.'

கலியாணம் முடிந்தபின் பெண்வீட்டார் தரகரியைப் பார்த்து "என்ன ஐயா! எங்களைக் கொண்டுபோய்க் கவிழ்த்துவிட்டீரே'' என்று கேட்டால், அதற்கு அவன் "ஐயோ! எனக்கும் இந்த உள வெல்லாம் தெரியாது. அவர்கள் என்னையே ஏமாற்றிவிட்டார்கள்'' என்று சாக்குப் போக்குச் சொல்லி விடுவான். B. A. M. A. பட் டத்திற்கும் பணத்திற்கும் ஆசைப்பட்டுத் தரகரிகளுடைய மாய்கை யில் மூழ்கி நபுஞ்சகர், ரோகிகள், உன்மத்தர், மீசைக்குக் கப்புப் போட்டுக் கொண்டு தினந்தோறும் முகசவரஞ் செய்துகொள்கிற கிழவர்கள், திதியில் தகப்பன் பேர், பாட்டன் பேர் தெரியாமலிருக் கிற அறைத் பேர் வழிகள், சூது, குடி, கூத்தி முதலிய பழக்க முடைய துஷ்டப்பிள்ளைகள் முதலானவர்களுக்குப் பெற்றோர் தமது அருமைப் புதல்விகளைக் கிணற்றில் தள்ளுவது போல் தள்ளி இனி யுண்டாகும் சந்ததிகளும் ஈடேறுத வழிதேடி நம் நாட்டை நாச மாக்குகிறார்கள். இது மாத்திரமோ? பிறருடைய சர்டிபிகேட் காட்டி மோசஞ்செய்து உத்தியோகம் சம்பாதிப்பது இக்காலத்தில் வழக்க மாய் விட்டது. அது போலவே தரகரிகள் பிறர் ஜாதகத்தைப் பெண்ணின் பெற்றோர்க்குக் காட்டி அவர்களை ஏமாற்றி விடுவது முண்டு.

## 87. நாட்டாண்மைக்காரர்கள்

**ப**ணிசெய்வோர், அம்பட்டர், வண்ணார், வெட்டியார் முதலிய வர்களைப்போலவே நாட்டாண்மைக்காரர்களும், பெரிதனக்காரர் களும், அந்தந்த ஜாதிவேலைக்காரர்களே யாவார். இவர்கள் அந்தந்த ஜாதியில் ஒருவிதத்திலும் உயர்ந்தவர்களல்லர். கடவுள் ஒருவித ஜாதியுமின்றி எல்லோரையும் சமமாகவே படைத்தார். ஆயினும், இவர்கள் "அவன் அந்த ஜாதி; இவன் இந்த ஜாதி'' என்று கதை

மானிட வாழ்க்கைக்குக் கடனும் குடியும் டம்பச் செலவும் பெரிய பாரம்.

கட்டி விடுவார்கள். அந்திபட்டால் ஆகாசப்பால் சப்ளை செய்கிறவர்களுடன் இவர்கள் சேர்ந்துகொண்டு "அவன் அந்த இடத்தில் பந்தி போஜனம் செய்தான்;" இவன் கெட்டஜாதியில் சம்பந்தம் செய்தான்" என்று ஒரு கூட்டம் கூடிப் பக்கபல மில்லாதவர்களிடத்தில் அரை, கால் பிடுங்கிச் சம்பிரமாக கள் வாங்கிக் குடிப்பார்கள். இன்றையபொழுது எப்படிப் போகுமென்றிருக்கும் எளியவர்களது பிரயோசனத்தில் இந்த அயோக்கியர்கள் இல்லாத வம்பு வழக்குகள் கொண்டுவந்து விட்டுப் பிரயோசனக்காரனைப் பேய் போலாட்டி ரூபா ஒன்றிரண்டு வைத்து நாலுபேர் காலில் விழும்படி செய்வார்கள். பணக்காரர் வீட்டுப் பிரயோசனத்தில் 'குந்திரையா துரங்கே! உன் சந்தடி அடங்க' என்றபடி, இவர்கள் தமது வாலைச் சுருட்டி வைத்துக்கொண்டு திருட்டு விழி விழிப்பார்கள். 'ஒருபணத்தில் கலியாணமும் அதிலே கொஞ்சம் வாண வேடிக்கையும்' செய்யும் கோமாளிகளிடத்தில் இவர்கள் "நாட்டார் கட்டணம் வை" என்று அதைக் கட்டாயம் வசூல் செய்து விடுவார்கள்.

தற்சமயம் நாட்டார்களாயும் தலைவர்களாயுமுள்ள மகாத்மா காந்தி, லாலா லஜபத்ராய், முதலியவர்களின் நாமதேயங்களை எண்ணி நூற்றெட்டுத் தரம் உருக்கமாய் ஜெபித்தால், தன்னலம் பாராட்டல் என்னும் பிசாசு இவர்களை விட்டு ஓடிப்போகும். தேசப் பொது நன்மைக் குழைக்கவும் இவர்கட்குப் புத்தியுண்டாகும்.

---

## 88. ஜாதிப் போராட்டம்.

### பூணூலுடைய ஜாதிகள்.

| | | |
|---|---|---|
| பிராமணர் | சக்கிலிகள் | கணக்கர் |
| வன்னியர் | கோமுட்டிகள் | வள்ளுவர் |
| செட்டிகள் | பொந்திலியர் | ஜான்றவர் |
| கம்மாளர் | மாரட்டியர் | தேவாங்கு செட்டிகள் |
| வாணியர் | பட்டுநூல்காரர் | பட் இராஜாக்கள் |
| சேணியர் | ஜனப்பர் | ஜயினியர் |

### செட்டிப் பட்டம்.

| | | |
|---|---|---|
| பட்டணவர் | வாணியர் | வெள்ளாழர் |
| கோமுட்டிகள் | குறவர் | ஜான்றவர் |
| செட்டிகள் | குயவர் | தேவாங்கர் |

### அய்யர் பட்டர்.

| | | |
|---|---|---|
| வீரசைவர் | பிராமணர்கள் | பட்டுநூல்காரர்கள் |
| கோமுட்டிகள் | பண்டாரங்கள் | சௌராஷ்டிரர்கள் |

### ராவ், ராயர் பட்டம்.

| | | |
|---|---|---|
| பிராமணர் | வன்னியர் | பொந்திலியர் |
| கவரைகள் | மராட்டியர் | குருவிக்காரர் |

### பிள்ளைப் பட்டம்.

| | | |
|---|---|---|
| கணக்கர் | வேளாளர் | குயவர் |
| இடையர் | பறையர் | மறவர் |
| வன்னியர் | சாணார் | கள்ளர் |

### முதலியார் பட்டம்.

| | | |
|---|---|---|
| கட்டுவர் | அகமுடையார் | இலைவாணியர் |
| பண்டாரங்கள் | வேளாளர் | வள்ளுவர் |
| கைக்கோளர் | கரையார் | அம்பட்டர் |

### நாயுடு பட்டம்.

| | | |
|---|---|---|
| கம்மவார் | குயவர் | பாளையக்காரர் |
| கவரைகள் | குறவர் | போயிகள் |
| வடுகு இடையர் | முத்திரியர் | வேலமர் |

### பிராமணராக விரும்புவோர்.

| | | |
|---|---|---|
| தட்டார் | கம்மாளர் | வீரசைவர் |
| குயவர் | சௌராஷ்டிரர் | கோமுட்டிகள் |

### க்ஷத்திரியராக விரும்புவோர்.

| | | |
|---|---|---|
| வன்னியர் | மராட்டியர் | சாபுதன தேயத்துப் |
| கவரைகள் | சணப்பர் | மறவர் [பலஜாதிகளும் |
| இடையர் | குயவர் | வேளாளர் |
| சாணார் | பட்டுநூல்காரர் | செம்படவர் |
| பொந்திலியர் | தையற்காரர்கள் | பட்ராஜாக்கள் |

### வைசியராக விரும்புவோர்.

| | | |
|---|---|---|
| வேளாளர் | வாணியர் | கவரைகள் |
| இடையர் | கோமுட்டிகள் | சாணார் |

### வேளாளராக விரும்புவோர்.

| | | |
|---|---|---|
| சாணார் | பணிசெய்வோர் | மறவர் |

| | | |
|---|---|---|
| கரையார் | அம்பட்டர் | பட்டணவர் |
| அகமுடையார் | கள்ளர் | நட்டுவர் |

இந்தப் பட்டப்பெயர்களினுலும் பூணூலினுலும் இன்னூர்தான் உயர்ந்த ஜாதியார்களென்று கண்டு பிடிப்பது கஷ்டமாக விருக்கிறது. இந்தப் பட்டப்பெயர்களும் உபவீதமும் இன்னூர் தான் அணிந்துகொள்ள வேண்டியதென்றும் இன்னூருக்குத்தான் இந்தப் பட்டம் உரியதென்றும் யாதொரு நிபந்தனையுமில்லை. ஆகையால், தஞ்சாவூர்வள்ளுவன் சென்னையில் நீறுபூசி வெள்ளாழனென்று சொல்லிக்கொள்வதில் என்ன குற்றமிருக்கிறது? பெஜவாடா நாட்டுப்போயிகள் கள்ளிக்கோட்டையில் தாங்கள் தேசாயி செட்டிகள் என்று சொல்லிக்கொள்வதால் யாதொரு குற்றமுமில்லையே. முக்கியமாய்க் குறிக்கும் பட்டப்பெயர்களும் பூணூலுமே இக்கெதியாலுல் மற்றதெல்லாம் காற்றில் போகக்கூடிய வாய்ச்சொல் அளவு தானே. இதை யறியாமல் வீணுய் ஜாதியில் மாட்டிக்கொண்டு நம் நாடு விழிக்கவேண்டி யிருக்கிறது.

சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் ஜப்பான்தேசத்தார் ஜாதியை எடுத்துக் கடலில் போட்டுவிட்டு ஒற்றுமைப்பட்டதனுல், இப்போது அவர்களை ஐரோப்பியர்களும் கண்டு அச்சப்படும்படியான நிலைமைக்கு வந்திருக்கிருர்கள். நம் சகோதரர் ஜப்பானியரைப் பார்த்தும் அறியாமைக் காட்பட்டுத் தெரியாமைக்குத் தொண்டு பூண்டொழுகுவோமானுல் நமது சந்ததியார் நம்மைவிடத் தாழ்ந்த நிலைமை அடைவாரல்லவா? சில தேசாபிமானிகள் படும் கஷ்டங்கள் ஒருங்கு திரண்டு உருவாவதன் பயனுய் ஒருகால் நமக்குச் சில சுதந்திரங்களை ஆங்கிலேய அரசாட்சியார் மனமிசைந்து கொடுப்பார்களாலுல் அதை முன்னின்று நடத்துவது யார்? அய்யரா? ராயரா? பானர்ஜீயா? முகர்ஜீயா? சீரயப்பா? பணியாவா? பட்டாவா? பாபுவா? லாலாவா? நாயகரா? முதலியாரா? செட்டியாரா? நாயுடுவா? பிள்ளையா? தீட்சிதரா இவர்களில் யாராவது ஒருவர் முன்னின்று ஒழுங்காய் நடத்தினபோதிலும் மற்றவர்கட்கு மனம் ஒப்புமா? ஆகையால், ஒருகால் சுயராஜ்ஜியம் கிடைத்தபோதிலும், இவர்கள் ஒருவரை ஒருவர் நம்பாமலும் மனம் ஒவ்வாமலும் தமது மண்டைகளைத் தான் உடைத்துக்கொள்ளப் போகிருர்கள். சுயராஜ்ஜியத்திற்கு முதல்

பையனுக்குக் கோபமே வராது. வந்தாலும் வருஷத்திற்கு இரண்டு தடவைக்கு மேலிராது. தடவை ஒன்றுக்கு ஆறுமாதகாலம் சரியாயிருக்கும்.

தடையாய் உள்ளது ஜாதிப்பற்றே யாகும். முதலில் இந்த அற்ப விஷயத்தை ஒழிக்க முடியாதவர்கள் சுயராஜ்ஜியத்தை எவ்வாறு ஆளுவார்கள்?

பிரஜைகள் வெகு *கொஞ்சமாயுள்ள சில நூற்றுண்டுகளுக்கு முன் காலத்திற் கேற்றவண்ணம் சில சந்தர்ப்பங்களை யனுசரித்து ஜனங்கள் தம்முடைய அனுகூலத்திற்காக ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு ஜாதியென நான்கே பிரிவுகளை வகுத்துக்கொண்டு காலம் கடத்தலாயினர். 'வா வா மாமி கழுதைபோலானுள்' என்ற மாதிரி இப்பொழுது ஓரே வகுப்பில் மாமிசம் புசிப்போர் ஒருவகுப்பாகவும், புசியாதவர் வேறு வகுப்பாகவும், வர்த்தகம் அல்லது உத்தியோகம் செய்வோர் தங்கள் தங்கள் அந்தஸ்தைநோக்கி ஒரு பிரிவாகவும், அதே வகுப்பில் கூலித்தொழில் செய்வோர் மற்றொரின மாகவும் எண்ணப்படுகிறார்கள். தவிர, தமையன் கொண்டு கொடுத்துள்ள இடத்தை விட்டுத் தம்பி வேறோரிடத்தில் பெண் கொண்டு விட்டால் தம்பி வேறு வகையினன் என்றும், தமையன் வேறு இனத்தவன் என்று சொல்லவும் தலைப்பட்டு விட்டார்கள். அன்றியும், இடம், காலம், நடை, உடை, உணவு, ஆசாரம், வழக்கம் முதலிய ஏதுக்களாலும், பல நூறு ஜாதிகள் ஏற்பட்டு வளர்ந்து வருகின்றன. திருஷ்டாந்தமாக ஒரிஸா நாட்டில் கருப்புக் காலத்தில் கஞ்சித் தொட்டியில் வயிறு வளர்த்த இருபதினாயிரம் தொகையினர் கஞ்சித்தொட்டி ஜாதிகளென அழைக்கப்படுகிறார்கள். இப்படியே அநேகவித முகாந்திரங்களைக் கொண்டு லட்சக்கணக்கில் ஜாதிப் பிரிவுகள் ஏற்பட்டுத் தேசப் பொது விஷயங்களுக்கு இடையூறு யுள்ளன.

சின்னாட்களாய் ஒவ்வொரு வகுப்பாரும் முக்கியமான நான்கு ஜாதிகளில் தாங்களும் ஒரு ஜாதியினரெனப் பழைய நூல்களிலும், கல்வெட்டு, செப்பேடு, சிலாசாசன முதலியவைகளிலும் ஆதாரமிருப்பதாகப் பாரம் பாரமாகப் புஸ்தகங்கள் வெளியிட்டு வருகிறார்கள். ஒவ்வொரு ஜாதியார்களும் உயர்ந்து விடுவதற்கு அன்னியதுரைத்தனம ஆட்சேபனை செய்யாவிட்டாலும், ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரை இழித்து உரையாடுவதனால் நமக்குள் போராட்டம் வளர்ந்து நமது ஒற்றுமையைக் கெடுக்குமல்லவா? சிலர் பொதுச்

* லட்சணம் முப்பத்திரண்டு சொன்னாலும் கேட்காள்; சுயபுத்தியு மில்லை எஞ்சிய முப்பதும் குறைவில்லை.

சபையில் பிரசிடெண்டும் ஜாதி சங்கத்தில் காரியதரிசியுமா யிருப்பது நாட்டுக் கழகல்ல. ஆகையால், ஜாதி வேற்றுமையும் சமயவேற்றுமையும் வேரூன்றி யிருக்கும் இந்நாட்டில் அவை நிர்மூலமானால் தான் நமது இந்தியா நமக்குக் கிடைக்கும். இதனுண்மையை நன்குணர்ந்தே ஆங்கிலேயர் ஜாதி சமயப் போராட்டத்தில் தலையிட்டுக்கொள்ளோமென்று பிரசித்தப்படுத்தி யிருக்கின்றார்கள். இந்தப் போராட்டத்தை இன்னும் அதிகப்படுத்த அவர்கள் பத்து வருஷத்திற் கொருதரம் ஜனத்தொகை கணக்கெடுத்து உயர்ந்தவரைத் தாழ்ந்தவராகவும் தாழ்ந்தவரை உயர்ந்தவராகவும் வரைந்து எல்லோரையும் போராட்டத்திற் குட் படுத்தி வேடிக்கை பார்க்கிறார்கள். நமது இந்தியர் எல்லோரும் வித்தியாச மில்லாமல் கலந்து சாப்பிட வேண்டும்; கொள்வன கொடுப்பன விஷயத்தில் அவரவர் அந்தஸ்தை நோக்கிக் கலியாணஞ் செய்யவேண்டும்; யார் எந்த சுவாமியைத் தொழுதாலும் எல்லாம் ஓரே கடவுளென்று நினைத்து வீண் சண்டை செய்யாதிருக்கவேண்டும். இந்நிலை யடைவதற்கு வெகு காலம் வேண்டுவதில்லை. இப்போது வங்காளிகள் ஜெப்பான் பெண்களையும் ஜெப்பானியர் வங்காளப் பெண்களையும் விவாகஞ் செய்து கொள்ளத் தலைப்பட்டு விட்டனர். இவ்விஷயங்களைப் பெபின்சந்திரபால் போலப் பிரசங்கித்து நாடு நகரங்களில் விளங்கச் செய்தால் கொஞ்ச காலத்தில் நமது இந்தியா கைத்தொழிலில் விருத்தியாகிச் செல்வம் பெருகி வறுமை நீங்கிச் சுகமடைவதன்றிச் சுயராஜ்ஜியம் பெறவும் வழியுண்டாகும்.

---

## 89. எமிக்கிரண்ட் டிபோ.

பெரிய பெரிய டவுன்களில் சிலவிடங்களில் "நெட்டால், சிங்கப்பூர், பினாங்கு, பீஜீ, மோரீஸ் முதலிய தீவுகளுக்குப் போகப் பிரியமுள்ளவர்களைச் சேர்க்குமிடம்" என்று விளம்பரப் பலகைகள் போடப்பட்டிருக்கும். இந்த டிபோக்கள் ஒவ்வொன்றிலும் நாலைந்து ஆண் தரகரிகளும் இரண்டொரு பெண் தரகரிகளு மிருப்பார்கள். இவர்களில் ஆண் தரகரிகள் நாட்டுப்புறத்தார்களையும் ஏமாந்தவர்களையும் "இங்கோரிடத்தில் இருபது ரூபா சம்பளமுள்ள நல்லவேலை யிருக்கிறது" என்று இதமாய்ப் பேசி அவர்களை யழைத்து வந்து

---

இரவும் பகலும் வாட்டும் குடித்தனம் கஷ்டம் குறித்த காலஞ் செய்யும் துரைத்தனம் சுலபம்.

டிபோக்களில் சேர்த்து விடுவார்கள். சில தரகரிகள் நாட்டுப்புறத்த வர்களில் ஏமாந்தவர்களைப் பார்த்துத் தாங்கள் நெட்டாலுக்குப் போக விரும்புகிறவர்களைப்போல் நடித்து "ஐயா! உங்களுக்கு டிபோக்க ளிருக்கிற இடம் தெரிந்தால் காட்டுங்கள். அவ்விடத்தில் நாளொன்றுக்கு ரூபா இரண்டு மூன்று கிடைக்கிறதாம். வேண்டு மானால், நீங்களும் வாருங்கள். நாமெல்லாரும் போய்க் கும்பலா யிருந்து வரலாம்" என்று ஆசை வார்த்தைகள் சொல்லி அவர்களை அழைத்து வருவார்கள். பின்பு தரகரிகள் அவர்களை டிபோக்காரர்க ளிடம் ஒப்பித்து ஆள் ஒன்றுக்கு இவ்வளவென்று அட்வான்ஸ் பெற்றுக்கொண்டு, கலக்டர் பாஸ் செய்து கப்பலேற்றுகிற வரையில் அவர்களை வெகு பக்குவமாய்க் காவல் செய்து வருவார்கள். கப்ப லேற்றிய பிறகு, மற்றத் தொகையையும் அந்தத் தரகரிகள் பெற்றுக் கொள்வார்கள். முன்பின் சென்னை, நாகப்பட்டணம் முதலிய பட்ட ணங்களைப் பார்த்தறியாத நாட்டுப்புறத்தார்களைப் பார்த்தவுடன், இந்த மோசக்காரர்கள் அவர்களுடன் கலந்து பேசிக்கொண்டே அவர்களை டிபோவுக்குள் மெதுவாய்ப் போகச்சொல்லி, பயமுறுத்தி நாளடைவில் ஆண்களுக்குப் பெண்களையும் பெண்களுக்கு ஆண்களை யும் சேர்த்து ஜதை போட்டுவிட்டுக் கப்பல் ஏறத் தயார் செய்து விடுவார்கள். தாய் தகப்பனைவிட்டுப் பிரிய மனமில்லாத சிலர் "நான் போகமாட்டேன்" என்றால், அவர்கள் "உனக்குப் படிச்செலவு இவ் வளவாயிற்று; அதைக் கொடுத்துவிட்டுப் போய்விடு" ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லி முரட்டாட்டம் செய்வார்கள்; தவிர, கப்பலேறு கிற வரைக்கும் அவர்களை அந்தப்பக்கம் இந்தப்பக்கம் போக விடா மல் காத்துக் கடைசியில் அவர்கள் கப்பலேறும் வழிதேடி விடு வார்கள்.

பெண் தரகரிகள் தாயின் கீழ் இருக்கும் இளவயது பெண் களுக்கும் கைப்பெண்களுக்கும் துர்ப்போதனை செய்து அவர்களை இரவு காலங்களில் மெயில் வண்டிகளிலாவது ஜட்கா வண்டிகளி லாவது ஏற்றிக்கொண்டு வேறு துறை முகங்களுக்குக் கொண்டு போய் அங்குள்ள டிபோக்களில் சேர்த்துவிடுவார்கள். இப்படிப் பலாத்காரமாய்க் கொண்டுபோகப்படுகிறவர்களும் வேணுமென்று மதம் பிடித்துப் போகிறவர்களும் நாமும் அங்கே போய்ப் பணமாய்

---

பண்டங்களின் விலை யேறியிருந்தாலும் ராவ் சாகிப் முதலிய பட்டங் களின் விலை சகாயமே.

வாரிவிடலாமென்று ஆசைகொண்டு போகிறவர்களும் அந்த அன்னிய நாடுகளில் படாதபாடெல்லாம் படுவார்கள். இந்த எமிக்கிரண்ட்ஸ் தொழில் ஏறக்குறைய முற்காலத்து அடிமை வியாபாரத்தைப் போன்றதே. அவ்விடத்திலுள்ள தர்மப் பிரபுக்கள் இந்தக் கூலியாட்களுக்கு இத்தனை அடி அகலமும் இத்தனை அடி நீளமுமுள்ள கரும்பு வயல்களுக்குக் களை யெடுக்க வேண்டியதென்று 'அடங்காப் பேய்க்கு வேலையிட்ட மந்திரக்காரனைப்போல்' வேலையிடுவார்கள். அவர்கள் குறித்த வேலை செய்யாமற் போனால் இவர்களுக்குச் சவுக்கடியோ பூட்ஸ்கால் உதையோ இவைகளில் ஏதாவது ஒன்று அவசியம் கிடைக்கும். எண்ணி ஐந்து வருஷம் நெட்டாலுக்காவது ஆஸ்திரேலியாவுக்காவது போயிருந்தால் தாயாரைக்கொன்ற பாவம் நிவர்த்தியாகுமென்று அங்குப்போய் வந்தவர்களே சொல்கிறார்கள். அதை யோசித்துப் பார்த்தால் நம் மிந்திய சகோதரர்கள் அவ்விடத்தில் எவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கிறார்களென்பது நன்றாய் விளங்கும். அய்யோ! இந்த ஐந்து வருஷமும் ஐந்து யுகங்களாகக் கழித்த பிறகாவது அவர்களுக்குச் சுகமுண்டா? அந்த இழவும் கிடையாதே. அவர்கள் தமது மேலதிகாரிகள் உத்தரவு இல்லாமல் வெளியில் உலாவக் கூடாதாம்; நமது பிரிடிஷ் குடிகளாகிய அந்நாட்டார் நடக்கிற பாதைகளில் நம்மிந்தியர் நடக்கக் கூடாதாம். சத்தம் கொடுத்துப் போகிற இருப்புப் பாதையில் முதலாவது இரண்டாவது வண்டியில் ஏறக்கூடாதாம். நம்மிந்தியர்வர்த்தகம் செய்யக்கூடாதாம். இவர்கள் வருஷத்தில் தலைக்கு மூன்று பவுன் வரிகட்டவேண்டுமாம். இவைமாத்திரமோ! இவர்கள் சொந்தமாய் வீடுவாசல் தோட்டம் துறவு முதலியவைகளைத் தேடக் கூடாதாம். அந்தோ பாழும் தெய்வமே! 'மீ யிண்டிகி ஒஸ்தே ஏமி இஸ்தாவு? மா யிண்டிகி ஒஸ்தே ஏமி தெஸ்தாவு' என்ற கோமுட்டி கதையைப்போல் ஆங்கிலேயர் எங்கே யிருந்தாலும் சொத்தும் சுதந்திரமுமாயிருக்கலாம். இந்தியர் எங்கே போனாலும் இழவும் பாதாளியுமா? இது என்ன முறித்தனமோ? ஆங்கிலேய பேருக்குச் சுதந்திரம் கொடுத்திருக்கிறோ மென்கிறார்கள். 'காசிக்குப் போயும் கர்மம் தொலையவில்லை' என்றது போல நாம் எங்கே போனாலும் நமக்கு இந்தத் தலையெழுத்துத்தானோ? இவ்வளவு இழவுக்கெல்லாம் ஈடு கொடுத்துத் தமது வாயை வயிற்றைக் கட்டி நூற்றுக்கொருவர்

---

பட்டம் பெறும் வரையில் பரபரப்பு, பட்டம்பெற்றபின் ஏழைகளைக் கண்டால் கடுகடுப்பு.

இருவர் கொஞ்சம் பசையோடு சிறிது தொகை கொண்டுவந்தால் அதுவும் அவ்விடத்தில் கணக்காக வேண்டுமாம். 'வாக்குப் பலித்ததே பிராமணு'! என்றபடி, எவ்வளவோ பேர்கள் அங்குள்ள மானங்கெட்ட ஸ்திரீகளாலும் ரம், சாராயங்களினுலும் தங்கள் பொன்னுன மேனியைக் கெடுத்துக்கொண்டு கப்பல் வாடகைக்கும் வழியின்றி அந்நாடே கதியாக இருந்து விடுகிருர்கள்.

துரைத்தனத்தார் ஆட்கள் சேர்க்கப் பல நிபந்தனைகளை விதித்திருந்தாலும் அநேகமாய்ப் பொய்சொல்லியே ஆட்கள் சேர்க்கப் படுகிருர்கள். என்னென்ன தந்திரங்கள் சாத்தியமோ அவ்வளவையும் உபயோகப்படுத்தியே கிராமாந்தரத்து எளிய ஜனங்கள் கொண்டு போகப்படுகிருர்கள். இவர்கள் நெட்டால் முதலிய தேசங்களின் நிலைமையை உள்ளபடி நன்கறிந்தால் அங்குப் போய் புதையல் எடுப்பதைக்காட்டிலும் இந்நாட்டில் தமது உற்ருர் பெற்ருருடன் பட்டினி கிடந்து சாவ இசைந்திருப்பார்கள். அங்கு இவர்கள் தமது ஜாதி பேதங்களை அறவே ஒழித்துவிடுவது மாத்திரமல்லாமல், தங்கள் குலத்தின் பெருமையையும் குடிப்பிறப்பின் கௌரவத்தையும் தாம் இருந்த இருப்பையும் நினைத்து நினைத்து வருந்திப்பின்பு வேறு வழியின்றி மெல்லக் கொண்டு போய் அவற்றைத் தலைவிதியின்மேல் சாய்த்து விடுகிருர்கள். அங்கே கூலிகளில் ஆண்கள் அதிகமாயும் பெண்கள் குறைவாயுமிருப்பதால், பெண்கள் துர்நடைத்தைக் குடன்படுவதற்குத் தமது தலைவிதி தம்மை இழுத்துக்கொண்டு போவதாக அவர்களே மௌனத்துடன் ஒத்துக்கொள்ளுகிருர்கள். கலியாணமான பெண்களுக்கு அந்நாட்டில் யாதொரு பெருமையுமே இல்லை. ஆடுமாடுகளாயினும் நேசித்தவற்றையே நேசிக்கிற இயல்புடையவனவாயிருக்கின்றன. இரண்டுகால் மிருகங்களாகிய பெண்டுகளுக்கு இன்னுன் தான் புருஷனென்கிற ஏற்பாடு அந்நாடுகளில் சிறிதும் இல்லை. அங்கே மதசம்பந்தம், ஜாதிச்சம்பந்தம் வழக்கசம்பந்தம் முதலிய எந்தவித நியதியு மநுஷ்டிக்க அனுகூலமில்லை.

இவை போன்ற பல காரணங்களைக் கொண்டு இந்தியர்களின் உண்மையான மனோரதங்களை யறியாத குடியேற்ற நாட்டு ஐரோப்பியர்கள், முழு அடிமைத் தனத்திற்கு வந்திருக்கும் தமது கூலிகளைப் போலவே எல்லாரையும் எண்ணி "இந்தியர்கள் எந்த வேலைக்கும்

---

அதிகாரிகள் காண ஜால் ஜாப் செய்கிறவர்கள் பட்டங்கள் காலத்தில் பட்டத்தை எதிர்ப்பார்த்திருக்லாம்.

தகுதியற்றவரென்றும், அவர்களைத் திருத்துவது கூடாத காரியமென்றும். எதற்காக இந்தியருக்குப் படிப்புக் கொடுக்கவேண்டுமென்றும், எல்லா ஜனங்களும் சகோதரர்களென்ற எண்ணத்தை ஏன் அவர்கட்கு உண்டாக்கவேண்டு மென்றும் அவர்களுடைய சுகத்தை அதிகப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றும், நாம் உண்டு மிஞ்சின, எச்சிலைத் தவிர வேறு எதையும் அவர்களுக்கு ஏன் கொடுக்க வேண்டு மென்றும், நம்முடைய சுகத்திற்காகவும் பெருமைக்காகவும் உழைப்பதற்காகவே கடவுள் இந்தியரை சிருஷ்டித்திருக்கிறார்களென்றும் தீர்மானஞ்செய்து கொண்டிருக்கிறார்கள். இதையறியாத நமது நாட்டுத் தனவந்தர்களும் மிராசுதாரர்களும் ஏழைகளின் மேல் சிறிதளவும் பட்சமின்றி அவர்கள் கஷ்டத்திற்கேற்ற கூலி கொடுத்துக் கஞ்சிவார்க்க மனமில்லாமற் போனாலும், அவர்கள் தலையிலடித்துக் கையிலிட்டதையே இவர்கள் பெரும் பாக்கியமாகக் கருதுகிறார்கள்.

இந்த கூலியாட்களில் பறையர் என்கிற ஆதி திராவிடர் இந்து மதத்தை யனுஷ்டித்து இந்து ஆசாரப்படி நடந்து கொண்டாலும், மேல் ஜாதியாரெனத் தம்மை எண்ணிக்கொண்டிருக்கிறவர்கள் அற்பமேனும் நெஞ்சிரக்க மில்லாமல் தீண்டப்படாத பாஹிய ஜாதியாரென்று அவர்களை எந்த விஷயத்திற்கும் வேறாகவே ஒதுக்கி அவமதித்து நடத்திவருகிறார்கள். ஓர் ஆதிதிராவிடன் வேம்புலி என்ற பேரை மாற்றி ஜான்பீட்டர் என்று வைத்துக்கொண்டால் அவனிடம் எவ்வளவோ பெருமையும் மதிப்பும் வைத்து அவனை நடு வீட்டில் கொண்டுபோய் வைக்கிறார்கள். பொய்ச்சாட்சி சொல்லல்; பொய்ப் பத்திரம் சிருஷ்டித்தல், வஞ்சகம், பொறாமை, சூது, மோசம், குடி முதலியவைகளில் முதல் வகுப்பில் பாஸ் செய்து முதல்தர யோக்கியதா பத்திரம் பெற்றிருக்கிற மேல் ஜாதியாருக்குச் சொந்தமாயிருக்கிற நமது கருணையுள்ள கடவுளும் நமது குலாசாரம், குலதர்மம் முதலியவை இவ்வளவு தான் என்று மனத் திருப்தியோடிருக்கிற பஞ்சமர்கள் விஷயத்தில் கொஞ்சமேனும் கருணை பாராட்டுவ தில்லைபோலும்! இட்ட வேலையைச் செய்து வார்க்கிற கஞ்சிக்கு எதிர்பார்த்திருக்கும் துர்ப்பாக்கிய பஞ்சமர்களை நம்மவர்கள் எந்நேரமும் வெறுப்பாய் நடத்தினால் ஏழைகளாகிய அவர்கள் மனமுடைந்துபோம். அன்றியும், அவர்கள் எத்தனை நாளைக்கு அவ்வாறு மனம் பொறுத்திருப்பார்கள்? ஜனத்தொகை

யில் ஐந்திலொரு பாகமான மகம்மதியர் எல்லோரும் அராபியிலிருந்து வந்துவிட்டார்களா? ஒரு கையில் கத்தியும் ஒரு கையில் கொரானுமாக மகம்மதிய மதம் பெருகிற்றென்றாலும் நாமும் பல பேர்களை அக்காலத்தில் தாரை வார்த்துவிட்டோம். இப்போதுள்ள அறுபது லட்சம் கிறிஸ்தவர்கள் எங்கிருந்து வந்துவிட்டார்கள்? தாழ்ந்த வகுப்பார் முன்பு ஆறுகோடி பேர் இருந்தனர். இப்போது அத்தொகை குறைந்துவரக் காரணமென்ன? நம்முடைய அன்பும் ஆதரவும் அவர்களுக்கு இல்லாமையேயாம். அவர்கள் தமக்கியல்பாயுள்ள குருட்டுத்தனமான மதப் பற்றாலல்லவா இந்து மதத்தைக் கைவிட மனமில்லாதவர்களாயும், இந்து மதத்தின் எண்ணிக்கையைக் குறைத்துவிட இஷ்டமில்லாதவர்களாயும் வாரத்திற் கிரண்டு தடவை கப்பல் கப்பலாய் அன்னிய நாடு சென்று அவதிப்படுகின்றனர். 'காசிக்குப் போயும் கர்மம் தொலையவில்லை' 'திருப்தி போயும் துடுப்பொருகாசு' 'மந்தமதிகளுக்கு வரவு கொஞ்சம், கஷ்டம் அதிகம்' என்று சொல்கிறபடி, அந்நாட்டிலும் அவர்கள் படாத பாடுகளெல்லாம் படுகின்றனர்.

---

## 90. காமன் பண்டிகை.

வடதேயத்திலிருந்து இந்நாட்டிற் குடியேறியுள்ள மாராட்டியர், பொர்த்திலியர், குஜராத்தியர் முதலியவர்கள் மாத்திரம் இப்பண்டிகையைப் பரம்பரையாய்த் தக்க ஐதிகங்களோடு வருஷத்தில் பத்து நாள் வெகு சிறப்பாகக் கொண்டாடுவார்கள். அவர்களில் சிலர் மஜிண்டாபவுடர் என்னும் சாயம் கலந்த தண்ணீரை ஒருவர்மேல் ஒருவர் ஊற்றிக்கொண்டும், வருகிறவர் போகிறவர்கள்மேல் ஊற்றியும் விளையாடுவார்கள். 'ஞானியாடும் திருக்கூத்தோடு நானுமாடுகிறேன்' என்ற கதையைப்போல் ஒரு காலணா பவுடர் வாங்கி உபயோகிக்க வழியில்லாத நம் நாட்டுச் சிறுவர்களில் சிலர் தாமே வலிந்துபோய் அவர்கள் ஊற்றும் சாயத்தண்ணீரைத் தங்களுடம்பின்மேல் ஊற்றிக்கொண்டு அந்தச் சாய வேஷத்தோடு வேலியின்றித் திரியும் நாய்போல் அவர்களோடு திரிந்துகொண்டிருப்பார்கள். இன்னுஞ் சிலர் காமன் எரிந்த கட்சியென்றும் எரியாத கட்சியென்

---

லட்சக் கணக்கில் உன்பேர் அசலில் வர விரும்பினால், பொதுச் சபையில் பிரசிடெண்டு, ஜாதி சங்கத்தில் காரியதரிசி, தாலுகா, ஜில்லா, முனிசிபல், தேவஸ்தான கமிட்டிகளில் தலையாட்டி மெம்பராயிரு.

றும் ஜமை சேர்த்துக்கொண்டு, ஒருவன் தன்னைத் தானே குனிந்து கும்பிட்டு நிமிர்ந்து வாழ்த்திக்கொண்ட கதையைப்போல், இவர்கள் தமக்குத் தாமே பாலகவி, வாகவி, நிமிஷகவி, அருட்கவி என்ற போலிப் பட்டங்களை வைத்துக்கொள்வார்கள். பின்பு இவர்கள் "அருள்பிரகாச வள்ளலார் பிரதமசிஷியர் நிமிஷகவி தர்மலிங்க தாசர், இன்ன இடத்தில எரிந்த கட்சி பாடப்போகிறார். எரியாத கட்சிக்காரர்கள் வந்து பஞ்சாயத்தார் உத்தரவின்படி பாடி கெலித்துக் கொள்பவர்களுக்கு ரூபா நூறு பந்தயம் கொடுக்கப்படும்" என்றும் பெரிய பெரிய நோட்டீஸ்கள் வெளியிடுவார்கள். இவர்களில் கொஞ்சம் வகையாய்ப் பாடத் தெரிந்தவர்களைச் சேர்ந்த கட்சிக்காரர்கள் வீணாய் வாய்ப்பந்தலிடுவார்கள். வகையாகப், பாடமுடியாதவனுடைய கட்சிக்காரர்கள் தங்கள் பட்சம் தோற்றுப்போனாலும் வெட்கமில்லாமல் வீண் சண்டையை வளர்த்தி, ஒருவருக்கொருவர் மண்டைகளை உடைத்துக் கொள்வார்கள்.

பெரிய சபைகள் சேர்த்துக் கட்சி வாதங்கள் நடத்தினாலும் இவர்கள் தங்கள் தங்கள் கட்சிகளைப் பூர்வபட்சம் செய்துகொள்கிறார்கள் என்பது கிடையவே கிடையாது. எக் கட்சிக்காரர்கள் கல்லடி, தடியடி முதலியவைகளில் பின்னிடைந்தார்களோ அக்கட்சியார்கள் தான் தோற்றுப் போனதாகவும் முனைந்து அடித்தவர்கள் யாரோ அவர்கள் தான் கெலித்ததாகவும் பெருமை பேசிக்கொள்வார்கள். இன்ன இடத்தில் காமன் பாட்டுப் பாடுவதாக விளம்பரம் வெளியானதும், இருகட்சிக்காரர்களும் தமக்கு வேண்டிய தடி, பாறை, லட்டி, பிச்சுவா முதலிய ஆயுதங்களைத் தயார் செய்துகொள்வதில் மும்முரமா யிருப்பார்கள். பூசாரிகள் கிஞ்சகிரி புராணம் பாடத்தெரிந்தவனைத் தமக்கு உபாத்தியாயர் என்று கொண்டாடுவதுபோல் எதிரி கட்சியை ஏளனஞ்செய்து பாடக்கூடியவனை இவர்களும் உபாத்தியாயரென்று மேன்மையாய்ப் பாராட்டுவார்கள். 'தம்பி கால்நடை; பேச்சுப் பல்லக்கில்' என்பதுபோல், குடிக்கக் கூழில்லாத அநேக சோம்பேறிகள் அநேகவிதமான காமன் பாடல்களை எழுதி வைத்துக்கொண்டு அவற்றை ஓசையுடன் பாட இரவும் பகலும் கற்றுக்கொள்வார்கள். நாகரிகம்பெற்ற நாடுகளிலுள்ளவர்கள் அற்ப காரியங்களுக்கெல்லாம் தமது விலையுள்ள காலத்தையும், அருமையான பணத்தையும் பாழிலிறைக்காமல் தத்தம் தேசப்

---

நாற்பது வயதில் பேரனைக் காணுவது வமஸ க்ஷீணத்திற் கடையாளம்.

பொதுநலத்திற் குழைப்பார்கள். மூச்செல்லாம் அடங்கிப் பேசவும் பலமில்லாத நிலைமையிலுள்ள நம்மவர்களுக்குக் காமன் எரிந்துவிட்டதினாலும் எரியாமலிருக்கிறதினாலும் ஆகிற காரியமென்ன? இத்தகைய கெட்ட வழக்கத்தைத் நமது மக்கள் அனுசரிக்காதபடி தாய் தந்தையர்கள் அவர்களுக்கு நல்ல புத்தி போதிக்கவேண்டும்.

---

## 91. அல்லாசாமிப் பண்டிகை.

நமது மகம்மதியர் ஆளுகையின் இறுதியில் நம் நாட்டுத் தலைவர்களெல்லாரும் ஒரு மகாநாடு கூடினார்கள். அதில் அவர்கள் "நம் நாட்டில் இன்னார் தான் 'நட்டாமுட்டை நாடகசாலை வகையராக்கள்' என்பது விளங்கவில்லையே? அவர்கள் யார்? அவர்களைக் கண்டு பிடிப்பது எப்படி?" என்று நெடுநேரம் ஆலோசித்தனர். கடைசியில், அவர்கள் "இது லேசான விஷயமல்ல; கேவலம் வெந்ததைத் தின்று வந்ததைப் பிதற்றும் கூழைமக்களாகிய நம்மால் இது முடிகிற காரியமல்ல. உடலின் கூறுபாட்டை அறிந்த அகஸ்தியரையும் அங்க லட்சணம் தெரிந்த பிரகஸ்பதியையும் கேட்டால் இதன் விபரம் தெரியும்" என்று தீர்மானித்தார்கள். பின்பு அவர்கள் மேற்படி இரண்டு மேதாவிகளையும் கண்டு "சுவாமிகளே! எவ்வளவோ கஷ்டப்பட்டு எங்களுக்காக வைத்தியம், ஜோதிஷம் முதலியவைகளைப்பற்றி மலைபோல் சுவடிகளை எழுதிவைத்திருக்கிறீர்கள். எவ்வளவு இருந்தபோதிலும் நட்டாமுட்டை நாடகசாலை வகையராக்களைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால், தயைசெய்து அவர்களைச் சுலபமாய்த் தெரிந்துகொள்ளும் மார்க்கம் தெரிவிக்கவேண்டும்" என அவர்களைப் பிரார்த்தித்தனர். அதற்கு அப்பூமான்கள் மொகரம் பண்டிகை டெல்லிக்கு வடக்கிலாவது அரேபியாவிலாவது கொண்டாடப் படுவதில்லை. டெல்லிக்குத் தென்பாரிசத்திலிருக்கிற ஒன்று பாதி துலுக்கர்களே மொகரம் பண்டிகையில் குதிரையின் மேல் பஞ்சா என்பதை அலங்காரஞ்செய்து ஊர்கோலம் வருவார்கள். நாளடைவில் மேற்படி பஞ்சதன் இறந்த நாட்களை அவர்களிறந்த ஏழாம் நாள், எட்டாம் நாள், ஒன்பதாம் நாள், மொலாலியிறந்த பத்தாம் நாள் என்று சில மகம்மதியர் கொண்டாடத் தலைப்பட்டார்கள். சரியான இஸ்லாம் மதக்காரர்கள் இதைக் கொண்

---

ஒரு தையலுக்கு அசட்டையாயிருந்தால் ஒன்பது தையலுக்கு வேலை வைக்கும்.

டாடுவது கிடையாது. சில போலித் துலுக்கர்களும் நம்மூர் கட்டான் முட்டை நாடகசாலை மக்களுமே இதை மேலே எடுத்துப் போட்டுக்கொண்டு தாம் குடிப்பதற்கு வழிதேடிக்கொள்கிறார்கள்.

இனி மொகரம் பண்டிகையில் வேஷம் போடுவதின் காரணத்தைப்பற்றிக் கவனிப்போம். இஸ்லாம் மதஸ்தாபகராகிய மகம்மது என்பவர் "தமக்குப் பின்னால் குருபட்டத்திற்கு முறையே (1) அபுபக்கர் (2) உமர் (3) உஸ்மான் (4) மௌலாலி ஆகிய இந்நால்வர்களும் வருவார்கள். மௌலாலி காலத்தில் இவன் சிற்றப்பன் பிள்ளையான ரூம் என்பவரோடு ஷாம் மதஷக், குபர் முதலிய தேசங்களாகிய எஜித்துக்கு இராஜாவாகிய அபுசுபியா என்கிற மாவியா என்பவர் குரு பட்டத்திற்காக மாதாளபோர் செய்வார். கடைசியில், அவர் மௌலாலியை ரம்சான் மாதம் 17-தேதியில் பள்ளிவாசலில் தொழுகையின் போது கொலை செய்து விடுவார். மௌலாலிக்குப் பிறகு மௌலாலியின் குமாரர்களும் போர்களுமான அசேன், உசேன் என்பவர்களின் அசேனுக்கு நான் உதட்டிற்கு முத்தம் கொடுத்தேன். அவன் உதட்டினால் விஷமுண்டு சாவான். உசேனுக்கு நான் கழுத்திற்கு முத்தம் கொடுத்தேன். அவன் கழுத்தறுப்புண்டு சாவான். மௌலாலியின் இரண்டாம் தாரத்துப் பிள்ளையான முசலீம் கொலை செய்யப்படுவான்" என்று தீர்க்க தரிசனம் சொல்லியிருந்தார். அவ்விதமாகவே அசேன் முதலிலேயும் முசலிம் இரண்டாவதாகவும் உசேன் மூன்றாவதாகவும் குபர், ஷாம், என்ற ஊராக்களால் மாவியா என்னும் அரசரால் தூண்டப்பட்டு, கொலை செய்யப்பட்டுப் போனார்கள். அப்படிக் கொலை செய்யப்பட்டவர்கள். பஞ்சதன் என்கிற குரு பரம்பரையைச் சேர்ந்தவர்களென்னும் நடுக்கத்தால், அவர்களைக் கொன்றவர்கள் ஒவ்வொருவரும் தம்மை நேரே காட்டிக் கொள்ளாமல் ஒருவன் முகத்தை மூடிக்கொண்டும் ஒருவன் முகத்தில் கரியைப் பூசிக்கொண்டும் ஒருவன் இலைகளால் தன்னை மறைத்துக்கொண்டும் திரிந்தார்கள். சில மகம்மதியர்கள் இதைக் காரணமாகக் கொண்டு வேஷம் போடத் தலைப்பட்டனர். உண்மையான குரானில் சொல்லியபடி ஒரேதேவனைத் தவிர வேறு தேவனில்லை. மகம்மது நபியே தேவனுடைய அப்போஸ்தறன்; சிறந்த மகம்மதியர்கள் ஜெபத்தில் திட்ட வட்டமாயிருப்பது; ஏற்

சாமான்கள் வைப்பதற்குத் தக்க இடமும், எடுத்த சாமான்களை இருக்குமிடத்தில் வைக்குந் திறமும் லட்சுமி வாழ்வதற் கடையாளம்.

பாட்டின்படி தர்மம் செய்வது; ரம்ஜான் மாசத்தில் உபவாசமிருப்பது; பொருளிருக்குங்கால் மெக்காவுக்கு யாத்திரை செய்வது முதலிய விதிகளை யனுஷ்டிப்பார்கள். அவர்கள் அந்தப் பத்துநாளும் துக்கக்குறியுடன் தங்களாலியன்ற வரையில் தான் தர்மம் செய்து வருவார்கள்.

## 92. சங்கராந்திப் பண்டிகை.

நமது தாதாவுக்குத் தாதாகாலத்தில் சரியாக ஆறுமாதம் மழையும் 6-மாதம் கோடையுமாயிருந்தன. அக்காலத்தில் பெய்யும் பெருமழையால் மண்சுவர்கள் கரைந்தும் ஓலைகள் நனைந்தும் பாழாகும். அதனால், மழை ஓய்ந்ததாக எண்ணப்படும் தைமாசத்தில் ஜனங்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்கு மண் பூசியும் புதிதாக ஓலைகள் வேய்ந்தும் அவற்றைச் சீர்ப்படுத்துவார்கள். தவிர, அக்காலத்தில் அறுவடையாகும் தானியம், தாய்கறி பதார்த்தங்கள் யாவும் சூரியனுடைய உதவியால்கிடைத்தனவென்று குடியானவர்கள் அவற்றைச் சமைத்துத் தைமாதம் முதல் தேதி சூரியனுக்கு நைவேத்தியம் செய்வார்கள். இவ்வாறே விவசாயத்திற்கு முதற் கருவியாயுள்ளவை மாடுகளாகையால் அவர்கள் தமது மாடுகளைக்குறித்து மறுநாள் பெருநாள் கொண்டாடுவார்கள். மழைக்கால மெல்லாம் ஒருவரை யொருவர் பார்க்க முடியாமலிருந்தமையால் எல்லா வேலைகளு மொழிந்திருக்கும் தை மாசத்தில் ஒருவரை யொருவர் கண்டு குசலம் வினவிச் சந்தோஷிப்பதும் முன்கால வழக்கமாம்.

ஆனால் பழையகாலப் பொங்கல் முற்றும் தன்னுருமாறி இக்காலத்துச் சீமாட்டிகள் கையில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறது. பொங்கலுக்கு வேண்டியவை மூன்று நான்கு பானைச்சட்டிகளாயிருந்தாலும் நமது நாட்டுப்பெண்கள் எவ்வளவு விலைவானபோதிலும் முப்பது பானை சட்டிகளைக் கொண்டுவந்து வீட்டை நிரப்பிவிடுவார்கள். பிடியரிசியோ உழக்கரிசி வீதமோ உயர்த்தி வருவதனால், தமது குடித்தனம் பலத்துவருமென்ற குருட்டபிப்பிராயத்தை அவர்கள் வைத்துக் கொண்டு அதிக நயமாய் விற்கும் ரங்கோன் பச்சரிசியை வாங்கிவந்து பெரியபானைகளில் ஆறுபடி,ஏழுபடி அரிசியைப்போட்டு ஒரு பக்கம் வெந்ததும் ஒரு பக்கம் வேகாததும் அடியில் தீயால் காய்ந்து போனதுமாய்ப் பொங்குவார்கள். வாழ்கிற குடித்தனம் வடக்கே பொங்கவேணுமென்று வடக்குப் பக்கம் அவர்கள் பொங்கல்

பானையைச் சாய்த்து வைப்பார்கள். அக்காலத்தில் வெகுநயமாய் விற்கும் பூசுணைக்காய், வள்ளிக்கிழங்கு முதலிய காய்களையும் கிழங்குகளையும் ஒரு பெரிய சட்டி நிறையப் போட்டு அதில் மிளகாய்த்தூள் கலந்து அனலில் வெதுப்பிக்கொள்வார்கள். பிறகு அவர்கள் சூரியனே! நீ பார்த்துக்கொள்; நாங்கள் சேர்த்துக் கொள்கிறோமென்று அவைகளை யெல்லாம் சூரியனுக்குக் காட்டினதும், கட்டி கட்டியாய்த் தமது வயிற்றில் போட்டு அடைப்பார்கள். சில புண்ணியவதிகள் பெரும்பானைச்சாதத்தை அன்னியர்களுக்குப் போடக்கூடாதென்று அட்டவணை போட்டுக்கொண்டு பத்துப் பதினைந்து நாள் வரையில் தமது குட்டி குழந்தைகளுக்கு அச்சாதத்தையும் சுண்டின காய்கறிகளையும் போட்டு வாந்திபேதியம்மாளை வலிய அழைத்து விடுவார்கள். மறுநாள் மாட்டுப் பொங்கலல்லவா? வீட்டின் வறுமையைச் சிறிதும் அறியாத நமது பெண்கள் தாம் எவ்வளவு ஏழைகளாயிருந்த போதிலும் அன்று ஆக்கி யரைத்துப் பூவோடும் மணத்தோடும் போனவர்கட்கு ஒரு மஞ்சள் சிற்றாடையை நடு வீட்டில் வைத்துப் படைக்க வேணுமென்று கூத்தாடுவார்கள். வழக்கமெல்லாம் பழையகாலத்து வழக்கமாகவும் பாவாடை புடவையெல்லாம் சிங்கப்பூர் தினுசாயு மிருக்க அவர்கள் மல்லாடுவார்கள்.

சாதாரணக் காலத்தில் வெந்நீர் வைத்துக்கொடுக்கவும் என்னால் முடியாதென்று சொல்லும் இந்தப் பெண்களெல்லாம், அன்றைப் பொழுது பம்பரம்போல் ஆடுவார்கள். அன்று காலை வீடுவாசல் மெழுகிச் சுத்தம் செய்வது தவிர இரவு பத்து மணி வரையில் ஓயாத வேலையாயிருக்கும். அதுவும் ஒரு வேலையா? ஓரிழவா? அப்பப்பா! சொல்ல முடியாத அவ்வளவு வேலைகளையும் அவர்கள் செய்து முடிப்பார்கள்; இதன் நடுவில் அரிசிமாவு கோலத்தையும் வீடுமுழுதும் ஒரிழுப்பு இழுத்து விடுவார்கள். மாட்டுப்பொங்கலன்று பொங்கலிடுவதோடு காய்கறி, சாதம், கறி, மீன், காய்,கருவாடு, புண்ணாக்குக்கீரை, உளுந்துவடை, கொழுக்கட்டை இவ்வளவும் செய்யவேண்டும். இவைகளில் ஒன்றும் தப்பக்கூடாது. அக் காலத்தில் இவர்கள் கைகள் வேலை செய்து கொண்டும் வாய் வீட்டிலுள்ள கிழவி, மருமகள், குழந்தை, குட்டிகளோடு வம்பு வலித்துக் கொண்டு மிருக்கும். இவர்கள் முகம் மாலை வேளையில் இரணியனைச் சம்ஹாரஞ் செய்த நாசிங்கப் பெரு

---

தன் சுய காரியங்களைப்பற்றி எப்போதும் எண்ணிக் கொண்டிருப்பவனுடைய உள்ளத்தைவிட நரகம் பயப்படக் கூடியதல்ல.

மாள் முகத்தைப் போல் இருக்கும்; கால்களோ கனகசபையில் திருத் தாண்டவம் செய்த நமது நடன சபாபதியின் கால்களைப்போல் வீடு வாசல்களை அதிர்த்துவிடும். இப்படிப்பட்ட சமயத்தில் எப்படிப்பட்ட நெஞ்சு படைத்த புருஷனுயிருந்தாலும் குறுக்குச் சொல்லப்படாது. அன்றைய தினமெல்லாம் அம்மாளுக்குக் கஷ்டம் மாடுபோலவும் குணம் நாய் போலவுமிருக்கும். 'கூரை ஏறிக் கோழி பிடிக்க மாட்டாத குருக்களா வானத்தைக்கீறி வைகுந்தம் காட்டப் போகிறார்' என்ற பழமொழி போல் வாந்திபேதியம்மாளை வலியக் கூப்பிடும் நமது முட்டாள் பெண்களை வழிக்குக் கொண்டுவர முடியாத புருஷர்கள் வெகுபேர் ஆண்பிள்ளை வேஷம் போட்டுக்கொண்டு திரிவார்கள். அவர்கள் "இன்னார் வீட்டில் நாகரீகமில்லை; அவர்கள் சுத்த நாட்டுப் புறத்தார்களா யிருக்கிறார்கள்" என்று நாகரீகத்தில் பழுத்தவர்களைப்போல் பேசுவார்கள். அவர்கள் முதலில் தங்கள் வீட்டில் அச்சமும் தாக்ஷணியமுமின்றி நடக்கவேண்டியவைகளை ஒழுங்குசெய்த பிறகல்லவா ஊரையும் நாட்டையும் சீர்திருத்தம் செய்யவேண்டும்.

---

## 93. போலிப் பிராமணர்

பிராமணர்களாக விரும்புவோர் சிலர் "மனகு எப்புடு அமாவாசா? சூத்ரவாளிகி எப்புடு அமாவாசா?" என்று பிராமணர்களைத் தங்களுடன் சேர்த்துப் பேசுவார்கள். இவர்கள் நாலுதடவை இன்ஸால்வெண்ட் கொடுத்தாவது வீட்டில் தளிகை செய்வதற்கு ஒரு பிராமண ஸ்திரீயைச் சம்பளத்துக்கு வைத்துக்கொண் டிருப்பார்கள். இது தவிர, அவர்கள் ஆண் பிள்ளைக்கு ராமுடு என்றும் பெண் பிள்ளைக்கு லட்சுமி என்றும் பேர் வைத்து இரண்டு வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தருவித்துக்கொள்வார்கள். இவர்கட்குள்ள மறைவு மொழிகள்:—

| | |
|---|---|
| சரம்—குடல் | கோல—ஈரல் |
| உங்கராலு—இரு | உப்புசக்கா—கருவாடு |
| நிம்மகாய—முட்டை | காயலு—சாராயப்புட்டிகள் |
| ஜலபுஷ்பாலு—மீன் | திருவரங்கப்போடி-சென்னுதன்னி |

சம்பாஷணை.

போலி அய்யர்:—சுவாமி! எப்புடு ஒச்சிநாரு? வேஞ்சேயிண்டி ரேபு அம்மகு தத்தினம்; தேவரு ராத்திரிக்கே வேஞ்சேய வலனு.

சுவாமிகள்:—அட்டே கானி; ஏமி கரியமுது?

அய்ய:—வங்காய புளி, கரியமுது தாளிம்பூ, கொலா வேம்புடு, பச்சா, இதே சாலு; ராமாஞ்சய்யனு கூட தொடு குராவலா.

சுவாமிகள்:—சரே; அட்னே கானி.

போலி அம்மகாரு:—அக்கா! மீரு ஸ்ரீபெருமத்தூர் போயீனரே; எப்புடு ஒச்சினாரு?

கிழ அம்மகாரு:—அப்பா! அக்கடா ஏமிசேவா! ஏமிசேவா!! சாட்சாத் எம்பெருமானார் வைபவமுலு சேவிஞ்சினட்டே உன்னதி, ஏமி திருவாபரணமுலு; சூத்திரபாகவதுலு ஈனூரி ஈச்சலேகுண்டனே உன்னாரு.

அம்மகாரு:—அக்கட ஏமி அக்கா கரியமுது?


கிழ அம்மகாரு:—ஏமி தக்கவலேது; ஈ பனிவாள்ளு மோசமே பெத்ததி.

அம்மகாரு:—பையிட ஊரையினே; மீரே போகூடதா?

கிழ அம்மகாரு:—ஆ ஹா! எந்த கோஷ்டிலு! எந்த சூத்திரபாகவதலு! எந்த சுவாமிலு! எட்ள பொயிதீ அக்கா?

அம்மகாரு:—ஆ ஹா! மேமு பூந்தமலிகி போதே மேமே தெச்சுகுனேதி,

கிழ அம்மகாரு:—அப்பே! அவ்வூரேனு பெருமத்தூர் அக்கா.



## 94. போலி வைஷ்ணவர்.

இந்தப் போலி வைஷ்ணவர்கள் தங்கள் வீடுகளில் எவ்வளவு அசுத்தம் அகாசார மிருந்தபோதிலும், காலை மாலை நேரங்களில்

---

தன்னை மறந்து உலக நன்மைக்குப் பாடு படுவோனுடைய உள்ளத்தை விட முக்தி அவ்வளவு சிறந்ததல்ல.

முகத்தை மாத்திரம் சுத்தி செய்துகொண்டு வேளை வேளைக்கு நாமத்தைக் கணக்காகப்போட்டு நடுவில் மஞ்சள் ஸ்ரீசூர்ணமிடுவார்கள். இவர்கள் நாலாயிரப் பிரபந்தத்தில் இரண்டொரு தனியன்களை மனப்பாடம் செய்துகொண்டும், திருப்பாவை முப்பது பாடல்களின் முதலடி மாத்திரம் கவனத்தில் வைத்துக்கொண்டும், சமயம் நேர்ந்தபோது பாட்டின் முதல் அடியை மாத்திரம் எடுத்துச் சொல்லி "அந்தப்பாசுரத்தில் ஆழ்வார் அப்படிச் சாதித்திருக்கிறார்; இந்தப் பாசுரத்தில் ஆண்டாள் இப்படித் திருவாய் மலர்ந்தருளினார்" என்று சொல்வார்கள். அன்றியும், இவர்கள் தேவாள், ஏளா, சாதிக்கா, அடியேன் என்ற இரண்டொரு சொற்களைக் கற்றுக்கொண்டு உண்மை வைஷ்ணவர்களை ஏளிதம் செய்ய இடந்தேடுவார்கள்; ஒவ்வொரு சொல்லுக்கும் அடியேன் அடியேன் என்று சொல்லுவார்கள். பாகவத கோஷ்டியில் சேர்ந்ததும் இவர்கள் மதுரை என்னும் பேரை மதுரகவி யாழ்வாரென்றும், இருசப்பன் என்பதை இருஷீகேசவன் என்றும், முனிசாமி என்பதை நாதமுனியென்றும், அருணகிரி என்பதை ஆதிமூலமென்றும், சின்னசாமி என்பதை சீனிவாசனென்றும், நல்லவேளை பார்த்து மாற்றிக்கொள்வார்கள். இரவும் பகலும் ஓயாமல் சைவதூஷணம் செய்துகொண்டிருப்பவர்களை மற்றப் பாகவதர்கள் மிகவும் கௌரவித்துச் சுவாமி என்று அழைப்பார்கள். சொந்த பந்துக்கள் வீட்டில் தாகசாந்தி செய்ய மாட்டோமென்கிற இவர்கள் ததியாராதனை செய்துவைக்குமிடங்களில் திரை கட்டிக்கொண்டு கொஞ்சமாய் இரண்டு வேளைக்குத் தாங்கும்படி அரைத் துணியைத் தளர்த்திவிட்டு விலாப்புடைக்கப் புசிப்பார்கள்.

## பாகவதாள் சம்பாஷணை

**நாதமுனி தாசர்:**—சுவாமி! அடியேன் ராமானுஜ தாசன்.

**மதுரகவி யாழ்வார்:**—அடியேன் ராமாநுஜ தாசன்.

**நாத:**—ஏளா! ஏளா!! ஆசனத்தே வீற்றிருக்கா! சுவாமி யாத்திரை போச்சுதாமே. அடியேன் பரமசண்டாளன்; இந்த லௌகிகம் அடியேனைப் பகவத் திருவடிகளைச் சேவிக்காமலும் எம்பெருமானைக் கண்ணாரப் பார்க்க ஒட்டாமலும் செய்துவிட்டது. தேவரீரைச் சேவித்தபோதே நூற்றெட்டு எம்பெருமான்களையும் ஆழ்வாராசாரியர்களையும் சேவித்தவனானேன்.

---

B. A. M. A. க்குப் படுகிறாய் பாடு; அதற்குள் தேகத்தை இழக்கிறாய் சுடுகாடு.

மதுர.—சுவாமி! அடியேனுக்கு அவ்வளவு யோக்கியதையே இல்லை; அடியேனை இப்படிச் சிலாகித்தீரே! தேவரீர் சொரூபம் அப்படித்தான் சொல்லவேண்டும்.

நாத:—சுவாமி! நாளைக்குச் சபைக்கெழுந்தருளவேணுமே.

மதுர:—என்ன விசேஷம்?

நாத:—ஆஹா! தேவரீருக்குத் தெரியாத விஷயமா?

மதுர:—ஓஹோ! குலசேகர ஆழ்வார் திருநக்ஷத்திரமன்றோ? என்ன பாக்கியம்! என்ன விசேஷம்! எந்தப் பாகவதர் கைங்கர்யம்? கொஞ்சம் விசேஷமென்று கேள்வி.

நாத:—சடகோப ராமாநுஜதாச சுவாமிகள் குரு பரம்பரை; விசேஷ காலக்ஷேபம்.

மதுர:—அடியேனை அங்கே அபிமானிக்கவேணும்.

நாத:—ஆஹா! தேவரீரை அபிமானிக்காதவருண்டா? சாணுகதி; க்ஷமிக்கவேண்டும்.

மதுர:—பிரசாதம் என்ன விசேஷம்?

நாத:—தோசை, வடை, சுண்டல், பொங்கல், புளியோரை, திருக்கண்ணமுது, அப்பம்.

பிருந்தாவனக் காட்சி

நாத:—சுவாமி எங்கே போனது?

மதுர:—அடியேன்! அடியேன்! அடியேன்! அப்பா! நெடுநாளாச்சுதே தேவர் சேவை.

நாத:—சுவாமி யாத்திரை போயிருந்ததோ?

மதுர:—அடியேன் பெருமாள் கோயில் போயிருந்தது.

நாத:—பாக்கியம்; சுவாமி! நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை ராமாநுஜன் பொன்னடியான் சபையில் பிருந்தாவனக் காலக்ஷேபம். தேவர் எளாய்.

மதுர:—பாக்கியம்! காத்துக்கொண்டிருக்கிறது.

நாத:—பத்துமணிக்கெல்லாம் பிருந்தாவனம் நடந்து போகிறது. சடகோப ராமாநுஜதாசர் நடத்துகிறார். அதற்குமேல் ததியாராதனம். சாத்தமுது, அண்ணு அய்யங்கார்தான்; தளிகை ரொம்ப யோக்கியதையா யிருக்கும். தேவர்கூட எத்தனை திருநாமங்கள்வரும்?

---

சகல சம்பத்துக்கும் கல்வியே காரணம்; கண்டு களிக்க வேணுமானல் தேகந்தான் பிரதானம்.

மதுர:—ரத்தின ராமாநுஜர் வருவார்; முகில்வண்ண ராமாநு ஜர் வருவார்; வீரராகவ ராமாநுஜர் வருவார்; அப்பன் ராமாநுஜர் வருவார்; செந்தாமரைக் கண்ணர் வருவார்; பரமபத ராமாநுஜர் வருவார்.

இப்படி இந்த போலி வைஷ்ணவர்கள் எல்லோரும்போய் ஒரு பெரிய கூட்டமாய்ச் சேர்ந்துகொண்டு ஒரு புருஷனுக்குக் கிருஷ்ண வேடமும் சிலர்க்குக் கோபிகா ஸ்திரீகள் வேடமும் போட்டு அவர் கள் பிருந்தாவனத்தை நடத்துகிற விதம்:—

கோபிகாஸ்திரீ:—அடே கண்ணு!

கிருஷ்ணன்:—நீ யாரடி ?

கோபிகா:—கண்ணு! நாங்களிந்த யமுனையில் ஸ்நாநம் பண் ணுங்காலத்தில் எங்கள் வஸ்திரங்களைப் பறித்துக்கொண்டு நீ புன்னை மரத்திலேறி இப்படி எங்களை அவமானம் செய்வது தர்மமா ?

கிருஷ்ணன்:—உன் பேரென்னடி ?

கோபிகா:—என்பேர் கமலக்கண்ணி. ஏ கிருஷ்ணு! என்னுடை யைத் தந்துவிடு; இல்லாவிட்டால், உன் தாயிடம் சொல்வேன்.

கிருஷ்ணன்:—சொல்லடி பார்ப்போம்.

இன்னொரு கோபிகா:—என்னுடையைக் கொடு.

கிருஷ்ணன்:—ஆ ஹா! உன் பேரென்னடி ?

கோபிகா:—என்பேர் கனகவல்லி. என் ஆடையைக் கொடுத்து விடு.

கிருஷ்ணன்;—நீ இப்படிக் கேட்டால் கொடுக்கமாட்டேன். உன் இரண்டு கைகளையும் தலைமேல் குவித்து என்னை வணங்கிக் கேள்.

இவ்வாறு கிருஷ்ணனுக்கும் வேறு சில கோபிகளுக்கும் விவா தம் நடந்தபின், அவர்கள் "கறவைகள் பின்சென்று கானஞ் சேர்ந் துண்போம்" என்னும் பாசுரத்தைப் பஜனையாகப் பாடத் தொடங்கு வார்கள். அப்போது அவர்கள் ஒரு பெரிய பாகவதருக்குத் தலையில் இடையனைப்போல் முக்காடிட்டுக் கையில் ஒரு கோலைக் கொடுத்து, ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டு வாசலைச் சுற்றித் தூண்கள் சந் தில் வளைய வளைய ஓடுகிறதும், மற்றக் கோஷ்டிகள் அவர்களை மாடாகப் பாவித்து அங்குக் கட்டியிருக்கும் மாவிலைக் கொத்துகளை

---

பெருமைக்குக் காப்பி குடிக்கக் கற்றுக்கொண்ட சீமானே! காலையில் நிசித் தண்ணீர் சாதம் நிகராகுமோ புமானே.

எடுத்துக்கொண்டு ஏய் ஏய் என்று அடித்து ஓட்டுகிறதும், உடனே அவர்கள் குந்துகிறதும், இன்னொரு பாசுரம் சொல்லி ஒருவர்மேல் ஒருவர் படுக்கிறதும் இரண்டு கைகளையும் சேர்த்து வானத்தில் காட்டுகிறதும், கையை முடக்குகிறதும், நீட்டுகிறதுமாய் ஆடுவார்கள். இவர்களில் சிலர் உண்மையான கிருஷ்ணனுடன் நிர்த்தனஞ் செய்வதாகத் தமது கண்களை மூடுகிறதும், தம்மைத் தெரியாமல் பாடுகிறதும், மற்றவர்கள் மேல் விழுகிறதும் சொக்கிப் போகிறதுமாய்ப் பாவனை செய்வார்கள். இது முடிந்தபின்னர் அவர்கள் எல்லாரும் சாப்பிட உட்காருவார்கள். புருஷாகாரியான பாகவதர் மடிக்காரர்களாயுள்ளவர்களை விளித்து "சுவாமி! தேவர் ஏளா! ஏளா!! பின்கட்டுக்கு" என்று உள்ளே அனுப்பிவிடுவார். மற்றவர்களையும் பிறகு சாப்பாட்டிற்கென்றே வருகிறவர்களையும் ஒவ்வொருவராய் விசாரிக்கத் தொடங்குவார்.

**புருஷாகாரி:**—நீர் ஆர்காணும்?

**நாமக்காரன்:**—ராமாநுஜ தாஸருடன் வந்தேன்.

**புருஷாகாரி:**—உட்காரும் இங்கேதான். (இன்னொருவரைப் பார்த்து) நீரார் சுவாமி?

**வேறு நாமக்:**—நான் சூளை ராமாநுஜ தாஸன்.

**புருஷாகாரி:**—ஆ ஹா! சூளை ராமாநுஜ தாஸா! தேவரீர் ஏளா! ஏளா!! பின்கட்டுக்கு.

**நாமக்காரன்:**—சுவாமி! தெளியமுது சாதிக்கா?

**மடிக்காரன்:**—அடியேனுக்குப் பொரிகறியமுது சாதிக்கா?

**வேறுமடி:**—தேவர் இங்கே சாத்தமுது சாதிக்கா?

**சூளைநாமக்:**—அடியேன் குளிர்ந்த தேர்த்தம்?

## கோஷ்டிச் சண்டை.

**நாதமுனி:**—ஓய்! நீர் யாருடைய திருவடி சம்பந்தங் காணும்?

**நாமக்காரன்:**—தொட்டாசாரி திருவடி சம்பந்தம்.

**நாதமுனி:**—ஒரு தனியன் சொல்லும்?

**நாமக்காரன்:**—எனக்குத் தெரியாது.

**நாதமுனி:**—உம்மை யார் காணும் இங்கே உட்கார வைத்தது?

**நாமக்காரன்:**—உமக்கு ரொம்ப தெரியுமோ?

---

போலீசார் சகவாசம் வைத்துக் கொள்வதைவிடப் பாம்புக்கு பால் வார்ப்பது எவ்வளவோ குணம்.

மடிக்கார்:—என்ன சுவாமி நாதமுனி ராமாநுஜ தாசரே! என்ன கோஷ்டம்?

நாதமுனி:—இவர் யார்? சாமானியரா யிருக்கிறரே!

மடிக்கார்:—இருக்கட்டும்; பாகவத கோஷ்டியில் என்ன இது?

இப்படி இவர்கள் 'கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பம் ஏன்' என்றபடி, தேசநன்மையைச் சிறிதும் கருதாமல் வைஷ்ணவ டிக் கிரியை மாத்திரம் உயர்த்திக்கொண்டே போவார்கள். ஆனல், வந்தேமாதரம் என்ற சொல்லுக்கு வந்த வம்பு வைஷ்ணவத்திற்கும் வந்துவிடுங் காலம் வெகு தொலைவி லிருக்கிறதோ? நமக்குள் சைவம், வைஷ்ணவ மென்ற பேதத்தால் 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக் குக் கொண்டாட்டந்தானே'. அதிலும் வடகலை, தென்கலைச் சண்டைகளால் Y மார்க் U மார்க் வித்தியாசத்தால் ஆழ்வாராதி களால் மங்களாஸாஸனம் செய்யப்பட்ட எத்தனையோ திவ்விய க்ஷேத்திரங்கள் மூடப்பட்டுவிடுகின்றன. அதனல், அந்தக் கோயில் களிலுள்ள பெருமாள்கள் சோற்றுக்கும் திண்டாட்டப்படுகின்றன. இந்த வழக்குகள் ஐகோர்ட் புல்பென்சு, லண்டன் பிரிவி கௌன்சல் வரையில் போய் ஆயிரமாயிரமாகக் காசுகளை கரியும் பொரியுமாய்ப் பாழாக்குகின்றன. Y மார்க் வக்கீல் தென்கலைக் கட்சியிலும் U மார்க் லாயர் வடகலைக்கட்சியிலும் அபிமானம்வைத்துச் சுவாமியின் நாமத் தையே உளிகொண்டு அடித்துவிட்டதாய்க் கோர்ட்டில் வழக் காடுகிறர்கள். அந்த வக்கீல்களே காங்கிரஸ் கூட்டத்தில் ஒருவர் பொதுஜன நன்மையைக் குறித்து ஒரு விஷயத்தைப் பிரரேபிக்கிற தும் மற்றொருவர் அதை ஆமோதிக்கிறதுமாய் வேஷம்கட்டி ஆடு கிறர்கள்; ஒருபக்கம் தாழ்ந்த வகுப்பாரைத் தூக்கிவைக்கவேணு மென்றும் தில்லானு பாடுகிறர்கள். உதட்டிலிருக்கிற அபிமானம் உள்ளும் இல்லாமல் போனல் சுயவராசாட்சி என்பது கூரை வீட்டி லிருந்து மெத்தை வீட்டுக்கனவு காண்பது போலாம்.

## 95. தெய்வ ஆவேசம்

கொர்வம் பிடித்த இளம் பெண்களும் லச்சைகெட்ட கைம் பெண்களும் பூசாரிகள் உடுக்கை சிலம்பு கொண்டு சில தேவதை களின் பேரைக் குறித்துப் பாடும் சமயம் பார்த்து ஆவேசம் வந்த

குடியுங் கூத்தியுமில்லாத உனக்குக் குருட்டுத்தசையால் வந்த பணந் தான் என்னத்திற்கு?

தாக ஆடுவதற்குக் காத்துக்கொண் டிருப்பார்கள். பத்துபேர் முன்னிலையில் தங்களை மதித்து, அம்மா தாயே! என்று கேட்பதையே அந்த மூடப்பெண்கள் ஒரு பெருமையாக எண்ணிக்கொண்டு தமது மேல்துணி விலகுவதையும் கவனியாமல் தலைவிரித்தாடுவார்கள். ஆவேசம் வந்து ஆடுகிறவர்கள் ஆண்களானால் ஆண்பிள்ளைகளும் பெண்களானால் பெண்களும் அவர்களை வெகுபத்திரமாய்த் தாங்கிக் கொள்வார்கள். அதனால், அவர்கள் வெகு உக்கிரம் வந்தவர்களைப் போல் பூமியை உதைத்துக்கொண்டு ஆடுவார்கள். ஆவேசக்காரர்களைத் தாங்குவதற்குப் போதுமானவர்க ளிருக்கிறதினாலும் ஆவேசக்காரர்கள் தமது கண்களைக் கெட்டியாய் மூடிக்கொள்கிறதினாலும் அவர்கள் தமது இயல்புக்கு மேற்பட்ட பலமும் தைரியமும் வந்து ஆடுவார்கள். தாங்கிப்பிடிக்க ஆளில்லாமல் தன் கடையாய் ஆடும் ஆவேசக்காரர்கள் 'குந்தினையா குரங்கே உன்சந்தடி அடங்க' என்றபடி ஓய்ந்த நிலைமையில் ஆடுவார்கள்.

சிலர் கன்னியம்மாள் வாடை, வேங்கை வாடை, அங்காளம்மன் வாடை, பச்சையம்மாள் வாடை, அகோர வீரபத்திரன் வாடை, பெரியாண்டவன் வாடை, என்ற வாடைகளில் ஒன்று தம்மேல் இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் யாராவது எங்கேயாவது விளையாட்டுக்குப் பூசாரி பாட்டுகள் பாடிக்கொண்டிருந்தாலும் வழியே போகிறவர்கள் பூஜைபோட்டுக்கொண் டிருந்தாலும் அந்தப் பேர்களையுடைய தெய்வங்களின் கோயிலுக்குப் போனாலும் தங்கள் மேலிருக்கிற தெய்வங்கள் வந்துவிட்டதாக வேளை காழியின்றி ஆடுவார்கள். பூசாரிகள் அடிக்கும் உடுக்கைகளின் ஆட்டு ஜவ்வின் ஓசைக்கும் சில்லரைத் தெய்வங்களுக்கும் ஏதோ ஒருவித சக்தி இருந்து அந்தத் தெய்வங்களை இவ்விதமாய் ஆட்டிவைக்கிறதுபோ ,லிருக்கிறது. கூத்துக்குத் தகுந்த பந்தம் பிடிக்கும் பூசாரிகள், உடனே "யாரம்மா! இந்த முடிமேல் வந்து விளையாடுகிறது?" என்று கேட்டுத் தமது பவிசு வெளிப்படாத முன்னமே,

அமரும் அமருமம்மா! ஆய்ச்சியே! நீ அமரும்;
கற்பூரக் கனியம்மா! நீ கண்டு மனங்குளிரு!

---

கடன் கொடுக்கவும் வேண்டாம் வாங்கவும் வேண்டாம்; அதினால் காலமும் காசும் கஷ்டமும் உனக்கு மீதியாகும்.

என்று கற்பூரத்தைக் கொளுத்தி ஆவேசக்காரர்கள் கையில் கொடுப்பார்கள். அவர்கள் அதை வாங்கி வாயிலிட அது பொட்டென அவிந்துபோகும். என்னைப்போல் திமிறு பிடித்தவர்கள் தமது கையிலுள்ளதைச் சொல்லவேண்டுமென்று கேட்டால், உடனே தெய்வம் மலையேறிப்போகும். சில சமயங்களில் சில மாவுப்பூசாரிகள் முன்னதாகவே வெள்ளை, சிவப்புப் புஷ்பங்களை வைத்துக் கொண்டு குறிகேட்பதாய் ஆவேசம்வந்து ஆடும் பெண்களிடம் சொல்லிவைத்துவிட்டுக் கொஞ்சநேரம் அம்மன் பெருமைகளையும் சக்திகளையும் பாடிய பிறகு அந்தப்பெண்ணைத் தமது கையிலிருப்பதைச் சொல்லுபடி கேட்கச் சொல்வார்கள். அவள் கர்வம் பிடித்தவளாயிருந்தால்,

> வெள்ளையை வைத்துக்கொண்டு விளையாட வந்தாயா?
> சிகப்பை வைத்துக்கொண்டு சோதிக்க வந்தாயா?
> ஆரென்று எண்ணிஞய் ஆங்காரக் கன்னியாச்சே
> சோதிக்க வந்தவளைச் சூலத்தால் குத்திடுவேன்.

என்று சோதிக்க வந்தவர்கள் பயப்படும்படி சொல்வாள். புட்பம் தவிர மற்றவைகளை வைத்துக்கொண்டு கேட்கக்கூடாதென்று பூசாரிகள் முன்பே அட்டவணை போட்டுவிடுவார்கள். எந்த இழவு எப்படியிருந்தாலும் அந்தத் தெய்வம் தன்னைக் கேட்ட வாங்களை முடியாதென்று சொல்வது கிடையாது; வியாதியஸ்தர்களுக்கு வைத்தியனைக் கொண்டு பாருங்கள் என்று சொல்வதும் கிடையாது. அநேகர் ஆவேசக்காரர்களின் பேச்சை நம்பிக் கெட்டுப்போவார்கள். இந்த ஆவேசக்காரர்கள் பிறர் எப்படி யெண்ணுகிருர்களோ அந்தமாதிரி அர்த்தம் கொள்ளும்படி சொல்வார்கள். இதை நம்பிப் பேதை ஜனங்கள் மோசம் போகிருர்கள்.

---

## 96. லாடக்குறி

நம் நாட்டுப் பேதைப்பெண்கள் தங்கள் வீட்டிலுள்ள குழந்தை குட்டிகளுக்கும் பெரியவர்களுக்கும் பலத்த வியாதிவந்த காலத்தும், சுக்கு மிளகில் அந்த வியாதி போய்விடும் என்று நாலைந்துநாள் வரையில் வியாதியஸ்தர்களை எஞே தாஞேவென்று பார்த்து வருவார்கள். கெட்டப் பாறையை விழுங்கிவிட்டு சுக்குக் சியாழம் சாப்

---

கட்டை வறட்டிகொண்டு மறைக்கப் பார்க்கிருய் நெருப்பை; பகல் வேஷமும் படாடோபமும் வெளிக்குக் கொண்டுவரும் உன் இருப்பை.

பிட்டால் முடியுமா? வாவா வியாதி பலத்து வருவதைக்கண்டு : அந்தச் சிமாட்டிகள் 'செல்லும் செல்லாததற்குச் செட்டியாரிருக்கிறார்' என்றது போல் சூனியம், தெய்வகுற்றம், கழிப்பு மிதித்தல், அண்ணமார் குற்றம், முனீஸ்வரர் சோகம் முதலியவைகளில் ஏதாவது ஒன்றின்மேல் போட்டு விடுவார்கள். அதன் உண்மையைக் கண்டறிய அவர்கள் அக்கம்பக்கம் குறிசொல்லி லைசென்ஸ் பெற்றிருக்கிற அதாவது லாடக்குறி சொல்வதாய்ப் பேர் வாங்கியிருக்கிற மங்கையைக் கூப்பிடுவார்கள். லாடக்குறி மங்கை வந்ததும், வீட்டிற்குச் சொந்தக்காரி அவளிடம் எல்லாவற்றையும் விவரமாய்ச் சொல்லிவிட்டு "பெரிய பாளையத்தாளுக்கும் ஒரு பிரார்த்தனை யிருக்கிறது. அதுதானோ என்னவோ? எதற்கும் நீ கொஞ்சம் பார்த்துச் சொல்லவேணும்" என்பாள். பிறகு லாடக்குறி மங்கை வீட்டில் கொஞ்சம் சதுரமாக மெழுகச்சொல்லி கற்பூரம், சாம்பிராணி, வெற்றிலைப்பாக்கு, தேங்காய் இவைகளைக் கொண்டுவரச் சொல்லி மெழுகின இடத்தில் தேங்காயை உடைத்துக் :கற்பூரத்தைக் கொளுத்துவாள். அந்த க்ஷணமே லாடக்கன்னி ஆவேசம் அவள் மேல் வந்துவிடும். முதலில் அவள் 'காச்மாச், மாச்காட் பாட்' என்று வாயில் வந்தபடி உளறுவாள். குறிக்காரியுடன் வந்த துபாசியாவது வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிற பெண்பிள்ளைகளில் சதுரம் தீர்ந்த ஸர்தார்களில் ஒருத்தியாவது முன்வந்து "என்ன அம்மா தாயே! எங்களுக்கு என்ன தெரியும், இந்த லாடப் பேச்சு? எங்களுக்கு ஒன்றும் தெரியாது. இந்த குழந்தைக்கு வந்திருக்கிற வியாதி யாரால் வந்தது? எப்படி நீங்கும்?" என்று அதிவிநயமாய் அந்தத் தெய்வத்தைக் கேட்பார்கள். லாடக்குறிகாரி எல்லாவற்றையும் கை சைகையிலேயே காட்டுவாள். முன்னின்று கேட்கும் ஸர்தார் பெண்பிள்ளை இதை விவரித்துச் சொல்வாள். துபாசி தவறாய்ச் சொல்லும்போது குறிக்காரியே கொஞ்சம் பட்டதும் படாததுமாய் விவரிப்பாள். அநேக மூடக்குறிகாரிகள் மருந்து கொடுக்கவே கூடாதென்று G. O. (கவர்ன்மெண்ட் உத்தரவு) போட்டுவிடுவார்கள். பேதைப் பெண்கள் அதை நம்பி நோயாளிகளுக்கு வைத்தியம் செய்யாமலே அவர்களைக் கொன்று விடுவார்கள். நோயாளிகள் குழந்தைகளாயிருந்து ஒருவேளை தப்பித்தவறிப் பிழைத்துவிட்டால்

---

அடுத்து அறுபதுநாள் காப்பி ஓட்டலுக்குப் போனால் அன்னத்துவேஷமும் அஜீரணமும் தாமாகவே வரும்.

குறிசொன்னது சரியென்பார்கள். இறந்து விட்டாலோ அதற்குப் போட்டது! அவ்வளவு ஆயுசுதான்! ஆயுசு முடிவுக்குத் தெய்வம் என்ன செய்யும்? என்பார்கள். குழந்தை பிழைத்திருந்தாலும் இறந்துவிட்டாலும் இனி இருக்கிற குழந்தை குட்டிகள் சுகமாயிருப்பதற்கென்று சொல்லிக்கொண்டே பிரார்த்தனைகளைக் கடனுடன் பட்டாயினும் ஆடிமாதம் தவறாமல் செய்து விடுவார்கள்.



97. குறவர் குறி.

இளவயதுள்ள ஒரு குறவன் ஒரு ஸ்திரீயைப்போல் புடவையும் ரவிக்கையும் அணிந்துகொண்டு, முகம் நிறைய மஞ்சளைப்பூசி அதன்மேல் குங்குமப் பொட்டுகளை வைத்துக்கொண்டு, பித்தளைத் தகட்டினால் செய்த கோரைப்பல், கண்மலர், நெற்றிப்பட்டம் இவைகளைப் பூண்டு காளிவேஷம் போட்டுக்கொள்வான். அவன் கழுத்தில் மஞ்சள் நூற்சரடுகள் மாலை மாலையாகத் தொங்கிக்கொண்டிருக்கும். அவன் கையில் வேப்பிலையும் உடுக்கையும் மற்றொரு கையில் வெள்ளிப்பூண்கள் கட்டிய பிரம்பும் பிடித்துக்கொண்டு,

"ஓங்காரக் காரியோடி, உத்தமியாள் மாரிமுத்து
ஆங்காரக் காரியோடி, அதிகாரி மாரிமுத்து
உன் - சொரூபம் தெரியாமல் சுருண்டமக்கள் கோடியுண்டு
உன் - ஆங்காரம் தெரியாமல் அழிந்தமக்கள் கோடியுண்டு
பச்சிலைக் காரியோடி பழிகாரி மாரிமுத்து
வேப்பிலைக் காரியோடி விளையாடு மாரிமுத்து
நம்பின பேருக்கு நாடித் துணையிருப்பேன்
கோடித்த பேருக்குக் கூடத் துணையிருப்பேன்."

பத்து பீரோவ் நிறைந்த புஸ்தகப் படிப்பானாலும், அனுபவமில்லாப் படிப்பு அரைப் படிப்பு.

என்று பாடி வருவான். ஒரு குறத்தி அதற்குத் தக்கபடி பறை மேளம் அடிப்பாள். மற்றொரு குறத்தி ஒரு கூடையில் கொஞ்சம் அரிசியும் வேப்பிலையும் போட்டு அதை எடுத்துக்கொண்டு வருவாள். கூடை கொண்டுவரும் குறத்தி, பெண்கள் கூடிப் பேசுபவைகளைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டு சமயம்பார்த்துக் குறிக்காரனுக்குத் தெரிவிப்பாள். அதுவுமன்றி அவள் வீட்டிலுள்ள பெண்களிடம் போய் "ஆயி! பெரியபாளையத்தாள் மெத்தப் பசியாயிருக்கிறாள். அந்தத் தாயாருக்கு மஞ்சள் நீரும் பத்திரி வேப்பிலையும் தான் இஷ்டம். அதைக் கொடுத்தால் தான் அவள் ஆங்கார ஓங்காரம் அடங்கும்" என்று சொல்வாள். பேதைப் பெண்கள் அதைக் கேட்டுப் பயந்து உடனே மஞ்சள் அரைத்து வந்து உருண்டையாய்க் கொடுப்பார்கள். அப்படிக் கொடுக்கும் பைத்தியக்காரப் பெண்களின் கையைக் குறிக்காரன் பிடித்துக்கொண்டு தன் வாயில் கொஞ்சம் மஞ்சளைப்போட்டுக் குதப்பியாவது தண்ணீர் குடித்தாவது விழுங்கி விடுவான். மீதி மஞ்சளைத் தன் கழுத்திலிருக்கிற நூல்சாடுகளின் மேல் தடவிக்கொண்டு, அடிக்கடி வேப்பிலையை உருவி வாயில் போட்டு மென்று நரம்புகளைத் துப்புவதுபோல் அதைக் காறியுமிழ்ந்து விடுவான். இவைகளைப் பார்த்துக்கொண்டிருக்கும் பெண்கள் அனைவரும் திகைத்துப் போவார்கள். அச்சமயம் குறிக்காரன் "உஸ் உஸ்! ஏய் ஏய்!!" என்று சொல்லிப் பின்பு,

குறிக்காரன்:—

என் - திரேகம்எரியுதடி! வெந்துதணல் ஆகுதடி!
ஏமத்திலும் சாமத்திலும் - நான் - பக்கத்து ணையிருக்க
மாளாத் துயரங்கொண்டு நீ மயங்கியி ருக்கலையா?

குறத்தி:—அம்மா! உனக்கொரு கவலையிருக்கிறதாமே; மெய் தானா? சொல்லு. அம்மா பெரியபாளையத்தா உன்னைக் கேட்கிறாள்.

பெண்:—ஆமாம்.

குறிக்காரன்:—

அது - யாராலே வந்த ஆகடியம் என்பதுவும்
எவராலே நேர்ந்த இக்கட்டு என்பதுவும்
எண்ணிப் பயந்துநீ ஏக்கமுற் றிருக்கலையா?

பெண்:—ஆமாம் தாயே! பெரிய பாளையத்தா!

குறிக்காரன்:—

பாலக னுக்குவந்த பழிகாரச் சதிகளுமே
குழந்தைக்கு வந்தவொரு வாதனையும் வேதனையும்

நீங்குமோநீங் காதோஎன்று நினைத்துநீ கேட்கலையா ?
பெண்ணென பாலனுக்கு பிள்ளைதானில்லை என்று
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி தவிக்கலையா ?

பெண்:—ஆமாம்; தாயே!

இவ்வாறு சொல்லிக் குறிக்காரன் மஞ்சளையும் வேப்பிலையையும் தின்னுவதைப் பார்த்து அங்குள்ள பெண்பிள்ளைகள் பயந்து அரிசியோ துட்டோ கொண்டு வந்து போட்டுக்கொண் டிருப்பார்கள்.

குறிக்காரன்:—

ஆடுவெட்டிப் பொங்கலிட்டு அம்மனை நீ வணங்கி
ஆடி நாலாங்கிழமை அன்புடன் செய்வாயானால்
மங்கலியக் காரிஅந்த மாதுபூ வாடைக்கு
மஞ்சாசிற் றாடை வைத்து மனங் குளிரச் செய்தாயானால்
நான்-பக்கத்து ணையிருந்து பாதுகாக்க வல்லவடி
நான்-கூடத்து ணையிருந்து கூட்டிவைக்க வல்லவடி.

என்று சொல்லி அந்தப் பெண் கையில் கொஞ்சம் வேப்பிலையும் விபூதியும் கொடுப்பான். இப்படி அவன் பல பெண்களை ஏமாற்றி அவரவர்களுக்குத் தக்கபபடி அரிசியாகவாவது துட்டாகவாவது வாங்கிக் கொண்டுபோய் மஞ்சளையும்,வேப்பிலையையும் தின்ற சூடுதணியும்படி தலைகால் தெரியாமல் வெறிக்கக் குடித்து ஆடுவான். பசியாலலையுஞ் சொந்த பந்துக்களைப் பார்த்து எடுத்து மூடி எதிரேவரும் பரமசண்டாளிகளான சில பெண்கள் இந்த வம்பர்களுக்கு வலியக்கொடுத்து அவர்கள் காலில் விழுவார்கள். இப்படிப்பட்ட அடுப்பூதிகளைத் திருத்துவதை விட அரசாள்வது கஷ்டமல்லவே!

---

## 98. குறி மேடை

பூசாரிப்பாட்டுகள் கொஞ்சம் வகையாய்ப் பாடத் தெரிந்தவர்களும் பெரும்பாலும் ஆணுமல்லாத பெண்ணுமல்லாத பேடிகளும் குறி சொல்வதாகச் சில கற்றுக் குட்டிப் பூசாரிகளைக் கும்பல் சேர்த்துக் கொண்டு மதுரைவீரன் குறி, வேங்கைக் குறி, கன்னியம்மாள் குறி என்ற பேர்களை வைத்துக்கொண்டு அதற்காக ஒரு தனி வீடு தயார் செய்துகொள்வார்கள். அதில் அவர்கள் பூஜை மண்டபம், அம்மன் கொலுமண்டபம் என்று சிங்காரித்து வைத்துப் பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் அவசியம் வேண்டும் போதும் குறி சொல்

வார்கள். பிள்ளை இல்லாதவர்களும், கலியாணமாகாமல் அடை பட்டிருக்கிற பெண்களின் தாய்தந்தையர்களும், சூனியம் வைத்துவிட்டார்களென்று பயித்தியம் பிடித்து அலைபவர்களும், எப்போது வெள்ளிக்கிழமை வருமோ என்று காத்துக்கொண்டிருந்து தேங்காய், பழம், புஷ்பம் இவைகளோடு குறி மேடைக்குக் கொஞ்சம் பொழுதோடே போய்ச் சேருவார்கள். குறிமேடைகளிலுள்ள சில உளவாளிப் பெண்களும் ஆண்களும் தாங்களும் குறிகேட்க வந்தவர்களைப் போல் நடித்து அவர்களுடன் கலந்து எல்லாச் சங்கதியுந் தெரிந்து கொண்டு பூஜையிலிருப்பதாக உள்ளறையிலிருக்கும் குறிக்காரனிடமாவது பூசாரிப் பயல்களிடமாவது இன்னின்னார் இன்னின்ன இடங்களிலிருந்து இன்னின்ன விஷயமாக வந்திருப்பதாகச் சொல்லிவிடுவார்கள். சிலர் குறி நடக்கும்போது வந்தால், அந்த உளவாளிப் பெண்கள் மலஜல பாதைக்குப் போவது போல் போக்குக்காட்டி, புதிதாய் வந்திருக்கிறவர்கள் பக்கத்தில் உட்கார்ந்து அவர்கள் வாயைக் கிளறி விபரம் தெரிந்துகொண்டு பூசாரிகளிடம் போய்ச் சொல்லி விடுவார்கள். சில சமயங்களில் வந்தவர்களுடைய சங்கதி தெரியாமற் போனால் இரண்டொரு வாரம் வரையில் அவர்கள் வந்து காத்துக்கொண் டிருக்கும்படி செய்து மெல்ல மெல்ல விபரம் தெரிந்து கொள்வார்கள், இது நிற்க, குறிக்காரன் குறி முகத்தில் வந்து நின்றதும் பூசாரிகள் விநாயகர் வணக்க முதல் வகையாய்ப் பாடி வருவார்கள், பின்பு,

**பூசாரிகள்:—**

*மானா மதுரை வடமதுரைப் பாண்டியனே!*
*அந்தக் கள்ளரைக் கறுவறுத்த கட்டழகா! மதுரையனே!*

**குறிக்காரன்:—**

*ஆரடா மக்களா என் ஆசார வாசல் தேடி*
*அணியுமா பரணங்கள் அடங்கலும் போச்சுதென்று*
*அது-கிடைக்கும் கிடைக்காதென்று கேட்கவந்தவர் ஆரடா*

**கேட்கவந்தவள்:**—நான்தான் சாமி! கழற்றி வைத்த நகை மாயமாய்ப் போய்விட்டது. அது கிடைக்குமா, கிடைக்காதா?

**குறிக்காரன்:—**

*அது-தெற்கே விதவை கையில் சேர்ந்தது பாலகனே!*
*ஒன்பது நாளையிலே உன்னிடம் வந்து சேரும்.*

**பூசாரிகள்:—**

கூருகத்தி வடிவழகா! குருபரனும் மதுரையனே!
பொம்மியைச் சிறையெடுத்த போர்வீரன் மதுரையனும்
கன்னியைச் சிறையெடுத்த காளையவன் மதுரைவீரன்.

**குறிக்காரன்:—**

ஆரடா என்மகனே-என்-அன்பான வாசலிலே
மாலைசந் தனந்தேடி மகிழ்ச்சியாய் வந்தவரார்?
ஆறுமரக்கால் பேச்சைவிட அரை ஆழாக்கு செய்கையே மேல்
பூவும் மணமும் பொருந்தும் பொ ருந்தாதென்று
எண்ணியே ஏக்கமுற்று வந்தவ ராரடா?

**கலியாணக்காரன்:—** நான் தான் சுவாமி! இந்தத்தடவை கலியாணம் கூடுமா கூடாதா? சொல்லவேணும் சாமி.

**குறிக்காரன்.—**

ஆனிப் பதினஞ்சில் அன்புள்ள என்பத்தா!
மங்கிலியம் கூடுமா மத்தியில் பாடுபட்டால்
ஒண்ணுமே கூடாது சொன்னேன் நான் உந்தனுக்கே.

**பூசாரிகள்:—**

ஆண்டவா! மதுரைவீரா! அய்யனே! அழகுதுரை!
மீனாட்சி கோவிலிலே முன்பூசைக் குகந்தவனே!
உன்னை-பொன்வேண்டி கேட்பதில்லை பொருள் வேண்டி [கேட்பதில்லை
மண்வேண்டி கேட்பதில்லை மனைவேண்டி கேட்பதில்லை
தொப்பிக்கார சீமையிலே துலங்குதடா உன்பெருமை
வெள்ளைக்கார சீமையிலே வேணதுண்டு உன்பெருமை

**குறிக்காரன்:—**

இந்த-அய்யனைக் குறித்திந்த ஆசாரவாசலிலே
கச்சேரி மூலமாய் கனங்குலைந்து நிற்பவரார்?
அல்லல் அவதிப்பட்டு அலைகிறது யாவரடா?
தொப்பிக்கார பயலாண்டே கனங்குலைந்து நிற்பவரார்?
அது-திருமாதீ ராதானென்று என்னிடத்தில் வந்தாயா?
இந்தப்பிறையோடு இனியொருபிறை போகுமானால்
நீ-எண்ணிய எண்ணப்படி ஈடேறி வந்துதானால்
எதிரியைக்கறுவறுத்து உன்னைக்கனம்படுத்தி வைக்கிறேன்போ.

மாலையும் சந்தனமும் மகிழ்ச்சிசெய்து வைப்பாயா?
மொந்தையும் சாராயமும் முன்னே தருவாயடா?
கொடுப்பது மெய்யானால் குணப்படுத்தி வைக்கிறேன்போ.

**பூசாரிகள்;—**

மாதிகன் பெற்றெடுத்த மன்னவனே மதுரைவீரா!
அக்குறி மாற்றி மறுகுறி சொல்லவேணும்
பொய்யான வார்த்தையை மெய்யாகச் சொல்லாதே
மெய்யான வார்த்தையை பொய்யாகச் சொல்லாதே
காசிராஜன் பெற்றெடுத்த கனமுள்ள மதுரைவீரா!

**குறிக்காரன்:—**

மைந்தனில்லை என்றுசொல்லி மனங்கலங்கி நிற்பவரார்?

**குறிகேட்கிறவன்:—** நான்தான் சாமி!

**குறிக்காரன்:—**

உனக்கு-பத்துப் பிறைபோனால் பாலன் பிறப்பான்போ!
பிறந்தது மெய்யானால் என்னதருவாய்கண்ணே?
ஜாடியில் சாராயம் சாச்சி கொடுப்பாயா?
மொந்தையில் கள்ளு மொண்டு கொடுப்பாயா?
புட்டியில் சாராயம் புகழ்ச்சியுடன் கொடுப்பேனென்று
கொடுப்பது மெய்தானென்று கூசாமல் சொல்லுகண்ணே!

பூசாரிகள் முதலில் உளவறிந்துகொண்டு பின்பு தமது பாட்டில் அவைகளைக் குறிப்பாய்த் தெரிவிப்பார்கள். "கள்ளரைக் கறுவறுத்த" என்றபோது களவு சங்கதி என்றும் "பொம்மியைச் சிறை எடுத்த என்றபோது, கலியாண விஷயமென்றும் "மாதிகன் பெற்றெடுத்த" என்றபோது, பிள்ளைக்காக என்றும் "தொப்பிக் காரச் சீமை" என்றபோது கச்சேரி வியாச்சியமென்றும் குறிக்காரன் தெரிந்து கொள்வான். இவர்கள் சிலருக்கு நாலுபிறை வரையில் வந்துபோ என்று கெடுவைத்து அதற்குள் தமக்கு வேண்டுவதைப் பூஜைக்கென்று சாக்குச் சொல்லிப் பிடுங்கிக்கொள்வார்கள். சில பேதைப் புருஷர்கள் தங்கள் மனைவிகளைக் குறிமேடைக்கனுப்பி நாளடைவில் அந்தப் பெண்கள் கெட்டுப்போக வழி செய்து விடுவார்கள். குறிமேடையில் எந்நேரமும் விட புருஷர்களும் விடப்பெண்களும் சேர்ந்திருப்பதினால்,நெருப்பும் பஞ்சும்

---

வட்டிக்குப்பணம் கொடுக்கிறவர்களை விட காட்டிலிருக்கும் துஷ்டமிருகங்கள் எவ்வளவோ மேல்.

போல் சீக்கிரத்தில் அவர்கள் மனம் பற்றிக்கொள்ள ஏதுவாயிருக்கிறது. அதனால் பலர் தங்கள் மனைவிகளை இழந்து தெருவில் நின்று தேங்கியழுவார்கள். அன்றியும், குறிக்காரர்களை நம்பிப்போகும் பெண்கள் பின்பு நடுத்தெருவில் நின்று அலைவதைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டிருந்தும் அநேக மூடர்கள் மதிமோசம் போகிறார்கள்.



99. மாவுப் பூசாரிகள்.

மாவுப் பூசாரிகளில் பலர் அரி என்ற அட்சரம் அறியாதவர்களா யிருந்தாலும், மதுரைவீரன், பிறப்பு வளர்ப்பு முதல் மதுரை மீனாட்சியம்மனிடம் அடைக்கலமானது வரையில் வெகு தோரணையாய்ப் பாடுவார்கள். அவர்கள் பாடுவது பூசாரிப்பாட்டா யிருந்த போதிலும், அதிலேயே தில்லாலே, டப்பான், சுருள், வண்ணம்; குறவஞ்சி முதலிய தினுசுகளையும் சேர்த்துப் பெண்களைப் பார்த்துக் கொண்டே பாடுவார்கள். உடுக்கைகளைத் தங்கள் காதுக்கருகில் வைத்து அடித்துக்கொண்டே அவர்கள் பிரம்மானந்தத்தில் சொக்கிவிடுவார்கள்; சிலம்புகள் போடுவது எந்த சாஸ்திர ஆதாரமோ தெரியாது. அவர்கள் தமது சிலம்புகளை மேலே தூக்கியும், குனிந்தும், நிமிர்ந்தும், மண்டியிட்டும், கால்கள் சந்தில் கோத்து வாங்கியும் ஒருவரை ஒருவர் குத்துவதுபோலவும் தமது உடல் வேர்க்கப் போடுவார்கள். அந்தோ! அதில் படும் கஷ்டத்திற்குப் பதில் மூட்டையெடுத்தாலும் நாலணா கிடைக்குமே; காலணா சம்பாதிக்க வகையற்ற இவர்கள் கிளிகொஞ்சுவதுபோல் பாடுவார்கள். இவர்களில் பெரும்பாலர் பூசாரித் தொழிலில் வரும் சொற்பக் கூலியையும் குடித்துவிட்டுத் தமக்குக் கிடைக்கக் கூடிய அவல்

---

சம்பாத்தியம் நின்றுவிடக்கூடியது; செலவு நிற்கமுடியாத சந்தர்ப்பமுடையது.

கடலை, பொங்கல் சோறு, மாவு இவைகளை எடுத்துக்கொண்டு தமது வீட்டிற்குப்போய் மலையைக் கொண்டுவந்து சாதித்தவர்கள் போல் பேசுவார்கள். பூசாரிகளுடைய மனைவிகள் கூலிக்கு நெல் குற்றியோ குப்பை சுமந்தோ அந்தப் பாவிகளுக்குத் துக்கச்சோறு பிணச்சோறு போடுவார்கள். ஆனால், அவர்கள் அதை மறந்துவிட்டுத் தமது புருஷர் கொண்டுவந்த பொங்கல், மாவு இவைகளைக் கண்டு மகிழ்ந்து போவார்கள்.

இந்தியாவில் ஆங்கிலோ இந்தியன் பத்திரிகைகள் பாடும் பூசாரிப்பாட்டை இங்கிலாந்தி லுள்ளவர்கள் மதிப்பதுபோல் கஞ்சகிரிப் புராணம் கையாய்ப் பாடத் தெரிந்தவர்களைக் கைதேர்ந்த பூசாரிகளென்றும் வாத்தியாரென்றும் சிலர் மதிப்பார்கள். கஞ்சகிரிப் புராணம் பாடத்தெரிந்தவர்கள் போட்டா போட்டிமேல் பாடிக்கொண்டு ஒரு கட்சியாரை மற்றொரு கட்சியார் ஏளனஞ் செய்து சண்டையும் போட்டுக்கொள்வார்கள். அங்காடிக் கூடைக்கும் மூசுண்டைக் கடைக்கும் வரிவசூல் செய்யும் புண்ணியவான்கள் உடுக்கைக்கும் சிலம்புக்கும் வரி விதித்தால் நலமாயிருக்கும்.



## 100. விளக்கு வைத்துக் கேட்டல்.

வியாச்சியங்கள் நேர்ந்தாலும், வியாதி உண்டானாலும், வீடு வாசல் நிலம் முதலியவைகளை வாங்க வேண்டுமானாலும், பேய்பிடித்திருக்கிறதா என்ற சந்தேகம் பிறந்தாலும் விளக்குவைத்துப் பார்த்தால் தெரிந்துபோகுமென்று மூடப்பெண்கள் தீர்மானஞ் செய்துவிடுவார்கள். குண்டு சட்டியில் குதிரையோட்டும் சில ஆண்பிள்ளைகள் உடனே தொடை தட்டிக்கொண்டு இரண்டொரு மாவுபூசாரிகளை யழைத்து வந்து நடுவீட்டில் வேப்பிலையால் கரகம்போல்

அன்னிய நாட்டுச் சாமான்கள் விற்கும் இந்தியாவென்னும் மார்க்கெட்டில் உள்நாட்டுச் சாமான்களுக்கு மதிப்பு எப்படி யிருக்கும்?

ஜோடித்து அதைப் புட்பம், எலுமிச்சம்பழம் முதலானவைகளால் சிங்காரித்து அதன் நடுவில் காமாட்சி விளக்கென்ற ஒரு செப்பு விளக்கை வைப்பார்கள். அது காற்றுக்கு நின்று எரியும்படி பன்னிரண்டு திரிகள் கொண்ட ஒரு பெரிய திரியை அதில் போட்டுப் போதுமான நல்லெண்ணெய் விட்டு அதைக் கொளுத்துவார்கள். பிறகு மாவுப் பூசாரிகள் விநாயகர் வணக்கத்தை முதலில் பாடிப் பின்பு ஒவ்வொரு தெய்வத்தையும் பாட்டில் சேர்த்துப் பாடிக் கடைசியில் வீட்டுக்காரர் விரும்பியதெய்வத்தைப் பற்றிப் பாடுவார்கள். இடை நடுவில் விளக்கானது எத்தனைதரம் சாய்ந்தும் கொழுந்துவிட்டும் அடங்கியும் எரிந்தாலும் அவர்கள் அதைக் கவனிக்கமாட்டார்கள். குறித்த தெய்வத்தை நாடிப் பாடும்போது,

தேவாதி தேவரெல்லாம் திட்டம் பொருந்துமம்மா!
எட்டையும் கோலி இருக்க யிடமமர்த்தி;
கைவிளக்கு மீதுநின்று பேசுமம்மா கலகலென்று;
அடியை நிறுத்தியல்லோ முனையை ஒதிருமம்மா;
நம்பினேன் பெத்தாளே! நாடினேன் பொற்பாதம்;
பொன்வேண்டி கேட்பதில்லை; பொருள்வேண்டி கேட்பதில்லை
மண் வேண்டி கேட்பதில்லை; உன்னை மனைவேண்டி கேட்பதில்லை;
என்னத்தினுல் வந்த இடையூறு சஞ்சலந்தான்;
அங்கத்தினுல் வந்த அரும்வினை சஞ்சலண்டா
ஆம்போ மகனே! என்றல் அதட்டி ஒதிருமம்மா!
உன்-ஏழு நிலைக் கோபுரத்தை எடுத்து ஒதிருயா?
இது உள்ளபடிதானு? இந்த உத்திரவு மெய்தானு?
காப்பேன் மகனே என்று கலகலென்று பேசாயா?
அறையிலே உன் கேள்வி அம்பலத்தில் என்பேச்சு
நாவைப் படைத்தவர்கள் நாணயங்கள் பேசுவார்கள்
பல்லைப் படைத்தவர்கள் பரியாசம் செய்வார்கள்
யான்- சாணிப் புழுவனம்மா! சண்டாளன் உன் குழந்தை
நம்பினேன் பெத்தாளே! நாடினேன் பொற்பாதம்
என்-வாக்குத் தவருதே அளிக்கிறேன் வெண்ணீறு.

---

வறுமை, காலமழையின்மை, பூ வளமாறுதல், பலிதக்குறைவு தவிர இந்தியாவுக்கென்ன குறைவு? தெருதப்பெருக்கியும் கம்சு கோட்டில்லாமல் வெளிவருவதில்லை.

என்று தீபம் அலேவதற்கும், சுடர் விட்டு எரிவதற்கும், அடங்குவதற்கும் தக்கபடி பாட்டுகளைப் பாடி விளக்கு உத்தரவு கொடுத்ததாகப் பூசாரிகள் சொல்லுவார்கள். சில பேதைப் பெண்கள் குழந்தை வேல் பூசாரிக்குத்தான் விளக்கு நின்று பேசுகிறதென்று பெருமையாய்ச் சொல்லிக் கொள்வார்கள். இந்த மூடஜனங்கள் பூசாரிக்கட்டணம் மாத்திரம் கடன் சொல்லாமல் கொடுத்தனுப்புவார்கள். இந்த அறியாமை நீங்க, ஈசன் எப்போது கருணைபுரிவாரோ தெரியாது.

---

## 101. பழம் வைத்துக் கேட்டல்

வியாச்சியம், வில்லங்கம், கலியாணம், புத்திரசந்தானம், இந்தப் பூஜை ஏற்குமா? என்பவைகளைப் பற்றிக் கேட்க விரும்புகிறவர்கள் தமது வீடுகளில் செய்வதானால் கரகம் ஜோடித்து அதன் மத்தியில் பெரிய திரிபோட்டு விளக்கேற்றி அதற்கடுத்தாற்போல் அலரிப் பூவையும் அதன்மேல் எலுமிச்சம்பழத்தையும் வைப்பார்கள். பூசாரிகள் உடுக்கையடித்துப் பாடிக்கொண் டிருக்கும்போது விளக்கனலில் அலரிப் புஷ்பம் வாடிப் பழம் விழுந்துவிடும். உடனே பூசாரிகள் உங்களிஷ்டப்படி அம்மன் பழம் கொடுத்தாளென்று சொல்லுவார்கள். சிலர் கிராமதேவதை முதலிய கோவில்களில் போய்ப் பழம் வைத்துப் பார்ப்பதுமுண்டு. அப்போது பூசாரிகள் அம்மனுக்கு அபிஷேக முதலியவை செய்து மல்லிமொக்குகளைச் சுருணையாகச் சுருட்டி அம்மன் மடிமீதில் வைத்து அதன்மேல் எலுமிச்சம் பழத்தை வைத்து மல்லிமொக்கு மலர்ந்து பழம் விழுகிற வரையில்,

ஏகபரி பூரணமே! ஏழைத் திருமணியில்
மஞ்ச ளறைத்துஉன் மடிமீதில் தானறைந்து
மணிப்பழம் கொண்டுவந்துன் மடிமீதில் வைக்கலுற்றார்
புஷ்பத்தின் மீதிலம்மா பொற்கனியை வைக்கலுற்றார்
உள்ளத்தில் வைத்தேன்நான் உருளவேணும் நற்கனிதான்
உன்-மகிமை யறியாத மாட்டிய சீமையிது
பெருமை தெரியாத பேய்துலுக்கர் சீமையிது
இந்த பழிக்கார-சீமையிலே பழுதுவந்து சேராமல்

---

சம்பாத்தியத்திலாசை, சிந்தனை, விடாமுயற்சி, இந்திரிய நிக்ரஹம் கல்பனாசக்தி இவைகளே ஒருவனுக்குப் பெருமையைக் கொடுக்கும்.

நடக்குமடா மகனே! யென்று நழுவவிடு பொற்கனியை
இது-ஆகாத செய்கையானால் அழுத்திவிடு நற்கனியை
இது உள்ளபடிதானோ? இந்த-உத்திரவு மெய்தானோ?
நம்பினேன் கண்மணியே! நாடினேன் பொற்பாதம்.

என்று பாடிக்கொண்டிருப்பார்கள். பூமலர்ந்து பழம் விழுந்தால் பூசாரிகள் அம்மன் பழம் கொடுத்துவிட்டாள் என்றும் பழம் விழாமலிருந்தால், "நாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டோம். என்ன செய்கிறது? இன்னொரு வெள்ளிக்கிழமை அம்மனுக்குக் குளிர அபிஷேகம் செய்து பார்க்கலாம்" என்றும் சொல்லுவார்கள். அல்லது "இன்று நடத்தியதில் ஏதோ தீட்டுப்பட்டது போலிருக்கிறது; எங்கள் கஷ்டத்திற்குத் தக்க கூலி இது?" என்று கொஞ்சம் ரொக்கமும் படையலில் பாதியும் பெற்றுக்கொண்டு சலிப்போடு போவார்கள்.

---

## 102. புஷ்பம் வைத்துக் கேட்டல்.

எந்த விதக் காரியத்திற்கும், அம்மன் உத்தரவு கொடுத்தாலொழியச் செய்யப்படாதென்று முப்பது வயதுள்ள கைம்பெண்கள் கண்டிப்பாய் உத்தரவு செய்வார்கள். வீட்டிலுள்ள முழுதும் கெட்ட ஆண்பிள்ளைகள் இவர்கள் வேண்டுகோளுக் கிசைந்து தலையை ஆட்டி, எச்சற்பீடிக்கு ஏக்கம்கொண்டிருக்கும் சில குட்டிப் பூசாரிகளுக்குச் சொல்லி விடுவார்கள். உடனே நாலைந்து பூசாரிகள் உடுக்கைச் சிலம்புடன் வந்துவிடுவார்கள். பின்பு அவர்கள் நடு வீட்டிலாவது கோவில்களிலாவது பதி சிங்காரித்து அலரிப் பூக்களையாவது மல்லிகை மொக்குகளையாவது கொஞ்சமாய் அழுத்திச் சுற்றி வைத்துவிட்டு, ஒரு விருத்தம் பாடிக்கொண்டே அடிக்கடி சிலம்பை யசைத்துக் கடைசியாக,

அண்டப்பு வனமெல்லாம் ஆளுதம்மா உன்பெருமை
உன்மேடை மண்டபத்தில் மலர்வைத்துக் கேட்கலுற்றார்
உன்-பொன்னடியில் வைத்தமலர் பிள்ளைநான் கேட்கவந்தேன்
இடதுபக் கம்மலரை எடுத்துதறிப் போடுமம்மா
நீ-வாரி உதிருமம்மா! நின்-மணிமேடை மண்டபத்தில்
ஏளிதங்கள் நேராமல் எடுத்துதறிப் போடுமம்மா

---


பிச்சம் பிடிக்க வகையறியாதவன் கடன் வாங்க அஞ்சமாட்டான்.

பழிவந்து சேராமல் பறக்கவிடு பூமுடியை
நம்பினேன் என்கண்ணே நாடினேன் பொற்பாதம்.

என்று பாடுவார்கள். வேறு சில பூசாரிகள் பதி சிங்காரித்து நடுவில் விளக்கை வைத்துவிட்டு இரண்டு பக்கங்களிலுமிருக்கிற பூக்களில் ஒன்றை நினைத்துக் கொள்ளச்சொல்லி,

அம்மாடி-இடதுபக் கம்மலரா? எடுத்துரைக்க வேணுமம்மா
வலதுபக் கம்மலரோ? வடிவழகி நீ உரைக்க
இரண்டொரு மலர்தனிலே நீஎடுத்துரைக்க வேணுமிது
வலதுபுறம் மலர்தான் நீவடிவழகி சொன்னேனென்றால்
அடியை நிறுத்தியல்லோ முனையை உதறிவிடு.

என்று பாடிக்கொண்டே தீபச்சுடர் எந்தப்பக்கம் சாய்ந்தாலும், அச்சமயம் ஆ! ஹா! ஆ! ஹா!! என்று அதட்டி ஓசையிட்டு அம்மாள் குறித்த மலரைக் காட்டிவிட்டதாக மெய்ப்பிப்பார்கள். பூசாரிகள் வாக்கேதெய்வவாக்காக நம்பிமூடப்பெண்கள் போசம்போவார்கள்.



103. பேயோட்டல்

**யௌ**வனப் பெண்கள் பரிபக்குவமாகும் தருணத்திலும் அதற்குப் பிந்தியும் பித்தவாயுவு சம்பந்தத்தினாலும் சூதகவாயுவு சம்பந்தத்தினாலும்,மயக்கம், சோம்பல் அடிக்கடி கொட்டாவி விடுதல், நித்திரையில் அலறி எழுதல், வாய்பிதற்றல் முதலிய குறிகள் காணப்படும். அவைகளைப் பேய்களின் சேஷ்டைகைள் என்று பேதைப் பெண்கள் கதை கட்டிவிடுவார்கள். இதே சீவனமாய்ச் சுற்றித்திரிகிற சில கேப்மாரிப்பெண்கள் இதைக் கேள்வியுற்றதும் தங்கள்மேல் ஆகாசக் கன்னிகள் ஆவேசம் வந்துவிட்டதாய் ஆங்காரமாய்க் கூச்சலிட்டு மயக்கமாய் அல்லது பயந்து போயிருக்கும் பெண்களின் தலைமயிரைப் பிடித்துக்கொண்டு ஆட்டாததெல்லாம் ஆட்டிக் கைகொண்ட மட்டும் அவர்களை ஜாடுவார்கள். வீட்டிலுள்ள மூடப்பெண்கள் ஆவேசக்காரியின் காலைப்பிடித்துக் கொள்ளாத குறையாய்,"அம்மா! ஆகாயக்கன்னி! இதற்கு எப்படி? என்ன செய்யலாம்?" என்று யோசனை கேட்பார்கள்.

---

ரவிக்கை நீண்டு மணிக்கட்டையை மறைக்கும்போது நாட்டுப்புடவைக்கு வேலை என்ன?

ஆவேசக்காரி, "இதைச் சடாமுனி பிடித்திருக்கிறது; அவனை இவனைக்கொண்டு பார்த்தால் முடியாது; கோடம்பாக்கத்தில் ஒருவன் இருக்கிறான்; அவன் கைதேர்ந்த பூசாலி; அவனால் தான் முடியும்" என்று நல்ல முடிபோட்டு விடுவாள். இனி வீட்டு ஆண்பிள்ளையின் சம்மதி பெறுவதற்கு நாலைந்து பெண்கள் கூடிக்கொண்டு "என்ன அப்பா! அந்தபெண்ணைக் கவனியாமலிருந்தால் எப்படி? குழந்தை வரவர உருக் குலைந்து போகிறது. அது அறியாத பெண்ணாயிருக்கிறதா? முகத்தில் களையே கிடையாது. சோறில்லையா? தண்ணீரில்லையா? தின்ற சோத்தை அந்தப்பேய்க் கழுதுவிட்டு எலும்பெலும்பா யிருக்கிறது. பேய் பிடித்திருக்கிறதால் அந்தப் பாழும் வயற்றில் கருவைக்கூடத் தங்கவிடுமா? ஏன்னவோ போயும் வந்தும் உனக்கு ஒரேபெண். அதன் வயித்தில் காலங்காத்தாலே ஒருகாய் காய்க்க வேண்டாமா? சும்மாயிருந்தால் முடியாது. தக்க பூசாலிகளைக்கொண்டு பார்க்கிற வேலையைப்பார்." என்று சொல்வார்கள். அவன் கொஞ்சம் கெட்டிக்காரனாயிருந்து "சீ கழுதைகள்! உங்களுக்கு வேலையில்லையா? வீண் பயித்தியம்" என்று சொல்லி ஜாடையா யிருந்தால், அவன் வீட்டுப் பெண்பிள்ளை எடுப்பாள் பாரதம் அவள் "அவங்க அக்கா பெத்தது தங்கை பெத்தது ஆனால் அக்கரை யிருக்கும். இது வெட்டிக்குப் பெத்து வேலிக்குப் போட்டது தானே; இவருக்கு இதைப்பத்தி யாகவேண்டியதென்ன; இதைப்போலொத்த பெண்களெல்லாம் நாலுகுழந்தையும் குட்டியுமாயிருக்குது; இந்தப்பெண் என்ன கெதிக்கு வந்தாளோ? இந்தப் பாவி வயித்தில் பிறந்து மகள் ஆடல்பட தெய்வம் வச்சுது இப்போ எல்லாருக்கும் சந்தோஷமாயிருக்காதா? யார் யார் என் ஆம்பிடையானுக்குக் கற்றுக்கொடுத்து என்னையும் என் பெண்ணையும் வயிறெரியப் பண்ணுகிறார்களோ அவர்களெல்லாம் குட்டிச்சுவரும் கொல்லை வெளியுமாய்த்தான் போவார்கள்" என்று பல்லவி பாடத் தொடங்குவாள். புருஷன் தன்னிஷ்டம்போல் திரும்புகிற வரையில் வேளை வேளைக்கு ஒவ்வொரு கண்ணி பாடிவருவாள். அன்று முதல் மக்களுக்கு முன்னே இவளுக்கு மூடப்பேய் பிடித்துக்கொள்ளும். அதனால் அவள் தலைவிரி கோலமாய் எந்நேரமும் புருஷனைச் சண்டைக்கிழுத்த வண்ணமாயிருப்பாள்,

இதே கதையாகப் பெண்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருக்கிற சில பெண்கள் "பூசாரிகள் தங்களை இப்படி

ஆட்டுவார்கள், அப்படிச் செய்வார்கள்" என்ற பூரிப்பால் வேணு மென்றேபல்லைக் கடிக்கிறதும் மருள மருளப்பார்க்கிறதும் சிலவேளை களில் தலைசுற்றி ஆடுகிறதுமா யிருப்பார்கள். சிலபெண்கள் மாமி நாத்திகளின் கொடுமைகளுக்குப் பயந்து இப்படியாகவாவது இரண் டொரு மாதம் கழிக்கலாமென்று பேய்வேஷம் போட்டுக்கொள்வார் கள். சில பெண்கள் வேலைக்குப் பயந்து மயக்கமும் சோம்பலுமாய்ச் சலிக்கத் தூங்கிக்கொண்டு தம்மைப் பேய் பிடித்திருப்பதாகக் கதை கட்டிவிடுவார்கள். இந்த வேஷப்பேய்களை ஓட்டுவதற்குப் பூசாரி களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக விருந்தாலும் பேய்க்குண்டான லட் சணங்களை இப்பெண்களே நடித்துக் காட்டுவார்கள். 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பதுபோல மயக்கம், சோம்பல் கொட்டாவி விடுதல், பல்லைக்கடித்தல், நித்திரையில் அழுதல், அலறியெழுதல் முதலிய செய்கைகளைப் பேயின் சேஷ்டைக ளென்று மூடப்பெண்கள் ஏதுமறியாச் சிறுமிகள்மேல் கதை கட்டி விட்டுத் தமது புருஷர்களுடைய வருவாயைக் கவனியாமலே பேய்ப் பதி, தெய்வபதி, பூசாரிக்கட்டணம் முதலியவைகளைத் திட்டம் போட்டுக்கொண்டு பேயோட்ட ஆரம்பிப்பார்கள். சில பூசாரிகள் தாங்கள் பேயோட்டுவதில் மகா நிபுணரென்று தெரியும்படி புஜத்தில் இரண்டொரு செப்பு வளையங்களை மாட்டிக்கொண்டு நெற்றியில் முற அகலம் ஒரு குங்குமப் பொட்டும் அதன் நடுவில் ஒரு சிறு மைப் பொட்டு மிட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்கள் உடுக்கை சிலம்பு களுடன் இரண்டொரு குட்டிப் பூசாரிகளையும் அழைத்து வந்து ஒரு தனித்த அறையில் பேய்ப்பதி சிங்காரித்து, அதன் எதிரில் பேய்ப்பிடித்த பெண்ணை உட்காருவித்து முதலில் குட்டிப்பூசாரிகள் வகைவகையாய்ப் பாடுவார்கள். அவர்கள் அடிக்கடி, 'ஏய் ஏய்' என்று அதட்டுவது அச்சமயம் வெகு ரசமான பாகமாயிருக்கும். பெரிய பூசாரி முறத்தில் விபூதி போட்டுக்கொண்டு ஜெபித்தவண்ண மாயிருப்பான். பேயாடுபவள் கொர்வப் பிடித்தவளாயிருந்தால் அவள் தன்னெதிரிலிருக்கும் பேய்ப்பதியின் தீபத்தைப் பார்த்துக்கொண் டே தலை சுழற்றுவாள் அவள் எப்போது தலை சுயற்றுவாளோ என்று காத்துக்கொண்டிருக்கும் தடிப்பெண்கள் உடனே அவள் தலைமயிரை அவிழ்த்து விட்டுவிடுவார்கள். தலை சுற்றியாடும் பெண்

விசேஷ நாளில் பத்துவகைப் பலகார பட்சணங்கள் வேண்டுமென் கிறான் வெற்றுநாளில் பருப்புத்துவையல் போதாதா என்கிறான். ஒன்று அவ னாவது நாமாவது முட்டாளா யிருக்கவேண்டும்.

விசையாய் ஆடமுடியாத காரணத்தினால் வெகு பக்குவமாய்த் தன் இரண்டு கைகளையும் பூமியிலூன்றிக்கொண்டு தலையை வெகு விசையாகச் சுழற்றுவாள். சில பெண்கள் பெரிய பூசாரிகள்போல் விபூதி பிடிக்கிறதும், சக்கரம் போடுகிறதும், முறைக்கிறதும், பூசாரியைப் பிரம்பு கொண்டடிக்கிறதும் வெகு முக்கியமான காட்சியாகையால், வேளை வேளைக்கு ஊர் ஜனங்கள் திரண்டுருண்டு வந்து வேடிக்கை பார்ப்பார்கள்,

பேய்க் கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்த பெண்களில் சிலர் தங்கள்மேல் ஏழு எட்டுப் பேய்களிருப்பதாகச் சொல்வார்கள். பின்பு பூசாரிகள் எடுத்துக்கொள்ளும் கஷ்டத்திற்கேற்றபடி ஒவ்வொருநாளைக்கு ஒவ்வொருபேயாக முடியெடுத்துக்கொடுக்கும். ஒவ்வொரு பேயும் தன்னுடைய ஊர், ஜாதி, பேர், தொழில் இவைகளையும் தான் பிடித்த இடத்தையும் சொல்லும்போது வெகு வேடிக்கையாகவும் விநோதமாகவுமிருக்கும், துலுக்கப்பேயானால் துலுக்குப் பேசும்படி பெரிய பூசாரி உத்தரவு செய்வான். உடனே பேய்பிடித்த பெண் 'கியாரே மாரே' என்று உளறுவாள். இதை ஜனங்களும் பூசாரிகளும் பேய் துலுக்கச்சி பட்டமாய்ப் பேசுகிறதாகச் சொல்வார்கள். யார்ப் பாரப் பேய், பறைப்பேய், துலுக்கப்பேய் முதலிய பேய்கள் தமது குணங்களையும் குறிகளையும் நாலைந்து நாள் வேடிக்கை காட்டும். கடைசியில் ஒவ்வொரு பேயும் தனக்கு, இன்னது செய்தால் அந்தப் பெண்ணை விட்டு விலகுவதாய்ச் சொல்லும். அவை போகும்போது அம்மிக்கல்லை யெடுத்தல், நெருப்பைத் தாண்டுதல், மாக்கிளையை முறித்தல் முதலியவைகளில் ஏதாவதொன்றைச் செய்து அத்தாட்சி காட்ட வேண்டுமெனப் பூசாரி பேய் போகும்நாள் என்று ஒருநாளைக் குறிப்பிட்டு அன்றைக்கு விசேஷ செலவுகள் வைப்பான். அன்றிரவு சுமார் பத்துப் பன்னிரண்டு மணிக்குமேல் பூசாரிகள் பேய்பிடித்த பெண்ணை ஒரு கல்லை யெடுக்கச்சொல்லி முன்னமே ஒடித்துத் தயார் செய்திருக்கிற மாத்தண்டை அவர்கள் போவதற்குள் அம்மாக்கிளையைத் தள்ளுவித்து அங்குள்ளாருக்குக் காண்பித்து விடுவார்கள். பேய் என்ற சங்கதியே தெரியாத அறியாச் சிறுமிகள் கையைப் போட்டுக் கொடுக்கவும் தலையைச் சுற்றியாடவும் பூசாரிகளாவது

வண்ணான் உடுப்புக்காரி அண்டைவீடு போக வண்டி தேடுகிறாள்; தண்டசோற்று ராமன் கைமூட்டையை எடுக்கக் கூலி தேடுகிறான். அந்தஸ்துக்கு வா ஆசைப்பட்டால் அதிர்ஷ்டம் வேண்டாமா?

பெண்களாவது கற்பனை செய்வார்கள். அதிலுமினங்காத பெண்களைப் பூசாரிகள் பிரம்பு கொண்டு அடித்தாவது பூனைக்காஞ்சி இலையை இடித்துத் தூள் செய்து விபூதியுடன் கலந்து நல்ல உச்சி வேளையில் விபூதி மந்திரித்து தூவுவது போல் அவர்கள் மேலே ஊதிவிட்டு "எரியுதெரியுதென்று எரிதணலை மூட்டாயா?" என்று பாடுவார்கள். உடனே அந்தச் சிறு பெண்கள் ஐயோ! ஐயோ!! உடம்பு எரிகிறதே! எரிகிறதே!! என்று கூச்சலிடுவார்கள். இதைக் கண்டு அங்குள்ள மூட ஜனங்கள் பூசாரி பாடின உடனே அவர்களுக்கு எரிச்சல் உண்டாய்விட்டதே என்று பிரமித்துப் போவார்கள். சிலபூசாரிகள் கெஞ்சாயிலையை அறைத்துத் தண்ணீரில் கலந்து கொடுப்பார்கள். சிலர் சாம்பிராணிப் புகையில் பேய்மிரட்டி வேரைக் கலந்து புகை காட்டுவார்கள். இந்த விதமாய் அவர்கள் பெண்களுக்கு மயக்கத்தை யுண்டுபண்ணி நாளடைவில் அவர்கள் தலைவிரித்தாடும்படி செய்வார்கள். பூசாரிகள் கொடுக்கும் பிரம்படிக்குப் பயந்து நமது பெண்கள் அவர்கள் சொல்கிறபடி செய்யவும் சொல்லவும் கடமைப்படுவார்கள். ஐயோ! இதுவென்ன மதியீனம்! நாம் நமது பணத்தைச் செலவழிப்பது நமது பெண்கள் பிறரிடம் பிரம்படி படுவதற்கா?

கொஞ்சம் நாகரீகமும் செல்வமுமுள்ள வீடுகளில் இப்பேய்களின் சேஷ்டைகளைக் காணோம். கொஞ்சம் வாயையும் வயிற்றையும் கட்டிப் பத்துப் பணத்துநகையும் அரைக்காணி நிலமும் ஒருவன் வைத்திருந்தால் அந்த அரைக்காணி நிலத்தையும் பத்துப்பணத்து நகையையும் வாயிற்போட்டுக்கொள்ள இந்தப்பாழும் பேய்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. கல்வி வாசனையில்லாத நமது நாட்டு மூடப்பெண்கள் துர்மரணமாகும் ஆண்மக்கள் பேயாய் அலைவார்கள் என்னும் குருட்டு நம்பிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள், 'பொக்கை வாயனுக்கு பொரிமாவு கிடைத்தாற் போல்' இரவும் பகலும் பேயென்றும் பிசாசு என்றும் பேசிக்கொண்டிருப்பார்கள். அதைக் கேட்டுக்கொண்டிருக்கும் சிறுமிகளுக்குப் பெரும் பிரமை உண்டாகி விடுகின்றது. 'நாளேரச் சீழ் ஏறும்' என்ற பழமொழியைப்போல் இச்சிறுமிகளுக்கு இப்பேய் நினைவே நித்திரை

பாக்குச்சீட்டும் மிளகாய்ச்சீட்டும் பட்டணத்துப் பெண்கள் போடுவதெல்லாம் தட்டான் பிழைக்க; நல்லபொன்னை வெள்ளைப் பொன்னுக்குத் தானே.

யிலும் மற்ற வேளைகளிலும் வருவதால் அவர்களுக்குப் பயமதிகரித்துப் *பேயின் ரூபம் அல்லது விகாரங்கள் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட சில பெண்கள் இரவில் தனித்திருக்கவும் படுக்கவும் வெகு வாய்ப் பயந்த வண்ணமாகவிருப்பார்கள். சில பெண்கள் தங்கள் கண்ணுக்குக் காணப்படும் தூண், மரம் முதலியவைகளைப் பேய்களெனத் தீர்மானஞ் செய்து விடுவார்கள். எவ்வளவு சொல்லியும் என்ன? நம் நாட்டுப் பேய்களைத் தொலைப்பதற்குத் தக்க மந்திரமானது நமது பெண்களுக்குப் போதுமான கல்வி கற்பிப்பதேயாம். ஸ்திரீகள் மிகவும் சாந்தமும் மன இரக்கமுமுள்ளவர்களாகையால் அவர்களுக்கு நேரிடும் சங்கடங்களினால் அவர்கள் மனக்குழப்பமடைந்து தவிக்கிறார்கள். வேறே பேயிருந்து அவர்களைப் பிடித்தாட்டுவதில்லை. ஆனால், சில சோம்பேறிப் பூசாரிகள் சொல்வதை நம்பி எவ்வளவோ பேர்கள் மோசம் போகின்றார்கள்.

நமது கிருபையுள்ள பூசாரிகள் மனம் வைத்து இந்தப்பேய்களை அடக்கித் தம்மிடம் வேலைக்கு வைத்துக்கொண்டால் இப்போதுஇஞ்சின்களால் செய்யக்கூடிய அரிய பெரிய வேலைகளையெல்லாம் சுலபமாய் நடத்திக் கொள்ளலாமே! நம் நாட்டில் மந்திரங்களென்ன, பேய்களென்ன, பிசாசுகளென்ன, முனிகளென்ன, இன்னஞ் சில்லறைத் தெய்வங்களென்ன, எல்லாம் தான் இருக்கின்றன. ஆனால், 'எல்லாமிருக்கிறது பெட்டியிலே, இலைக்கறி கடையச் சட்டியில்லை' என்றபடி, நம் நாட்டார் பிழைக்க வழிதானில்லை. பிழைக்க வேறு வழி இருந்தால், வீகத்தில் பூசாரிகள் பெண்களை யாட்டும் இழி தொழிலில் பிரவேசியார்கள். பூர்வம் கைத்தொழில்களில் பேர் பெற்ற இந்தியாவில் இப்போது அவ்வகைத் தொழில்களை யெல்லாம் அன்னிய அரசாங்கத்தார் கைக்கொள்ளவே இந்துக்கள் அவர்களின் கீழ் கூலித் தொழில் செய்து ஜீவிக்கலானார்கள். அன்னிய நாட்டுப் பண்டங்களை வாங்காமல்! அப்பண்டங்களை யந்திரத்தால் நாமே செய்வோமானால், இக்குருட்டாட்டங்கள் ஒழிந்து சுகப்பட்டு வாழ இடமுண்டாகும்.

---

## 104. அசுபகாலத் திருடு

யாராவது ஒருவர் வீட்டில் ஒரு மரணம் நேர்ந்தால் இறந்த அன்றைக்காவது, (பால்தெளித்தல்) சஞ்சயனம் நடக்கும் அன்றைக்காவது துக்கத்திற்குச் சொந்தக்காரர்களும், அவர்களுடைய பந்

துக்களும், இஷ்டர்களும், வீட்டைவிட்டுச் சுடுகாட்டிற்குப்போவார்கள். உடனே ஒப்பாரிப் பாட்டுக் கற்றுக் கொண்டிருக்கிற சீமாட்டிகள் செட்டுசெட்டாய்க் கட்டிக்கொண்டழுது கொண்டிருப்பார்கள். அச்சமயம் சில கேப்மாரிகள் வந்து, "அம்மா சுடலையிலிருப்பவர்கள் தவலை வாங்கிவரச்சொன்னார்கள். சீக்கிரம் கொடுங்கள்" என்று வெகு அவசரமாய் கேட்பார்கள். அழுகிற பாட்டைக் கற்றுக்கொள்ளும் பொருட்டுப் பல பெண்கள் அண்டையிலிருந்து அங்கு வந்திருப்பார்கள். அவர்கள் தங்களுக்கென்னவென்று இராமல் இதனாலேயே காரியம் கெட்டுப்போகிறதாக நினைத்துக்கொண்டு அங்கிருக்கும் தவலையை ஓடி யெடுத்துக் கொடுத்தனுப்புவார்கள். அவர்களில் யாராவது கொஞ்சம் கெட்டிக்காரியாயிருந்து "ஒரு தவலை கொண்டு போனார்களே?" என்று "கேட்டால், சீக்கிரம் அவிக்க வேண்டுமாம்; ஒரு தவலை போதாதாம்; பெரிய தவலையாக வாங்கிவரச் சொன்னார்கள்" என்று அதை அவர்கள் வாங்கிப் போவார்கள். சில சமயங்களில் துக்கக்காரியே கொஞ்சமாவது நிதானிக்காமல் தவலையை எடுத்துக் கொடுப்பதுமுண்டு. பாவம்! என்ன செய்வாள்! நடக்க வேண்டிய சடங்குகளெல்லாம் துக்கத்தை ஒதுக்கி வைத்துவிட்டு வெகு கவனமாயிருப்பவள் தவலை கேட்கும்போது மாத்திரம் துக்கத்தில் மெய்மறந்து போய்விடுவாள் போலும்!

---

## 105. சுபகாலத் திருடு

கலியாணம் முதலிய சுபகாரியங்கள் நடக்குங்காலங்களில், சில கேப்மாரிகள் ஜம்பமாய் உடுத்திக்கொண்டு வந்து, தாமும் அந்த அலுவல்களுக்கு முக்கியஸ்தர்களைப்போல் "அதையெடு; இதைக் கொண்டுவா; தாயாரை வரச்சொல்" என்று கூட இருந்து அதிகாரஞ் செய்வார்கள். அதைப் பார்த்து பெண்வீட்டுக்காரர்கள் இவர் பிள்ளை வீட்டு மனுஷரென்றும் பிள்ளை வீட்டுக்காரர்கள் இவர் பெண்வீட்டு மனுஷரென்றும் எண்ணிக்கொண்டிருப்பார்கள். வாய்தவறி "இவர் யார்?" என்று கேட்டு விட்டால் அது என்னவாய் முடியுமோ வென்றும் அவர்கள் கோபத்திற்குப் பாத்தியஸ்தராக வேண்டுமே என்றும் அவர்களை நீர் யார் என்று கேட்பது சாமானியர்களில் வழக்கமே கிடையாது. ஆகையால், இந்த கேப்மாரிகள் நாலுபேரைப்போல்

---

வெள்ளை மல்லும் சரிகை துப்பட்டாவும் வண்ணானுக்கில்லாத சொந்தம் வாங்கினவனுக்கு உண்டா?

நடுப் பந்தியில் உட்கார்ந்து அதிகாரத்தோடு சம்பிரமாய்ச் சாப்பிட்டு விட்டு அங்குள்ளவர்கள் ஏமாறும் சமயத்தை எதிர் நோக்கியிருப் பார்கள். தக்க சமயம் கிடைத்தபோது தவலை, செம்பு, நகைகள், துணிமணிகள் முதலியவைகளில் தமக்கு கிடைத்தவற்றை எடுத்துக் கொண்டு போவார்கள் 'ஏரி எடுத்துக்கொண்ட ஆறும் மாதம் கரை போடுவது' போல அந்த வீட்டுக்காரர்கள் வெகுநாள் கழிந்தபின், சாமான்களை தேடுவார்கள். 'ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவி லாண்டி' என்பது போல அந்த வீட்டு எஜமானி தனக்கு ஆகாத ஓரகத்தி, நாத்தி முதலியவர்களின் மேல் பழிபோட்டுத் திருட்டுப் பட்டம் கட்டிவிட்டு எந்நேரமும் சண்டைக்கு வழிதேடிக் கொள்வாள்.

---

## 106. அரிசித் திருடு

நாலைந்து பெண்பிள்ளைகள் ஆளுக்கொரு கூடையை எடுத்துக் கொண்டு அரிசி கடைகளுக்குபோய், ஒவ்வொரு அரிசிக்கடையிலும் அரிசியை அள்ளி அள்ளி மாதிரி பார்ப்பார்கள். பின்பு அவர்களில் ஒருத்தி "இந்த அரிசி கொய்யல், இது வெறும் நொய், இது மெத்த ஈரம்" என்று ஒவ்வொன்றுக்கும் நோணுவட்டஞ் சொல்லிக் கடைசி யில் "இந்த அரிசியில் இரண்டு ரூபாய் போடு" என்று வாங்குவாள். இன்னொருத்தி "இது வேண்டாம்? அந்த மணக்கத்தை அரிசி ஒரு ரூபாய்க்கு போடு" என்பாள். மற்றொருத்தி "இது சோறு காணாது; இரண்டுரூபாய்க்கு வாடச்சம்பா போடு"என்பாள்.நாலாவது பெண் "சிறுமணி அரிசி போடு" என்பாள். இப்படியே ஒவ்வொருத்தியும் அரிசியைப் போட்டுக் கொள்வதும் மறுபடியும் அதற்குத் தோஷம் சொல்லிக் கொட்டிவிடுவதுமா யிருப்பார்கள்.

கடைசியில் அரிசிக்கடைக்காரன் சலித்துப்போய்க் கோபித்துக் கொண்டு கொஞ்சம் வாயைத் திறந்தால் அவர்களில் ஒருத்தி அவன் பேசுவதில் குற்றங்கண்டு அவனைச் சண்டைக்கு வலிப்பாள். அச் சமயத்தில் ஒருத்தி அரிசியைக் கொட்டிவிட்டவளைப்போல் நடித்து வெகு சலிப்பாய் "அதற்குத்தானே இந்தக்கடைக்கு நான் வருகிற தில்லை" என்று சொல்லிக்கொண்டே மிகவும் கடுப்பாய் நடந்து விடு வாள். மற்றவர்கள் "இதோ நானும் கொட்டிவிட்டேன்; நானும்

---

மூக்குக் கண்ணாடி பெருப்பதேன்? முகட்டுப்பூச்சி நிலையாயிருப்பதேன்? மண்ணெண்ணெய் விளக்கு வழக்கத்தில் வந்த வம்பு.

கொட்டி விட்டேன்'' என்று கூடையைத் தூக்கிக் கொட்டி விட்டுப் போய் விடுவார்கள். சிலசமயம் ஐந்துபேர் ஆறு கூடைகள் கொண்டு போய் "எனக்கு இரண்டு ரூபா; எனக்கு ஒன்றரை ரூபா'' என்று அரிசி போட்டுக் கொண்டு மிச்சம் இருக்கிற கூடையிலும் அரிசி வாங்கி அதைச் சந்தடியில் வேறே ஆளிடம் அனுப்பிவிடுவார்கள். கடைசியில் எல்லாருமே அரிசியைக் கொட்டிவிட்டு ஆளுக்கொரு கூடை வீதம் வெறுங்கூடைகளை எடுத்துக்கொண்டு போவார்கள். இப்படி மோசஞ்செய்த அரிசியைக் கொண்டுபோய் அவர்கள் பங்கிட்டுக் கொள்வார்கள்.

---

## 117. புடவைத் திருடு

நாலைந்து பெண்பிள்ளைகள் ஆளுக்கொரு கூடையை எடுத்துக் கொண்டு ஜவுளிக்கடைகளுக்குப்போய் நல்ல சேலையாய் எடு என்பார்கள். ஜவுளிக்கடைக்காரர்கள் மலைந்துபோய்த் தம்மிடமிருக்கிற சேலைகளையும் அண்டை அயல் கடைகளிலுள்ள சேலைகளையும் வாங்கி அவர்கள் பிரமித்துப் போகும்படி சேலைமேல் சேலைகள் போட்டுக் காண்பிப்பார்கள். திருடிகளை ஏமாற்ற கடைக்காரன் நினைப்பான். ஆனால் இந்தக் கேப்மாரிப்பெண்கள் "இது அகலக் கட்டை; இது சலித்து நல்லாயில்லை; இது நான் கட்டி யிருக்கிறேன்; இது வேண்டாம்; இது வலவல என்றிருக்கிறது'' என்று சொல்வார்கள். பின்பு ஒவ்வொருத்தியும் எடுக்கிறதும் பார்க்கிறதும் வேண்டாமென்று கொடுக்கிறதும் ஒருத்திகையிலிருப்பதை மற்றொருத்தி வாங்கிப்பார்ப்பதும் வெடுக்கென்று பிடுங்கிக் கடைக்காரனிடம் கொடுத்து விடுவதுமாயிருந்து சமயம் கண்டு அவர்களில் ஒருத்தி கீழே இருக்கிற தன் கூடையில் ஒரு புடவையை வைத்து விடுவாள். கடைக்காரனுக்குச் சலிப்புவந்து "நீங்கள் வாங்காமற்போனால் போகுது'' என்று அவன் சொல்லும் வரைக்கும் அவர்கள் காத்திருப்பார்கள். அவன் கடுப்பாய்ச் சொல்லும்போது சேலையைக் கூடையில் வைத்திருக்கிறவள் வெகு கோபமாய் "இந்த அய்யன் இன்னடி? இப்படி கோபித்துக் கொள்ளுகிறான்'' என்று சடுக்கெனத் தன் கூடையை எடுத்துக் கொண்டு நடப்பாள். மற்றவர்களில் ஒருத்தி சண்டை செய்வதும் ஒருத்தி அவளுக்குச் சமாதானம் சொல்வதுமாய் இருந்து கடைசி

மூன்று கேஸ்களில் கோர்ட்டுபடி ஏறுவாயானால் கோர்ட்டு வியவகாரத்தில் வாத்தியாராயிருப்பாய்.

யில் அவர்கள் எல்லோரும் தமக்குச் சேலையே பிடிக்கவில்லை என்று போய்விடுவார்கள். இவர்கள் கடைகள் தோறும் நாலுமாசத்திற் கோர்தடவை வந்து இப்படியே திருடுவார்கள். நாகரீகம்பெற்ற நாடுகளில் பெண்கள் பார்லிமெண்டு ஸ்தானத்திற்கு அபேக்ஷகாராய் முன் வந்து நிற்க நம் நாட்டுப் பெண்கள் திருட்டுக்கு நவமணிகளாய் இருப்பது நம் நாடு செய்த பாக்கியமே!

## 108. ரெயில்வே டிக்கட் மோசம்

ரெயில்வே ஸ்டேஷன்களில் சில அயோக்கியப் பயல்கள் பிரயாணிகளைப்போல் சுற்றிக்கொண்டிருப்பார்கள். டிக்கட் கொடுக்குஞ் சமயங்களில் தாங்களும் டிக்கட் வாங்குகிறவர்களைப் போல் கையில் சில்லரை வைத்துக்கொண் டிருப்பார்கள். ஜனநெருக்கத்தில் போக முடியாமலிருப்பவர்களும், ஆண் உதவியில்லாத பெண்களும் நாட்டுப்புறத்தார்களும் ஏமாந்து, அவர்களும் தங்களைப்போன்ற பிரயாணிகளென்று மதித்துத் தங்களுக்கும் டிக்கட் வாங்கி வரும்படி அவர்களிடம் பணத்தைக் கொடுப்பார்கள். அவர்கள் மதிராஸ் ரெயில்வே யானால் பெங்களூருக்குப் போகவேண்டியவர்களுக்குப் பெரம்பூர் டிக்கட்டும், தென்னிந்தியா ரெயில்வேயானால் தஞ்சாவூர் போகவேண்டியவர்களுக்குக் கோடம்பாக்கம் டிக்கட்டும் வாங்கிக் கொடுத்துவிட்டு வெகு சீக்கிரமாய் யாரையோ தேடுகிறவர்களைப் போல் மறைந்துவிடுவார்கள். இந்தப் புண்ணியவான்களாயினும் இவ்வளவு உதவி செய்துவருகிறார்கள். சிலர் போனவழி திரும்பவே மாட்டார்கள். பகல் வேஷத்தைக் கண்டு ஏமாந்துவிடாதபடி ஜாக்கிரதையாய் இருப்பது நலம்.

## 109. ரெயில்வே திருடு.

குஜராத்திப்பேட்டை, சௌகார்பேட்டை முதலிய இடங்களில் பொன், வெள்ளி, சவரன், வாங்கும் வெளியூர் ஆசாமிகளைச் சில சோம்பேறிப் பயல்கள் கண்கூடாய்க் கவனித்துக்கொண்டிருப்பார்

---

வைத்தியனிடத்தும் வக்கீலிடத்தும் உள்ளதை ஒளித்துப்பேசாதே.

பணக்காரர் வீட்டுப்பெண்களுக்கு கிராக்கி, நடுத்தரமானவர்கள்வீட்டுப் பெண்ணுக்குத் திண்டாட்டம்--பணக்காரர் கொள்ளப்போகிறதுமில்லை. ஏழைகளுக்குக் கொடுக்கப்போகிறது மில்லை. ஏழைகள் வீட்டுப்பெண்கள் சவதம்.

கள். அவர்கள் அந்த வியாபாரிகளின் மூட்டைகளைப் போலவும் பைகளைப் போலவும் தயார்செய்து கொண்டு அந்த வர்த்தகர்களுடன் ரெயிலில் பிரயாணஞ் செய்வார்கள். சமயம் கிடைத்த போது அவர்கள் தமது மூட்டைகளை மாற்றிவிடுவார்கள். அல்லது அந்த வர்த்தகர்கள் நித்திரையிலிருக்கும் போது அவர்கள் மூட்டைகளை இவர்கள் எடுத்துக்கொண்டு சமீபமான ஸ்டேஷன்களில் இறங்கிவிடுவார்கள். இப்படிப்பட்ட மோசங்களினால் நம் நாட்டுப் பணம் நம் நாட்டிலிருந்தாலும் அரியபெரிய காரியங்களைச் சாதிக்கக் கூடிய பெருந்தொகை நிமிஷ நேரத்தில் அழிந்து விடுகிறதினால் அன்னியநாட்டாரைப் போன்று அரியபெரிய காரியங்களைச் சாதிக்க நாம் அசக்தர்களா யிருக்கிறோம்.

## 110. கோழித் திருடு

கோழியைத் திருடுவதற்கென்றே இரண்டு குறவர்கள் ஒன்று சேர்ந்து வருவார்கள். அவர்களில் ஒருவன் ஆட்களைப் பார்த்து சைகை செய்துகொண் டிருப்பான். மற்றொருவன் ஈரப் புழுங்கல் அரிசியை மடியில் கட்டிக்கொண்டு பெரிய துப்பட்டியால் தன்னைப் போர்த்துக்கொள்வான். அவன் கோழிகள் மேயுமிடத்தில் குந்திக் கொண்டு இருமிக்கொண்டிருக்கும் பாவனையாய்த் தன்னிடமிருக்கிற ஈர அரிசியை ஒவ்வொரு அரிசி வீதம் விழும்படி சிறிது தூரத்தில் மேய்ந்து கொண்டிருக்கிற கோழிகளுக்கு எதிரில் போடுவான். கோழிகள் அரிசியைப் பொறுக்கிக்கொண்டே குறவனைச் சமீபிக்கும். உடனே அவன் ஒரு கோழியின்மேல் ஈரத்துணியைப் போட்டாவது, இரண்டு விரல்களால் ஒரு ஜட்கா அடி அடித்தாவது அதைப் பிடித்துக்கொண்டு தான் போர்த்துக்கொண்டிருக்கிற துப்பட்டியால் மறைத்துக்கொண்டு நெடுக நடந்து காட்டுவான். அவன் மறுவீதி போவதற்குள் தன்னிடம் தயாராயிருக்கிற ஈச்சம் ஓலையால் அக்கோழியின் கால்களைக் கட்டிவிட்டு அதை விலைகூறி விற்பான். சில சமயம் கோழிக்குச் சொந்தக்காரர்களே கோழியைப்போல் கோழி இருக்காதா என்று விலை சுலபத்தை நாடித் தமது கோழியையே வாங்கிக்கொள்வார்கள்.

---

ஒரு காரியத்திற்கு முன்னின்று போகாதே; அந்தக் காரியம் கைகூடினால் நாலுபேரும் பங்கிட்டுக்கொள்வார். கெட்டுப்போனால் நீ தான் பழிக்காரனாவாய்.

## 111. தண்ணீர்க் குழாயண்டை தவலை செம்புத் திருடு

பெண்களுக்குக் கொஞ்சத்தில் கொஞ்சம் சோம்பலும் வீண் பெருமையும் வந்து அவர்களைப் பேய்போல் ஆட்டும். அதனால் அவர்கள் தமது வீட்டிலுள்ள சிறு பெண்களிடம் தவலைகளைக் கொடுத்துத் தண்ணீர் பிடித்து வரும்படியாவது, தண்ணீர் பிடித்து வைக்கும்படியாவது சொல்லிவிட்டு வம்புக்கதைகள் பேசிக்கொண் டிருப்பார்கள். சிறு பெண்கள் தண்ணீர் குழாயண்டைத் தவலையை வைத்துக்கொண் டிருப்பதைப் பார்த்துக்கொண் டிருக்கும் சில சோம்பேறிப் பயல்கள் மேற்படி சிறு பெண்களிடம் அரையணா வைக் கொடுத்து "ஒரு துட்டு வெற்றிலைப் பாக்கும் ஒரு துட்டு பீடியும் வாங்கிக்கொண்டு நீ ஒரு துட்டு எடுத்துக்கொள்; இந்தத் தவலையை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்; சீக்கிரம் ஓடிவா, நீ ஒரு துட்டுக்கு ஏதாவது வாங்கிக்கொள்" என்று சொல்லி யனுப்புவார்கள். சிறு பெண்கள் ஒரு துட்டுக் காசைப்பட்டுக் கடைக்குப் போனவுடன் கேப்மாரிகள் அந்தத் தவலையை எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள். பாழும் தடிச்சிறுக்கிகளால் உடைமை போனதன்றி ஒரு துட்டுக்காசைப்பட்ட சிறுமிகளும் நல்ல உதை தின்பார்கள். அந்த மூடப்பெண்கள் அதைத் தங்களுடைய தப்பிதமாக ஏற்றுக் கொள்ளாமல் தமது சிறு பெண்கள் ஏமாந்து விட்டதாக நாலுபேர் மெச்சிக்கொள்ள நாணயம் பேசுவதல்லாமல் தங்கள் சிறுமிகளை ஆடு மாடுகளாகப் பாவித்து அவர்களைக் கண்டபடி அடிப்பார்கள்.

---

## 112: சாப்பாட்டுச் சாமான்கள் திருடு

தொழிற்சாலைகளுக்கும் வர்த்தக ஸ்தலங்களுக்கும் உத்தியோகம் செய்யும் ஆபீஸ்களுக்கும் பகற்போஜனம் கொண்டுபோகும் சிறுமிகளுடன் சில சோம்பேறிப் பயல்கள் தொடர்ந்து போவார்கள். அவர்கள் ஜன நடமாட்டமில்லாத விடமாகப் பார்த்துச் சிறு பெண்களைக் கூப்பிட்டு "அம்மா! ஒரு துட்டுக்குப் பீடி வாங்கிக் கொண்டு மற்றதை நீ எடுத்துக்கொள்; சாப்பாட்டை இப்படி வை; நான் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று அவர்களிடம்

---

உன் பிள்ளைக்குத் தொப்பி பூட்ஸ்போட்டு அழகு பார்க்கிறாய். அண்டை வீட்டுப் பிள்ளைபோட்டால் துரைக்குப் பிறந்தது என்கிறாய். இது தானா ஒற்றுமை?

காலணாவைக் கொடுத்து அனுப்புவார்கள். பெரிய பெரிய தடிக் கழுதைகளே ஏமாந்து போகும்போது அறியாச் சிறுமிகளுக்கு நிதானித் தறியக்கூடிய சக்தி எங்கிருந்து வரும்? அரைதுட்டுக்கு ஆசைப்பட்ட சிறுமிகள் அடியெடுத்து வைத்து நடந்ததும் அந்த துரோகிப் பயல்கள் சாப்பாட்டோடு சாமான்களைக் கொண்டுபோய் விடுவார்கள். கிழவிகளாவது ஏமாந்த பெண்களாவது சாப்பாடு கொண்டு வருவதைக் கண்குத்தும் பாம்புபோல் பார்த்திருக்கும் இந்தத் திருடர்கள் "அம்மா! பெரியம்மா! முதலியார் மூலகொத்தளம் சாப்பாடு கொண்டு வரும்படி என்னை அனுப்பினர்" என்று சொல்லி அவர்களை அழைத்துக் கொண்டுபோய் தனித்த இடத்தில் ஓர் அறை கொடுத்து அதைப் பிடுங்கிக்கொண்டு போய்விடுவார்கள். இப்படிப் பட்டம் பகலில் பறிகொடுத்துப் பரிதபிக்கும் ஏழைகள் வெளியில் சொல்ல வெட்கப்பட்டாலும் சொந்தக்காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டு விழிப்பார்கள். இது அற்ப விஷயமென அநேகர் அலட்சியம் செய்வதனால் இதைப்போன்ற தீங்குகள் நாளுக்கு நாள் வளர்கின்றன.



## 113. நடுத்தெருக் கொள்ளை

நாட்டுப் புறத்தார்களாகிலும், ஏமாந்தவர்களாகிலும், மடியிலாவது, மேல் துணியிலாவது பணம் வைத்திருப்பதைச் சில சோம்பேறிப் பயல்கள் கண்டால் வேணுமென்றே அவர்களிடம் போய்

---

சோம்பேறி துன்மார்க்கத்திற்கு அஸதிவாரமா யிருப்பான். தொழிலிலூக்கமுடையவன் வீணில் கழியும் நாட்களுக்கு விசனப்படுவான்.

பொய், புனைச்சுருட்டைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம். பேசுவோனுடைய வார்த்தைகளை நன்றாய் நிதானிப்பதே அதைக் கண்டுபிடிப்பதற்கான உபாயம்.

அவர்களை இடித்து அவர்கள் அடிவயற்றில் பலமாய்த் தாக்குவார்கள். இவர்களே அவர்களை இடித்துவிட்டதன்றி, அப்படி இடித்த இடியால் மடியிலிருந்து வெளிக்கு வந்த முடிப்பையாவது மேல் துணியி லிருப்பதையாவது ஜேபியிலிருப்பதையாவது எடுத்துக் கொள்வதி னிமித்தம் "என்ன ஓய்? கண் தெரியவில்லையா?" என்று அவர்களைச் சண்டைக்கிழுப்பார்கள். இந்தத் துஷ்டர்கள அவர்கள் முகத்தோடு தங்கள் முகத்தை வெகு நெருக்கமாய் வைத்துக் கொண்டு முறைப்பார்கள். அச்சமயத்தில் அவர்களிடமிருக்கிற கையாள்கள் நொடிப் பொழுதில் முடிப்பவிழ்த்துக் கொண்டு ஓட்டம் பிடிப்பார்கள். முடிப்பை யவிழ்த்த உளவாளிப் பயல்கள் மறைகிற வரையில் இடித்த சோம்பேறிப் பயல் தனது முறப்பிலிருந்து பின் வாங்கமாட்டான். ஏமாந்தவன் அந்தச் சோம்பேறி தன்னிடம் வலிய சண்டைக்கு வந்ததை நபே பிரமாதமாய் நினைத்துக்கொண் டிருப்பானே ஒழியத் தன்னிடமிருக்கும் பணத்தின்மேல் எள்ளளவும் கவனஞ் செலுத்த மாட்டான்.

---

## 114. பொன் செய்கிறதாய் மோசம்.

பொன் செய்வதாய்ச் சொல்லிக் கொண்டு திரிகிறவர்களில் பெரும்பாலோர் திருநெல்வேலி காயல் பட்டணத்துக் காயலார்கள். இவர்கள் "கேளப்பா, வாளப்பா, சிலைதான் முடிபோடப்பா" எனப் பாடி இருக்கும் சாமானிய வாகட நூலிலிருந்து சில பாட்டுகளை மனப்பாடம் செய்துகொள்வார்கள். தேரையர், புலிப்பாணி, ஞான வெட்டியான், அகஸ்தியர் (500) முதலிய, புஸ்தகங்களை இவர்கள் கைக்காவலாய் வைத்துக்கொண்டு திரிவார்கள். இவர்களில் சிலர் லங்கோட்டா அல்லது கௌபீனமும், சிலர் காவி வேஷ்டியும், சிலர் தீட்சை யாகவில்லை என்று வெள்ளைத்துணியும் அணிந்திருப்பார்கள். இவர்கள் பேசும்போதெல்லாம், ஆனைக்கல், பூநீர், சூதம், முப்பு முதலியவைகளைப்பற்றியும், "அந்தச் சித்தர் அப்படிச்சொன்னார்; இந்த வாத கைம்முறை சரியானது" "இன்ன மூலிகை அங்கே கிடைக்கும்; ஆனால், செந்தாழைக்காகத்தான் பார்க்கிறேன்" என்று பேசும் போதெல்லாம் வாத சங்கதியே இவர்கள் எடுத்துப் பேசுவார்கள். சாறுவலை தழையைக் கொண்டு வீட்டைப் பொன்னாக்கி விடலா

---

பொது நலத்திற் குழைகிறவர்கள் புலப்படுவாராயின், அவர்கட்குச் சமயம் கொடுப்பதை விட்டு இடத்தை அடைத்துக்கொண்டிராதே.

மென்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கும் சில பேராசைக் காரர்களுடன் இவர்கள் கலந்து பேசும்போது,

"பூப்பூ புளியம்பூ; பொன்னுத்தா கொண்டைக்குத் தாழம்பூ;
ஆனைமே லேறுவேன்; வீரமணி கட்டுவேன்",

என்ற விஷயம் விளையாட்டாகப்போச்சுது; இதுதான் சித்தர் வாக்கு. இதன் தாற்பரியம் தெரியாமல் பலர் விழிக்கிறார்கள். தவிர, 'சுட்டுக் கெட்டவன் வந்தான், கொஞ்சம் உப்புப் போட்டுப் போகச் சொல்' என்கிற சங்கதி தெரியாமல் வெகுபேர் அலைகிறார்கள். இதுவெல்லாம் லேசில் கிட்டுமா? விட்டகுறை தொட்டகுறை இருந்தால் தானே அவர்கட்குக் கிடைக்கும். இந்த உபயின் சங்கதி ஒன்றுமாத்திரம்தெரிந்தால் என்னகாரியமாகாது? இதற்காக என்னென்ன பாடுபட்டேன் தெரியுமா? வேர்க்காவிடில் இனிக்குமா? உமயிடம் சொல்கிறேன் நான் எவ்வளவோ கஷ்டப்பட்டு ஒரு (பைராகி) சாதுவிடம் சிசுருஷை செய்து இந்த வித்தையைக் கற்றுக்கொண்டேன். அவர் வாக்குப்பிரகாரம் அன்றாடம் என் மனவர்த்திக்குச் செலவு செய்து கொள்ளுகிறேன். மற்றவை எனக்கென்னத்திற்கு? அந்த இழவுக்குப் படுகிற கஷ்டத்திற்குத் தக்கக் கூலி கிடைக்குமா? கேவலம் உண்பதும் உறங்குவதுமாய் முடியும அற்ப வாழ்வைப்பற்றி அளவுக்கு மிஞ்சின ஆசை என்னத்திற்கு? இவ்வளவிருந்தும் நான் பழுப்புச் செய்வதாய் யாரிடமும் சொல்வதே கிடையாது, எத்தனையோபேர்கள் என்னென்னவோசெய்து பாடுபட்டார்கள். எவ்வளவோ ரகசியமான சங்கதி அல்லவா இது; இதை லேசில் சொல்லிவிட முடியுமா? ஒருகால் சொன்னாலும அது முடிகிற காரியமா? அந்த வழிக்கு வந்திருந்தால் தானே அது முடியும். ஆனால் உமது விஷயத்தில் எனக்கு மிகவும் பிரியம், வருஷா வருஷம் நீங்கள் பத்துப் பண்டாரங்களுக்கு அன்னம் போட்டு வருவதாய்க் கேள்வி. அதைஉத்தேசித்தே உம்மிடம் வரவும் கலந்து பேசவு ம்நேரிட்டது. உமக்குக் கொஞ்சம் சல்லியமிருக்கிற சங்கதியும் எனக்குத் தெரியும். என்னவோ நாலுசேர் தங்கமென்றால் உமது கடன் பறந்து போகுது; நானும் இரண்டுசேர் வைத்துக்கொண்டால் என்வேலையும் பூர்த்தியாய்விடும். இனி உமக்குக் கவலை வேண்டாம். முதலில் வாகி பூஜை செய்யவேண்டியதற்கு மாத்திரம் பத்துவராகன் தயார்

---

மோதக் காரியங்களில் குறைகூறித் திரிவதும் நட்ட செடியை வேர் தோண்டிப் பார்ப்பதும் நலந்தரா.

செய்யும் பட்சத்தில் உமக்கொரு உபாதியுமில்லாமல் செய்துவிடு கிறேன். இதை வெளியில் மாத்திரம் சொல்லாதீர். நீர் கடன்பட்டுச் செய்வதாய் பயப்படவேண்டாம். இதோடு உமது கடன்களையெல்லாம் தொலைத்துவிட்டுப் பத்தாயிரம் ரூபாய்க்கும் எத்தனம் செய்துவிட்டுப் போகிறேன்" என்று பேராசைக்காரனை ஆளாக்கி வாரகி பூஜைக்கு வேண்டிய சாமான் பட்டியும் எழுதிக் கொடுத்துக் குறித்தநாளையில் அந்தச் சாமான்களையெல்லாம் தயார்செய்து வைக்கும்படி போய்விடுவான்.

பின்பு அவன் மெல்லிய பொன் கம்பியை நாகப்பூச்சியில் செருகி அதை நன்றாய்க் காயவைத்துச் சிறு சிறு துண்டுகளாக்கி அத்துண்டுகளைக் கெஞ்சா இலையுடன் கலந்து வைத்திருப்பான். அவன் முன்பு தான் குறிப்பிட்ட நாள் வருமுன்பே பேராசைக்காரனிடம் போய் அவன் எதிரில் கெஞ்சாவைச் சிலிம்பில் போட்டு ஒரு தம் இழுத்தபிறகு கெஞ்சாச் சாம்பலைக் கீழே கொட்டி இதில் என் மனவர்த்தி செலவுக்கிருக்கும். அதை எடு என்று சொல்லுவான். பேராசைக்காரன் அதைக் கிளற, அதில் நாகப்பூச்சியில் செருகியிருந்த பொன் கம்பிகள் உருகிக் கடுகளவு சிறு சிறு உருண்டைகளாய் மாறிக் கிடப்பதைப் பார்த்து மகிழ்ந்துபோய் அன்றுமுதல் தன் வீட்டிலேயே இருக்கும்படி அவனை வேண்டிக்கொள்வான் தவிர, அவன் கூடிய சீக்கிரத்தில் பூஜைக்கு வேண்டியதைச் சேகரிப்பதாயுஞ் சொல்லிக் கடனுடன்பட்டு வேண்டிய சாமான்களை வாங்கிவந்து தயார் செய்வான். பின்பு மோசக்காரன் ஒரு தனித்த வீட்டில் வாரகியைப்போல் பெண் உருவஞ்செய்து, அதற்குச் சக்தியுண்டாவதற்கு நகைகள் போடவேண்டியதென்று பேராசைக்காரனிடம் சொல்வான். அவன் தன் சொந்த நகைகளையும், இரவல் நகைகளையும் கொண்டுவந்து கொடுத்து அவ்வுருவத்திற்குப் போட்டுச் சிங்காரிக்கச் சொல்வான். பின்பு ரசவாதி சமித்து, தர்ப்பை முதலியவைகளைக்கொண்டு ஓமம் வளர்த்தி அங்குள்ள சாமான்களைப் பார்ப்பவர் பிரமிக்கும்படி கடைபரப்பிவிட்டு "நான் இன்று சில சடங்குகள் செய்த பிறகு இரவு பத்துமணிக்குமேல் சுடுகாட்டில் போய் அங்கே நிருவாணமாய் நின்று மகா மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு ஜெபிக்கவேண்டி யிருக்கிறது. நான் வரும் வரையில் நீ

ஜனத் தலைவர்களுடைய வாக்கு மாத்திரம் நீண்டு கை குட்டையாயிருந்தால் காரியத்தில் பலிதமிருக்காது.

வெளியிலேயே பத்திரமாயிரு; உள்ளே போகாதே; பூஜை வீட்டிற் குள் யாரும் போகாதபடி பார்த்துக்கொண்டிரு; ஆயிரத்தெட்டு உரு ஜெபிக்க எங்கேஏஞ் செல்லும்? இதோ வந்துவிடுகிறேன்" என்று உள்ளேயிருக்கிற நகைகளையெல்லாம் மூட்டையாகக் கட்டிக்கொண்டு அதே போக்காய் ரசவாதி போய்விடுவான். பேராசைக்காரன் அந்த ரசவாதி வரவை எதிர்பார்த்திருப்பான். அக்கம்பக்கத்தார் சீ என இகழ்ந்த பின்பேதான் ஏமாந்ததாய் அவனுக்குப் புலப்படும். அவன் இதை வெளியில் சொல்லவும் வெட்கப்பட்டு நாளடைவில் மனங் குன்றி இல்லாத வியாதியையும் வருவித்துக் கொள்வான். 'போது மென்ற மனமே பொன் செய்யு மருந்து' என்பதை யுணராமல் பேராசை பிடித்து அலேபவர்கள் 'உள்ளதும் போச்சுதடா நொள்ளைக் கண்ணு' என்றபடி தம்மிடம் இருக்கிறதையும் தங்கள் அறியாமை யினுல் தாரை வார்த்துக்கொள்வார்கள்.

---

## 115. புதையல் எடுத்தல்

தெய்வம், தேசம், இராஜாங்கம் முதலியவைகளில் நோக்க மில்லாதவர்கட்கு உபயோக மற்றவைகளில் புத்தி செல்வது இயற் கைதான். சில மூடர்களுக்குத் தெளிவான புத்தி யில்லாததால், அவர்கள் பூமியிலாவது வீடுகளிலாவது கிணறுகளிலாவது புதைய லிருப்பதாய் நம்புவதுடன் பிறரும் நம்பிக் கெட்டுப் போகும்படி புதையல் சங்கதியே பேசிய வண்ணமாயிருப்பார்கள். இந்த முழு மூடர்கள் "அங்கே புதையல் அகப்பட்டதாம்; இங்கே ஏழு ஜாடி பொன்னிருக்கிறதாம்; அதற்குத் தலைப்பிள்ளை பலி கொடுத்தால் அது கிடைக்குமாம். எங்கள் வீட்டில்கூட புதையலிருப்பதாகக் குறிக்காரன் சொல்லியிருக்கிறான். என் ஜாதகத்திலும் எனக்குப் புதையல் கிடைக்கப் போகிறதாம். அண்ணாமலைப்பிள்ளை முன்பு வண்டியோட்டிக்கொண் டிருந்தானே; அவனுக்கு வீடுவாசல் ஏது? அவன் கிணறு தோண்டும்போது முன்காலத்து மிளகாய்க் காசுகள் ஒரு தவலை நிறையக்கிடைத்ததாம். காஞ்சிபுரம் சுப்பராயமுதலிக்கு வாழைத்தோட்டம் வைக்கும்போது கிடைத்த பணத்தாலல்லவா

---

ஞானமானது குணபூரணத்தின் சிகரமேயாயினும் காரிய வம்சத்தில் அனுஷ்டிக்காவிட்டால் அதைப்பெற்றும் பயனில்லை.

இப்போது அவன் பெரிய பணக்காரனாய் விட்டான்'' என்று புதையல் கதைகளையே ஓய்ந்த நேரங்களில் பேசிக்கொண்டிருப்பார்கள்.

இதைக் கேட்டுக்கொண்டிருக்கும் கேப்மாரிகளில் சிலர் மந்த புத்தியுள்ள இந்த மடையர்களுக்குப் புதையல் விஷயத்தில் அவாவையுண்டாக்கி "நீ இருக்கிற வீட்டிலும் புதையலிருக்கிறது. முன்னிருந்தவர்களெல்லாம் அதை எடுக்க எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தார்கள். கடைசியில் அது கரியும் உமியுமாய் விட்டது. அது எல்லாருக்கும் கிடைக்குமோ? கொடுத்து வைத்தவர்களுக்குத் தானே கிடைக்கும்; பல தடவை நானும் கலகலவென்று ரூபா கொட்டுகிற மாதிரி சப்தம் கேட்டிருக்கிறேன். எனக்கும் வெகுநாளாய்க் கவனந்தான். ஆனால் அதை உனக்குச் சொல்ல மறந்து மறந்து போகிறேன். நீ பார்க்கிறதாயிருந்தால் சொல்'' என்று கேட்பான். உடனே மந்த புத்தி யுடையவன் ஆசை மேலிட்டு "ஆஹா! அப்படியே செய், என்ன செலவானாலும் பார்க்கலாம் என்பான். அதற்கு அந்த கேப்மாரி அது இன்ன இடத்திலிருக்கிறதென்று முதலில் மை போட்டுப் பார்க்க வேண்டுமென்று, மை போட்டு பார்க்கிறவன் ஒருவனைத் தயார் செய்வான். அவன் மை போட்டுப் பார்த்துப் பின்கட்டில் கிணற்றுப்பக்கம் இருப்பதாய்ச் சொல்லிவிடுவான். பிறகு புதையல் எடுக்கிறவன் அதை எடுப்பதற்கு ஒரு நாளைக் குறிப்பிட்டு வேண்டிய அவ்வு கள், சாராயம் முதலியவைகளை வாங்கிவரச் சொல்லி பூசை போட ஆரம்பிப்பான்.

அவன் பூசைக்காக நாள்தோறும் அங்குப் போக்கு வரவாயிருந்து தக்கசமயமறிந்து தக்க ஆளைக்கொண்டு ஒரு தவலையை அதன் உதடு வரையில் புதைத்து வைத்துவிட்டு அதன் மேல் இரண்டொரு கிலிட்டுச் சவரன்களைப் போட்டுத் தயார்செய்து வைத்துக்கொள்வான். பிறகு அவன் இரவு பத்துமணிக்குமேல் வெகு ரகசியமாய்ப் பூஜைபோட்டு மந்திரஞ்செய்து மந்த மதிக்குத் தவலை உதட்டையும் கிலிட்டுச் சவரன்களையும் காட்டுவான். அதைக்கண்டு அவன் அதிக நம்பிக்கையும் சந்தோஷமும் கொள்வான். புதையல் எடுக்கிறவன் அதையொரு பூதம் காத்துக்கொண்டிருப்பதாகவும் அதற்குத்தக்க

---

உலகத்திற்கு எந்த விதமான நன்மையைச் செய்தாவது தன்பேரை விளங்கச் செய்தலே பெரும்பேறாகிய ஜன்மம் எடுத்ததின் பிரயோஜனம்.

எந்தக் காரியம் செய்தாலும் அது பரோபகாரமாயிருக்கும்படி செய்வது உன் கடமை. அதனால் வரும் நஷ்டங்களைப் பற்றி உனக்கவசியமில்லை.

ஆகுதி கொடுக்கவேண்டியதென்றும் சொல்லி, அதற்கு வேண்டிய சாமான்களைக் குறித்து ஒரு பட்டி எழுதிக் கொடுத்துத் தான் பேசிய தொகையில் ஐம்பது அல்லது நூறு ரூபாய் அட்வான்ஸ் வாங்கிக்கொள்வான்.

இந்த கேப்மாரிகளில் சிலர் "முழுத்தொகையும் இப்போதே கொடுத்துவிட வேண்டும்; நாலு தவலையோ ஏழுதவலையோ கிடைத்தால், நீ அப்படியே அமுக்கிக் கொள்ளப்போகிறாய். நாங்கள் உயிருக்குத் துணிந்து செய்கிறோம். எங்களுக்குச் சேரவேண்டிய தொகை முழுதும் முன்னால் கொடுக்கத்தடையென்ன?" என்று லகுபிகுவு செய்து சில சமயங்களில் முழுத்தொகையும் பெற்றுக் கொள்வார்கள்.

துட்டில் கையழுத்தமுள்ள மூடர்களில் சிலர் எல்லாம் கடைசியில் ஆகட்டுமென்றால், அவர்கள் புதையல் எடுக்கிறதற்குள் கள், சாராயம், தமக்குப் படிச்செலவு, வண்டிச் செலவுகளின் மூலமாய்த் தாம் பேசினதொகையைச் சரிப்படுத்திக்கொள்வார்கள். இப்படி இரண்டொருநாதம் காலஹரணஞ்செய்து 'வேகிறவீட்டில் பிடுங்குவது லாபம்' என்றபடி அதற்குள் வந்தவரைக்கும் பிடுங்கிக்கொள்வார்கள். கடைசியாக "அது நரபலிகேட்கிறது; தற்சமயம் ஆடாவது பலி கொடுக்கவேண்டும்" என்று ஆட்டை பலியிட்டு அட்டகாசமாய்ப் பூஜை போட்டு ஆட்களை விட்டு வீடுமுழுதும் கொத்திக் குளமாக்கி விடுவார்கள். பின்பு அவர்கள் "ஐயோ! புதயலைப் பூதம் வேறு இடத்திற்குக் கொண்டுபோய் விட்டது; என்ன செய்கிறது? அது கேட்டபடி நரபலியிட்டுத் தக்க பூஜைகள் செய்தால் புதையலை எடுத்துக் கொடுக்கிறோம்" என்று வழுவழுவென்று விட்டு விடுவார்கள். இந்த மோசக்காரர்கள் சொல்லை நம்பி அநேகர் நரபலியிட்டும் ஏமாந்திருக்கிறார்கள். 'குதிரை செத்ததுமல்லாமல் குழிதோண்டப் பத்துப் பணம்' என்றபடி, அந்தப் புத்தியீனர் இவர்களுக்கு வீணாய்ப் பணத்தைக் கொடுத்த தன்றித் தமது வீட்டைச் சீர்படுத்தக் கொல்லத்துக்காரர்களுக்கும் தொலைக்கவேண்டும். நீதியுள்ள நமது பிரிட்டிஷார் தாங்கள் தெய்வத்திற்குப் பிறந்தவர்களாயும் இந்தியர் சாத்தானுக்குப் பிறந்தவர்களாயும் எண்ணி நம்மவர்களை மிகு கேவலமாக நடத்துவது தப்பல்லவே!

## 116. மோடி எடுக்கிற மோசம்

நாட்டுப்புறங்களிலும் பட்டணங்களிலும் தனித்த விடங்களிலுமுள்ள கள்ளுக் கடைக்காரர்களாவது பட்டை சாராயக் கடைக்காரர்களாவது சரியாய்ப் பேரங்களில்லாத காலத்து நோக்கர்களைக் கொண்டு மோடி வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்கள். பழைய பல்லவ அரசர்கள் காலத்தில் சேவகர்களாயிருந்த பட்டு ராஜாக்கள் என்ற ஜாதியார்கள்தான் தற்காலம் நோக்கர்களென்று அழைக்கப் படுகிறார்கள். இவர்கள், கிராமாந்தரங்களில் பெரும்பாலும் வன்னியர்களிடம் போய் அவர்கள் ஜாதிக்குரிய புலிக்கொடி, மீனக்கொடி, சிங்கக்கொடி, விற்கொடி முதலிய முப்பத்திரண்டு விருதுகளையும் கட்டி ஆடுவார்கள். பிறகு இவர்கள் தலைக்கட்டிற்கு ஒரு பணம் அதாவது 0—2—6 அணு வீதம் கட்டாயப்படுத்தி அவர்களிடம் வசூல் செய்வார்கள். சமயம் நேர்ந்தபோது கம்மாளர், கைக்கோளர், செட்டிகள் முதலிய ஜாதியாரிடமும் நாங்கள் உங்கள் குடிப்பிள்ளைகளென்றும் தலைக்கட்டுப்பணம் கொடுக்க வேண்டுமென்றும் வம்பு செய்வார்கள்.

இந்த நோக்கர்களைக் கள்ளுக்கடைக்காரர்கள் வரவழைத்து இந்தக் கிராமத்தில் எந்த மந்திரவாதியாவது குறிப்பிட்ட தொகை மோடிவைக்கும் பட்சத்தில் தங்கள் மந்திரபலத்தைக் கொண்டு அதை எடுத்துவிடுவதாகப் பிருது கூறிவரும்படி செய்வார்கள். அவர்கள் அப்படி வரும்போது டீ கள்ளுக் கடைக்காரர்கள் தாங்கள் மோடி வைப்பதாகச் சொல்லித் தங்கள் கடை யண்டையிலேயே அதை வைத்துத் தைரியமிருந்தால் நீங்கள் இதை எடுத்துக் கொள்ளலாமென்று அவர்களுக்குச் சொல்வார்கள். உடனே கடைக்காரர்கள் தங்களுக்குத்தெரிந்த மந்திரவாதிகளையும் சில போக்கிரிகளையும் துணை சேர்த்துக்கொண்டு குறிப்பிட்ட இடத்தில் வேப்பிலைக் கரகம் ஜோடித்து, விபூதி உருண்டை, எலுமிச்சம்பழம், கோழி முட்டை முதலியவைகளைக் கடைபோல் பரப்பி வைத்துக் கும்பல் கூடும்படி செய்துவிடுவார்கள். மோடி எடுக்கும் அன்றையப் பொழுது காலைமுதல் ஜனங்கள் பெருங்கும்பல் கூடுவதினால் கையிருப்புப்பாட்டாக்கள் எல்லாம் செலவாய் விடுவதினால், ஒரு படி கள்ளு ஆறணு எட்டணுவுக்கும் கிடைப்பது கஷ்டமாய் போய்விடும். அன்று பகல் 2 மணிக்குப் புஜங்களில் நாவாபந்து செப்புக் கடகங்களும் கைம்மணிக்கட்டில் சதுரமான ரகைஷகளும் கட்டிக்கொண்டு நெற்றியில்

முழு தூளிதத்துடன் பெரிய குங்குமப்பொட்டின் மத்தியில் மை தடவிக்கொண்டு கள்ளுக்கடைக்காரன் சொந்த மந்திரவாதி, தான் வாசி வசியமுள்ள பெரிய மந்திரவாதியைப்போல் காகத்தண்டை மந்திரம் போட்டுக் கொண்டிருப்பான். நோக்கர்களில் ஒருவன் தன்னையும் பிறர் பெரிய மந்திரவாதியாக நினைத்துக் கொள்ளும் பொருட்டுப் பெரிய சிவப்பு சரிகைத் தலைப்பாகையும் கைவிரல்களில் பெரிய பெரிய வெள்ளி மோதிரங்களும் அணிந்து வெகு ஆர்ப்பாட்டமாய் சபையார் பார்க்கும்படிக்கு விருதுகள் கட்டுகிறதும் ரக்ஷைகள் கட்டுகிறதும் புருவத்தில் மை தடவுகிறதும் அடிக்கடி விபூதி மந்திரித்து தன் எதிரியின்மேல் ஊதுகிறதுமாயிருப்பான். இரண்டொரு நோக்கர்கள் இது ஆபத்தான காரியமென்றும், உயிருக்கே மோசமென்றும், எப்படி முடியுமோவென்றும் ஜனங்கள் திக்பிரமை கொள்ளும்படி பறை. மேளம் அடித்துக்கொண் டிருப்பார்கள். அப்போது அவர்கள் செய்கிற ஆரவாரம் சொல்லுந்தரமன்று.

முதலில் ஊர்மந்திரக்காரன் வெங்காரத்தை நெருப்பில் போட்டு பெரிய கட்டியாய் பொரித்து அதைக் கோழிமுட்டை மாதிரி சீவிப் பக்குவம் செய்து அதன்மேல் கொஞ்சமாய் மஞ்சள் தடவிக் குங்குமப் பொட்டு வைத்து அதைச் சபையாருக்கும் எதிரி நோக்கனுக்கும் காட்டி "எதோ இதை எடுத்து விடு" என்று தரையில் வைத்து அதன்பேரில் மண்ணைப்போட்டு மூடிக் குளிரத் தண்ணீர் தெளித்து விடுவான். தண்ணீர் பட்டவுடன் அவ்வெங்காரம் கறைந்து மண்ணோடு மண்ணாய் விடும். எடுக்க முன் வந்திருக்கிற நோக்கனை வெல்ல மற்றொரு நோக்கன் செய்கிற மந்திர உச்சாடனங்கள் பெரிய தமாஷாயிருக்கும். ஊர் மந்திரவாதி நோக்கனைக் கிட்ட நெருங்க ஒட்டாமல் விபூதியை மந்திரித்து அவன்மேல் போடும் போதும் அவ்விடத்தில் தன் துணியை முறுக்குகிற போதும் அங்கே நட்டிருக்கிற உலக்கையைப் பிரம்பு கொண்டோ புளியம் மளார் கொண்டோ ஓங்கி ஓங்கி அடிக்கிறபோதும் அவன் படுகிற பாடு இவ்வளவு அவ்வளவு அல்ல. உலக்கையை அடிக்கிறபோதெல்லாம் அவன் தன் முதுகை நெளிப்பதும் இரு கைகளாலும் முதுகைத் தடவிக் கொள்ளுகிறதுபோல் கை நகத்தால் கீறிக்கொண்டு இரத்தம் வருகிற பாவனையாகக் காட்டுவதும் கீழே விழுந்து புரள்வதும் பார்ப்பவர்களுக்கு உண்மையில் அடிபட்டு அவஸ்தை படுவதாகவே காணப்படும். உலர்ந்த பூனை காஞ்சி இலைத்தூளை அவன்

முன்பே தன் முதுகில் தடவிக்கொண்டிருப்பதால் அவன் முதுகில் தழும்பு தழும்பாகவும் காணப்படும். பெரிய சோக்கன் செய்கிற மந்திர பலத்தால் முட்டை கிட்ட நெருங்குகிறதும், அவன் ஊர் மந்திரவாதி செய்கிற உச்சாடனத்தால் மறுபடியும் அவன் புரண்டு புரண்டு பின்னுக்குப் போவதாயும் காண்பிக்கும் புரட்டுப் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்தை யுண்டாக்கும்.

ஊர் மந்திரவாதி தன் எதிரி நாக்கை அறுக்கிற மாதிரி ஒரு ஜாலம் காட்டுவான். எடுக்க வந்த சோக்கன் முன்பே தயாரித்தபடி அரை அங்குல நீளமுள்ள இரண்டு துடைப்பக் குச்சிகளில் ஒன்றை அங்குல நீளமுள்ள குதிரை மயிரைக் கட்டி பல்லில் மேலும் கீழும் இரண்டு குச்சிகளையும் மாட்டிக்கொள்ள, நடுவாயில் மயிர் நிற்கும். அந்த மயிரின்மேல் நாக்கை பிசுவாய்த் தாக்க நாக்கு இரண்டாகப் பிளந்த மாதிரி ஜனங்களுக்குத் தெரியும். இதனுடன் பல் ஈறுகளைக் கொஞ்சம் கைந் நகத்தால் கீறிக்கொள்ள இரத்தமும் காணப்படும். பேதை ஜனங்கள் அவன் இரத்தம் இரத்தமாய்க் கக்குவதாய் மனம் கலங்கிப் போவார்கள். இந்த உளவு தெரிந்தவர் யாராவது "இது இப்படி, அது அப்படி" என்று சொன்னால் களளுக்கடைக்காரர்களால் தயார் செய்யப்பட்டிருக்கிற போக்கிரிகள் அவர்களை அதட்டுவார்கள். மிஞ்சி வெங்கார கோழிமுட்டை குதிரை வால்மயிரால் கட்டிய துடைப்பக்குச்சி முதலியவைகளை யாராவது எடுத்துக் காட்டினால் அவர்களுக்கு உதையும் குத்தும் கொடுப்பார்களாகையால், சூது தெரிந்தவர்கள் இடம், பொருள், ஏவல் இவைகளை எண்ணிச் சும்மா இருந்து விடுவார்கள். ஊர் மந்திரவாதி மோடி எடுக்கிறதற்கு நாலு ஐந்து நாளைக்கு முன்பே நண்டுத்தெறுக்கால் கும்பலா யிருக்குமாகையால் அவைகளைப் பிடித்து அவைகளின் கொடுக்கின்பேரில் அக்கினித் திராவகத்தைவிட விஷமானது கக்கிவிடும்; அவைகளைச் சாணியில் விட்டுவைப்பான். மோடி எடுக்கிற அன்று பகல் மேல் விபூதிபையில் கொஞ்சம் வேப்பிலைகளுடன் அவைகளைப் போட்டு வைத்திருந்து மோடி எடுக்கிறவன்மேல் போடுவான். உடனே பத்துப் பதினைந்து நண்டுத்தெறுக்கால்கள் விழுவதை ஜனங்கள் கண்டு, அவன் வேப்பிலை உருவிப்போட அது நண்டுதெறுக்கால்கள் ஆயினவென்று ஆச்சரியப்படுவார்கள். இப்படிப்பட்ட கைப்புரட்டு வேலைகள் சிலவற்றை ஊர் மந்திரவாதி செய்வான். அவைகளையெல்லாம் சோக்கன் தன் மந்திரபலத்தால் ஜெயம்செய்துவிட்ட

தாகக் காண்பிப்பான். கடைசியில் அந்த ரோக்கன், முட்டையை எட்சணி வேறிடத்தில் கொண்டுபோய் விட்டதாகச் சபையாருக்குச் சொல்லித் தான் முன்பே தயார்செய்து வைத்திருக்கிற தனித்த இடத்திற்குப் போய் நிஜமான கோழிமுட்டையை மஞ்சள் பூசின குங்குமப் பொட்டுடன் கொண்டுவந்து காண்பிப்பான். அச்சமயம் பல பேதைகள் ரோக்கன் மந்திரபலத்தையும் தூமாதேவி வசியத்தின் மகிமையையும் சிலாகித்துப் பேசுவார்கள். அதை எடுத்துச் சொல்ல எனக்கு ஆதிசேஷனைப்போல் பல நாக்குகளும் வாய்களும் இல்லாத குறைவால் ஒரு நாக்கால் சொல்ல முடியாதவனு யிருக்கிறேன்.

"மந்திரத்திற் குயிரிருந்தால் மறைந்திடாதோ
மாறியெங்குந் திரியாதோ நடந்திடாதோ
மந்திரமென் றெழுதிவைத்த திங்கிருக்க
ஏவிவிட்டான் என்றுரைப்ப தென்னபேச்சு
தந்திரத்தால் வரவழைப்ப ருலகிலுள்ளோர்
தற்செயலாய் வரவழைப்ப தொன்றுங்காணேன்"

என்று ஒரு பெரியார் சொல்லியபடி, தந்திரம் தன்னுடைய திறம் மந்திரம் மனிதனுடைய திறமாம். பெண்களும் மந்திரத்தால் மாங்காய் விழாதென்று சொல்லுகிறூர்கள். நிஜமாக மந்திர மாத்திரமிருக்கும் பட்சத்தில் சுயராஜ்யத்திற்கும் நமக்கும் இடையில் ஓர் அடி தூலவும் இல்லை. மகாத்மாவும் ஒருவாரம் அல்லது 21 நாள் பட்டினி கிடக்க அவசியமே இல்லை. ஆனல் சில கட்சிக்காரர்கள் செய்யும் மந்திரபலத்தால் பெரிய உத்தியோகமும் பட்டங்களும் கிடைத்திருப்பது தான் தற்கால மந்திரமாகும். மோடி வைத்ததற்குக் குறிப்பிட்ட தொகையில் ஊர் மந்திரவாதிக்கும் போக்கிரிகளுக்கும் சிறிது பாகம் கிடைப்பதோடு அன்று அவர்களுக்குத் தண்ணீர்பாடும் சொல்லவேண்டியதேயில்லை. ரோக்கர்களுக்கும் நல்ல கந்தாயந்தான். தவிர, கள்ளுக்கடைக்காரருக்கும் மோடிக்கு முன் பத்துநாளும் பின் பத்துநாளும் ஒன்பதாம் இடத்தில் இராஜா.

---

## 117. ஒட்டர் மோசம்.

பட்டண வாசங்களிலுள்ள ஒட்டர்களில் சிறுபான்மையோர் கூலிவேலை செய்தும் பன்றி வளர்த்தும் அதை அறுத்துத் தெருத் தெருவாய் விற்றும் ஜீவிக்கிறூர்கள். அவர்களில் பெரும்பாலோர்

தட்டார்களிடம் சேரும் கழிவுக்குப்பைகளையும் P-R-அண்டு சன்ஸ் முதலிய ஷாப்புகளில் சேரும் மண்ணையும் கன்ட்ருக்ட்டாகப் பேசி எடுத்துவந்து கழுவி அதிலுள்ள பொன், வெள்ளி, பித்தளைப்பொடிகளை உருக்கி ஜீவித்து வருகிறார்கள். சிலர் ரோட்டு ஓரங்களிலும் சாக்கடைக்கால்களிலும் சேரும் மண்ணை அலசி எடுக்கும்போது முன்பே தயாரித்து வாயில் போட்டுக்கொண்டிருக்கும் பித்தளைத் திருகாணிகளை வேலையில்லாப் பேதைப்பெண்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போது தாம் கழுவும் ஓடுகளில் ஜாடையாய் உமிழ்ந்து விடுவார்கள். பின்பு எடுத்துத் துடைத்துப் பார்ப்பதைச் சில ஏமாந்த பெண்கள் கண்டு ஐந்து அல்லது ஆறணாவுக்குப் பொன் திருகாணி என்று ஏமாந்து வாங்கிக்கொண்டுபோய் மறுநாள் தான் அது பித்தளை என்று அறிந்து ஏங்கி நிற்பார்கள். இப்படிச் செம்பு மோதிரங்களைப் பொன் மோதிரமென்றும் இமிடேஷன் கற்களைக் கெம்புக்கல் என்றும் அநேகர் ஏமாந்து இருக்கிறார்கள்.

நாட்டுப் புறங்களில் இருபது முப்பது ஒட்டர்கள் தமது குழந்தை குட்டிகளுடன் ஊர் ஊராய் மண் எடுப்பதாய்த் திரிவார்கள். மழையினால் எக்கலடித்து மண்சேர்ந்திருக்கிற நிலக்காரர்களிடமும் தற்காஸ்து கொடுத்து ஸ்வாதீனஞ் செய்துகொண் டிருக்கிற ஏழை வியவசாயிகளிடமும் மண்வேலைக்குக் குழி ஒன்றுக்கு ஒன்பது பையில் அடங்கக்கூடியதை நாலணா ஐந்தணாவென்றுபொய்பேசி ஓர் அணா ஒன்றரை அணாவுக்கு முடிவு செய்து அப்போதே பத்து ரூபாய் வேலைக்கு இருபது ரூபாய் அட்வான்ஸ் கேட்பார்கள். இவர்களில் சிலர் அட்வான்ஸ் தொகையோடு ஓடிப்போவதுமுண்டு இல்லையேல் அட்வான்ஸ் தொகை செலவான பிறகுதான் இவர்கள் வேலைக் கிறங்குவார்கள்.

வேலை தொடங்கிய அன்றை சாயங்கிரமே கூலிகேட்பார்கள். செய்தது பத்து ஜதையானால் இருக்கிற கிழம் குட்டிகளையுங் காட்டிப் பதினைந்து ஜதை வேலை செய்தது என்றும் ஜதைக்கு நாலணா வீதமாவது கொடுங்களென்றும் வம்பு செய்து வாங்குவார்கள்; கொடுககாமல் போனால் மண் எடுத்த கூலி கொடுக்கவில்லை என்று வீட்டண்டை வந்து மானபங்கம் வரக் கூவிக்கொண்டிருப்பார்கள். வேலையாவது ஒப்புக்கொண்டபடி செய்வார்களோ என்றால், அதுவும் கிடையாது. எடுக்கிற மண்ணைக் கொட்டவேண்டிய இடத்தை விட்டு வழிநெடுகத் தட்டுதட்டாய்ப் போட்டு மிதித்து விடுவார்கள்.

நாள்தோறும் கூலி கேட்கிறபோதெல்லாம் தாங்கள் வேலை அதிகம் செய்துவிட்டதாயும் அளந்து கொண்டு பணம் கொடு என்றும் வம்பு செய்வார்கள். வேலை தீர்ந்தபின் மேடாயிருக்கிற இடமாய்ப் பார்த்து ஓரடி ஒன்றரை அடிக்கு மண்ணைப்போட்டு அழுத்தி அதன் மேல் நிலையாய் இருக்கிற இடம்போல் புல்பத்தையைப் போட்டுத் தட்டி மட்டு என்கிறதை ஓரமெல்லாம் மண்வெட்டி கொண்டு செதுக்கி உயரமாக மட்டுக் காண்பிப்பார்கள். பள்ளமான இடத்தில் மண் எடுத்திருக்கிற பாவனையாக மண் வெட்டிக்கொண்டு மேலோடு சீவி வைப்பார்கள். வாங்கி யிருக்கும் பணம்போக நிலக்காரனே இருபது முப்பது கொடுக்கும்படி பொய்க் குழிக்கணக்கை இவர்கள் ஏற்படுத்தி வைப்பார்கள்.

கணக்குத் தீர்க்கும்போது "ஐயோ! எவ்வளவு வேலை செய்தோம்! கல்லும் கரடும் கஷ்டப்பட்டு எடுத்தோம். எங்களுக்கு இனும் சனும் கொடுக்கவேண்டும்" என்று கேட்டுக்கொள்வார்கள். முதலாளி இவர்கள் மோசத்தைக் கண்டு வயிறெரிந்து கோபித்துக்கொள்ளும் சமயம்பார்த்து, கிழவனுயிருக்கிற ஒட்டன் வேணுமென்றே "ஏமிப்பனி, பொச்சுபனி; அப்புடே தெலுசுனு மோசக்காடுஅனி" என்றுசொல்லி அவனுக்கு இன்னும் கோபம்வரும்படி "நாங்கள் மண் எடுத்தபணத்தை வாயில் போட்டுக்கொள்ளுகிறாயா? நல்லா வாழுவாயா? உனக்கு பிள்ளைகுட்டி தங்குமா?" என்று அவனைவலிய சண்டைக்கிழுப்பான். பணமும்போய் வேலையுமாகாமல் நிந்தை சொல்லும் சொன்னால் நிலக்காரனுக்கு எப்படியிருக்கும்? அவனுக்குக் கோபம்வந்து அக்கிழவனை ஒரு அறைகொடுப்பதுதான் தாமதம்; உடனே அவன் அலறித்துள்ளித்துடித்து அப்படியே மல்லாந்து இறந்துவிட்டவன்போல் விழுந்துவிடுவான். கூடவிருக்கும் ஒட்டர்களும் குழந்தைகுட்டிகளும் உண்மையில் அவன் இறந்துவிட்டதைப் போல் ஓவென்றலறி ஓலமிட்டு அழுது அட்டகாசம் செய்வார்கள். அவர்கள் இதைப் பிறர் அறிந்துகொள்ளாதபடி அக்கிழவன்மேல் விழுந்து அவனை மூடிக்கொண்டழுவார்கள். பலவாறாகச் சொல்லியென்ன? கடைசியில் நிலக்காரன் இருபது முப்பது கொடுத்து இதை அடக்கி விடும்படி அவர்களை வேண்டிக்கொள்ளும் நிலைமைக்குக் கொண்டுவந்து விடுவார்கள். பின்பு அந்த நிலக்காரன் இரண்டொரு ஒட்டர்களைப் பணம் கொடுப்பதாய்த் தன் வீட்டிற்கு அழைத்துப்போனபிறகு அங்கு இருக்கும் ஒட்டர்கள் பிணத்தை

எடுத்துக்கொண்டுபோகும் பாவனையாக அவனைக் குடிசைக்குத் தூக்கிப் போவார்கள். அந்தப் பணம் குடித்துச் செலவாகிற பரியந்தம் யாரும் வேலைக்குப் போகமாட்டார்கள். கிழவனுக்கு மாத்திரம் நல்ல கள்ளு சப்ளை செய்வார்கள். சில கட்சிக்காரர்கள் இவர்களுக்காகத் தான் பிரதிநிதித்துவம் கேட்கிறார் போலும்.

## 118. பால்காரர்கள் மோசம்

சென்னை முதலிய பட்டண வாசங்களில் அநேகர் கைப்பணமில்லாமலே வடதேயத்து மாடுகள் கொண்டுவரும் வியாபாரிகளிடம் ஐம்பது ரூபாய் மதிப்புள்ள பசுமாட்டை நூறு ரூபாய்க்குக் கடனாக ஓட்டிவருவார்கள். அவர்கள் பால் அதிகமாகக் கிடைக்கவேணுமென்று எள்ளுப் புண்ணாக்கு, கடலைப் பொட்டு, வைக்கோல் இவைகளைத் தீனி வைப்பார்கள்; கன்றுகளுக்குப் பால் விடாமல் கேழ்வரகுக் கூழ் வார்ப்பார்கள். எந்நேரமும் கன்றுகளுக்கு வாய்ப்பூட்டுப் போட்ட வண்ணமாய்த்தானிருக்கும். இவர்கள் பால் கறக்கப் பசுவையும் கன்றையும் ஓட்டிக்கொண்டு வரும்போது ஒரு பையனிடம் எருமைப் பாலில் ஆரோரூட்மாவைக் கலந்து சரிபாதி தண்ணீரை ஊற்றிக் கொண்டுவருவார்கள். "இதோ பக்கத்து வீட்டுச் சுந்தரமய்யர்வீட்டில் கறந்தேன்; மிச்சமிருக்கிறது" என்று எருமைப் பாலை இவர்கள் அளந்து கொடுப்பார்கள். இவர்களுடன்இரண்டொரு தகர சோடுதவலைகளுடன் ஓர் ஆள் இருந்தே தீருவான். அவன் தன்னிடமிருக்கும் சோடுதவலையில் தண்ணீர் கொண்டு வருவான்.

பால் கறக்கிறவன் தன்னிடமிருக்கிற சோடுதவலையை மேலே தூக்கிச் சுழட்டிக் காண்பிக்கிறபோது தண்ணீர் விழாமலிருக்கும். அதனை அவன் சாய்த்துப் பிடித்துத் தன் காலுடன் அணைத்துக் கொண்டு இரண்டு மூன்று பீர் சோடுதவலை ஓரத்தில் படும்படி 'சுர் சுர்' என அடித்துக்காட்டிப் பிறகு நிமிர்த்திக்கொண்டு கறப்பான். இதுவுமல்லாமல் தண்ணீர் வைத்திருக்கிற ஆள் கன்றைப் பிடிக்கிற மாதிரி தன்னிடமிருக்கிற எருமைப்பாலை யாவது தண்ணீர் இருக்கிற சோடுதவலையை யாவது மாற்றி விடுவான். பால் வாங்குகிறவர்கள் உஷாராய் இருந்துகேட்டால், அவன் பசுவின் முலையைக்கழுவ ஆரம்பிப்பான். பால் அளக்கிறபோது அவன் நுரையுடன் சுடச் சுட அளப்பான். அளக்கிற ஆழாக்கு அடியில் ஒரு அங்குலத்திற்கு மேல்

உள் பக்கம் பில்லை போட்டிருக்கும். அது உருவத்தில் பெரிய ஆழாக்காகக் காணப்படும். ஆவடி, கன்னடைய பாளையம் முதலிய இடங்களிலுள்ள கன்னடையர்களும் ஏனைய ஜாதியார்களும் எருமைப் பாலை வெண்ணெய் எடுக்கும் பால் மிஷன்களுக்குப் படி கணக்காக ஊற்றிவிட்டு வெண்ணெய் எடுத்த பின் மிச்சமுள்ள பாலைப் படி ஒன்றரை அணு வீதம் வாங்கிக் காய்ச்சிப் பிறை குத்தி நல்ல தயிர் என்று விற்பார்கள். இவர்கள் வெண்ணெயுடன் கோதுமை மாவையும் நல்ல தயிரோடு சரிபாதி மிஷின் தயிரையும் கலந்து குறைந்த மர ஆழாக்கில் அளந்து விற்பார்கள். சிலர் கொழுப்புக் கலந்த மட்டமான கடை நெய்யை வீசை இரண்டு ரூபா வீதம் வாங்கி வந்து தங்களிடமுள்ள எருமை நெய்யுடன் கலந்து முருங்கை இலை போட்டுக் காய்ச்சி அதைச் சுட சுடக் கொண்டுவந்து வீட்டு நெய் என்று விற்பார்கள். இன்னுஞ் சிலர் மட்ட நெய்யில் முருங்கை இலை போட்டுக் காய்ச்சிப் பகல் பன்னிரண்டு மணிக்கு மேல் நல்ல வெய்யில் சமயத்தில் அது நாட்டுப்புறத்திலிருந்து வந்ததென்று விற்பார்கள். மாதிரிக்கு வேறே நல்லநெய் வைத்துக்கொண்டு கைப்புரட்டு செய்து காட்டுவார்கள். நாலு நாள் பொறுத்துப் பார்த்தால் அந்த நெய் சளுப்புநாற்றம் வீசும். ஐந்து லட்சம் ஜனங்களுள்ள சென்னையில் பல பேட்டைகளில் இவர்கள் மாறிமாறி விற்று மோசம் செய்வார்கள்.

---

## 119. கழிப்பெடுத்தல்.

கெட்டப்பாரையை விழுங்கிவிட்டுச் சுக்குக் கியாழம் சாப்பிடுவதுபோல் எந்த வியாதி வந்தாலும் முப்பது வயது முண்டச்சிகளும் பழைய காலத்துக் கிழவிகளும் வியாதிகளின் உற்பத்தி, கூறு, கோளாறு, குணம் முதலியன தெரிந்த வைத்திய நிபுணர்களைப் போல் முரட்டு சிகிச்சைகளைச் செய்யும்படி கண்டபடி சொல்லி வியாதி வளரும்படி செய்து விடுவார்கள். அவர்கள் சொன்னபடியெல்லாம் செய்து வியாதி அதிகரிக்கும் பட்சத்தில், முட்டாள் பெண்கள் இவள்போக்குத் தாண்டியிருக்கிறாளென்றும் அந்த அண்ணமார் அறைந்து விட்டார்களென்றும் கழிப்பு மிதித்திருக்கிறாளென்றும் ஆகாச கன்னிகள் எதிர்பட்டிருக்கிறதென்றும் வீட்டுப் பூவாடைக்காரி குற்றமென்றும் ஏதாவதொரு கதையைக் கட்டி விடுவார்கள். எல்லாம் தெரிந்ததைப்போல் காட்டிக்கொள்ளு மியல்புடைய சில பெண்கள் "இதெல்லாம் வீண் பைத்தியம்; சூனி மன்

ஞூ ஆசாரியைக் கொண்டு விபூதி பிடித்துப் பார்த்தால் எல்லாம் தெரிந்து போகும்; மன்னுத் ஆசாரிக்கு வாகி வசியமிருப்பதால் அவரைக்கொண்டே எல்லாம் செய்து விடலாம்'' என்று யோசனை சொல்லுவார்கள். நமது நாட்டில் வெகுநாளைய வழக்கப்படி ஜோசியனைக் கேட்டால், அவன் அங்காரகன் அஷ்டமத்தில் ஏறியிருக்கிருன்; இதற்கொரு நவக்கிரஹ சாந்தி செய்யவேணுமென்பான். பூசாரியைக் கேட்டால், அவன், இது கிராமதேவதை குற்றம் கொஞ்சம் பால்பூஜை போடவேணுமென்பான். வைத்தியனைக் கேட்டால் அவன் வாதம் சிலேத்துமத்தில் பந்தித்து கோளாறு செய்திருக்கிறது. இதற்கு நாலைந்து நாள் நவபாஷாணக்கட்டி உறைத்துக்கொடுத்தால் நிவர்த்தியாகுமென்பான்.

மந்திரவாதியைக் கேட்டால் அவன் "இந்தப் பையன் நாளுக்கு நாள் உருக்குலைந்து போகிருன்; திடுக்குத் திடுக்கென அலறுகிருன்; எல்லாம் விபூதி பிடித்துப் பார்த்தால் தெரிந்து போகும்; இதற்கு ஒன்றும் வேண்டியதில்லை; வெற்றிலைப் பாக்கு, விபூதி, ஒரு சாம்பிராணிவத்தி கொண்டுவா'' என்று சொல்லி அவன் விபூதி கையில் வைத்துப் பிசையும்போதே நோயாளி விடுகிற கொட்டாவியிலேயே எல்லாம் தெரிந்துகொண்ட மாதிரி அந்தத் தடியன் இது உம்மால் வந்த வியாதி என்று சொல்வதே கிடையாது; ஆனுல், இதற்கொரு கழிப்பு எடுத்தாலல்லது பிள்ளையைப் பார்க்க முடியாதென்று அவன் முடிவு கட்டி விடுவான். மந்திரத்திலிருக்கிற நம்பிக்கை வைத்தியத்தில் இல்லாத நம்நாட்டுப் புனிதவதிகள் மந்திரக்காரன் சொன்ன கழிப்புச் சாமான் எல்லாம் வாங்கி வருவதுடன் ஊமத்தங்காய், நவதானியம், ஒன்பதுவகைப் புட்பங்கள், காதோலை, கருமணி, எலுமிச்சம்பழம், பச்சரிசிமாவு, கோதுமை ரொட்டி, சாராயப்புட்டி, வறுத்த கறி எல்லாம் தயார் செய்து வைத்திருப்பாள். மந்திரவாதி சரியாய் இரவு பத்து மணிக்கு வந்து புதுச் சட்டியில் மாவைக்கொண்டு ஆணுயிருந்தால் பெண்பாவையும் பெண்ணுயிருந்தால் ஆண்பாவையும் செய்து வைத்து வியாதியஸ்தனை அங்குக் குந்தச்செய்து எல்லாச் சாமான்களையும் அவனெதிரில் கடை பரப்பித் தலை, முழங்கால், மணிக்கட்டை, பாதம் இவைகளில் ஒவ்வொரு எலுமிச்சம் பழத்தை அறுத்து அவனைச் சுற்றிப் போட்டு விட்டுக் கொஞ்சம் ஓமம் வளர்த்தி அதில் வியாதியஸ்தனைக் கொண்டு பொரி போடச்சொல்லி அந்த ஓம நெருப்பை மூன்று முறை தாண்டச் செய்வான்.

பிறகு ஒருசேவல் கொண்டுவரச்சொல்லி அதை அறுத்து வலம் இடமாக மூன்றுதரம் சுற்றி மாவுப் பொம்மையையும் சட்டியுடன் அதேமாதிரி சுற்றி அந்தப் பொம்மையின் அவயவங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வெள்ளி அரைக்கால் ரூபாய் வைக்கச்சொல்லி, கடை பரப்பியிருக்கும் எல்லாச் சாமான்களையும் அறுத்த கோழியையும் மொத்தமாகவைத்து வியாதியஸ்தனை மூன்று தரம் தாண்டச் சொல்வான். பிறகு அதர்வண வேதத்தில் அணுவளவேனும் பிசகாது செய்பவனைப்போல் மொண மொணவென்று சில மந்திரங்களைச் சொல்லி வியாதியஸ்தன் கையில் விபூதி கொடுத்து அதை நெற்றியிலும் கையிலும் தேகத்தின்மேலும் பூசிக்கொள்ளச் சொல்லி, கழி ரொட்டி, சாராயத்தை மாத்திரம் கூட வந்தவர்களை எடுத்துக்கொள்ளச் சொல்வான். பின்பு அவன் "இனி இவ்விடத்தில் நான் வரக்கூடாது; எனக்குச் சேரவேண்டிய கட்டணத்தைக் கொடுங்கள்" இந்த அர்த்தராத்திரியில் உயிருக்குத் துணிந்து கொண்டுபோய் வைக வே ண்டும். கொஞ்சம் அரை பேதை கால் பேதையாயிருந்தால் அப்படியே சாக வேண்டியது தான். இந்தக் கழிப்பை நாய், நரி, காக்கை முதலானவைகள் தொட்டாலும் முகர்ந்தாலும் கெடுதிகள் உண்டாகும்; என் கூட யாரும் வரக்கூடாது என்று ஒன்று அல்லது இரண்டு ரூபாய் கட்டணம் பெற்றுக் கொண்டு எல்லாம் சுருட்டிக்கொண்டு போய் விடுவான். பாவம்! இந்த மந்திரவாதி தனக்கு முன் முக்கால் மூடன் ஒருவன் செய்த படி செய்ய வந்தவனே தவிரக் கழிப்பெடுப்பது எந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிற தென்பதைக் காதிலும் கேட்டிருக்கமாட்டான். வியாதியஸ்தர்கள் இதைப் பார்த்துக்கொண்டிருந்த சித்தப் பிரமையினால் நூற்றுக்கு ஒருவர் இருவர் மனசாந்தி அடைந்து குணப்படுவார்களென்றாலும் இது எந்த வகையிலும் மோசமென்றே சொல்லவேண்டியிருக்கிறது. மேடைமேல் நின்று பேசும்போது மாத்திரம் கதர்துணி கட்டிக்கொண்டு கதர் கதர் என்று கதறும் மோசக்காரர்களைவிட இவர்கள் மிகவும் யோக்கியர்களே.

---

## 120. தேக்கமரத் தொட்டிக்காரர் மோசம்

கைமுதல் வைத்து வியாபாரம்செய்யும் சிலர் போக, இந்த வியாபாரிகளில் பெரும்பாலோர் பணம் வைக்க நிர்வாகமில்லாதவர்களும் இரண்டொரு வருஷம் குமஸ்தாக்களாயிருந்து வந்தவர்களும்

வாள்கார மேஸ்திரியாயிருந்து குழிக்கணக்கு, அறுவடை அனுபோகம் பெற்றவர்களும் காலி மனையாகவோ அல்லது ஒரு தொட்டியில் பாதியாய்த் தடுத்துக்கொண்டே தொட்டிக்கு அட்வான்ஸ் கொடுப்பதற்கு மாத்திரம் சிறு தொகை வைத்துக்கொண்டு மரத் தொட்டி வைப்பார்கள். பர்மா, மோல்மென், ரங்கோன் முதலிய இடங்களிலுள்ள பௌகேர் பிரதர்ஸ், டாக்உட்மேக்கர், பாம்பே பர்மா டிரேடிங் கம்பெனி முதலிய மரம் அறுவடை செய்தனுப்பும் பெரிய மரங்களுக்கு மதிராஸிலுள்ள பென்னி அண்டு கம்பெனி, வில்சன் அண்டு கம்பெனி, ஷாவாலஸ் கம்பெனி, துரைசாமி அய்யர் அண்டு பிரதர்ஸ், பொன்னுசாமி செட்டி முதலிய கமிஷன் ஏஜண்டுகளிடம் சிபார்சு பெற்றோ அல்லது வீட்டு சீட்டை ஈடுகாட்டியோ சரக்கு வாங்கி மரத்தொட்டி வைப்பார்கள். 144 பார்ட் கொண்டது ஒரு அங்குலம்; பனிரண்டு அங்குலம் கொண்டது ஒரு கன அடி; ஐம்பது கன அடி (குபிக்பூட்) கொண்டது ஒரு டன் என்று சொல்லப்படும். சதுரம் தீர்க்காமல் முழுமரம் அப்படியே வந்தால், அதற்கு லவேஜா என்று பேர். இதற்குக் குழி எப்படி கணக்கிடுவதென்றால், ஒரு மரத்தின் அடி, நடு, கடைசி ஆகிய பாகங்களை டேப்பைக்கொண்டு மூன்று இடங்களிலும் சுற்றளவு எடுத்துக்கொண்டு மூன்றளவையுங் கூட்டி சரிபாதியாக்கி அதைப் பெருக்கிக் கொண்டால் டன், குழி, அங்குலம், பார்டாக ஏற்படும். நாலுபக்கமும் சதுரம் தீர்த்துவரும் மரம் சதுரங்களென்று அழைக்கப்படும். மரங்களில் சில பனங்கிழங்குபோல் அடி பெருத்தும் நுனி சிறுத்துமிருக்கும்; அந்த மரங்களை நடுமையத்தில் அளந்து அகலம், கனம், நீளம் இவைகளைக்கொண்டு கணக்கு செய்தல் வேண்டும்.

உளவு தெரியாதவர்களுக்கு அடியில் தலைபெருத்த இடத்தில் அளந்து தொட்டிக்காரர்கள் கணக்கு போடுவார்கள். சிலர் குழிக் கணக்கில் அதிகக் குழி சேர்த்து விலை போடுவார்கள். ஒரு டன்னுக்கு 14 குழி ஆவரேஜ் என்றும், முப்பது குழி ஆவரேஜ் என்றும் 40, 50, 60, கன அடி அல்லது குழிகொண்ட ஆவரேஜ் என்றும் ரங்கோன் (இன்வாய்ஸில்) பட்டியில் கண்டிருக்கும். இவர்கள் குறைந்த குழி மரங்களையும் பெரிய மரங்களென்று விலை தூக்கிச் சொல்வார்கள். இதில் தாணி முதலிய ஆறுவகை மரங்களுண்டு. சரியாய் 360 நாள் ஆறவைத்து அறுவடை செய்தனுப்பும் LR, SR, Mg, Mp, Steel முதலிய டைகுத்திய உயர்ந்த மரங்களில் மழிஞ்சல், ஓடை, கெற்பம் முதலிய சேதாரம் அந்தந்த மரங்களுக்

குத் தக்கபடி மரம் 1-க்கு 5 குழிக்குமேல் சேதமிராது; மட்ட ரகங்க ளான R, Wd, முதலிய மரங்களில் டன் 1-க்கு பத்துக் குழிக்கும் ஒருகால் சிறிது அதற்கு மேல்பட்டும் சேதமுண்டாகும். கீழ்தா மானவையும் நாட்டுக்கோட்டை செட்டிகளால் கைவிலைக்கு வாங்கி அறுவடை செய்து அனுப்பப்படுபவையுமான SS, GP, MS, முத லியவைகளில் பாதிமரம் உருவு ஆவதுகூட கஷ்டமாய்விடும். இருந் தாலும் முதல்தரத்து விலையே சொல்லி ஏமாற்றுவார்கள். ஒருவரிரு வர் விலையில் பத்து இருபது குறைத்துச் சொல்லிக் குழிகணக்கில் அதிகம் போட்டு வருவார்கள். பெரிய உருவும், சதைப்பற்றும், கெற்பம் அல்லது குறுத்து ஒழுங்குமாயுள்ள மரங்களைக்கேட்டால் அவைகளை முன்பே விற்று விட்டதாய்ச் சொல்லுவார்கள். வேணு மானால் ஒற்றைக்கு இரட்டை வாங்கிவிடுவார்கள். உருபடி ஆகாத கீழ்தர மரங்களைக் காட்டி, இவை தயிலம் சாகாத மரங்கள்; அழுத்த மானவை; உன் பணம் நல்ல பணம்; கொடுத்து வைத்திருக்கிறாய் என்று தலைமேல் கட்டுவார்கள்.

சிலர் ரங்கோன் அசல் (இன்வாயிஸ்) பட்டியை மறைத்து விட்டு மரத்தின் கனத்திருக்கிற பக்கம் காட்டி அதை நீட்டில் பெருக்கி மரம் 1-க்கு 2 அடி 3 அடி சாஸ்தி எழுதிவைப்பார்கள். இப்படியே, காட்டு மரங்களான கடுக்காய், இருளி, வெண்தேக்கு, ஜாரா முதலிய மரங்களுக்கும் அங்கணமென்றும் விட்டமென்றும் கோலென்றும் கணக்கு செய்து ஏமாற்றுவார்கள். மரம் எடுத்து அறுத்தால் எப்படியாகுமோ ஏதாகுமோ வென்று தொட்டிக்காரர் களையே அறுத்துக் கொடுக்கும்படி (லீஷ்டு) பட்டி கொடுத்தால், ஏமாந்தவனு யிருந்தால் கணுவு, கட்டை, வீரல், வெடிச்சல், சுண் ணும்பு பாறை, வண்டுதுளை, முதலியவைகளுக்கு மர ஆப்பு அடித்து மறைத்தும் துளையை அடைத்தும் லப்பம் கொண்டு பழுதுபார்த்தும் சூட்டுக் கோல் லப்பம் பார்த்தும் மண்ணைத் தடவியும் சாணி கொண்டு பூசியும் வைப்பார்கள். மரம் எடுப்பதில் அநுபோகஸ்தனு யிருந்தால் விலைபேசித் தீர்த்து ஏறக்குறைய பாதிக்குமேல் அட் வான்ஸ் வாங்கிக்கொண்டு பத்து நாள் கெடுவு வைத்து அனுப்பிவிடு வார்கள். கெடுவுபோல் வந்தால் அப்போதுதான் குமஸ்தாவை யாவது வாள்கார மேஸ்திரியையாவது அழைத்துக் கேட்பார்கள். வாள்கார மேஸ்திரி பூபதியார் லீஷ்டு அவசரமென்று அதை அறுத் துக் கொண்டிருக்கிறேமென்பான். தொட்டிக்காரர் உள்ளபடி கோபித்துக் கொள்பவரைப்போல் நடித்து விட்டு அந்த வேலை இருக்

கட்டும்; "முன்னே மரத்தை வாள் குழிக்குத் தள்ளி அறுத்தாகட்டும்" என்று திட்டஞ் செய்வார். இந்தத்தடவை சொற்ப நாள் கெடுவு வைத்தனுப்புவார்; இந்தக்கெடுவுக்கும் பிள்ளை பிழைக்க வழி இராது; பட்டி கொடுத்தவர் அட்வான்ஸையாவது கொடுத்துவிடும் என்று கை சண்டை நீங்கலாக வாய்ச்சண்டை பலக்கும்போது "நாளை புதன்கிழமை வண்டி கொண்டு வந்து ஏற்றிக்கொண்டு போ; இல்லா விட்டால் அந்த நஷ்டம் நான் கட்டிக்கொடுக்கிறேன்" என்று அனுப்பி விடுவார்.

வீஷ்டு கொடுத்தவர் எந்த மரம் கொடுத்தாலும் எடுத்துக்கொள்ளும் நிலைமைக்கு வந்தால், அப்போது ஒன்றும் பாதியுமாய் ஒட்டை, உடைச்சல், கணுவு போன்றவைகளைப் போட்டுக் கணக்குச்செய்து பணத்தை அணு பைசாவோடு பெற்றுக் கொள்வார்கள். அவர்கள் போகும்போது இனி அப்படி நடக்காது வாள்காரர் அந்த மாதிரி செய்து விட்டார்கள் என்று வணக்க ஒடுக்கமாய் கால் டஜன் கும்பிடு போட்டனுப்புவார்கள். தொட்டிக்காரர்கள் தான் இப்படி என்றால் வாள்காரர் இழவு சொல்லவேண்டியதில்லை. 12 அங்குலம் அகலம், 12 அங்குலம் உயரம், ஒரு அடி நீளம் கொண்டது ஒரு அடி, இப்படி 24 அடி கொண்டது ஒரு நூல்; இதை அறுப்பதற்குத் தொட்டிக்காரர்களுக்கு அணு பன்னிரண்டானால் கிராக்கிக்காரர்களுக்கு ரூபா ஒன்று, ஒன்றரை என்று பேசுவார்கள். இது நல்ல மரம் சீமை சயிஸ் என்னத்திற்கு? தயிலம் செத்தது; 2 x ½ வலிச்சல் வாட்டம் சாட்டம் கைதுண்டு, வாசூர் பட்டை ராவாரா பலகை, எல்லாம் இதிலேயே அறுத்துக் கொள்ளுங்கள் பிள்ளை பிள்ளை தலை முறைக்கும் தள்ளிவிடலாம் என்று சொல்லி மரத்தின் கிரயத்திற்கு வாள்கூலி ஆகிவிடும்படி செய்வார்கள். அறுவடையிலாவது சுத்தமிருக்குமா? இப்போது தேசாபிமானிகளில் பலர் எப்படி பச்சோந்திபோல் மாறுகிறார்களோ அதேமாதிரி தான் ஒருபக்கம் முக்கால் அங்குலம், ஒரு பக்கம் அரை அங்குலம் வாட்டமாய் அறுப்பார்கள். ஒரு குருவி தண்ணீர் குடிக்கும்படி பள்ளம் படுகுழியாக மரத்தைச் சொருவிச் சொருவி அறுப்பார்கள். வேலை சீக்கிரம் ஆகும்படியாக வாள்பல்லை விலக்கிக்கொண்டு தாராளமாய் விலக்கி ஒரு நூலுக்குக் கால் அங்குலம் மரத்தை தூளாகச் செய்து விடுவார்கள்.

வாள்கூலி நூல்கணக்கு செய்யும்போது ஒருபக்கம் கணக்குச் செய்ததை இன்னொரு தடவை திருப்பித் திருப்பிக் கணக் கெடுப்

பார்கள். ஒரு துண்டு அல்லது இரண்டு துண்டுகளை மறைத்து விடுவார்கள்; வண்டியில் ஏற்றும்போதாவது எடுத்துக் கொள்வார்கள். அறுத்த மரத்தை முன்போல் அடுக்கித் தாங்கள் மிகவும் யோக்கியர் போல் காண்பிப்பார்கள். அப்போது அவர்கள் செய்கிற ஜால்ஜவாப் மறுபடியும் அவர்களைத் தேடிக்கொண்டு வரும்படியாகவே இருக்கும். இங்குக் குறிப்பிட்ட மோசங்கள் போக அவரவர்கள் அநுபவத்தில் கண்டு கொள்ள வேண்டிய மோசங்களை இதைக்கொண்டு கண்டு கொள்வார்களென நம்புகிறேன்.

இனி சீமை சயிஸ் என்று சொல்கிற ரங்கோன் மிஷின் அறுவடைச் சரக்குகளைப் பற்றியும் சொல்லவேண்டி யிருக்கிறது. இவைகளில் 3 to 5 foot என்றும் 6 & up என்றும் கமிஷன் ஏஜண்டு மூலமாய் ரங்கோன் அறுவடைமரங்களுக்குக் கன்ட்ராக்ட்செய்வார்கள். 3 to 5 அளவுள்ள சயிஸ்கள் விலை சகாயம்; 6 & up விலை கொஞ்சம் அதிகம்; ஆனாலும் விற்கிற விலையோ ஒரே விலைதான்; அளவு 6 அடி 10 அங்குலமிருந்தால் 7 அடியாகக் கணக்கு செய்வதுண்டு. $6\frac{1}{4}$, $6\frac{1}{2}$, $6\frac{3}{4}$ இவையெல்லாம் 6 அடிதான் கணக்குக் கஷ்டமரிடம் $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$ இதற்கெல்லாம் விலை கட்டி வாங்கி விடுவார்கள். 6 அடி 10 அங்குலம் அளவுள்ள பீஸ்களை அடி நுணியில் ஒவ்வொரு அங்குலம் குறைவாக வுள்ள மட்டபலகைக் கொண்டு ஏழடியென அளந்து காட்டுவார்கள். B. B. T. C. L. என்றும் அவுல் சரக்கென்றும் சொல்லி மட்டமானதும் வெள்ளேடு உள்ள ஆசாமி சரக்குகளைக் கொடுத்துச் சரியான விலை வாங்கிக் கொள்வார்கள். குழி கணக்குச் சொல்லி நீட்டடிபோட்டு விலை போடுவார்கள். நீட்டடி சொல்லிக் குழிகணக்குப் போடுவார்கள். சரக்கு வாங்க வந்த என்னைப்போன்ற ஏமாந்தவர்கள் துறைக் கணக்கும், அங்குலங் கணக்குப் போட்டு, தூலம் தூக்குகிறபோதும் வாசக்கால் வைக்கிறபோதும், மேட்டு வடிம்பு தூக்குகிறபோதும், கூடத்து வாரவட்டை வைக்கிறபோதும் கருப்பு, வெள்ளை, சிவப்புத்துணி வைக்கவேண்டுமென்றும் குளிர்ந்த தட்சணை கொடுக்கவேண்டுமென்றும் ஒரு ஆள்படிக்கு மூன்றுள் படியரிசி வாங்கி, சமுசாரியை தலையெடுக்க வொட்டாமல் முழுகடிக்கிற ஒரு தச்சனையாவது ஒரு அனுபோகஸ்தனையாவது, இட்டுக் கொண்டுவந்துவிட்டால் தொட்டிக்கார அய்யங்காருக்கு அன்றைக்கு ஒன்பதில் இராஜாவாகையால் தச்சனுக்கு 5-10 தளர்த்திவிட்டு அளவு குறைந்தவைகளையும் 4x3 சயிசுக்கு $4x2\frac{1}{2}$-யும் 5x3-க்கு $5x2\frac{1}{2}$-யும் 3x2 - க்கு $3x1\frac{1}{2}$ - யும் அடைப்பட்டிருக்கிற ஒட்டை

கனுவு, வீரல், சுண்ணும்பு பாறை இவைகளைப் போட்டுக் கணக்குச் செய்வார்கள். பாழுந் தச்சன் அளவு போல் எடுக்காமல் தொட்டியில் கிடைத்த அளவு போலவே எடுத்துக் கொள்வான். சமுசாரி கேட்டால் எனக்குத் தெரியாதா நல்ல மரம் என்று சொல்லுவான். தச்சனுக்கு ஓட்டலுக்குப்பணமும் ரெயில் சார்ஜும் குழந்தைக்குச் சொக்காய் துணியும், ஒரு ரங்கோன் புதுகுடையும் தன்னோடு வந்த நாள் முதற்கொண்டு கூலியும் கட்டிக்கொடுக்கிறபோது சமுசாரியைக் கெடுக்காமலிருக்க தச்சன் அவ்வளவு முட்டாளாயிருப்பானு? மேலும் இந்தத் தச்சன் கையால் கட்டின வீடுகள் தோழுங்கள் எல்லாம் என்றைக்கும் வற்றுச் சமுத்திரம் போலிருக்குமென்று சொல்லிக்கொள்கிறதைச் சமுசாரி நம்பாமலிருக்க முடியுமா? தொட்டிக்காரர்கள் செய்கிற மோசம் மைலாப்பூர் தேசிகருக்கு நைவேத்தியம் செய்கிற சர்க்கரைப்பொங்கல், புளியோரை, தத்தியோதனம் இவைகளால் என் விமோசனமாகாது. பழையகாலத்து தேசிகருக்கு மரதொட்டி பிராமணர்களிடத்து என்ன அபிமானம்? என்ன அன்பு? எவ்வளவு பட்சம்? தங்கள் குழந்தை குட்டிகளுடன் மடப்பள்ளியுள்ளே சர்க்கரைப் பொங்கலாகத்தின்று ஏப்பமிட்டு மறுநாள் காலை பிராமணரல்லாத தொட்டிக்காரர்களுக்கு ஊசிப்போன வடதோசை இவைகளைக் கொடுத்தும் பரிகாசஞ் செய்வார்கள்.

---

## 121. வக்கீல்கள் சாமர்த்தியம்.

நியாயங்களை வாதிக்கிறதற்குச் சன்னது பெற்றிருக்கிற வக்கீல்களில் பெரும்பாலோர் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் பிராமணர்களா யிருக்கிறார்களென்பதை நான் சொல்லவேண்டியதேயில்லை. இவர்களில் அநேகர் பரீட்சை அதிகாரிகளாயும் பிரின்சுபால்களாயு மிருப்பதினுல் சக்ரவர்த்தி, ஸ்ரீனிவாசன், இரங்கசாமி, சிவகுமாரன், நடராஜன் முதலிய பேர்களைக்கொண்டும் விடையெழுதும் தோரணையைக் கொண்டும் அதிகமாக மார்க்கெடுத்து பாஸ் செய்து வைத்து விடுவார்கள். சிலர் புஸ்தகத்திலுள்ளபடி நெட்டுருபோட்டு அப்படி அப்படியே விடையும் எழுதிவிடுவார்கள். தனக்காகவே மண்ணை தள்ளிக்கொள்ளும் பெருச்சாளிகளைப்போன்றபிராமணர்கள் அதிகபுத்தி தீக்ஷண்யமுள்ள தங்கள்ஜாதியாருக்கு ஏற்றத்தை உண்டு பண்ணிக்கொள்ள பிராமணரல்லாதார்களைப் போல் ஒரு கூட்டம் போட்டு முடிவுசெய்து கொள்கிற சாம்பிரதாய மில்லாமலே தங்க

ளினத்தார் விஷயத்தில் எந்தக் காரியத்திலும் ஊக்க முள்ளவர்களாய்த்தானிருக்கிறார்கள். 1914-ம் வருஷம் நடந்த ஜர்மன் சண்டையின்போது ஜர்மன் ராச்சியம் வந்து விடலாமென்ற ஏஷியம் கொண்டு ஜர்மன்பாஷை கற்க வெகுபேர் தலைப்பட்டார்கள். ஒரு யுக்தி யுள்ள பிராமண தேசாபிமானியானவர், பிரிட்டிஷ் இராஜாங்கத்திற்குச் சண்டை காலத்தில் பிராமணரல்லாத ஏனைய ஜாதியார்கள் பொருளாலும் உயிராலும் தேக உழைப்பாலும் உதவிசெய்து வருகிறார்கள். பிராமணராகிய நாம் பொருள்கொடுக்க ஏழை, கஷ்டப்பட முடியாதவர்கள். உயிரைக்கொடுக்கச் சார்த்தியமில்லாதவர்கள், ஆகையால், நம்மாலானது ஒவ்வொரு பிராமணனும் பிரிட்டிஷாருக்கு ஜெயமுண்டாக வேணுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று ஒரு பத்திரிகை மூலமாய்த் தெரிவித்தார். ஆ! ஆ! என்ன அருமையான தியாகம்! என்ன அருமையான உருக்கம்! என்ன அருமையான பக்தி! இப்படியாக வன்றோ காசையும் துறந்து தியாகம் செய்தல் வேண்டும்.

இவர்களது சாமார்த்தியம் வர்த்தகம், விவசாயம், புரோக்கர், சி.ஐ.டி. உத்தியோகம், உளவு சொல்லுதல், காங்கிரஸ் மேடை, சுயராஜ்ஜிய சூட்சி, தேசியக் கட்சி, கதர்திட்டம், தீண்டாமை ஒழித்தல் முதலிய எந்த வகையிலும் முன்னணியில் நிற்குமிவர்கள் வக்கீல் தொழிலில் ஏன் சாமர்த்தியம் இல்லாமற்போகும். ஒரு கேசுக்காரன் போகும்போது இவர்கள் பசுப்புகிற பசப்பு வயற்றிலிருக்கிற பிள்ளை தானே விழுந்துவிடும் போல் நயமாகப் பேசி நூறு ரூபாய்க்கு இரு நூறென்று முடிவு செய்து முன்னம் அட்வான்ஸ் பெற்றுக்கொண்ட பிற்குதான் கட்டைப் பார்க்கிறார்கள். அப்பீலுக்கு இந்த கேசில் கிரவுண்டு இருக்கிறதா என்று பெரிய வக்கீல்களிடம் கட்டு கொண்டு போய் பார்க்கச்சொன்னால் ஜட்ஜ் இந்த பாயிண்டில் தவறிவிட்டார் என்று சொல்வதற்கு ரூபா 100, 150 கொடுக்க வேணுமென்பார்கள். இதோடு தன்னிடமிருக்கிற அப்ரிண்டிஸ்களுக்கோ உதவாத வக்கீல்களுக்கோ தன் மாப்பிள்ளை அல்லது பிள்ளைக்காவது மைத்துனர்களுக்காவது கட்டை படித்துச் சொல்லுவதற்கு 40, 50 கொடுக்க வேணுமென்பார்கள். அல்லது வியாச்சிய விபரத்தைக் கேட்கிறார்கள். காட்டில் பிடுங்குகிற திருடர்களை விட நாட்டில் வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள் துஷ்டமிருக மென்பார்கள்; வக்கீல்கள் ஆசைகாட்டி துட்டுபறிக்கும் வேசியர்களைவிட கொஞ்சம் மேலானவர்களே! "இந்த கேஸ் பலத்த கேஸாயிருக்கிறது; கஷ்டப்பட வேண்டியிருக்கிறது; இரண்டொரு லா பாயிண்டைக் கொண்டு

அடித்து விடுகிறேன்" என்று சொல்வார். கேஸ் வருகிற வரையில் கட்சிக்காரன் வாழையிலையோ, நெய்யோ, காய்கறியோ கொடுத்து வக்கீலுக்கு இஷ்டம் வரும்படி நடந்துகொள்ளவேண்டி யிருக்கிறது. காஞ்சிபுரத்தான் ஆனால் ஆறு வாரகன் சேலை ஏழுவாரகன் சேலை ஏதாவது ஒரு சேலை பீஸில் சேராமல் கொடுக்கவேண்டும். சித்தூரானானால் புளி சப்ளை செய்யச் சொல்வார். திருப்பத்தூரானானால் துவரம்பருப்பு ஒருமூட்டைக்கு ஆர்டர் கொடுக்கிற பாவந்தான்! பணம் கொடுக்கிற பாவத்திற்குப் போவதில்லை. கட்சிக்காரனை விசாரிக்கும்போது 'பையன் சாப்பிட்டானா? குதிரையைத் தேய்த்தானா? கொள்வைத்து ஆச்சுதா? மோட்டரை கிளீன் செய்தானா? நேற்று வாங்கின பெட்ரோல் மீதியில்லையா?" என்று விசாரணையில் ஒரு காதும் கேஸ்காரன் சொல்வதில் ஒருகாதும்வைத்து அடிக்கடி தலையை ஆட்டிக்கொண் டிருப்பார். பின்பு "எல்லாம் தெரியும் ஓய்; பன்னு, பன்னுவென்று பேசுகிறீர்; உங்களுக்கு கேஸ் ஜெயிக்க வேண்டியது ஒன்றுதானே; வேண்டியது எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன் போ" என்று அனுப்பி விடுவார்.

மாஜிஸ்ரேட்டின் முன் கேஸ் கூப்பிடும்போது குமஸ்தாவைவிட்டு நரசிம்மாச்சாரியிடம்சொல்லி நிறுத்திக்கொள்ளும்படி சொல்லிவிட்டு செங்கற்பட்டுக்கோ அல்லது பொன்னேரிக்கோ போய்விடுவார். ஒரு கால் கேஸுக்கு ஆஜராகும்படி நேரிட்டால், தான் திருவள்ளூருக்குப் போனால் ரூபா ஐம்பது கிடைக்கும்; நீர் ரூபா இருபத்தைந்து கொடுத்துத் தான் ஆகவேண்டுமென்று வாங்கிக்கொள்வார். கேஸ் கூப்பிட்டு வாதி, பிரதிவாதிகள் பார்மேல் நிற்கும்போது, "என்ன ஓய் நீர் இந்தக் கேஸில் வாதியா பிரதிவாதியா!" என்று கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். வாதி கொடுத்திருக்கும் விண்ணப்பத்தைக் கொண்டு பிரதி வாதியை இரண்டொரு குறுக்கு கேள்வியும் அவர்களது சாட்சிகளை இரண்டொரு கேள்வியும் கேட்டுத் தொலைப்பார். கேள்வியோ அதிகாரமான கேள்விதான். என்ன ஓய்! அவன் அடிக்கும்போது நீ எவ்வளவு தூலைவிலிருந்தாய்? அவன் என்ன துணி கட்டியிருந்தான்? எந்தப் பக்கம் திரும்பியிருந்தான்? நீ அவ்விடம் என்னத்திற்காக வந்தாய்? நீ இரண்டு தடவை ஜெயிலுக்குப் போய் இருக்கிறாய் அல்லவா? உனக்கும் அவனுக்கும் பாத்தியமிருக்கிறதா? என்று கள்ளபுருஷன் மேல் நினைவுற்ற காதலியைப்போல டவுன் போலீசில் இருக்கிற கேசின் மேலேயே கவனமாயிருப்பார். 100 தேங்காய் உடைக்கிறேன் என்று பிரார்த்தனை செய்துகொண்ட

கொத்தவால்சாவடி பிள்ளையார் அனுக்கிரகத்தால் வாதி பட்சம் கேஸ் அனுகூலமானல் "ரொம்ப கஷ்டப்பட்டேன். திருவள்ளு ருக்குப் போயிருந்தாலும் ரூபா ஐம்பது கிடைக்கும்" என்று ரூபா பத்தாவது வகை செய்து கொள்ளுவார். கேஸ் கெட்டுப்போனல் "நான் என்ன செய்யட்டும்; உன் சாட்சிகள் அப்படிப் பினத்தினர் கள். நீயும் இரண்டொரு இடத்தில் தவறிவிட்டாய்; பிரதிவாதி சாட்சிகள் எப்படிசொன்னார்கள் பார்த்தாயா?" என்று அவன் பேரி லேயே பழியைப் போட்டுவிடுவார். சில கைதேர்ந்த லாயர்கள் வாங்கின பணத்தை யில்லை என்று சொல் என்று வாதிக்குக் கற்பிப் பார்கள். வாதி வாங்கினபணத்தை எப்படி இல்லை என்று சொல் வது என்றால் "என்ன ஓய்" இது அரிச்சந்திரன் காலமா? கோர்ட்டில் பொய் மெய்; மெய் பொய்; அங்கே நிஜத்தைப் பேசினல் உன் கேஸ் கெட்டுப்போகும். பாயின்ட் நிஜம், லா நியாயம் என்று இரண்டு வழியுண்டு. எதைக்கொண்டாவது அடித்துப்போடுகிறேன் என்று பீஸை பெற்றுக்கொண்டு கோர்ட்டில் ஆஜராய் பிரதிவாதியை இரண்டொரு குறுக்குக் கேள்விப் போட்டுத் தடுமாறச் செய்வார். உள்ளபடி தன் கட்சி தோற்றுப்போனல் "ஏன் ஓய் அப்பவே சொல் லக்கூடாது? எழுதிக்கொடுத்திருக்கிறேன் என்று சொல்லியிருந்தால் வேறு:மாதிரி கேஸை அடித்துவிட் டிருப்பேனே; எதிரி சாட்சிகளை யாவது கட்டிக்கொண்டிருக்க வேண்டாமா? இப்படிப்பட்ட கேஸு களைப் பிடித்துக்கொள்ளுவதினல் என் பேரே கெட்டுப்போகிறது" என்று வெகுவாய்ச் சலித்துக் கொள்வார்கள்.

வக்கீல்களிடம் வாய்தா வாங்கித் தரவேண்டுமென்று வரும் கட்சிக்காரரிடம் இது இலேசான காரியமல்ல; பாயிண்டுகளைக் கொண்டு டிஸ்டிரிக்ட் முன்சீபின் மனதை மாற்றவேண்டும். நீ இர ண்டு மாதம் வாய்தா கேட்கிறாய். நான் எடுத்துக்கொள்ளும் கஷ்டத் தின் பேரில் ஒரு வருஷம்கூட வாங்கிவிட என்னல் முடியும். நான் பழையவக்கீலென்றும் உண்மைகேஸ்களைத்தான் கொண்டு வருவா ரென்றும் ஜட்ஜிகளுக்கு என்மேல் அபிமானமுண்டு. பீஸ்மாத்திரம் சிறிது அதிகமாக யிருக்கும். நான் வாதிக்கிற கேஸ்களில் ஒன்றும் வருவதில்லை. ரூபா நூறு கொடுக்க வேண்டும். குறைத்துக் கொடுக் கும் பட்சத்தில் அதற் கேற்றவர்களிடம் போய்விடு. எனக்குக் கட் டைச் சோதிக்க வேண்டியவேலை யிருக்கிறது என்பார். கட்சிக் காரன் என்னசாமி தாங்கள் கெட்டிக்காரர் என்றுதானே வந்தேன்.

வாயிதா வாங்கிக்கொடுப்பதற்கு நூறு ரூபா கேட்கிறீர்; பார்த்துக் கேளுங்கள்.

வக்கீல்:—பார்த்து என்ன ஓய் கேட்கிறது. வாதியை மடக்கி அடிக்கிறபோது போதும் போதுமென்றுவாதியே ஒத்துக்கொள்ளும்படி செய்வது லேசான காரியமா? ஜட்ஜிக்கு வங்காளம் பம்பாய் முதலிய கோர்ட்டுகளின் தீர்ப்பை எடுத்துக் காட்டி ஆகவேணும். ரூபா எழுபத்தைந்து கொடுக்கிறாயா என்ன? நீ மெத்த ஏழை ஆகையால் 25 குறைத்து விட்டேன்.

கட்சிக்காரன்:—நான் வாங்கினது உண்மை, கொடுக்க வேண்டியதுதான். ஐக்கிய நாணய சங்கத்தில் கடனுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறேன். டைரெக்டர்கள் வீட்டைப் பார்த்து மதிப்பு போட்டு ரிப்போர்ட்டனுப்பவும் மீட்டிங்கில் பாஸ் ஆகவும் ஒரு மாதம் பிடிக்கும். இதற்குள் செகிரிடெரியை யிட்டா. அக்கவுன்டண்ட் இவர்களையும் கட்டிக்கொண்டிருக்கிறேன். அப்படி இப்படி பார்த்தாலும் இரண்டு மாத மாகுந்தான். இரண்டு மாதம் வாங்கிக் கொடுத்தால் போதுமானது.

வக்கீல்:—சரி பணம் எடு. இது சீட்டுப் பாபத்து மாதம் மாதம் பத்து ரூபா கட்டிவிடுவதாகத் தீர்ப்புசெய்யும்படி செய்து விடுகிறேன்.

கட்சிக்காரன்:—வேண்டாம் அய்யா; கலியாணத்திற்காக ரொக்கமாக வாங்கிக்கொண்ட பணம். அவன் வயிறு எரிந்தால் நம் குடித்தனம் விளங்குமா? ஊரான் பணம் நமக்கு வேண்டியதில்லை.

வக்கீல்:—என்ன ஓய் அரிச்சந்திரன் வீட்டுக்கடுத்த வீட்டுக்காரனைப்போல் பேசுகிறாய். உன்னைக் கெடுக்கவேணுமென்றும் அவமானம் உண்டாக்கவேண்டுமென்றும் கோர்ட்டுபடி எப்போது ஏறிவிட்டானோ அவனை லேசில் விடலாமா? இது லாவாதேவி பாபத்து; கமிஷன் பாபத்தில் தகாறு. கணக்குப் பார்க்கக் கமிஷன் நியமிக்க வேண்டுமென்று கேட்டால் வாதிக்கு ஒரு முறை இருமுறை பேதியாகும்படி செய்ய வேண்டாமா?

கட்சிக்காரன்.—அந்த வீண்வம்பு எல்லாம் என்னத்திற்கு? அவன் பணத்திற்கு நாம் பிள்ளை பிறந்தோமா? இல்லாத கணக்கிற்கு ?ன் என்ன செய்கிறது?

வக்கீல்:—இதற்கா பயப்படுகிருய். எத்தனை மண்டிக்காரர்கள் ஓலை கணக்குகள் கட்டுக் கட்டாயிருக்கிறது. கொண்டுபோய் மேஜை மேல் விரித்து விட்டால் சர்டிபிகேட் பெற்ற கணக்குப் பரிசோதகர்கள் எப்படிப் பார்த்தாலும் வருஷம் 1-க்குக் குறையாது. ஜட்ஜே ஒருவருஷம் வாய்தா கொடுத்துவிடுவார். ஏன் பயப்படுகிருய்?

கட்:—இப்படித்தான் வக்கீல்கள் சும்மாயிருக்கிற சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்பதுபோல் நகத்தால் கிள்ளி எறிவதை விட்டுக் கோடரிகொண்டு வெட்டுவதைப்போல் வீண்வியாஜ்ஜியத்தைத் துரும்பைத் தூணாக்கி, சமுசாரிகளைக்கெடுத்து மயிலாப்பூர்பள்ளத்தையெல்லாம் குபேரப்பட்டண மாக்குகிறார்களென்று மனதில் நினைத்துக்கொண்டு, வீண் வம்பு வேண்டாம்; இரண்டு மாதம் கெடுவு மாத்திரம் வாங்கிக்கொடுத்தால் போதும். அவன் பணத்தை வட்டியுடன் பூமேல் வைத்துக் கொடுத்து விடுகிறேன்.

வக்கீல்:—சரி. குமாஸ்தாவைக் கூப்பிட்டு, அடே ஒரு வக்காலத்து பாரத்தில் கையெழுத்து வாங்கிக்கொள்ளும். சுத்த அசடு; சொன்னாலும் கேட்கிறதில்லை. சுயபுத்தியுமில்லை. ஏற்றக்கோலுக்குப் பிடித்தால் அல்லவா அறுவாள் பிடிக்கு இறங்கும். நான் சொல்கிறபடி எழுது. இந்தபிராது மோசடியும் சுத்தப் பொய்யுமானது. இந்த பாண்டு நோட்டே நான் எழுதிக்கொடுக்கவேயில்லை. மேலும் நான் 'கை கீறல்காரன்' என்று வக்கீல் சொல்லி வருகிறபோது, இதுவெல்லாம் வேண்டாம் சாமி.

கட்சிக்காரன்:—ஜனப்பன் வீட்டுக்கோழி தானே மாட்டிக் கொண்டதுபோல் இனி போர்ஜெரி கேசுக்கு ஆயிரம் இரண்டாயிரம் யார் அவிழ்த்துக் கொள்ளுகிறது? வாய்தா வாங்கிக்கொடுத்தால் போதுமானது.

வக்கீல்:—என்ன ஓய் சத்தியகீர்த்திபோல் பேசுகிருய்? அதற்கு வாதியையே கையைக் காலைப் பிடித்துக்கொண்டு கெடுவு கேட்டுக்கொள்ளுகிறதுதானே? வக்கீலிடம் ஏன் வரவேண்டும்? தஞ்சாவூர் கணபதி அக்கிராரத்திலிருந்த பத்து வேலி நிலத்தையும் கும்பகோணத்திலிருந்த மாடி வீட்டையும் விற்று B L. வரையில் படித்து பாஸ் செய்து ரூபா 500 கட்டி அப்ரிண்டிஸாயிருந்து பனிரெண்டு தூக்கமா கண்ணுடி பிரோக்களில் பதினாயிரம் ரூபா வரை புஸ்தகங்களையும் லா ஜர்னல்களையும் வாங்கி வைத்துவிட்டு ரூபா பத்துக்கும் இருபதுக்கும் கேஸ் எடுத்துக்கொண்டிருந்தால் மோட்டார் செலவென்ன ஆகிறது: மனவர்த்தி செலவுகாணுமா? இராமசந்திர அய்யரைப்போல் ரவை செட்டு தேடவேண்டாமா? அப்படியே கேசுகளை மழுப்பிவிட்டால் எங்களுக்கு வேறே பிழைப்பு என்ன இருக்கிறது? இதிலும் முன்னைப்போல் அவ்வளவாய் வருமானம் கிடையாது. பாழும் 'சுதேசமித்திரன்' முதலான தமிழ்ப்

பத்திரிகைகள் வெளிவரவும், மூலை முடக்குகளிலுமுள்ள நாட்டுப் புறத்தான்களெல்லாம் இராஜிய ஞானம்பெற்று ஒவ்வொருவூரிலும் பஞ்சாயத்து சபைகள் வைத்துக்கொண்டு தங்களுக்குள்ளவே அநேக சிவில் கிரிமனல் கேஸுகளைப் பைசல் செய்துக்கொள்கிறார்கள். போதாக்குறைக்குக் காங்கிரஸ்காரர்களும் சுயார்ச்சிய கட்சிக்காரர்களும் கோர்ட்டை பஹிஷ்காரம் செய்யவேண்டுமென்று ஜனங்களுக்குப் போதித்து வருகிறார்கள். நம்மிட மிருக்கிற எத்தனையோ தாகரிகளுக்கு பீஸில் பாதி கொடுக்கிறேன். என்றாலும் முன்னைப் போல் கேஸ் அவ்வளவாகக் கொண்டு வருகிறார்களில்லை. நானும் என்பேர் பிரக்கியாதி அடையவேண்டுமென்று ஒரு செட்டு கதர் தலைப்பாகை, கோட், ஷர்ட், மேல்துப்பட்டா, ஏழுமுழம் அங்கவஸ்திரம் இவைகளைக் கட்டிக்கொண்டு மேடைப் பிரசங்கம் செய்துகொண்டு வருகிறேன். ஒரு காங்கிரஸ் கூட்டத்திற்காவது போகாமலிருப்பதில்லை. பிரசங்கத்தில் காந்தி, நேரு, தாஸ் இவர்கள் கருத்துக்களை கொட்டேஷன் கொடுத்து, சபையார் அப்படியே உருகும்படி கூட பேசிதான் தொலைக்கிறேன். எங்கே? நூறு, இருநூறு சென்னையில் மாத்திரம் 4000-க்கு மேற்பட்ட வக்கீல்களும், அட்டர்னிகளும், சொலிசிட்டர்களும், பாரிஸ்டர்களும், அட்வோகேட்களும் நிரம்பியிருக்கிறார்கள். முன்னைப்போல் சுந்தரய்யர், பாஷியமய்யங்கார், கிருஷ்ணசாமி ஐய்யர் முதலியவர்களைப்போல் லட்சக்கணக்கில் சம்பாதிக்கவோ வழியில்லை. கொழுத்த ஆசாமிகள் இரண்டொருவர் வகை தப்பி அகப்பட்டுக்கொண்டால் தான் ஒரு கேஸை ஒன்பது கேஸாக உற்பத்தி செய்து அவர்கள் வீடு, வாசல், தோட்டம், துறவு முதலான சொத்துக்கள் யாவும் போய் ஓட்டாண்டியாகச் செய்தால் மாத்திரம் பிழைப்பு உண்டாகுமே தவிர நியாயப்படி பார்த்தால் முடியாது. எதிரி வக்கீலுக்கும் இப்படி யெல்லாம் செய்யாவிட்டால் கோர்ட்டுக்கு கேஸே வாராதென்று தெரியும். அவரும் இப்படி எத்தனையோ கேஸ்களில் மாட்டிவிட் டிருப்பார். உனக்கு எப்படியானாலும் இரண்டு வருஷம் வரையில் தள்ளிக்கொண்டு போக வழி செய்துவிடுகிறேன். முன்சீப்பும் ரொம்ப நல்லவர். அவரும் வக்கீலா யிருந்தவர்தான். வக்கீல் அசோசியேஷனில் கொஞ்சம் வாயாடியா யிருந்தபடியால் ஜட்ஜீகள் கெட்டிக்காரரென்று முன்சீப்பாய் தூக்கிப்போட்டார்கள். எப்படியாவது எதிரி உன்னிடம் வந்து "100, 200 தள்ளிக் கொடுத்துவிடு பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று வலிய வந்து கெஞ்சும்படி செய்துவிடுகிறேன். பயப்படவேண்டாம். கேசுக்கு வரும்போது கவனமாய் காஞ்சிபுரம் சேணியன் நெசுவாய் அறுபதாம் நெம்பர் அகல கரை புஞ்சி ஏழுமுழம் மூடி ஒன்று வாங்கிக்கொண்டு வாரும். என் சொந்தம்போல் பாவித்து கேஸை உனக்கு அனுகூலம்செய்து வைக்கிறேன். ஒன்றுக்கும் பயப்படாதே.

கட்சிக்காரன்:—அய்யய்யோ! அதெல்லாம் வீண். அக்கிரமத்திற்கு நான் போகிறவனல்ல. நீங்கள் எதுவேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். எனக்கு வேண்டியது இரண்டு மாதம் வாய்தாதான்.

வக்கீல்:—குமஸ்தாவைப்பார்த்து,"சரி. எழுதப்பாபாக்கி 03,2க்கு ஸ்டேட்மெண்டு எழுதினோமே அதைப்பார்த்து எழுதிக் கையெழுத்து வாங்கிக்கொண்டு ஸ்டாம்புக்குப் பணம் வாங்கி ஒட்டி இண்டர் பிரட்டரிடம் கொண்டு ஒத் வாங்கிக்கொள்'' என்று சொல்லிப் பிறகு, ஓய்! வரும்போது காஞ்சிபுரம் புளுஞ்கி கரை வேஷ்டி 12 கால் சரியாய் மூணு முழம் வாங்கிவா என்று சொல்லுவார்.

கட்சிக்காரன்:—நல்லது அப்படியே ஆகட்டும்.

வக்கீல்:—நீர் அந்தப்பக்கம் நாலு இடம் தெரிந்தவராயிருக்கி நீரே உம் மாரிபத்தில் வருகிற கேஸ்களை ஏன் கொண்டுவரக்கூடாது? போய்வாரும் கவனமிருக்கட்டும்.

பிடாரி வரம் கொடுத்தாலும் ஓசன் வரம் கிடைப்பது கஷ்டம் என்பதைப்போல் லாயர் குமஸ்தாக்கள் கட்சிக்காரர்கள் படுத்தும் பாடு சொல்லிமுடியாது; எட்டிலடங்காது. "அபிடவிட் போட வேணும், டிக்கிரி காப்பி வாங்கவேணும், சாட்சி படி கட்டவேணும்," என்று ஒரு ரூபா வேலைக்கு நாலு ரூபா கேட்டு வாங்கிக்கொள்வார்கள். சில சமயம் கட்சிக்காரர்களையே ஒரு ரூபாய் ஸ்டாம்புக்கு 5 ரூபாய் ஸ்டாம்பு வாங்கிவரச் சொல்லி ஒரு ரூபாய் ஸ்டாம்பை ஒட்டிக் கொடுத்துவிட்டு நாலு ரூபாய் ஸ்டாம்பை இன்னொரு கேஸுக்கு உபயோகப்படுத்திக் கொள்வார்கள். இடை நடுவில் ஓட்டலுக்கும் ரிக்ஷாவுக்கும் கட்சிக்காரன் துட்டை அவிழ்த்துக்கொண்டே யிருக்கவேணும். வக்கீல்களாவது; கொஞ்சம் இணக்கம் காட்டுவார்கள். குமாஸ்தாக்களோ கடுகடுத்த வண்ணமாயிருப்பார்கள். கோர்ட் பேபர் வாங்க என்றும் டைப் அடிக்க என்றும் என் கையில் சில்லரை இல்லை; வக்கீல் வந்தால் வாங்கித்தருகிறேன் என்றும் கட்சிக்காரர்களிடம் பணம் வாங்கிக்கொள்வார்கள். இரத்தத்தைக் குடிக்கும் அட்டைகளானாலும் வயிறு நிரம்பினால் விட்டுவிடும். இந்த குமாஸ்தா அட்டைகள் எந்தக்காலத்தும் விடாது இதற்காகத்தான் பழைய காலம்போல் கிராம பஞ்சாயத்து ஏற்படவேண்டுமென்று உண்மைத் தேசாபிமானிகள் அரும்பாடு படுகிறார்கள்.

முற்றிற்று.